www.onlineuthayan.com

பக்கங்கள்: 60

# உதயன்

சுடர் 27
கதிர் 106

வள்ளுவர் ஆண்டு 2043 | மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (11/03/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

# உறுப்பு நாடுகளுடன் ஆராய்ந்தே இலங்கைக்கு எதிரான தீர்மானம்

## அது நியாயமான ஒன்றுதான் என்கிறது அமெரிக்கா

ஜெனிவா,மார்ச் 11

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரில்இலங்கைதொடர்பில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம், அந்நாட்டைக் கண்டிக்கும் நோக்குடன் முன்வைக்கப்பட்டதல்ல. இந்த விவகாரம் குறித்து எல்லாப் பிராந்தியங்களின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளையடுத்துப் பயனுள்ள பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றன. அதன்படி பல உறுப்பு நாடுகளின் விவாதங்களுக்குப் பின்னர் ஒரு நியாயமான -சரியான தீர்மானத்தையே-நாம்முன்வைத்துள்ளோம்.என ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலீன்சம்பர்லெய்ன்டொனாயே விளக்கமளித்துள்ளார்.



அத்துடன், பொறுப்புக் கூறுதல் மற்றும் இணக்கங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் போன்ற விவகாரங்களில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட விரும்புவதை இத்தீர்மானம் ஊடாக தாம் வலியுறுத்தியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் நேற்று முன்தினம் ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனதுரையில் மேலும் தெரி 19 ↘

# அவசரப்படாது இலங்கை அரசு; கூர்ந்து ஆராய்கிறார் ஜனாதிபதி

## அமெரிக்கத் தீர்மானம் குறித்து ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,மார்ச்11

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா சமர்ப்பித்துள்ள போதிலும், அதற்கு எதிரான நகர்வுகளை முன்னெடுப்பதில் அரசு அவசரப்படவில்லை.அதுபற்றி ஜனாதிபதி விரிவாக ஆராய்ந்து வருகிறார். அந்தத் தீர்மானத்தைப் பொறுமையுடனேயே அணுகி வெற்றி பெறுவோம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

இப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிக் கூற முடியும்'' என குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், மேற்குலகின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை நாம் கடந்த காலத்தில் கையாண்டுள்ளோம். கூடுதலான அனுகூலங்கள் எம் பக்கம் காணப்படுகின்றன'' எனவும் கருத்து வெளியிட்டார்.

ஜெனீவா மனித உரிமைகள் 19 ↘

# தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி தடுப்பதற்கு இலங்கை தீவிரம்

கொழும்பு,மார்ச் 11

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ. நா மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடாது தடுப்பதற்கான முயற்சிகளை இலங்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வருகின்றது. இதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனித உரிமைகளுக்கான விசேடதூதுவரும், அமைச்சருமான மஹிந்த சமரசிங்க ஜெனிவா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பானில் தற்போது தங்கியுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க கொழும்பு திரும்பிய பின்னரே ஜெனிவா செல்வதாக முன்னர் திட்டமிட்டிருந்தார். ஆனால் ஜப்பானிலிருந்து தற்போது நேரடியாக ஜெனிவாவுக்குச் செல்லவுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் 19 ↘

# நாட்டுக்கு ஆசீர்வாதம் வேண்டி ஆலய மணி ஒலிக்க வேண்டும்

## இது அரசின் அவசர உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாட்டுக்கு ஆசீர்வாதம் வேண்டி சகல ஆலயங்களிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மணி ஒலிக்க விடுமாறு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஊடாக பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் இலங்கை 19 ↘

# இலங்கைக்கு எப்போதும் ஜப்பான் ஆதரவளிக்கும்

கொழும்பு,மார்ச் 11

இலங்கைக்கு எப்போதும் ஜப்பான் ஆதரவளிக்கும் எனவும் எப்போது உதவி தேவைப்பட்டாலும் வழங்க தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதியான யசூஷி அகாஷி வலியுறுத்தியதாக, கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை, இலங்கை அரசுமுழுமையான அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் யசூஷி அகாஷி வலியுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ 19 ↘

# ஜெனிவா தீர்மானத்தால் ஜனாதிபதி குழப்பத்தில்

## பொது நிகழ்வுகளைத் தவிர்த்தார்

கொழும்பு,மார்ச் 11

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனிதஉரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மான வரைவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை ஜெனிவாவில் இந்தத் தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அனைத்துப் பொது நிகழ்ச்சிகளையும் கடந்த வியாழக்கிழமை ரத்துச் செய்திருந்தார். 19 ↘

# கொக்கிளாய் முகத்துவாரத்தில் நேற்று சீன அதிகாரிகள் பார்வை

## இல்மனைற் தொழிற்சாலை அமைக்கத் திட்டம்

கிளிநொச்சி, மார்ச் 11

முல்லைத்தீவு, கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியிலுள்ள மக்கள் வாழ்விட பகுதியான 200 ஏக்கர் நிலத்தில் சீன நிறுவனம் ஒன்று இல்மனைற் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் மீண்டும் நேற்று சீன அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், உதவி அரச அதிபர் சகிதம் பார்வையிட்டனர். இதனை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உறுதிப்படுத்தினார். 19 ↘

# இந்திய நாடாளுமன்றத்திலும் ஒலிக்கிறது ஜெனிவா தீர்மானம்

புதுடில்லி,மார்ச் 11

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம், இந்திய நாடாளுமன்றத்திலும் எதிரொலிக்கவுள்ளது.

நாளை திங்கட்கிழமை இந்திய நாடாளுமன்றத்தின் வரவுசெலவுத்திட்ட கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த அ.தி.மு.க மற்றும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தவுள்ளனர்.

அ.தி.மு.க நாடா 19 ↘

## தேசிய படையணியில் 2000 யாழ். மாணவர்

தேசிய மாணவர் படையணியில் தற்பொழுது வட மாகாணத்தின் யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 2000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ளனர் என்று தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர தெரிவித்தார்.தேசிய மாணவர் படையணி விஸ்தரிப்பு வேலைத் திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 25 பாடசாலைகளைச் சேர்ந்த 650 தமிழ் மாணவர்கள் விசேட முரப்பயிற்சிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தற்பொழுது வட மாகாணத்தின் யாழ்., மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 2000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ளனர்.

## சபை நிகழ்வுகள் விரைவில் நேரடி ஒளிபரப்பு

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை எதிர்காலத்தில் நேரடியாக தொலைக்காட்சியின் ஊடாக ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க திசாநாயக்க தெரிவித்துள்ளார். சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, வெளிநாடுகளில் நாடாளுமன்ற அமர்வுகளின் போது மேற்கொள்ளப்படும் நேரடி ஒளிபரப்புகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## விசாரணை ஆரம்பம்

பொக்வெல ரம்புக்வெல பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி ஏற்றியதை அடுத்து பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சு விசாரணையை ஆரம்பித்துள்ளது. இதுதொடர்பான விசாரணைகளுக்காக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடத அதிகார சபை குடும்ப சுகாதார பணியகம் மற்றும் மருந்து தரப்பாதுகாப்பு இரசாயன ஆய்வு நிலையம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று பிரதேசத்திற்கு விரைந்துள்ளனர் என்று அமைச்சு தெரிவிக்கின்றது. சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் அவருக்கு சிகிச்சை அளித்த அனைத்து தரப்பினரிடமும் சாட்சியங்களை பதிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்த குழுவுக்கு சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

## நேற்றிரவு ஒளிபரப்பான 'கொலைக்களம்' காட்சிகள் திடீரென நிறுத்தம்

தென்னிந்திய கொலைக்காட்சியான 'கலைஞர் ரீவி' நேற்றிரவு சில நிமிடங்கள் தடைப்பட்டதாக அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். 'கொலைக் களங்கள்' என்ற தலைப்பில் வன்னியின் இறுதிப்போர் சம்பந்தமான காட்சிகள் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தன. சுமார் 13 நிமிடங்கள் ஒளிபரப்பான நிலையில் அந்த அலைவரிசை துண்டிக்கப்பட்டு விட்டது என்று அதனைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கை ஆள்பவர்கள் பெண்களே

### மகளிர் தின நிகழ்வில் சரவணபவன் எம்.பி. பாராட்டுரை



வடமாகாணத்தை இன்று ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் பெண்கள்தான் என்பது குறித்துப் பெருமைப் படுவதற்கு மகளிர் தினத்தை விட ஒரு நாள் கிடைக்கப் போவதில்லை என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

ஆனாலும் வடக்கை ஆளும் பெண்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்பட்டு நல்லாட்சியை வழங்க விடாமல் இங்கே மூன்று ஆண்கள் ஆணாதிக்கப் போக்குடன் நடந்து கொள்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அர்ச்சுனா சிறுவர் சஞ்சிகையின் அனுசரணையுடன் வலி.மேற்கு பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த சர்வ தேச மகளிர் தின விழா மார்ச் 8ஆம் திகதி நடைபெற்றது. சுழிபுரம், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சனி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்ததாவது:-

சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப் படும் இந்த வேளையில் நமக்காக போராடி இன்று சிறையில் வாடும் நம் சகோதரிகளை நினைவு கூர வேண்டியது அவசியம்.

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்றார் பாரதி. ஒரு குடும்பத்தில் ஓர் ஆணுக்குக் கல்வி புகட்டுவதைவிட பெண்ணுக்குக் கல்வி புகட்டுவது அந்தக் குடும்பத்துக்கே கல்வி புகட்டுவதாக இருக்கும் என்று இன்று சொல்கிறார்கள். ஏனெனில் பெண்ணின் வளர்ச்சி என்பது தனிமனித வளர்ச்சி மட்டுமல்ல, அது குடும்பத்தின் சமூகத்தின் வளர்ச்சி.

எமது சமூகம் பெண்ணைக் காவல் தெய்வமாகவும் போற்றி வந்திருக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்னர் வரை காலம் அப்படித்தான் இருந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அன்று பெண்கள் தலை நிமிர்ந்து நடந்தார்கள். ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்று இருந்தார்கள். சில சமயங்களில் ஆண்களையும் மிஞ்சி சாதனை படைத்தார்கள்.

அந்தக் காலம் பெண்களுக்குப் பாதுகாப்பானதாகவும், பெண்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டதாகவும் இருந்தது. இன்று நிலைமைகள் மாறிவிட்டன. தனியாக ஒரு பெண் வீதியில் நடமாட முடியவில்லை. தாலி அறுப்பு, கொலை என்று நாளாந்தம் எத்தனை செய்திகளைப் பத்திரிகையில் பார்க்கிறோம்.

கடந்த 3ஆம் திகதி நெடுந்தீவில் ஒரு மனித மிருகம் 13 வயதுச் சிறுமியை சின்னாபின்னப் படுத்தி கருங்கல்லால் தலையை சிதைத்து படுகொலை செய்துள்ளது. அந்த மிருகத்தை அடித்து விசாரணை செய்ய வேண்டாம் என்று அரசைப் பிடித்துக்கொண்டு தொங்கும் ஓர் அரசியல்வாதி பொலிஸாருக்கு அழுத்தம் கொடுக்கின்றார். இது என்ன கொடுமை. மூன்று வருடங்களுக்கு முன்னர் இப்படி ஒன்றை நினைத்துப் பார்த்திருக்க முடியுமா?

அந்தச் சிறுமியைச் சிதைத்த மிருகம் கடந்த காலங்களிலும் தீவகத்தில் கொடூரங்கள் பலவற்றைப் புரிந்துள்ளது. நெடுந்தீவுக்கு சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான மாவை சேனதிராஜா உட்பட பலரைக் கடுமையாகத் தாக்கி கை, கால்களை முறித்தது நெப்போலியன் தலைமையிலான குழுவினர். 13 வயதுச் சிறுமியை சித்திரவதை செய்த மிருகமும் நெப்போலியனின் கைத்தடிகளில் ஒன்றுதான் என்பது இன்று வெளிப்பட்டுவிட்டது.

இப்படி அதிகரித்துக் கொண்டே செல்லும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க வடக்கை ஆளும் பெண் அதிகாரிகள் துரிதமாக, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மகளிர் தினத்தில் ஜனாதிபதி மாளிகையில் எட்டுப் பெண்கள் கௌரவிக்கப்படுகின்றனர். அதில் ஒருவர் எமது யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார். நம் எல்லோருக்கும் பெருமைக்குரிய விடயம் அது.

விகிதாசார அடிப்படையில் பார்த்தால் கூட இரண்டு தமிழ்ப் பெண்கள் அந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது ஒருபுறம் உறுத்தினாலும் எமது மாவட்டத்தின் உயர் பதவியில் உள்ள பெண்மணி ஒருவர் கௌரவம் பெறுவது எம் எல்லோருக்கும் கிடைத்த பெருமை.

ஏனெனில் இன்று வடக்கை நிர்வகிப்பவர்கள் பெண்களே. யாழ். மாவட்டத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வவுனியாவில் அரச அதிபர் திருமதி சால்ஸ், கிளிநொச்சியில் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாணத்தின் முதன்மைச் செயலாளர் திருமதி விஜயலக்சுமி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக செல்வி வசந்தி அரசரட்ணம், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா என்று இங்கே அதிகாரங்கள் பெண்களிடமே வழங்கப்பட்டிருக்கின்றன. பெண்களை இந்தச் சமூகம் எவ்வளவு மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்துகிறது என்பதற்கு இவர்கள் எல்லோரும் உதாரணங்கள். அறிவு, ஆற்றல், ஆளுமை, திறமை எல்லாம் நிறைந்த பெண்கள் இவர்கள்.

ஆனால், அவர்களை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்படவிடாமல் மூன்று ஆண்கள் தமது ஆணாதிக்கத்தை வெளிக்காட்டி நிற்கிறார்கள். ஆளுநர், அமைச்சர், இராணுவத் தளபதி ஆகியோரே அந்த மூவரும். இவர்களால் கொடுக்கப்படும் நெருக்கடிகள் இல்லாமல் இருந்தால் வடபகுதி பெண்களின் தலைமைத்துவத்தின் கீழ் இன்று எவ்வளவோ முன்னேறி இருக்கும்.

இராணுவத்தில் இருப்பவரும் இராணுவத்தில் இருந்தவரும் துணைப் படைக்குத் தலைவராக இருந்தவரும் வடக்கைத் தலைமை தாங்கி நடத்தும் பெண்களுக்குக் கொடுக்கும் துன்பங்களும் இன்னல்களும் கொஞ்ச நஞ்சமல்ல. இவற்றை அகற்றிவிட்டால் வடக்கின் ஆட்சி புதுப் பொலிவு பெறும்.

பெண்கள் இந்த மண்ணில் ஆட்சி அதிகாரம் செய்கிறார்கள் என்று பெருமைப் பட்டுக்கொள்ளும் அதே வேளையில், அவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. பொலிஸ் நிலையங்களில் இன்று பதியப்படும் வழக்குகளில் அதிகமானவை, பெண்களுக்கு எதிரானவன்முறைகளே என்பது எமது சமூகத்தின் மோசமான பக்கங்களில் ஒன்று. இனியும் நாம் இப்படி இருக்கக் கூடாது. பெண்ணைச் சக மனுசியாக, சம உரிமை உள்ளவளாக மதித்து நடக்க எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டும். இளம் தலைமுறையினருக்கு அதனைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

உலகம் முழுவதும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் வேளையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வருவதற்குப் பாடுபட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிங்ரன், ஐ.நாவில் பிரேரணையைச் சமர்ப்பித்த மரியா ஒட்டேரோ ஆகியோரும் பெண்கள்தான். தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்கவும் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்கவும் அவர்கள் பாடுபடுகிறார்கள்.

இன்று நமது நாட்டில் 89 ஆயிரம் இளம் விதவைகள் உள்ளனர். இவர்களை விதவைகள் என்று இனிவரும் காலத்தில் கூற முடியாது. கணவனை இழந்த குடும்பத் தலைவிகள் என்றே கூற வேண்டும். இவர்களுள் பத்து சதவீதமானவர்களுக்கு கூட அரசால் வாழ்வதார உதவிகள் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு நிவாரணம் வேண்டும். இவர்களை ஒதுக்கி வைத்துவிடாமல் அரவணைத்துச் செல்ல எமது சமூகமும் முன்வர வேண்டும் - என்றார்.

இந்த வைபவத்தின்போது 'அர்ச்சுனா' சிறுவர் மாத இதழ் நடத்திய இலக்கியப் போட்டியில் வெற்றி ஈட்டியவர்களுக்கும் மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-2)

## நயினை அம்பாளுக்கு நாளை மண்டலாபிஷேகப் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 11

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா மற்றும் 'நாகேஸ்வரி அருளமுதம்' மலர் வெளியீட்டு விழா என்பன நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

நாளை காலை 7 மணிக்கு விசேட பூசை மற்றும் யாகங்களுடன் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நடைபெறும்.

முற்பகல் 10 மணிக்கு நாகேஸ்வரி அருளமுதம் மலர் வெளியீட்டு விழா நடைபெறும். சென்னை ஸ்ரேல்லா மாரிஸ் கல்லூரி பேராசிரியர் முனைவர் விஜயலெட்சுமி இராமசாமி மலர் நயப்புரை வழங்குவார்.

கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை மலர்க் குழுத் தலைவர் சமாதான நீதிவான் ம.க.பரமலிங்கமும், அறிமுகவுரையை மலராசிரியர் சமாதான நீதிவான் கு.சரவணபவானந்தனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் நன்றியுரையை அறங்காவலர் சபைச் செயலாளர் ந.மோகனரூபனும் வழங்குவர். குகன் மோட்டார்ஸ் செ.குகதாசனும் மலர் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (4)

## காரைநகர் மேற்கு வீதிக்கு மின்குமிழ்கள்

காரைநகர், மார்ச் 11

நீண்ட காலமாக இருளில் மூழ்கியிருந்த காரைநகர் மேற்கு வீதிக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரனின் தனிப்பட்ட நிதியில் இருந்து காரைநகர் வாரிவளவில் இருந்து மணற்காடு வரையான பிரதேசத்துக்கு இருபதுக்கு மேற்பட்ட மின்குமிழ்கள் பொருத்தப் பட்டுள்ளன. (த-250)

## இராமேஸ்வரத்தில் கைதானவர்கள் நெடுந்தீவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கச்சதீவு உற்சவத்தின் போது இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் செல்ல முயன்று இராமேஸ்வரத்தில் கைதான பெண்ணும், சிறுமியும் மீண்டும் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று தெரிய வருகிறது. (த-7)

## மாதகலில் வீடுகளை விட்டுச்செல்ல கடற்படையினர் நிபந்தனை

### 'கடற்கரையில் காணிகள் தந்தால் போய்விடுவோம்'

யாழ்ப்பாணம், மார்ச் 11

மாதகல் மேற்கிலுள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் பாடசாலைகளில் இருந்து வெளியேறிச் செல்ல நாங்கள் தயார். ஆனால் எமக்கு கடற்கரையை அண்மித்த - விகாரையை அண்டிய பகுதிகளில் பொதுமக்கள் காணிகள் தரவேண்டும். சும்மா அல்ல பணத்துக்கே.


இவ்வாறு அங்கு தற்போது தங்கி இருக்கும் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை டக்ளஸ் மாதகல் பகுதிக்குச் சென்றிருந்தார். அதன்போதே கடற்படைத் தரப்பினரால் மேற்கண்ட 'நிபந்தனை' விதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் நுணசை பாடசாலை, தபால் அலுவலகம் மற்றும் பொதுமக்களின் வீடுகள் பல உள்ளன. இவற்றை விட்டு நாங்கள் வெளியேறுவதாயின் மாதகல் மேற்கில் விகாரையை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள காணிகளை பொதுமக்கள் விலைக்குத் தரவேண்டும். அப்படிக் காணிகள் கிடைக்கும் பட்சத்தில் நாங்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று விடுவோம் என்று கடற்படையினர் கூறுகின்றனர் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களிடம் தெரிவித்தார்.

இருந்த போதிலும் இந்தப் பகுதி மீள் குடியமர்வு தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி ஒரு மாதத்தினுள் தீர்வு பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் பொதுமக்களிடம் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## என்னே... ஒரு தொலைநோக்குப் பார்வை !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மற்றொரு சமூகப் பிறழ்வுக்கு கண்ணுக்குப் புலப்படாத அத்திபாரம்

வடக்கின் பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம், குடும்ப உறவின் மகத்துவம், சமூகப் பெறுமானம் உட்பட நல்லியல்புகள் மிகப் பலவும் தேய்ந்து உடைக்கப்பட்டு, சமூகச் சீர்கேடுகள் பல்கிப் பெருகி மலிந்து வருகின்றன.

காலங்காலமாகக் கட்டுக்கோப்புடன் கட்டிப் பேணப்பட்ட குடும்ப உறவுகள் சீரழிந்து போகும் அபாயமும் பெருகும் என்பதனை வெளிப்படுத்தும் அசிங்கமான சம்பவங்களும் இப்போது வடக்கில் அதிக அளவில் அரங்கேறி வருவது, சமூக நலன் விரும்பிகளின் நெஞ்சங்களில் காலால் இடிக்கும் அளவுக்குப் பெருத்துவிட்டன; பெருகிவிட்டன!

போரின் தாக்கத்திலிருந்து விடுபட்டுள்ளோம். அதனூடு இழந்து போன எமது வாழ்வியல் அலகுகளை முந்திய நிலைக்கு மீள்விக்க வேண்டும் என்ற வேணவா பெரியோரிடம் வளரும் அதேவேளை -

இளம் சமுதாயத்தினர் வேறு திசை நோக்கி வேண்டாத போக்குடன் சமூகத்தைச் சீரழிக்கும் தன்மை, அரச அமைப்புகளினாலும், தனியார் அமைப்புகளினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ளது; உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

சமூக விரோதச் செயல்கள் என்று மேலெழுந்தவாரியாக அல்லாது, எமது குடும்ப உறவுப் பண்புகளையே படுகுழி தோண்டிப் புதைக்கும் அளவுக்கு, காமுகர் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து செல்கிறது என்ற தகவல் வடக்கு மக்கள் அனைத்துப் பேரையுமே தலைகுனிய வைத்துள்ளது.

எந்தக் காலத்திலும் இல்லாதவாறு, சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் இடம்பெற்றுவருவதைப் புள்ளி விவரங்கள் அழுத்தித் தொட்டுக்காட்டுகின்றன. இந்த ஆண்டின் முதல் அறுபத்தெட்டு நாள்களில் சிறுமிகள் மீது 24 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குடாநாட்டில் மட்டும் நடைபெற்றுள்ளன. வன்னியில் நான்கு மாவட்டங்களின் புள்ளிவிவரத் தரவுகள் இதனைவிட அதிகமாகவே இருக்கும் என்று கொள்ளலாம், நம்பலாம்.

பாலியல் வன்புணர்வின் பின்னர் சிறுமிகள் கொலை செய்யப்படும் காட்சிகள் சினிமா, தொலைக்காட்சிப் படங்களில் மட்டுமன்றி, வீட்டுக்குள்ளேயே நடைபெறுகின்றன என்பதனைக் கேட்போர் இதயங்கள் இடிந்து போகின்றன.

யாழ். மாவட்டத்தில், கடந்த இரண்டு வருடங்களிலும் இவ்வருடத்தின் இரண்டு மாதங்களிலும் மொத்தம் 316 பாலியல் வன்முறைகள் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஆண்கள் தமது பாலியல் பசியை வன்முறையாகத் தீர்த்துக் கொள்ளும் இந்தப் போக்கு, அதிலும் சிறுமிகளைக் கெடுக்கும் இந்தப் பொல்லாத வன்மப் போக்கு, இதுவரை நாம் பேணிப் பாதுகாத்து வந்த குடும்பப் பண்புகளையும், சமூக ஒழுக்கங்களையும், விழுமியங்களையும் குழிதோண்டிப் புதைக்கப்போகிறது. ஒரு சில எண்ணிக்கையினரான காமுகர்களால் ஆண்கள் சகலரினதும் முகங்களில் கரிபூசிக் காட்டப்போகிறது. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போன்று ஆண்கள் மீதான மதிப்பையும் மரியாதையையும் கெடுத்து ஒழிக்கப்போகிறது.

எங்கள் சிறுமிகள் மீதான, யுவதிகள் மீதான, உறவுமுறை மீறிய வன்புணர்வுகள், மலியும் பட்சத்தில் பல பாரதூரமான சமூகப் பிறழ்வுகளையும், சொந்த பந்தங்கள் என்ற கட்டுக்கோப்பையும் அது தகர்த்தெறியும். இரத்த உறவுகள் மத்தியிலேயே பூகம்பத்தைத் தோற்றுவிக்கும். அது மொத்தத்தில் எமது பாரம்பரிய சமூகக் கட்டமைப்பை துகள்களாக்குவதற்கு அத்திபாரம் இடும். மொத்தத்தில், இந்தச் சமூகப் பிறழ்வு, மக்களைக் கண்ணிவெடி வைத்து கொல்வதற்கு ஒப்பானது என்று கொள்வது தப்பன்று.

திடுதிடுப்பென சிறுமிகள் உட்படப் பெண்கள் பாலியல் ரீதியாகக் காயப்படுத்தப்படுவதற்குப் பின்னால், காமவெறி கொண்ட ஆண்களை உருவாக்கிப் பெருக்குவதற்குப் பின்னணியில், தூண்டுதலாக ஏதோ ஒரு சக்தி திட்டமிட்டுச் செயற்படுகிறது என்ற கருத்துப் பரவலாக உள்ளது. அதனை முற்றுமுழுதாக வெறும் ஊகம் அல்லது மேலோட்டமான பார்வை என்று தட்டிக் கழித்துவிட முடியாது.

நீண்ட காலமாகப் பெரும் போருக்குள் மூழ்கி, எல்லாவற்றையும் இழந்தும், உளரீதியாகப் பாதிக்கப்பட்டும் இடருறும் தமிழ் இனத்தின் அன்றாட வாழ்க்கைக்குரிய அடித்தளத்தை உடைத்து நொருக்கும் உள்ளூர்ந்த செயற்பாடுகள், கண்ணுக்குப் புலப்படாத வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இளைஞர்களை எமது கலாசார, பண்பாட்டுத் தளங்களில் இருந்து உருவி எடுத்து, சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுவதற்குத் தூண்டும், கண்ணுக்குப் புலப்படாத, மக்கள் நீரோட்டத்துக்குள் இலகுவில் கலந்து விடும் பல சிறுமைத் தனங்களுக்கு மேலதிகமாக -

தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை இல்லாமல் ஆக்கி - அர்க்கெடுத்தி - எடுப்பார் கைப்பிள்ளைகளாக்கும் நயவஞ்சகத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும் நோக்கவேண்டும்.

அதேவேளை, எமது மக்களிடையே, சிறுமிகள், பெண்கள் மீதான வன்முறைகள் குறித்த விழிப்புணர்வு இன்னும் அரும்பியதாக இல்லை. இந்தக் கொடுமையான, அநாகரிகமான, மிருகத்தனமான செயல்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களைச் சிறைக்குள் தள்ளி, செய்த குற்றத்துக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதில் சிவில் சமூகமும், சட்டம் ஒழுங்கு பேணும் தரப்புகளும் விரைந்து, மன ஓர்மத்துடன் செயலாற்ற வேண்டும்.

அதில் ஏற்படும் தாமதம், உண்டாக்கப்படும் தாமதம், சமூகத்தில் பல வேண்டத்தகாத ஏனைய பாதகமான, ஆழம் கொண்ட சமூகப் பிறழ்வுகள் பல்கிப் பெருக வித்திடும்; வகை செய்யும்; வழி வகுக்கும்.

மக்களை மாக்களாக மாற்றும் இந்த அசிங்கமான, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு நீதிமன்றங்களின் அதிக பட்சத் தண்டனை ஏற்பாடுகள் அவசியம். காமவெறியர்களில் ஒரு சிலரையாவது அதி உச்சத் தண்டனைக்கு உள்ளாக்கினால் மட்டுமே, இந்த மிருகத்தனமான குற்றவாளிகளைத் திருத்த முடியும். அதன் மூலம் மட்டுமே பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைக் குறைக்க இயலும்.

இது குறித்த சமூக விழிப்புணர்வை உண்டாக்குவதற்கு நீதி சார் தண்டனை ஒரு தூண்டுகோலாக அமைய வேண்டும். அரசு இதில் ஊன்றிப் புலன் செலுத்திச் செயற்பட முன்வருமா? என்ன?



# ஜெனிவாவில் உறுதி வழங்கி நாட்டை படுபாதாளத்தில் தள்ளியுள்ளது அரசு

## சாடுகிறது ஹெல உறுமய

கொழும்பு, மார்ச்11

அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து அரசு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என ஜெனிவாவில் உறுதியளித்துள்ளதன் மூலம் நாட்டையும், நாட்டு மக்களையும் படுபாதாளத்தில் தள்ளிஇருப்பது மட்டுமல்லாமல், சர்வதேசத்தின் பிடிக்குள்ளும் சிக்க வைத்துள்ளது என்று ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேசத்தினர் எமது நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு மூக்கை நுழைப்பதனால் எமது நாட்டில் இல்லாத பல்வேறு பிரச்சினைகள் எதிர்காலத்தில் தோன்றுவதற்குரிய அபாயகரமான சூழ்நிலை ஏற்படும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி எமது நாட்டிற்கு வருகைதந்த மரியா ஒட்டேரோ மற்றும் ரொபர்ட் ஓ பிளேக் முதலான அமெரிக்க அதிகாரிகளால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிகாரிகளின் இந்த அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து நாட்டையும், நாட்டு மக்களையும் படுபாதாளத்தில் தள்ளியது மட்டுமல்லாது, நாட்டை சர்வதேசத்தின் பிடிக்குள் அரசு சிக்கவைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதியளித்ததன் மூலம் அரசு இதனைச் செய்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என அரசு சர்வதேசத்திடம் உறுதியளித்துள்ளமையால் அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய அரசு ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக நமது நாட்டுக்குள் மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகள் எதிர்காலத்தில் வரக்கூடும்.

நல்லிணக்க ஆணைக்குழுவரையறைகளுக்கு அப்பாற்சென்று செயற்படுகின்றமையால் நாட்டில் பெரும் ஆபத்து நிலைமை ஏற்படும். இதனால் நமது நாட்டில் இல்லாத பல பிரச்சினைகள் தோன்றக்கூடும் - என்றார் அவர். (ஒ-சி)

# போர்க் குற்ற விசாரணையை உள்ளடக்காத அமெரிக்கப் பிரேரணை பலவீனமானது

## அரச சார்பற்ற நிறுவனங்கள் விசனம்

கொழும்பு, மார்ச்11

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையையும் உள்ளடக்கியே அமெரிக்கா பிரேரணை தாக்கல் செய்யும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது பலவீனமானதொரு பிரேரணையையே இலங்கை விவகாரம் தொடர்பில் முன்மொழிந்துள்ளது - என்று உள்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

தாம் இவ்வாறானதொரு பிரேரணையை எதிர்பார்க்கவில்லை என்றும், இதனைவிட மேம்பட்டதொரு பிரேரணையையே எதிர்பார்த்தனர் என்றும் அரச சார்பற்ற அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையின் வரைவை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் கடந்த புதன் கிழமை சமர்ப்பித்தது அமெரிக்கா. இந்நிலையிலேயே, அரச சார்பற்ற அமைப்பினர் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பி.பி.சி. செய்திச் சேவைக்குக் கருத்து வெளியிட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரி சுனிலா ஒபேசேகர கூறியவை வருமாறு:-

அரச சார்பற்ற அமைப்பினராகிய நாம் இவ்வாறானதொரு பிரேரணைக்காகப் போராடவில்லை. இதனைவிட மேம்பட்டதொரு பிரேரணையையே எதிர்பார்த்தோம்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையையும் உள்ளடக்கிய பிரேரணை ஒன்றையே நாம் எதிர்பார்த்தோம் - என்றார். (ஒ-சி)

# நிகழ்வுகள் இன்று

### அங்குரார்ப்பணம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ''பிரம்ம கானாசபா'' இசை மன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள ஒன்றியத்தில் இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினராக சிவஸ்ரீ ஸோம உமாரமணக்குருக்கள் கலந்துகொள்வார். (ம-14)

### கலந்துரையாடல்

வன்னி மாவட்டத்தில் இருந்து வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து கல்வி வலயங்களினால் விடுவிக்கப்பட்டும் இதுவரை இடமாற்றக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் இடம்பெறவுள்ளது. இடமாற்றத்திற்கு வன்னி மாவட்ட கல்வி வலயங்கள் விடுவித்தும், மாகாண கல்வித் திணைக்களத்தினால் இதுவரை இடமாற்றக் கடிதம் கிடைக்கப்பெறாத அனைத்து ஆசிரியர்களையும், தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-86)

### ஒன்றுகூடல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ''சிவானந்தம்'' சஞ்சிகையின் அடுத்த வெளியீடு தொடர்பான எழுத்தாளர் அவை ஒன்றுகூடல், பிற்பகல் ஒரு மணிக்கு ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### மகளிர்தின விழா

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின விழா பிற்பகல் 4 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முள்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் செல்வி சுசீலாதேவி விஸ்வலிங்கம் கலந்துகொள்வார். (ம-14)

### பொதுக்கூட்டம்

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணமும் பொதுக் கூட்டமும் காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற உள்ளது. பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற உள்ளது. (த-250)

***

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கைநிதிய பருத்தித்துறைப் பிரதேச சங்க இரண்டாவது பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் கலந்துகொள்வார். (ம-14-8)

***

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 33 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். மன்றத்தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தந்தையை இழந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து 25 வருடங்கள் பூர்த்தி செய்த வார்த்தகர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (ம-14-9)

### பட்டமளிப்பு

வட இலங்கை சங்கீத சபையின் பட்டமளிப்பு விழா, பிற்பகல் 1 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ்ப்பாணக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளருமான வை.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மற்றும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர்.சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், திருமதி தவமணிதேவி விக்கினேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையைச் சேர்ந்த திருமதி கலைவாணி, இராம நாதன் சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பொன்.பாலகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்புக்கான அத்தாட்சிப்பத்திரம் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

வன்னித் தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தினுள் அடங்கும் புதுக் குடியிருப்பு, கரைதுறைப் பற்றுப் பிரதேச சபைகளுக் கான தேர்தலை எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் மெனிக்பாம் முகாம்களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக அவர்கள் வாழ்ந்த பிரதேச சபைகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

இந்தத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிப்போருக் கான அத்தாட்சிப் பத்திரம் உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள துடன் இவர்களுக்கான வாக் குகள் அடையாளம் இடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதனைவிட இடம் பெயர்ந்த வாக்காளர்கள் மற் றும் மெனிக்பாம் முகாம் களில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக வாக் களிப்பு நிலையங்கள் அவர் கள் வாழ்ந்த பிரதேச சபை களில் அமைக்கப்பட்டுள் ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப்பிரிவைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆனந்தபுரம், மத்துவில், மல்லிகைத்தீவு, சிவநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மெனிக்பாம் முகாமில் வசிக்கும் மக்கள் புதுக்குடி யிருப்பு மகாவித்தியாலயத் திலும் கரைதுறைப்பற்று பிரதேச பிரிவைச் சேர்ந்த கோம்பாவில் மாதிரிக் கிரா மத்தில் குடியமர்த்தப்பட் டுள்ள முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த மக்களும், முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் அம்பலவன் பொக் கணை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மெனிக்பாம் முகாமில் வசிக்கும் மக்களும் முள்ளியவளை வித்தியானந் தாக் கல்லூரியில் வாக்களிக்க முடியும். (க-14)

## 78 ஆவது அகவையில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலை

*முல்லைத்தீவு,மார்ச் 11*

*கற்சிலைமடு அ.த.க பாடசாலை 78 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. தற்போது இந்தப் பாடசாலையில் 400 இற்கும் மேலான மாணவர்கள் கல்வி கற்று வருகி ன்றனர்.*

*க.பொ.த உயர்தரம் வரை கற்றல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே அதிகளவில் இங்கு கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த பணிகளால் இம்முறை அதிகளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் மாணவர்களின் ஊக்கமும், தனியார் கல்வி நிலையங்களின் சேவையும் இதற்கு உறுதுணை புரிந்துள்ளன. மேலும் விளையாட்டுத் துறையிலும் இந்தப் பாடசாலை முன்னணி வகிக்கின்றது. 20 பிள்ளை களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளது.*

*ஆனால் இந்தப் பாடசா லைகளின் தற்போதைய வளர்ச்சி கற்சிலைமடு மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.* *(க-500)*

## விவசாயிகள் பாதிப்பு

**முத்துஜயன்கட்டுச் சங்கம் நெல் கொள்வன வில் ஈடுபடாத நிலை யில் உள்ளது. இத னால் விவசாயிகள் வர்த் தகர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு நெல்லை விற்பனை செய்கின்றனர்.**

முல்லைத்தீவு, மார்ச் 11

முத்துஜயன் கட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெல் கொள்வனவில் ஈடுபடா ததால் இந்தப் பகுதி விவசாயி கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தில் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வன வில் ஈடுபட்டுள்ளன. ஆனால் முத்துஜயன்கட்டுச் சங்கம் ஈடுபடாத நிலையில் உள் ளது. இதனால் இந்தப் பகுதி விவசாயிகள் தனியார் வர்த் தகர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கே நெல்லை விற் பனை செய்கின்றனர்.

கடந்த சிறுபோகச் செய் கையின் போதும், இந்தச் சங்கம் நெல்லைக் கொள் வனவு செய்வதாகக் கூறி விட்டு அவ்வாறு கொள்வன வில் ஈடுபடவில்லை. தற் போது பெரும் போகத்தின் போதும் இந்த நிலையே காணப்படுகின்றது.

இதனால் ஒட்டுசுட்டான் விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய் வதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளு மாறு அரச அதிபரைக் கோரி யுள்ளனர். (க-500)



*துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் கட்டட வேலைகள் அரைகுறையான நிலையில் காணப்படுகின்றன. (18)*

## மூன்று நாள் செயலமர்வு

முல்லைத்தீவு,மார்ச் 11

முல்லைத்தீவில் கடற் றொழில் சார்ந்த முயற்சி யாண்மை மற்றும் வியாபார அபிவிருத்தி முயற்சி என்ற கருப்பொருள்களில் மூன்று நாள் செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி செயலமர்வு யூ.என் .டி.பி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 27,28,29 ஆகிய மூன்று தினங்கள் முல்லைத்தீவு நகரில் நடை பெற்றது.

இதில் கடற்றொழில் சார்ந்த வர்த்தகர்கள், கடற்றொழி லாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றுள் ளனர்.

இதேவேளை கடந்த முதலாம் திகதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதி நிதிகள், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட செயலமர்வு ஒன்றில் மேற் படி சங்கங்களின் அபிவி ருத்தி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் அதன் எதிர் கால நோக்குடனான அபி விருத்தி பற்றியும் கலந்துரை யாடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (க-6)

# ஹெல உறுமய கூறுவதை மனச்சாட்சி உள்ளவர்கள் ஏற்கார்

## எம்.பிக்கள் செல்வம், வினோ அறிக்கை

மன்னார், மார்ச் 11

மன்னார் ஆயரை நீதிமன் றத்தின் முன் நிறுத்த வேண் டும் என ஜாதிக ஹெல உறு மய கூறுவதை மனச்சாட்சி உள்ள பெரும்பான்மையின மக்கள் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**மன்னார் ஆயர் உட்பட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் எந்தத் தரப்பினர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.**

மன்னார் ஆயருக்கெதி ராக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்திருக்கும் கருத்துக் குக் கண்டனம் தெரிவித்து வெளியிட்டிருக்கும் அறிக் கையில் நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக் கலநாதன், வினோநோகரா தலிங்கம் ஆகியோர் இவ் வாறு தெரிவித்துள்ளனர்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையை உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் எனத் தெரிவிப்பதற்கு பேரின வாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்கு அரு கதையில்லை.

தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்கும் இறுதியாக முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற மனிதப்படுகொலைக் கும் மூலகாரணமாக அமைந் தவர்களே இந்தப் பேரினவாத ஜாதிக ஹெல உறுமய குழு வினர்தான்.

போர் உக்கிரமாக இடம் பெற்ற காலப்பகுதிகளிலும், இறுதிக்கட்டப் போரின் போதும் இலங்கை கத்தோ லிக்க ஆயர் மன்றத்தினதும் மன்னார் ஆயர் உள்ளிட்ட தமிழ்க் கத்தோலிக்க ஆயர் களினதும், கிறிஸ்து பிறப்பு கால மற்றும் புதுவருடத்தை ஒட்டி மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்குமாறு விடுக் கப்பட்ட கோரிக்கை அரசி னால் உதாசீனம் செய்யப் பட்டபோது இந்த ஜாதிக ஹெல உறுமய எங்கு போய் ஒளிந்துகொண்டது?

பௌத்த தர்மத்தையும், அரசியல் அமைப்பையும் மீறித்தானே அரசினால் சொந்த நாட்டு மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டி ருக்கின்றனர். அப்போது எங்கே போய் ஒளிந்து கொண் டது இவர்கள் சொல்லும் அரசியலமைப்பு?

இறுதிக்கட்ட யுத்தத்தைச் சாட்டாகக்கொண்டு வன் னிப்பெருநிலப்பரப்பின் மீது விதிக்கப்பட்டிருந்த திட்ட மிடப்பட்ட பொருளாதா ரத்தடை, மருத்துவத் தடை, உள்ளிட்ட மனித நேயத்துக்கு முரணான செயற்பாடுகளை ஒருநாட்டின் அரசு முன்னெ டுத்திருந்த போது தனிமனி தனாக வன்னிக்காடுகளுக் குள் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த மக்களைத் தேடி அலைந்து அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை நேர டியாகக் கண்டு உதவிகளை வழங்கி மனிதநேயம் என்றால் இதுதான் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டிய மன்னார் ஆயர் அவர்களுக்குத்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என் பதை கேட்கின்ற உரிமையும் கடமையும் இருக்கின்றது.

அதற்காக அவர் உள்நாட் டில் பலதடவைகள் பல உயர் மட்டங்களைச் சந்தித்திருக் கின்றார். தமது நியாயமான கோரிக்கைகளை அவர்கள் முன் சமர்ப்பித்திருக்கின்றார்.

இறுதியாக ஜனாதிபதி யால் நியமிக்கப்பட்ட கற் றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சாட்சியப்பதிவுகள் மன்னாரில் இடம்பெற்ற போதும், அதன் முன் பிர சன்னமாகி தமது கருத்துக் களை ஆவணமாகச் சமர்ப் பித்திருந்தார்.

இவ்வாறு மக்கள் பற்றி யும் அவர்களது உரிமைகள், அன்றாட வாழ்வியல் பற்றி யும் சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு மதத் தலைவரான மன்னார் ஆயரை நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கூறுவதை மனசாட்சி உள்ள பெரும்பான்மையினர் கூட ஏற்றுக்கொள்ளமாட் டார்கள் என்பதையே நாம் தெரிவித்து நிற்கின்றோம்.

உள்நாட்டில் நாம்வாழும் சூழலில் நமக்கான உரிமை கள் மறுக்கப்படும் போது, நீதிமன்றத்தை நாடுகின் றோம். அதேபோன்றுதான் சர்வதேச மயமாகிப்போன தமிழர் விவகாரத்திற்கு நீதி யுடன் கூடிய தீர்வு கிட்ட வேண்டுமாயின் சர்வதேச சமூகத்தை நாடுவது ஒன்றும் தவறில்லை.

எனவே மன்னார் ஆயர் உட்பட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் எந்தத் தரப்பினர் கள் மீதும் மேற்கொள்ளப் படும் இந்தச் செயற்பாடு களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தொடரும் பட்சத் தில் இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீதி யில் இறங்கிப் போராட்டத்தை நடத்தவும் தயாராகவுள்ளோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் இணைந்து வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (க-12)

# போரினால் கைவிடப்பட்ட வாகன விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

கைவிடப்பட்ட வாகன விவரம் வருமாறு:-

வாகன இலக்கம், இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம்

EPJP 8306- T24373, 36-3901- CE21526U 523746E, CE13811U689 661J- 506407, U-11/163, 27-2090- 319301- 16883 41, 26-4531- DA120-852 766- 1673582, 43-1384- 4BD1-831397, 28-0882- DA120-865546- TXD60- 1685089, 42-1464- 6BDI- 466495- JALHTR11JJ- 3000308, 40-3123- 1089 72- KS227761308, 40- 2502- 4BB-341726- KS- 217747570, 26-4824- DA 120-858562- 1671704, JR-3609- KWE401087- KWE539259, 42-0728- 6AAJR95026, GG-5688- 1BLE342716- ZLH0583 83, 48-8921- GHE1-6936 22- FRR32HB-3005464, JP-1812- KWE-402515- LALG03951, LA-7891- 4D321K54481- FG635E- A40291, WPHT-4629- CVR214318- CVE-3796 49, GU-9599- KME-3556 31- KMH-066372, JW- 1497- FWH284450- FWE 541657, 47-1739- SWE 194841- LALG02106, 48- 1249- 11B-1197703- BU 61-0014111, JK-9923- 4M51-A14068- FE632G- 540427, GV-9257- FME 361400- FME484449, GD-4701- 2C3325219- CM51-0027197, LA-77 70- SDE-412752- MDR 226426, HN-1825- DVH- 229595- CVR127389, GZ -3965- 3L-4262176- LV1 51-0004229, 40-1623- 4D 55AM7139- L038P500 8962, GN-2451- NVX- 197469- LALG03520, NPHU-2580- YVE3847 43- TVE515282, HL-13 58- KMH195009- JME 481868, WPGZ1676- FME 360502- FME483772, WPHO-9081- YVE3845 23- YVE514853, HE- 9398- CME363588- CME 486844, GW-0609- AYZE 855187- MAT37304311R 03319, HX-7974- 4HE1- 231649- JAANKR55L47 100193, 27-2871- 6BD1- 326123- JCR500-33809 35, 56-5647- 2L-3477941- LH102-0037335, JP-5222- 3G83921664- U61T-0210 939, GV-9269- DME-36 2315- DME485363, 47-08 02- 4BG1-179651- NKR 61L-7100416,.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,044 பேர் இதுவரை மீளக்குடியமரவில்லை

## யாழ்.செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

யாழ்.மாவட்டத்தில் 10 ஆயிரத்து 44 பேர் இதுவரை மீளக் குடியேற்றம் செய்யப் படவில்லை.

இதில் ஆயிரத்து 711 குடும்பங்கள் தற்போதும் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு யாழ்.செயலக முன்னாள் திட்டப் பணிப் பாளரும் வலி.கிழக்குப் பிர தேச செயலருமான ம.பிரதீ பன் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரது இணைத் தலை மையின் கீழ் நேற்று காணி மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான அவசரக் கூட் டம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் முன்னாள் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் மேலும் தெரிவிக்கையில்,

நலன்புரி நிலையங்க ளிலும், நண்பர்கள் வீடுகளி லும் வாழ்ந்து வரும் இடம் பெயர்ந்த மக்களுக்குக் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து நிவாரணம் வழங் கப்படுவது நிறுத்தப்பட் டுள்ளது என்றார்.

இந்த நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவுக்கும், ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறிக்கும் முன்னாள் திட்டப் பணிப்பாளர் விளக் கினார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் கருத்துத் தெரிவிக்கையில், மீள் குடி யேற்றம் இன்றி நலன்புரி நிலையங்களில் வாழும் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், கரவெட்டி, பருத் தித்துறை ஆகிய பிரதேச மக்களுக்கு நிவாரணம் தொடர்ந்து வழங்க நடவ டிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பொதுக் கட் டடங்கள், தனியார் கட்ட டங்கள், வீடுகள் என்பவற் றில் வாழும் படையினரின் விவரங்கள் உடன் திரட்டப் பட வேண்டும். இந்த விவ ரங்கள் கிடைக்கப் பெற்றவு டன் படிப்படியாகப் படையி னர் அந்த இடங்களில் இருந்து அகற்றப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப் படுவர்-என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிர தேச செயலர்கள் வரைபட ரீதியாக மக்கள் மீளக் குடி யமர வேண்டிய பிரதேசங் களின் விவரங்களையும், மக்களின் விவரங்களையும் விளக்கினார்கள்.

பிரதேச சபைகளின் தலைவர்கள், பிரதேச செய லர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், உள்ளூ ராட்சி ஆணையாளர்கள், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ் வரன், வட பிராந்திய பஸ் போக்குவரத்து முகாமை யாளர் கே.கணேசபிள்ளை ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (த)

# நிவாரண விநியோகத்தில் 20 வகையான பொருள்கள்

## பரீட்சார்த்த திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங் கம் உலக உணவுத் திட் டத்தின் கீழ் விநியோகிக்கப் படும் பெப்ரவரி மாதத்திற் கான நிவாரண விநியோகத் தில் புதிய திட்டத்தை அறி முகம் செய்துள்ளது.

உலக உணவுத் திட் டத்தின் அனுமதியுடன் பய னாளிகளுக்கு மா,சீனி, பருப்பு, சமையல் எண்ணெய், பால்மா உட்பட 20 வகை யான பொருள்கள் இந்தத் திட்டத்தில் விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழைச் சங் கத்தின் முன்மாதிரியான செயல்திட்டம் வெற்றி பெற் றால் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக் கும் இது விஸ்தரிக்கப்படும் என்று கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரி வித்தார். உலக உணவுத் திட் டத்தின் கீழ் சங்கங்களி னால் விநியோகிக்கப்படும் இந்த 20 வகையான பொருள் கள் மூலம் பயனாளிகள் பெரிதும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக மா,சீனி, அரிசி, பருப்பு போன்ற அத்தியா வசியப் பொருள்களை விட ஏனைய பொருள்கள் பயனா ளிகளுக்கு உதவக் கூடியவை எனக் கூறப்பட்டது.

இந்தப் புதிய திட்டத்தை சகல அங்கத்தவர்களுக்கும் அடுத்த நிவாரண விநி யோகத்தின் போது விஸ் தரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா கவும் கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையா ளர் மேலும் கூறினார்.

இதேவேளை-தெல்லிப் பழை பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தால் விநியோகிக் கப்பட்டு வரும் உலக உண வுத் திட்டத்தின் பெப்ரவரி மாதத்திற்கான நிவாரண விநி யோகத்தின் இறுதித் திகதி 20 ஆம் திகதி வரைக்கும் நீடிக் கப்பட்டுள்ளது. (த-17)



யாழ்.மாநகரசபை நடத்திய மகளிர்தின விழாவில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக்கான பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா மங்கள விளக் கேற்றுகிறார். (த-7)

# கோவா, கறி மிளகாய் இம்முறை நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

யாழ்.குடாநாட்டில் விவ சாயிகளால் மேற்கொள்ளப் புட்ட கோவா, போஞ்சி, கறிமிளகாய் போன்ற மரக் கறி வகைகள் நல்ல விளைச் சலைக் கொடுத்துள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மரக்கறி விதைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது மரக்கறி உற்பத்தியை மேற்கொண்டனர். இதற்குத் தேவையான வழிகாட்டல் களையும் ஆலோசனைக ளையும் விவசாயத்திணைக் களம் வழங்கியது.

இதனையடுத்து இந்த மரக்கறிச் செய்கை மூலம் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது.

இந்த மரக்கறி வகை களின் அறுவடை ஆரம்பமா கியதை அடுத்து அவை சந்தைகளுக்கு அதிகளவில் வந்து சேர்வதால் அவற்றின் விலைகளும் சரிந்து காணப் படுகின்றன.

இந்த மரக்கறி வகைகள் கூடுதலாக வியாபாரிகளால் தென்பகுதிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. (த-17)

**வெளிநாடுகளில் இருந்து இறக் குமதி செய்யப்பட்ட இந்த மரக்கறி விதைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது மரக்கறி உற்பத்தியை மேற்கொண்டனர்.**

# மாணவியை காணவில்லை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் கோப்பாயைச் சேர்ந்த மாணவி ஒரு வரைக் கடந்த நான்கு நாள் களாகக் காணவில்லை என முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைக்குச் சென்ற மாணவி பின்னர் வீடு திரும் பவில்லை. பெற்றோர்கள், உற வினர்கள், நண்பர்கள் வீடு களில் தேடியும் அவர் பற்றித் தகவல் இல்லை. இதனைய டுத்து வீட்டார் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளனர். கோப்பாயைச் சேர் ந்த சுதன் தில்சனா (வயது-14) என்ற மாணவியையே காணவில்லை என முறைப் பாட்டில் தெரிவிக் கப்பட்டு ள்ளது. பாடசாலை மாணவி காணமல்போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத் திலும் முறையிடப்பட்டுள் ளது. (த-86)

# இளநீர் குடித்தவர் யாரோ

யாழ்ப்பாணம்,மார்ச் 11

கோயிலில் திருடப்பட்ட பித்தளைப் பானையைக் கொள்வனவு செய்து வீதியால் கொண்டுசென்றவரைப் பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்றில் முற்படுத்தினர்.

ஒரு நாள் விளக்க மறியலில் வைக் கப்பட்ட அவர் கடந்த 9ஆம் திகதி 50ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக் கப்பட்டதோடு அது தொடர்பான வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்தி வைக் கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்துக்கோயில் ஒன்றில் பித்தளைப் பானையை ஒருவர் திருடிக்கொண்டு சென்று யாழ்.கச்சேரியடியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்துள்ளார். அந்தநேரம் அந்த வழியே சென்ற கொழும்புத்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் பானையை வைத்தி ருந்தவரை அண்மித்தபோது அதனை விற்பதற்காகக் கொண்டு செல்வதாக அவர் தெரிவித்துள்ளார். இரண்டாயிரம் ரூபாவுக்கு விற்கவுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து பிரஸ்தாப நபர் பணத்தைக் கொடுத்து பானையை வாங்கிக்கொண்டு சென்ற போதே பொலிஸாரால் அவர் கைதுசெய் யப்பட்டார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த கோயில் ஒன்றிலிருந்தே பித்தளைப் பானை திருடப் பட்டிருந்தமை தெரியவந்ததையடுத்து அந்தக் கோயில் சபையினரிடம் பானை ஒப்படைக்கப்பட்டது. திருடப்பட்ட பாத்தி ரமே அது என்பது தெரியவந்ததையடுத்து அதனை விற்பனை செய்த நபர் நின்றிருந்த இடத்துக்குச் சென்றபோது அவர் தலை மறைவாகிவிட்டார்.

அதன் பின்னரே வாங்கியவர் யாழ்.நீதி மன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளார். (த-4)

# காரைநகர் அம்மன் ஆலயத் திருவிழாவுக்கு யானை

காரைநகர்,மார்ச் 11

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழாவுக்கு களுத் துறையில் இருந்து யானை கொண்டு வரப்பட உள்ளது.

ஆலயப் பெருந்திரு விழா வின் 6 ஆம் நாள் திருவிழா நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற உள்ளது. அன் றைய உற்சவத்துக்காகவே ஒன்பது வயது நிரம்பிய ஆறு அடி உயரமான யானை கொண்டு வரப்பட உள்ளது.

அன்றைய தினம் காலை 7.00 மணிய ளவில் காரை நகர் புளியங்குளம் விநாயகர் ஆலயத்தில் இருந்து அபிஷேகத்துக்குரிய பாலை யானை கொண்டு வருவதுடன் மாலை 6.00 மணிக்கு காரைநகர் மடத் துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து பூசைப் பொருள்களை மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு யானை எடுத்துவர [illegible] கான சாகச நிகழ்வுகளையும் ஆலய வீதியில் யானை நிகழ்த்திக்காட்ட உள்ளது. (த-250)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவருக்கு இரு பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச்.11

குருநகரிலுள்ள உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் நன்மை கருதிப் பருத்தித்துறையிலி ருந்து தினமும் காலை இரண்டு பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாகப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச்சாலை முகாமையாளர் க.கந்தசாமி தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை 6.30 மணி, 6.45 மணி ஆகிய நேரங்களில் இந்தச் சேவை கள் இடம் பெறும் எனவும் அவர் மேலும் கூறினார்.

ஆவரங்கால் பகுதியில் அதிக பயணிகளை ஏற்றி யமையால் மாணவிகள் மயங்கி விழுந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் சிலர் மேற் கொண்ட பஸ் மறியல் போராட்டம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக மல்லாகம் நீதிமன்ற நீதி வான் அரியநாயகம், பருத் தித்துறை சாலை முகாமை யாளரை அழைத்து நேற்று முன்தினம் கலந்துரையாடி யுள்ளார். இதனையடுத்தே காலை வேளை இடம் பெறும் சேவைக்கு மேல திகமாக மேலும் ஒரு பஸ் சேவையை நடத்து மாறு அவர் ஆலோசனை வழங்கி யுள்ளார்.

இதன் பிரகாரமே மேலும் ஒரு சேவையைத் திங்கட் கிழமை தொடக்கம் ஆரம் பிக்கவுள்ளோம் என்றார் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர்.

பருத்தித்துறைச் சாலை யில் 37 பஸ்கள் சேவையில் ஈடுபடத் தேவையாக இருக் கின்றன. ஆனால் 26 பஸ் கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளன. பயணிகள் தேவைக்குப் போதுமான பஸ்கள் எம்மிடம் இல்லை. இதனைப் பத்திரிகைகள் ஊடாக மக்களுக்கு ஏற்க னவே அறிவித்திருந்தோம். எனினும் நீதிவானின் ஆலோ சனைக்கு ஏற்பவே வேறு மார்க்கத்தில் ஈடுபடும் பஸ்ஸைச் சேவைக்கு மேலதி கமாக ஈடுபடுத்தவுள்ளோம். உயர் தொழில்நுட்பக் கல் லூரி மாணவர்களுக்காக 6.30 மணிக்கும், 6.45 மணிக் கும் புறப்படும் பஸ்கள் தொழில்நுட்பக் கல்லூரி வரை செல்லும்.

சில மாதங்களாக காலை 6.45 மணிக்கு ஒரு சேவை மட்டுமே இடம் பெற்று வந் தது - என்றார் அவர். (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஹவல் ஹோ' மூக்குக் கண்ணாடியகம் அண்மையில் கல்வியங்காட்டில் திறந்து வைக்கப்பட்டது. திரு திருமதி ராமு தம்பதியினர் இதனைத் திறந்து வைத்தனர் இந்த நிகழ்வில் ஹவல் ஹோ உரிமையாளர் குணேஷ் ராமு, டாக்டர் அஜஸ் யாழினி தம்பதியினர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த)

# ஒளிமயமான எதிர்காலத்தின் அத்திபாரம்

ஊட்டச்சத்தினளவு நாளாந்தம் குறையும்போது நமமை அறியாமலேயே உடல் நலிவடைந்து உடலின் நோயெதிர்ப்புத்திறன் குறைவடைந்து தடிமன், காய்ச்சல், வயிற்றுளைவு மற்றும் பலவித தொற்று நோய்களிலிருந்து தொடங்கி நீரிழிவு, உயர்குருதி அமுக் கம், கொலஸ்ட்ரோல் போன்ற தீராத நோய்கள் முதல் ஈற்றில் இருதய நோய் மற்றும் புற்று நோய் போன்ற ஆட்கொல்லி நோய்களுக்கும் இட்டுச் செல்கின்றது.

அப்படியானால், இதற்குரிய தீர்வு தான் என்ன? உணவுக்குறை நிரப்பிகள் அல்லது போஷணைக்குறை நிரப்பிகள் (Nutritional Supplements) என்றால் அது மிகையாகாது. உட்கொள்வதற்கு இலகுவாக வில்லை அல் லது மாத்திரை வடிவில் இவை கிடைக்கப் பெறுவதனால் இன்று மேலை நாடுகளில் பிரபலமாகியுள்ள இவற்றை நுகரும் வாய்ப்பு இன்று இலங்கை வாழ் மக்களுக்கும் FKC மூலம் எட்டியுள்ளது. FKC யின் முற்றிலும் இயற்கையான மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உயர் தொழிநுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இக்குறை நிரப்பிகள்(Nutritional Health Supplements) உயர் தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவானவை.

**இன்ஜீலியம்**

உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை வலுவூட்ட உதவுகிறது, பற்றீரிய வைரஸ் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்க உதவகிறது, மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, மாதவிடாய், குடல் நோய் தொடர்புடைய இரத்தப்போக்கு, குடற்புண் மற்றும் மூல வியாதி போன்ற வயிறு மற்றும் குடல் சம்பந்தமான நோய்களிலிருந்தும் மீள உதவுகிறது, பார உலோகங்களிலிருந்து நஞ்சு நீக்க உதவுகிறது, கட்காசம், பார்வைக்குறைபாடு, பசியின்மை, உடல் சோர்வு மற்றும் களைப்பு ஆகியவற்றுக் கோர் நிவாரணியாக அமைகிறது,- தாம்பத்திய உறவில் திருப்தியேற்படவும் தசை மற்றும் என்பு விருத்திக்கும் உதவுகிறது.

**ட்ரை அன்டி ஒக்சிடன்ட்**

உடலின் வயதா தலைத் துரிதப்படுத்தும் மூலக் கூறுகளின்(Free radicals) தாக்கங்களிலிருந்து உடலைப் பாதுகாக்க உதவுகிறது, குருதிக்குழாய் அடைப்பைத் (Atherosclerosis) தடை செய்து ஆரோக்கியமான இரத்தச் சுற்றோட்டத்துக்கு உதவுகிறது, புற்று நோய் எதிர்ப்பு மூலக்கூறுகளை உடலுக்கு வழங்குகிறது.

**லிவரைட்**

நாள்தோறும் அதிகளவு மருந்துப் பொருள்கள் உட்கொள்கை, மதுபானம் அருந்தல், புகைப்பிடித்தல் மற்றும் வெளிக்கள வேலைகளில் (field work) ஈடுபடல் என்பவற்றால் தீங்கு விளைவிக்கும் நச்சுப் பதார்த்தங்கள் உடலிற் செறிவடைவதனால் அவற்றை நச்சு நீக்கும் பாரிய பொறுப்பு கல்லீரலையே சார்கின்கின்றது. இச்சுமையைத் தாங்க முடியாமல் சில நேரங்களில் ஈரலழுகல், ஈரலிற் கொழுப்புப் படிவடைதல் மற்றும் ஈரற் புற்று நோய் போன்ற நோய்களுக்கு எம்மை இட்டுச்செல்கிறது. இதற்குரிய சிறந்த தீர்வாகவே லிவரைட் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கல்லீரல் தொற்றுக்கள் மற்றும் சுயாதீன மூலக்கூறுகளின் தாக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்தல், உடலுக்கு நஞ்சு விளைவிக்கக்கூடிய கழிவுகளை அகற்றல் மற்றும் ஈரல் நோயினால் பழுதடைந்த இழையங்களை மீளக்கட்டியெழுப்பல் போன்றவற்றுக்கு உதவுகின்றது.

**கார்டியோமெக்ஸ்**

இதயக் கலங்களுக்கான சக்தியை வழங்கி ஆரோக்கியமான உறுதியான இதயத்தைப் பேண உதவுகிறது, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கொலஸ்ட்ரோல் மட்டத்தைக் குறைக்க உதவுகிறது, குருதிக்குழாய் அடைப்பிலிருந்து பாதுகாத்து சீரான இரத்த ஓட்டத்துக்கு உதவுகிறது, குருதியில் வெல்ல மட்டத்தைச் சீர்செய்யவும், கை கால்களில் ஏற்படும் விறைப்புத் தன்மை நீங்கவும் ஞாபக சக்தியை விருத்தி செய்யவும் ஆண்களின் தாம்பத்திய உறவில் மன நிறைவை ஏற்படுத்தவும் உதவுகிறது.

# இலங்கையில் சேவையில் ஒரியண்ட் இன்ஷூரன்ஸ்

அரபு ஒரியன்ட் இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் முழு உரித் துடைய கிளையான ஒரியன் இன்ஷரன்ஸ் உத்தியோகப் பூர்வமாக இலங்கையில் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளது. அண்மையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கலாநிதி சரத் அமுனுகம, அல்-ஃபுட்டைம் குறூப் இன் உப தலைவர் ஒமர் அல் ஃபுட்டைம், அரபு ஒரியன்ட் இன்ஷூரன்ஸ், சிரேஷ்ட முகாமைத்துவப் பணிப்பாளர், ஒமர் எலமின், ஒரியன்ட் இன்ஷூரன்ஸ் இலங்கையின் உபதலைவரும் ஏஎம்டபிள்யூ தலைவருமான தேசபந்து திலக் டீ சொய்சா மற்றும் ஒரியன்ட் இன்ஷரன்ஸ் இலங்கையின் சிரேஷ்ட நிறைவேற்று அதி காரி தீப்தி லொக்குஆராச்சி ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இலங்கை காப்புறுதி சபை யின் அனுமதிப் பெற்ற ஒரி யன்ட் இன்ஷரன்ஸ் நிறுவனம், மோட்டார், கடல், சொத்து, கடன், மருத்துவ மற்றும் பொது காப்புறுதி துறையின் கீழ் வரும் அனைத்து விடயங்களும் உள்ளடங்கலாக பொது காப்புறுதி துறையில் செயற்படும். புகழுக்குரிய 2012ஆம் ஆண்டுக்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் காப்புறுதி நிறுவனம் (மினா காப்புறுதி மீளாய்வில் வழங்கப்பட்டது) என்ற விருதினை தன்னகத்தே கொண்டுள்ள அரபு ஒரியன்ட் இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் சக்தியில் உருவான ஒரியன்ட் இன்ஷூரன்ஸ் தமது வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான சேவைகளை, உகந்த செலவில் வழங்கும்.

GIZ-ProMiS invites applications for the position of **Programme Officer – SME Development** from reliable persons with demonstrated client oriented approach and a high sense of responsibility meeting the following criteria:

**Required qualifications, competences/skills and experience:**
- University degree with specialization in Management, Economics or Development Studies;
- 3+ years of experience in the SME Development sector or banking/financial sector experience with a focus on SME development;
- Knowledge and experience in at least one of the following: business development services, technology transfer, supply/value chain management, local economic development, vocational training;
- Knowledge and experience of operating environment in the Northern Province as well as stakeholders working in the SME development sector;
- Experience in organizing/coordinating meetings, trainings and workshops;
- Strong computer Skills (Ms Office);
- Excellent communication, presentation and report writing skills;
- Fluency in English and Tamil (communication skills in Sinhala will be an advantage).

**Responsibilities:**
- Supervise and coordinate activities with SME Development partner organizations to ensure effective and timely implementation of the programme;
- Identify and support the implementation of various complementary measures/activities related to the SME Development programme;
- Facilitate collection and compilation of necessary data needed for programme monitoring and evaluation;
- Maintain close contacts and coordinate with government officials, local authorities and other relevant key players in the programme area;
- Support and enhance links / contacts between all grass roots, cluster and divisional level actors involved in the development process, including private sector entities;
- Partnership acquisition and management with companies, associations, universities and technology institutions;
- Facilitate linkage and implement common activities with GIZ Vocational Training programme in Killinochi and other programmes of German – Sri Lankan cooperation;
- Identify opportunities for co-financing of programme activities;
- Participate and represent SME Development programme at stakeholder meetings, inform outcomes to the supervisor and document the results for follow up;

Qualified applicants must submit an updated CV including cover letter with details of two non related professional referees to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No.6, Jawatte Avenue, Colombo 5, before cob 19 March 2012.

We thank all applicants but only the short listed candidates will be contacted.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 59

## குடற் புழுக்களைக் குறைக்கும் வழிகள்

ஒருவரின் உடல்நலம் குடல் நலத்திலும் தங்கியுள்ளது. குடல் நலமானது, குடல்புழுக்கள் உணவுக் கால்வாய்த் தொகுதியில் குடல் புண்கள், சில ஒவ்வாமைகள் மற்றும் வாயுத் தொல்லைகள் அதாவது ஈரல், பித்தப்பை சம்பந்தப்பட்ட நோய்கள், குடற்புற்று நோய்கள் போன்ற பல காரணங்களாலும் பாதிப்படையும். இதில் குடல் புழுக்களானது எமது உடலில் பல வழிகளில் புகுந்து எமது குடலை ஒரு புகலிடமாக உபயோகித்து இனப்பெருக்கம் செய்கின்றன.

இவற்றுக்குப் பொதுவான காரணங்களாகச் சுத்தமற்ற சூழ்நிலை, ஈ, கொசு மொய்த்த உணவுகளை உண்ணுதல், சுத்தமற்ற குடிதண்ணீர், சுத்தமற்ற கழிவறைகள், விரல் நகச் சுத்தமின்மை, கழுவப்படாமல் உண்ணப்படும் காய், கனிகள், வீட்டில் செல்லமாக வளர்க்கப்படும் நாய், பூனை போன்றன மற்றும் ஒவ்வொரு தனிநபரினதும் சமூகத்தினதும் சுகாதாரம் பற்றிய அறியாமைகள் போன்ற பலவற்றைக் கூறலாம்.

குடல்புழுக்களால் குடல் வலி, வயிற்று வீக்கம், குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் போன்ற நோய்கள் ஏற்படுவதுடன்; குடலில் உள்ள விற்றமின்களும் இவைகளால் நுகரப்படுகின்றன. அத்துடன் இவைகளால் வெளி விடப்படும் கழிவுப்பொருள்கள் குடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கின்றன.

எனவே குடல் புழுத் தொற்றைத் தவிர்க்க, சுத்தமான சுகாதாரப் பழக்க வழக்கம், பாதுகாப்பான குடிதண்ணீர், தகுந்த வைத்திய சிகிச்சை, பாதுகாப்பான உணவுப் பழக்க வழக்கம், உடல், உடை சுத்தம், செருப்பு அணி தல், விரல் நகம், கைச்சுத்தம், சிகிச்சை பெறும் போது குடும்பத்தில் உள்ள அனைவரும் சிகிச்சை பெறுதல், நாம் இருக்கும் இடம் வாழும் இடத்தைச் சுத்தமான சூழ்நிலையில் வைத்திருத்தல், எமது கடமைகளைச் செய்யும்போது தொற்றுக்கள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல், பச்சையாகக் காய், பழங்கள், மரக்கறிகள் உண்ணும்போது நன்றாக ஓடும் நீரில் கழுவி உண்ணல். சிறுவர்களுக்கு உடல், உடை, உணவுச் சுத்தம் பற்றி பயிற்சி வழங்குதல், ஊக்குவித்தல், வீட்டு மிருகங்களுக்குப் பூச்சி மருந்துகளை மிருக வைத்தியரின் ஆலோசனைப்படி அடிக்கடி கொடுத்தல் வேண்டும்.

**ச.சுதாகரன்**
தாதிய உத்தியோகத்தர்

## காதுக் குடும்பி (Ear Wax)

> **Ear bud எனப்படும் பஞ்சு சுற்றப்பட்ட சிறிய தடிகள், Hair clip, Safety pin என்பவற்றைக் காதைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் காதினுள் விடுவது ஆபத்தான தாகும்.**

மனிதனின் காதானது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. வெளிக்காதானது காதுச்சோணை, புறக்காதுக் கால்வாய் என்பவற்றை உள்ளடக்கியது. இது செவிப்பறை மென்சவ்வின் மூலம் நடுக்காதிலிருந்து பிரிக்கப்படுகின்றது.

புறக்காதுக் கால்வாயானது, வெளிப்புற மூன்றிலொரு பகுதி கசியிழையத்தினாலும், மீதி என்பினாலும் ஆக்கப்பட்டது. புறக்காதுக் கால்வாயின் உட்பரப்பானது தோலினால் மூடப்பட்டுள்ளது. தோலானது கால்வாயின் வெளிப்புற மூன்றிலொரு பகுதியில் சீதச்சுரப்பிகளையும் வியர்வைச் சுரப்பிகளையும் கொண்டுள்ளது.

அழிவடைந்த தோல்கலங்களும், சுரப்புகளும் சேர்ந்து உருவாக்கப்படும் பதார்த்தமே காதுக் குடும்பி எனப்படும். இதன் 60 வீதம் கெரட்டீன் எனப்படும் அழிவடைந்த தோல் புரதத்தினால் ஆனது. மிகுதி பல்வேறு வகையான கொழுப்பமிலங்களைக் கொண்டது.

காதுக் குடும்பியானது பரம்பரை அலகுகளின் அடிப்படையில் உலர்வகை, ஈரவகை எனப் பிரிக்கப்படுகின்றது. உலர்வகையானது ஆசிய, செவ்விந்திய மக்களிடமும், ஈரவகையானது ஆபிரிக்க, ஐரோப்பிய மக்களிடமும் காணப்படுகின்றது.

**சாதாரண மனிதரில் பின்வரும் நன்மைகள் காதுக் குடும்பியினால் கிடைக்கின்றன.**

**1. காதுக்கால்வாயைச் சுத்தப்படுத்தல்:**
காற்றிலுள்ள சிறுதூசு போன்ற அழுக்குகள் புறக்காதினுள் செல்லும் போது அவை சுரப்புகளில் ஒட்டிக் கொள்ளும். பின் தோற்கலங்களும் சுரப்புகளும் வெளியேறும்போது அழுக்குகளும் அகற்றப்படுகின்றன. தாடையின் அசைவின் காரணமாக குடும்பி வெளியேற்றம் இலகுவாக்கப்படுகிறது. இதன்மூலம் செவிப்பறை மென்சவ்வு பாதுகாக்கப்படுகின்றது.

**2. ஈரலிப்பாக்குதல்:**
சுரப்புகளில் உள்ள கொழுப்புத்தன்மையான பதார்த்தங்கள் காதின் தோலை உலர்தல், உதிர்தல் கடித்தன்மை (itchy) என்பவற்றிலிருந்து பாதுகாக்கின்றது.

**3. நோய் எதிர்ப்புத் தன்மை:**
சுரப்புகள் சில பக்றீரியா மற்றும் பூஞ்சன வகைகளின் வளர்ச்சியைத் தடுக்கும் அல்லது குறைக்கும் பதார்த்தங்களைக் கொண்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் காதுக்குடும்பியானது பிரச்சினைக்குரிய ஒன்றாகவும் மாறுகின்றது. குடுமியானது அதிகளவு உருவாகும் போது புறக்காதுக் கால்வாயை அடைக்கின்றது. இதன் போது கேட்டல் குறைபாடு, காது அடைப்பு, காதுநோ, காதினுள் இரைச்சல் மற்றும் தலைச் சுற்று ஆகிய குணங்குறிகள் ஏற்படுகின்றன.

பயம், மனவழுத்தம், கடுமையான வேலைகள் போன்றவையும் காதுக் குடும்பி அதிகளவில் உருவாகுவதற்குக் காரணமாகின்றன. கேட்டல் கருவிகள் மற்றும் ear phones அடிக்கடி பாவிப்போருக்கும் கூட குடும்பித் தொல்லை தரும் ஒன்றாக இருக்கின்றது. இதனால் கேட்டல் கருவி உபயோகிப்போர் ஒவ்வொரு 3-6 மாதத்துக்குக் காதைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

Ear bud எனப்படும் பஞ்சு சுற்றப்பட்ட சிறிய தடிகள், Hair clip, Safety pin என்பவற்றைக் காதைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் காதினுள் விடுவது ஆபத்தானதாகும். இதன்போது காதின் வெளிப்பகுதிக்கு அண்மித்ததாக உருவாக்கப்படும் குடுமியானது நடுக்காதை நோக்கித் தள்ளப்படுவதால் பிரச்சினை அதிகமாகும். சில சமயங்களில் செவிப்பறை மென்சவ்வில் கிழிவுகளையும் ஏற்படுத்தலாம்.

இதனால் காதினுள் குடும்பி இருந்து பிரச்சினையாக உள்ளது எனக் கருதும் பட்சத்தில் வைத்திய ஆலோசனையை நாடுதல் வேண்டும்.

முதலில் குடும்பியை இளக்கும் திரவங்கள் பாவிக்கத் தரப்படும். இந்தத் திரவத்தில் 2-3 சொட்டுக்களை தினமும் 2-3 தடவை 3-5 நாள்களுக்குக் காதினுள் விட வேண்டும். இவ்வாறு செய்யும் போதே குடும்பி இளகி வெளியேறிவிடும். இதன் போதும் குடும்பி வெளியேறாவிட்டால் வைத்தியர் சிறு உபகரணங்களைப் பயன்படுத்தி இலகுவாக அகற்றிவிடுவார்.

**Dr. R.ரமா வித்தியா**
**யாழ். போதனா வைத்தியசாலை**

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

**கேள்வி:** தற்காலத்தில் காய்கறிகள், பழவகைகளுக்கு இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் பாதிப்பில் இருந்து எவ்வாறு நம்மைப் பாதுகாக்கலாம்? அத்துடன் அவற்றில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்களை இழக்காமல் நாம் எவ்வாறு சமைக்கலாம்?

**பதில்:** தற்போது காய்கறிகள், பழங்கள் என்பவற்றின் விளைச்சலை அதிகரிப்பதற்காக இரசாயனப் பதார்த்தங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

* இவை எமது உடலில் சேரும்போது புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன.
* அத்துடன் நாம் வாங்கும் காய்கறிகள் பழங்கள் என்பன நம்மை அடையும் முன் பலராலும் கையாளப்படுகின்றன. இவற்றில் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்றவற்றை ஏற்படுத்தும் கிருமிகள் செறிந்திருக்கலாம்.
* எனவே அழுக்குகள், இரசாயனப் பதார்த்தங்கள், கிருமிகள் போன்றவற்றை அகற்றுவதற்காக நாம் உண்ணும் காய்கறிகள், பழங்கள் என்பவற்றை முறையாகக் கழுவுதல் அவசியமாகின்றது.
* எல்லாவற்றுக்கும் முன்பாக உங்கள் சமையலறை, குளிர்சாதனப்பெட்டி போன்றவற்றை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.
* எப்பொழுதும் உணவு கையாளும் முன்பும் உணவைச் சமைக்கும் முன்பும் உங்கள் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள்.
* பச்சைக் காய்கறிகள், பழங்கள் என்பவற்றைச் சமைக்காத இறைச்சி வகைகளுடன் சேர்த்து வைக்க வேண்டாம். இது ஓர் உணவிலிருந்து மற்றய உணவுகளுக்கு நோய்க்கிருமிகள் தொற்றுவதைத் தடுக்கும்.
* காய்கறிகள், பழங்கள் வாங்கும்போது அவை புதிதாகப் பறிக்கப்பட்டவையாகவும், பூஞ்சணம் அற்றவையாகவும் இருக்க வேண்டும்.
* காய்கறிகள், பழங்கள் என்பவற்றைச் சமைப்பதற்கோ, உண்பதற்கோ சற்று முன்னராகவே கழுவுங்கள். ஏனெனில் கழுவும்போது அவற்றைச் சுற்றியுள்ள இயற்கையான பாதுகாப்புப் படை அகற்றப்படும். இதனால் அவை இலகுவில் பழுதடையக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரிக்கும்.
* பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டுவரும் பழங்களாக இருப்பினும் உண்பதற்கு முன் அவற்றைக் கழுவுங்கள்.
* பழங்கள், காய்கறிகள் என்பவற்றின் எல்லாப் பாகங்களையும் கழுவுங்கள். உண்ணும் பகுதிகளை மட்டும் கழுவிவிட்டு மற்றைய பகுதியைக் கழுவாது விடின் அதிலுள்ள கிருமிகள் உண்ணும் பகுதிகளுக்கும் தொற்றலாம்.
* சவர்க்காரம், கிருமி நீக்கிகள் போன்றவற்றைப் பாவிக்க வேண்டாம். ஓடும் நீரிலே பொதுவாகத் தேய்த்துக் கழுவவும்.
* கடினமான தோல் உள்ள பழங்கள், நிலத்துக்கடியில் விளையும் கிழங்கு வகைகள் என்பற்றின் மேற்பரப்பை தூரிகையால் (Brush) தேய்த்துக் கழுவி அழுக்குகளை நீக்கவும்.
* கோவா போன்றவற்றின் வெளிப்புறத்தே உள்ள இலைகளை நீக்கிவிட்டுப் பின்னர் எஞ்சிய பகுதியைக் கழுவவும்.

**ஊட்டச்சத்துக்கள் அழியாத வண்ணம் எவ்வாறு சமையல் செய்வது?**

காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைப் பச்சையாக உண்பதே அவற்றிலுள்ள ஊட்டச்சத்துக்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள உதவும். ஆனால், எல்லாவற்றையும் பச்சையாக உண்பது சாத்தியமற்றதாகையால் இயன்றளவு ஊட்டச்சத்துக்கள் அழியாத வண்ணம் அவற்றைச் சமைப்பது அவசியமாகின்றது.

அமுக்க அடுப்பில் சமைத்தல் (Pressure cooking), அவனில் (Oven) சமைத்தல், அவித்தல் (Steaming) என்பன சிறந்த சமையல் முறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

பொரித்தல், சுடுதல் போன்றன ஊட்டச்சத்துக்களை அதிகளவில் அழியச் செய்கின்றன.

நீரில் கரையும் விற்றமின்களான விற்றமின் B,C என்பனவே வெப்பத்தால் அதிகளவில் அழிவடைகின்றன. இதிலும் விற்றமின் C ஆனது இலகுவில் அழிவடையக் கூடியதாக இருக்கின்றது.

எனவே கறிகளுக்கு எலுமிச்சைச் சாறு விடும்போது அவற்றை அடுப்பிலிருந்து இறக்கிய பின்னர் விடவும்.

காய்கறிகளை அவித்த நீரை ஊற்றிவிடாமல் அதனை சூப் போல் அருந்தலாம். இதனால் அதிலுள்ள ஊட்டச்சத்துக்கள் எமது உடலுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

**Dr. த.கார்த்திகா**
**நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் சாதகமாகத் தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். புதிய வேலைக் கிடைக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும்.

**சிங்கம்:** கடந்த இரண்டு நாள்களாக குடும்பத்தில் இருந்த சச்சரவு நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். கடனாக வாங்கியிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி:** அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போகவேண்டும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். சிலர் உங்கள் வாயை கிளறிப் பார்ப்பார்கள். பணம், நகையைக் கவனமாக கையாளுங்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**நாளை**

மாசி 29 திங்கட்கிழமை 12.03.2012
திதி: பஞ்சமி பி.இ 05.06வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப 02.20 வரை
சுபநேரம்: 12.22- 01.52 வரை,
ராகு காலம்: 07.52 - 09.22 வரை

**துலாம்:** பழைய கசப்பான சம்பவங்களை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடைவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்துபோகும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதரங்களால் பயனடைவீர்கள். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்துச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பங்குதாரர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அனுபவ அறிவால் வெற்றி பெறும் நாள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வரும். நிம்மதியான நாள்.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்துபோகும். குடும்பத்தாருடன் பொறாமை பிரச்சினை வந்து நீங்கும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மீனம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதரவகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் பெரிய பொறுப்புக்ள் தேடி வரும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 2 | 9 | 3 | 1 | 7 | 8 | 4 |
| 1 | 7 | 9 | 5 | 4 | 8 | 3 | 6 | 2 |
| 3 | 4 | 8 | 6 | 7 | 2 | 1 | 5 | 9 |
| 2 | 8 | 1 | 7 | 5 | 4 | 9 | 3 | 6 |
| 4 | 3 | 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 |
| 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 4 | 7 | 1 |
| 9 | 2 | 3 | 4 | 6 | 5 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 4 | 2 | 1 | 7 | 6 | 9 | 3 |
| 7 | 1 | 6 | 3 | 8 | 9 | 2 | 4 | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 3 | | | | | | |
| 9 | 5 | 1 | | | 3 | | | 4 |
| | 6 | 7 | | 1 | 9 | 3 | | |
| | 2 | 6 | | | 5 | | | 7 |
| | | | 8 | | 6 | | | |
| 8 | | | 3 | | | 5 | 6 | |
| | | 2 | 5 | 3 | | 6 | 4 | |
| 1 | | | 7 | | | 9 | 3 | 5 |
| | | | | | | 7 | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நாவற்குழி அன்னை, சாவகச்சேரி இந்து உதைபந்தாட்டங்களில் சம்பியன்



சாவகச்சேரி,மார்ச் 11

தென்மராட்சி பிரதேச உதைபந்தாட்டச் சம்பியன்களாக ஆண்கள் பிரிவில் நாவற்குழி அன்னை வி.க அணியும் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்து வி.க அணியும் தெரிவாகின.

பதிவு செய்யப்பட்ட தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் கடந்த 7 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

பெண்கள் அணியின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்து வி.க அணியும் மட்டுவில் வளர்மதி வி.க அணியும் களமிறங்கின.

இரு அணிகளும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விட்டுக் கொடுக்காமல் விளையாடினர். இரு அணிகளின் பின் தடுப்பு வீராங்கனைகளைத் தாண்டி உள்ளே பந்து கொண்டு செல்ல முடியாமல் முன்வரிசை வீராங்கனைகள் தடுமாறினர்.

பின்வரிசை தடுப்பு வீராங்கனைகளின் வியூக அமைப்பு பார்வையாளர்களைக் கவர்ந்தது.

இறுதி வரை இரு அணிகளும் கோல் போட முடியாததால் சமநிலை உதைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இந்த உதைகளிலும் இரு அணிகளின் கோல்காப்பாளர்களைத் தாண்டி பந்து செல்லவில்லை.

இறுதியில் சாவகச்சேரி இந்து அணி 1:0 என்ற கோல் கணக்கில் மட்டுவில் வளர்மதி வி.க அணியை வீழ்த்திச் சம்பியனானது.

ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் நாவற்குழி அன்னை வி.க அணியும் நாவற்குழி காந்தி வி.க அணியும் களத்தில் இறங்கின.

முதல் பாதி வரை இரு அணிகளும் சமநிலையில் மோதியதால் கோல்கள் போட முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கி ஐந்து நிமிடங்களில் நாவற்குழி காந்தி வி.க வீரர் உதைத்த பந்து கோல் காப்பாளரின் மார்பில் தாக்கி கோலாக மாறியது. எதிர் அணியினர் முதல் கோல் அடித்ததால் நாவற்குழி அன்னை வி.க அணியினர் உத்வேகத்துடன் விளையாடினர். அணியின் மத்திய வரிசை வீரர் மைதானத்தின் மத்தியிலிருந்து உதைத்த பந்து கோல் காப்பாளரையும் தாண்டி கோலாக மாறியது.

இரு அணிகளும் தலா ஒரு கோல் வீதம் பெற்றதால் கடைசி இருபது நிமிட நேரமும் மைதானத்தில் விறுவிறுப்பாக இரு அணியினரும் மோதினர். அடுத்து 10 ஆவது நிமிடத்திலும் 15 ஆவது நிமிடத்திலும் அன்னை வி.க அணி வீரர்கள் அடுத்தடுத்து இரு பந்துகளை கோலாக மாற்றியதில் போட்டி முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் நாவற்குழி அன்னை வி.க அணி சம்பியனாகியது.

இரு இறுதிப் போட்டிகளுக்கும் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கலந்து கொண்டார். (த-9)

# வளர்மதி சம்பியன்

வலி.வடக்கு,மார்ச் 11

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் கோட்டைக்காடு ஜனசக்தி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே வளர்பிறை விளையாட்டுக்கழகம் 25:19, 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று உடுவில் பிரதேச செயலக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங- 86)

# 19 வயதுப் பிரிவு ஆண்கள் உதைபந்தாட்டப் போட்டி



வலி.வடக்கு,மார்ச் 11

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த பல வருடகால இடைவெளியின் பின்னர் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், தீவகம் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் போர்ட்டிபனிஸ்ட்ருடனும், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் என் உதயனுடனும், தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் கே.இராஜசீலனுடனும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# வலிகாமம் பிரதேச கரப்பந்தாட்டம் இராணுவ அணிக்கு இலகு வெற்றி

### காங்கேசன்துறை அணி மோசமான ஆட்டம்

வலி.வடக்கு,மார்ச் 11

வலிகாமம் பிரதேச கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்க ஆதரவுடன் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை இராணுவ அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.


சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் காங்கேசன்துறை ராணுவ அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத்தில் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. எனினும் சிறிது நேரத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தளரத் தொடங்கியது. இதனால் ஏற்பட்ட கள நிலைமை ராணுவ அணிக்கு வெற்றி வாய்ப்பை இலகுபடுத்திக் கொடுத்தது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில், இலங்கை ராணுவ அணி முதல் மூன்று சுற்றுக் களையும் முறையே 25:18, 25:15, 25:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்று வலிகாமம் பிரதேச சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தோற்கடிக்கப்பட முடியாதவனல்ல



உலகின் முதலாம் நிலை வீரராக ஒரு வருடத்திற்கும் மேலாகத் தரப்படுத்தப்பட்டிருக்கும் நான், எனது முதலிடத்தை தம்பட்டமாகக் கருதவில்லை

-ஜோகோவிச்


உலகின் முதல்நிலை ரெனிஸ் வீரரான சேர்பியாவின் நொவாக் ஜோகோவிச், தான் தோற்கடிக்கப்பட முடியாதவன் என்று எண்ணவில்லை எனத் தெரிவித்துள்ளார். உலகின் முதலாம் நிலை வீரராக ஒரு வருடத்திற்கும் மேலாகத் தரப்படுத்தப்பட்டிருக்கும் நொவாக் ஜோகோவிச், தனது முதலிடத்தைத் தம்பட்டமாகக் கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

தான் பங்குபற்றிய இறுதி 5 கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் நான்கில் சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச், 2011 ஆம் ஆண்டில் 70-6 என்ற வெற்றி தோல்வி வித்தியாசத்தைக் கொண்டுள்ள போதிலும், விளையாட்டில் அனைத்தும் விரைவாக மாறக்கூடியது என்பதை தான் அறிவேன் எனவும் தெரிவித்தார்.

முதலாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக உலகின் மிகப்பெரிய ஒருவனாகவோ அல்லது வெல்லப்பட முடியாத ஒருவனாகவோ தன்னைக் கருதவில்லை எனத் தெரிவித்த ஜோகோவிச், ஒவ்வொரு போட்டிக்காகவும் தான் மிகச்சிறப்பாக தயாராவதாகவும், பயிற்சிகளின் போது 100 சதவீதம் உழைப்பை வழங்குவதாகவும், போட்டிகளின் போது சிறந்த மனநிலையுடன் விளையாடுவதை உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதல் அற்புதமாக ஆடிவரும் ஜோகோவிச்சிடம் அவரது பெருமையான சாதனை எதுவெனக் கேட்கப்பட்டபோது, தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதை பெருமையானதாகக் கருதலாம் எனத் தெரிவித்தார். எனினும் தனது மிகப்பெரிய வெற்றியாக விம்பிள்டனில் பெறப்பட்ட வெற்றியைக் கருதலாம் எனத் தெரிவித்தார். விம்பிள்டனில் சம்பியன் பட்டம் பெறுவதை எப்போதும் தனது கனவாகக் கருதியதாகத் தெரிவித்த ஜோகோவிச், ஆகவே அந்த வெற்றி தனக்குப் பெருமையானதாகத் தெரிவித்தார். (5)

# முதல் சவால்



**"வட்மோர் ஆசியக் கிண்ணத்தில் பங்கு பெறும் இந்திய அணி தவிர்ந்த ஏனைய மூன்று நாடுகளுக்கும் பயிற்சியாளராக இருந்துள்ளார்."**

பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டேவ் வட்மோர், தனது முதலாவது சவாலுக்குத் தயாராக உள்ளதாகவும், ஆசியக்கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த டேவ் வட்மோர், கடந்த வாரம் 2 வருடங்களுக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக உத்தியோகபூர்வமாக தனது பணியைப் பொறுப்பேற்றிருந்தார். அவரது முதலாவது தொடராக இலங்கை, இந்திய, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் பங்குகொள்ளும் ஆசியக் கிண்ணத் தொடர் அமையவுள்ளது. ஆசியக்கிண்ணத் தொடர் இன்றைய தினம் பங்களாதேஷில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தத் தொடரை தங்கள் முன்னாலுள்ள ஏராளமான சவால்களுள் முதலாவது சவாலாகக் கருதுவதாகத் தெரிவித்த வட்மோர், இந்தத் தொடரில் பங்குபற்றவுள்ள ஏனைய அணிகளும் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த அணிகள் என்பதால் கடுமையான சவாலை எதிர்கொள்ள வேண்டியேற்படும் எனக் கருதுவதாகத் தெரிவித்தார்.

ஆசியக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான், இந்திய அணிகள் சந்திக்கவுள்ள நிலையில் அது தொடர்பான அதிக எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்ற நிலையில், அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த வட்மோர், எனினும் ஆசியக்கிண்ணத் தொடரில் காணப்படும் ஏனைய போட்டியிலும் அதேயளவு கவனம் பாகிஸ்தானால் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (5)

# வாய்ப்பு இலங்கைக்கே!

இன்று ஆரம்பமாகவுள்ள ஆசியக் கிண்ணத் தொடரை வெற்றிகொள்ள இலங்கை அணி அதிக வாய்ப்புகளுடன் காணப்படுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும், நேர்முக வர்ணனையாளருமான வக்கார் யுனிஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் இடம்பெற்று முடிந்த சி.பி. கிண்ண முக்கோணத் தொடரில் இலங்கை அணியின் சிறப்பான திறமை வெளிப்பாடுகள் காரணமாகவே இலங்கை அணிக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

''இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அவர்களது அண்மைய ஒரு நாள் சர்வதேசத் தொடர்களில் தடுமாறியிருந்தன. ஆனால் ஆஸ்ரேலியாவில் வைத்து இலங்கை அணி எதிர்பார்க்காத விதமாக மிகச்சிறப்பாகச் செயற்பட்டிருந்தது. ஆகவே திறமையின் அடிப்



படையில் இலங்கை அணிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன'' என்று வக்கார் யுனிஸ் குறிப்பிட்டார். எனினும் காலநிலைகள், ஆடுகள நிலவரங்கள் ஆகியன பங்களாதேஷிற்கும் ஆஸ்ரேலியாவிற்குமிடையில் வித்தியாசப்படுகின்றன என்பதால் எந்த அணி குறித்த நாளில் சிறப்பாக ஆடுகின்றதோ, அந்த அணி வெற்றிபெறும் எனத் தெரிவித்த வக்கார் யுனிஸ், இந்த மூன்று அணி களும் மிகச்சிறந்த ஆசிய அணிகள் என் பதால் களநிலவரங்கள், ஆடுகளப் போக்குகளை இந்த அணிகள் நிச்சயமாக அறிந்திருக்கும் எனத் தெரிவித்தார்.


அத்தோடு தொடரை நடத்தும் பங்களாதேஷ் அணியையும் ஒட்டு மொத்தமாக தவறவிட முடியாது எனத் தெரிவிக்க வக்கார் யுனிஸ், அந்த அணியால் கிண்ணத்தை வெல்லமுடியாது போனாலும் ஆட்டங்களில் அதிர்ச்சி வெற்றிகளை ஏற்படுத்த முடியும் எனவும், அதன் காரணமாக பங்களாதேஷ் அணி மீதும் கவனம் காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (5)

# வெல்லுமா நியூஸிலாந்து?

## ஆட்டத்தில் வெற்றிபெற இன்று நியூஸிலாந்து அணிக்கு 264 ஓட்டங்கள் தேவை



ரோஸ் ரெய்லர்



மக்கலம்



றாட்லோப்



றாட்லோப்

நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றைய தினம் சுவாரசியமான ஒரு கட்டத்தை அடைந்தது. 401 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி நேற்றைய நாள் ஆட்டமுடிவில் 2 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுப் போராடி வருகிறது. இதன்படி ஒரு நாள் முழுவதுமாக ஆட்டம் எஞ்சியிருக்கும் நிலையில் ஆட்டத்தில் வெற்றிபெற நியூஸிலாந்து அணிக்கு 264 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.

401 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி முதலாவது இலக்கை 16 ஓட்டங்களுக்கு இழந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மார்ட்டின் குப்தில் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிலாந்தரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் இரண்டாவது . இலக்குக்காக ஜோடி சேர்ந்த பிரன்டன் மக்கலம், றொப் நிக்கல் ஜோடி 39 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தவேளையில் றொப் நிக்கல் 'புல் டோஸ்' பந்தொன்றை அடிக்க முனைந்து ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் 3 ஆவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர்களான பிரன்டன் மக்கலம், றோஸ் ரெய்லர் ஜோடி, நேற்றைய நாள் ஆட்டமுடிவு வரை 82 ஓட்டங்களை பிரிக்க முடியாத இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது. பிரன்டன் மக்கலம் 58 ஓட்டங்களையும், றோஸ் ரெய்லர் 48 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்று ஆட்டத்தை வெற்றி கொள்ளும் நியூஸிலாந்து அணியின் நம்பிக்கைக்கு உரமூட்டினர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் வேர்ணன் பிலாந்தர், இம்ரான் தஹிர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

முன்னதாக, 3 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி மேலதிகமாக 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜக்ஸ் கலிஸின் இலக்கை இழந்தது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஜக்ஸ் ருடோல்ப், ஏபி.டி. வில்லியர்ஸ் ஜோடி 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த வேளையில் ஏபி.டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்க - மார்க் பௌச்சர், ஜக்ஸ் ருடோல்ப் ஜோடி இறுதிவரை பிரிக்கப்படமுடியாத 82 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

5 இலக்குகளை இழந்து 435 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்க அணி தனது இனிங்ஸை இடைநிறுத்தி துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை நியூஸிலாந்து அணிக்கு வழங்கியது. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக கிரேம் ஸ்மித் 115 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் 113 ஓட்டங்களையும், ஜக்ஸ் ருடோல்ப் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக டக் பிரேஸ்வெல் 3 இலக்குகளையும், ட்ரென்ட் போல்ட், கேன் வில்லியம்ஸன் இருவரும் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். (5)



நிக்கல்

# ஆசியக் கிண்ணம் ஆரம்பம்

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. தொடரில் 6 தகுதி சுற்று ஆட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அணியும் எதிர் அணிகளுடன் தலா ஒருமுறை மோதும்.

புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மார்ச் 22 ஆம் திகதி நடைபெறும் இறுதி ஆட்டத்தில் மோதும். பங்களாதேஷ் மிர்பூரில் உள்ள ஷேர் பங்களா நேஷனல் வளாகத்தில் அனைத்து ஆட்டங்களும் நடைபெற உள்ளன.

**மார்ச் 11: பங்களாதேஷ்- பாகிஸ்தான்.**
**மார்ச் 13: இந்தியா- இலங்கை.**
**மார்ச் 15: பாகிஸ்தான்- இலங்கை.**
**மார்ச் 16: இந்தியா- பங்களாதேஷ்.**
**மார்ச் 18: இந்தியா- பாகிஸ்தான்.**
**மார்ச் 20: பங்களாதேஷ்- இலங்கை.**
**மார்ச் 22: இறுதி ஆட்டம்.**

10 முறை நடைபெற்றுள்ள ஆசிய கிண்ணத் தொடரில் 5 முறை இந்திய அணியும், 4 முறை இலங்கை அணியும், ஒருமுறை பாகிஸ்தான் அணியும் கிண்ணத்தை வென்றுள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பணிப்பாளர் சி.நந்தகுமார், திருமதி நந்தகுமார் ஆகியோரை மாணவர்கள் சின்னம் சூட்டி வரவேற்கின்றனர். (ம-8)



கச்சாய் அ.த.க.பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, பாடசாலை அதிபர் க.உதயகுமாரன் ஆகியோரை மாணவர்கள் பாண்ட் வாத்திய சகிதம் வரவேற்கின்றனர். (14-9)



புத்தூர் மடிஹேற பஞ்சசீக வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-14)



ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன், கரைச்சிப்பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, வலிகாமம் கல்விவலய ஆசிரியஆலோசகர் கோ.குலபாலசிங்கம், யாழ். [illegible] பணிப்பாளர் த.சதீசன் பாடசாலை அதிபர் திருமதி நவலட்[illegible] ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றனர். (14)



நவாலி மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர் வரவேற்கப்படுகின்றனர். (ம-100)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது இடம்பெற்ற வினோத உடைப் போட்டி. (ம-14-100)



பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க. பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் பொ.அருணாசந்திரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார். (ம-14-8)



உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்ட பழைய மாணவர் குழந்தைவேல் நித்தியானந்தன், பிரதி அதிபர் திருமதி கமலவேணி விஜயகுமார் உட்பட விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-23)



வல்லை சிவகுரு வித்தியாசாலையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன், பொறியியலாளர் சபா.இராசேந்திரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வகுமாரன் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய தென்மண்டல தளபதி வருகிறார்

கொழும்பு, மார்ச் 11
இந்தியாவின் தென் மண்டல இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங், நான்கு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை இலங்கை வருகிறார். இரு நாடுகளினதும் இராணுவ நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது, இராணு ஒத்துழைப்பு போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதே இவரது விஜயத்தின் பிரதான நோக்கமாக இருக்கும் என பி.ரி.ஐ செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (ஒ)

## இலங்கைக்கு எப்போதும் ஜப்பான் ஆதரவளிக்கும்

01↘ பக்ஷ, யசூஷி அகாஷியைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், ஜப்பான், இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான வலுவான உறவுகளின் முக்கியத்துவத்தையும் அகாஷி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகள் குறிப்பாக, வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்திகள் குறித்து அகாஷிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## இந்திய நாடாளுமன்றத்திலும் ஒலிக்கிறது ஜெனிவா தீர்மானம்

01↘ ளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எழுப்புவது குறித்து தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்தில் தி.மு.க உறுப்பினர்களும் இந்த விவகாரம் குறித்து பிரச்சினையை எழுப்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.தமிழ்நாட்டில் எதிரும் புதிருமாக உள்ள அதிமுகவும், திமுகவும், ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று ஒரே நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி தடுப்பதற்கு இலங்கை முயற்சி

01↘ பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன், கொழும்பிலிருந்து ஜெனிவா செல்லவுள்ள இலங்கைத் தூதுக்குழுவினரும் மகிந்த சமரசிங்கவுடன் இணைந்து இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானத்துக்கு உறுப்பு நாடுகள் சில ஏற்கனவே ஆதரவு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து உறுப்பு நாடுகளுடனும் இலங்கைத் தூதுக்குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

அத்துடன், அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று முக்கிய விடயங்களில் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் எனச் சில நாடுகள் கோரியுள்ளதாகத் தெரியவருகின்ற நிலையில், இந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை இலங்கைத் தூதுக்குழு மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின் அமர்வுகள் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீது எதிர்வரும் 20 ஆம்திகதிக்கு முன்னர் வாக்கெடுப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகையதொரு நிலையிலேயே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு உட்படுத்தாமல், அதனை ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கி விடுவதற்கான முயற்சியில் இலங்கைத் தூதுக்குழுவினர் ஈடுபடவுள்ளத தெரிய வந்துள்ளது. (த)

## அவசரப்படாது இலங்கை அரசு கூர்ந்து ஆராய்கிறார் ஜனாதிபதி

01↘ அமர்வில் 7 ஆம் திகதி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது. ஜெனீவா அமர்வின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் பின்னர் இலங்கைக் குழு நாடு திரும்பியதன் பின்னரே அமெரிக்கா தீர்மானத்தைச் ச்மர்ப்பித்தது.

இந்த நிலையில் அமெரிக்கா தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளமை தொடர்பாகக் கேட்டபோதே பேராசிரியர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

மேற்குலகின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை நாம் கடந்த காலத்தில் கையாண்டுள்ளோம். கூடுதலான அனுகூலங்கள் எம் பக்கம் காணப்படுகின்றன. அடுத்த கட்ட அமர்வில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதியே இலங்கைக் குழு ஜெனிவா செல்வதற்கு தீர்மானித்திருந்தது. எனினும் அமெரிக்கா அதன் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ள நிலையில் இதில் மாற்றம் ஏற்படலாம்.

அமெரிக்காவின் தீர்மானத்தை அரசு ஆழமாக ஆராய வேண்டியுள்ளது. மேலோட்டமாக எதனையும் உடனடியாக வெளியிட முடியாதுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றார். அவருடனான சந்திப்புக்குப் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதைக் கூறமுடியும். சிலவேளை இலங்கைக் குழு முன் கூட்டியே ஜெனிவா செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதுவரை பல சர்வதேச நாடுகள் எமக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளன. இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதை விட இலங்கைக்கு இந்த விடயத்தில் போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கின்றன. இவ்வாறான நிலையில் நாம் இந்த விடயத்தில் அவசரப்பட்டு எதனையும் தெரிவிக்கப் போவதில்லை'' எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (த)

## நாட்டுக்கு ஆசீர்வாதம் வேண்டி ஆலய மணி ஒலிக்க வேண்டும்

01↘ யிலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பௌத்த விகாரைகளில் பிரித் பாராயணம் இடம்பெற வேண்டும். இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் மணி அடித்து வழிபாடுகள் நடக்க வேண்டும். முஸ்லிம் பள்ளிவாசல்களிலும் விசேட தொழுகை நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தமது பகுதியில் உள்ள சகல ஆலயங்களுக்கும் அறிவித்து இந்த வழிபாட்டை இயற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய கடமை நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அரச ஊழியர்கள் கோயில்களுக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-5)

## ஜெனிவா தீர்மானத்தால் ஜனாதிபதி குழப்பத்தில்

01↘ பண்டாரநாயக்க அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை ஆரம்பமான அனைத்துலக துறைமுக கழகத்தின், ஆசிய-ஓசியானியா பிராந்திய 12 ஆவது மாநாட்டை ஜனாதிபதி முற்பகல் 10 மணியளவில் தொடக்கி வைத்து உரையாற்றவிருந்தார். ஆனால் அவர் அந்த நிகழ்வுக்குச் செல்லவில்லை.

உடல் நலக்குறைவினால் அவர் இந்த மாநாட்டில் பங்கேற்க முடியவில்லை என்று அமைச்சர் ஒருவர், நிகழ்வில் பங்கேற்ற அனைத்துலகப் பிரதிநிதிகளுக்கு அறிவித்தார். ஆனால் ஜனாதிபதி உடல் நலக்குறைவினால் பாதிக்கப்படவில்லை என்றும் ஜெனிவாத் தீர்மானம் குறித்து அறிந்ததும் குழப்பமடைந்த அவர் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு ஓய்வெடுக்கச் சென்று விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் அவர் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# உறுப்பு நாடுகளுடன் ஆராய்ந்தே இலங்கைக்கு எதிரான தீர்மானம்

01↘ வித்துள்ளதாவது:

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை காத்திரமான பல பரிந்துரைகளைக் கொண்டுள்ள போதிலும், அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த பொருத்தமான பொறிமுறை ஒன்றையும் இலங்கை அரசு இதுவரை கொண்டிருக்கவில்லை. அத்துடன்,

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுற்ற பின்னர் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றே சர்வதேச மற்றும் உள்நாட்டு நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பொறுப்புக் கூறுதல் மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் போன்ற விவகாரங்கள் தொடர்பில் கவனமாக ஆராயப்பட்டு, அமெரிக்க அரசின் உயர்மட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்தபின்னர் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் இலங்கை அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி சார்ந்த உதவிகளை அமெரிக்கா வழங்கியது. இந்த இலக்கை எட்ட ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு மேலதிக உதவிகளை வழங்க முடியும் என்று நம்புகிறோம்.

ஆயினும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசு, உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கோரும் தீர்மானத்தை நியாயமற்றது எனவும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் போருக்குப் பின்னரான இலங்கையில் இனங்களுக்கு இடையில் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், போர் மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதி செய்வதும் சர்வதேச நாடுகளின் பொறுப்பாக உள்ளது.

இந்த விவகாரம் குறித்து எல்லாப் பிராந்தியங்களின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் பின்னர் பல பயனுள்ள பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றன. இந்நிலையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பல உறுப்பு நாடுகளின் விவாதங்களின் பின்னர் ஒரு நியாயமான தீர்மானத்தை நாம் முன்வைத்துள்ளோம்.

இத்தீர்மானம் ஊடாக பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்களில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட விரும்புவதை நாம் வலியுறுத்தியுள்ளோம். இவ்விவகாரம் குறித்த இத்தீர்மானத்தின் ஆரம்ப வரைவில் காலக்கெடு எதுவும் குறிக்கப்பட்டிராத போதிலும், பின்னர் இந்தத் தீர்மானத்தில் ஒரு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என இந்தத் தீர்மானத்தில் காலக்கெடு விதிக்கப்பட்டது. இக்காலக்கெடு பின்னர் 2013ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.நா [illegible] தொடர் வரை நீடிக்கப்பட்டது.

போருக்குப் பின்னரான இலங்கையில் இனங்களுக்கு இடையில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டியதும், போர் மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதி செய்வதற்கும் சர்வதேச நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கம்.

இலங்கைக்கான நேரம் கடந்து கொண்டிருக்கும் நிலையில், இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் அமெரிக்காவுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.

இலங்கை அரசு குறித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தின் கரிசனையை வெளிப்படுத்துவதாக உறுதியாக நம்புகின்றோம்.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்ற எமது கரிசனையைப் பல சர்வதேச மற்றும் உள்நாட்டு நோக்கர்களும் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தீர்மானத்தின் ஊடான் இலங்கை [illegible] சர்வதேச [illegible] தமது ஒத்துழைப்பை வழங்க முடியும்- என்றார் அவர். (த)

## கொக்கிளாய் முகத்துவாரத்தில் நேற்று சீன அதிகாரிகள் பார்வை

01↘ 1984 ஆம் ஆண்டு போர் காரணமாக இந்தப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் 36 வருடங்களின் பின்னர் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அந்தக் காலப்பகுதியில் குறித்த பிரதேசத்தில் 36 சிங்களக் குடும்பங்கள் வசித்து வந்தன. மீளக் குடியேற்றப்பட்ட பின் தற்போது இங்கு 310 சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

சீனத் தொழிற்சாலைக்காக குறித்த நிலப்பரப்பு கையகப்படுத்தப்படுவதாக அறியவரும் நிலையில் சிங்களக் குடும்பங்கள் கொக்கிளாய் மேற்குப் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் காணிகளை கால் ஏக்கர், அரை ஏக்கர் வீதம் அபகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

1967 காலப்பகுதியில் தமக்கு இந்தக் காணிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கும் தமிழ்க் குடும்பங்கள் அதில் மழையை நம்பி ஒரு போக நெற்செய்கையை மேற்கொண்டு வந்ததாகவும், இப்போது அரசு அந்தக் காணிகளைக் குறிவைத்து இல்மனைற் அகழ்வுக்காக சீன நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நேற்றைய தினம் சீன அதிகாரிகளுடன் குறித்த நிலப்பகுதியைப் பார்வையிட்டுத் திரும்பிய அரச அதிபரை வழியில் இடைமறித்த பாதிக்கப்பட்ட மக்கள் தமது நிலைப்பாட்டை கவலையுடன் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை சீன நிறுவனத்துக்கு தமது காணிகளை தாரைவார்ப்பது, அந்தப் பகுதியில் உள்ள சிங்களக் குடும்பங்கள் கொக்கிளாய் மேற்கில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பது போன்றன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முறையிட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-10-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகர்களுக்கு...

உங்கள் வியாபார நிறுவனத்தின் விற்பனை பொருள் இருப்பினை மதிப்பிட்டு வியாபாரத்தின் போக்கினையும் இருப்புகளின் உண்மை நிலையினையும் நீங்களே இலகுவாக கண்காணிப்பதற்கு ஏதுவாக இருப்பு கணக்குகள், அறிக்கைகள் உங்கள் தேவைக்கேற்ப தயாரித்து தரப்படும்.

**தொடர்பு - 0770742853**

## மரண அறிவித்தல்



*ஸ்ரீஸ்வப்பிரம்மஸ்ரீ கார்த்திகேசு*

*சிவசுப்பிரமணியம் ஆச்சாரியார்*

(இளைப்பாறிய சித்திர ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, சிற்ப வல்லுநர், இலங்கை வானொலி புகழ் பண்ணிசையாளர்)

அராலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய கார்த்திகேசு சிவசுப்பிரமணியம் ஆச்சாரியார் 04.03.2012 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காந்திமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, நல்லதம்பி, வள்ளியம்மை, சண்முகம், நாகலட்சுமி, வடிவேலு, பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, சுப்பிரமணியம், சண்முகராசா மற்றும் மகேஸ்வரி, கமலாம்பிகை, வள்ளிக்கொடி, குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேஸ்வரன் (கனடா), சுந்தரேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரி, மங்களகௌரி (U.A.E.), சந்தானலக்ஷ்மி (மட். ஆரையம்பதி மகா வித்தியாலய ஆசிரியை), கமலாசினி (கனடா), லோகநாயகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா (கனடா), சாந்தி (கனடா), கலைமதி (கனடா), சண்முகநாதன் (இளைப்பாறிய விவசாயத் திணைக்கள களஞ்சியப் பொறுப்பதிகாரி), கனகசபாபதி (U.A.E.), உதயசூரியன் (சிற்பக் கலைஞர்- மட்டக்களப்பு), உதயசூரியன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கோகுலன், பானுறூபி, பாரதி, கௌதமன், சைலஜா, மைதிலி, விசாகன், சுதர்சினி (மட்/ ஆரையம்பதி மகா வித்தி யாயல ஆசிரியை), ரகுப்பிரியா (லண்டன்), காலஞ்சென்ற பிரணவன் மற் றும் பிரசாத் (கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவப்பீட 4ஆம் வருட மாண வன்), நிறோஜன், பிரகாஷ், சாரங்கன், துவாரகா, தனஞ்சயன், திஷாவந்தி, ஜர்சினி, ஜாதவன், ஜனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மகஸ்ரீயின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.03.2012) திங்கட்கிழமை கனடாவிலும் துயர் பகிர்வு நிகழ்வு அராலியிலுள்ள அன்னாரின் இல்லத்தி லும் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

# பளையில் தொழில் நிலையங்கள் முன் அனுமதி பெற வேண்டும்

## பிரதேச சபை தவிசாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 11.

பளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழில் நிலையங்கள் அமைக்க முன்னர் அவற்றுக்குரிய அனுமதிகளை பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றாடல் பாதுகாப்புச் சபை ஆகியவற்றில் பாதுகாப்பு உரிமம் பெறப்படல் வேண்டும்.

தொழில் நிலையம் அமையவுள்ள இடம் பற்றிய உரிமம் சுற்றாடல் பாதுகாப்பு சபையினராலும் தொழில் நிலையத்துக்கு கட்டடங்கள் அமைக்கும் முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினராலும் தொழில் நடத்துவதற்கான உரிமம் பிரதேச சபையினராலும் வழங்கப்பட்ட பின்னரே தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பளைப் பிரதேசத் தில் உள்ள வர்த்தகர்களுடனான கலந்துரையாடலில் பிரதேச சபை தவிசாளர் எவ்.டி அன்ரன் தெரிவித்தார்.

பொது மக்களின் நலன் கருதி பல்வேறு சட்டதிட்டங்களுக்கமைய வர்த்தகர்கள் தமது தொழில் நிலையங்களை அமைக்க வேண்டும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார். (ஒ-09)

## தேவை

கிறபிக் டிசைனர்
(அனுபவம் உள்ளவர்கள்)
பெண்கள் மட்டும்

**லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்**
**சங்கானை.**
**T.P. 021 225 0390**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batch : Monday (12th March) 3.00 pm
Weekend batch : Saturday (17th March) 9.00 am

IHD (International Higher Diploma) in Business Management
By Experienced Lecturer

edexcel - HND in Business Management
By Experienced Lecturer

Tally Accounting course
By Experienced Lecturer

Tel : 021 222 9901
Mobile : 0775632056
#216, Navalar Road, Jaffna

IDM Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd.

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கில்
1 ½ பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0777448133

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் நாச்சிமார் கோயிலடிக்கும் பூநாரி மடத்திற்கும் இடை யில் வீடு கட்டுவதற்கு உகந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நேரடித் தொடர்புகளுக்கு:-
0773608652, 0212227623

## A1 Exam
### Sponsor/Settlement Visa

திருமணம் செய்து UK செல்வதற்கான

City & Guilds Approved Centre

British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.

**Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது**

IELTS | B1-Exam City & Guilds

A/L, O/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கானது **Spoken English**

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No. 113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | நெல்லியடி M.M.V வீதி, Tel. : 021-226 2470 | சாவகச்சேரி No.174, கண்டி வீதி Tel. :021-227 0243

## STUDY IN UK

AFTER GCE O/L
GCE A/L
what next?

March/April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## வின்ரிச்

**10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்**




50,000/- மேல் மாத வருமானம்

- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

விலை ரூ 99,000/- இல் இருந்து | புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss Int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (போகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 477 4782

## Home Delivery

வீட்டில் இருந்தபடியே உங்களுக்குத் தேவையான பொருள்களை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**கிருத்திகா சுப்பர் மார்க்கெட்**

118/1, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(மருத்துவ பீடத்திற்கு அருகில்)
T.P : 0773304033

எமது நிறுவனத்திலிருந்து 7 கி.மீ தூரத்திலுள்ள இடங்களுக்கே விநியோகம் செய்யப்படும்.

## பணியாளர் வெற்றிடம்

தொழில்நுட்ப உத்தியோகத்தர்
(Technical officer - ஆண்)
தகைமை:- (Photoshop, Autocad & corel draw) அனுபவமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**EUT,**
**Chunnakam East,**
**Chunnakam**
**0212240110**

## ஈஸ்வரன் போக்குவரத்து சேவை

அன்பான வாடிக்கையாளர்களே!

அநேக பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க நாளை (12.03.2012) திங்கட்கிழமை முதல் கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது.

அதாவது கொழும்பில் இருந்து கொடிகாமம் ஊடாக நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு மற்றும் அச்சுவேலி, ஆவரங்கால் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பயணங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசனப்பதிவுகளுக்கு.....**

**நெல்லியடியில்...**
றஞ்சனாஸ் செறமிக்ஸ்
கரவெட்டி,
நெல்லியடி.

**யாழ்ப்பாணத்தில்...**
ஈஸ்வரன் ரேடர்ஸ்,
இல. 59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2813 - 021 222 4317

**கொழும்பில்...**
ஈஸ்வரன் ரேடிங் கோ,
இல. 201, டாம் வீதி,
கொழும்பு - 12.
0112433889.

**வெள்ளவத்தையில்...**
கொட்டல் றோவக்ஸ்,
360, காலி வீதி,
கொழும்பு - 06.

## உதயன்

# வடமராட்சி மக்களுக்கு "உதயனின்" நீடித்த சேவை

*வடமராட்சி மக்களின் நன்மைகருதி, நெல்லியடியில் இயங்கும் உதயன் பணிமனை இரவு 7.30 மணி வரை திறந்திருக்கும் என்பதனையும் வாடிக்கையாளர்கள் தமக்கான எல்லாவிதமான சேவைகளையும் இப் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் வாசகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றான் உதயன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சகாக்கள் மீது சிப்பாய் வெறி தீர சரமாரிச் சூடு

## ஒருவரின் உடலில் 15 சன்னங்கள் பாய்ந்தன நுணாவில் சம்பவத்தில் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச். 11.

சாவகச்சேரி மேற்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சாவடைந்த படையினரின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

இந்த பரிசோதனையின் போது ஒருவரது உடலில் 15 துப்பாக்கி ரவைகளும் மற்றவரின் உடலில் 11 ரவைகளும் இருந்தன என்றும் அவை சோதனையின்போது மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதடிப் பாலத்திலிருந்து ரோந்து சென்ற சமயமே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கே.கே.டி.ஹப்புக்கொட்டுவ (20 வயது), லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். ஆர்.ரட்நாயக்கா (24 வயது), எஸ்.சி.பெர்னான்டோ (29 வயது) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்திருந்தனர்.

பதவி இறக்கப்பட்டவரான ஹப்புக்கொட்டுவ என்ற சிப்பாயே ஆத்திரம் காரணமாக இந்தத் தாக்குதலை நடத்தினார் என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

பிரஸ்தாப சிப்பாயின் பதவி இறக்கத்துக்கு மற்றைய இருவருமே காரணம் என்றும் ரோந்தின்போது அவர்கள் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து நுணாவில் மேற்கு முருகன் கோயிலடிப் பகுதியில் வைத்து சூட்டுச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.

ஹப்புக்கொட்டுவ தனது துப்பாக்கியால் சுட்ட பின்னர், ஏனைய இரு சிப்பாய்களும் காயங்களுடன் விழுந்து கிடக்க அவர்களது துப்பாக்கிகளில் ஒன்றை எடுத்து அவர்களின் நெற்றிப் பகுதியில் சரமாரியாகச் சுட்டுக் கொன்றுள்ளார் என்றும் அதன் பின்னர் அவர்களது துப்பாக்கிகளுடன் 200 மீற்றருக்கு அப்பால் உள்ள கண்ணகை அம்மன் கோயிலடியில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் நேற்றைய விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேற்றையதினம் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் நேரடியாகச் சென்று தடயங்களை ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று மாலை 5 மணியளவில் முடிவுற்ற பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-5)

கச்சதீவுப் பகுதியில்

## நடுக்கடலில் தத்தளித்த ஐவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிக் கொண்டிருந்த போது படகில் எரிபொருள் தீர்ந்த நிலையில் கச்சதீவுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ஐந்து பேர் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜா முன்னிலையில் நெடுந்தீவு பொலிஸாரால் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இவர்களின் இருவர் சிறுவர்களாவர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் சிறுவர்கள் இருவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் கோண்டாவிலிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வைத்துப் பராமரிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

இந்தியாவில் தங்கியிருந்த வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள் சிறிய படகு ஒன்றில் நாடு திரும்பிக் கொண்டிருந்தனர். படகில் எரிபொருள் தீர்ந்த நிலையில் கச்சதீவுக் கடல் பகுதியில் இவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர். அதன்போது கடற்படையினரால் மீட்கப்பட்ட ஐந்து பேரும் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (10 - 3)

## 'இக்ராட்' பதிவு தேவையில்லை

சமூக அடிப்படையிலான நிறுவனங்கள், ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் போது இனிவரும் காலங்களில் 'இக்ராட்' நிறுவனத்தில் பதிய வேண்டிய தேவை இல்லை எனதிட்டமிடல் மற்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

சமுர்த்தி அமைப்புக்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் சேவையினை நோக் காகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பவற்றோடு பிரதேச செயலாளரினால் திருப்தி அடையக் கூடிய, திணைக்களத் தலைவர்களினால் இனங் காணப்படுகின்ற சமய நிறுவனங்கள் போன்றனவே இந்தச் சலுகையைப் பெறவுள்ளன.

திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேச செயலரால் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்படும் இருவர் அடங்கலான மூவர் கொண்ட குழுவினரால் நிறுவனங்கள் பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே மேற்குறித்த சமூக நிறுவனங்களுக்கு அவற்றின் இயலுமைக் கேற்ப ஒப்பந்தங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-130)

**வேலைக்கு ஆள் தேவை**

மிக்சர் வகைகள், சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கு ஆள் தேவை.
தொடர்பு:- 0771751495

**விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்துக்கு அருகில் 16 பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 021 222 9141
0775009320

## மனித உரிமை ஆணைக்குழுவின் போலி கடிதம் ரூபா 5 ஆயிரத்துக்கு பெற்ற வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், மார்ச்11

மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்தின் போலியான கடிதம் ஒன்றை ஐயாயிரம் ரூபாவுக்குப் பெற்று வெளிநாட்டிலுள்ள தனது மகனுக்கு அனுப்பிய குற்றச்சாட்டில் தந்தைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபருக்கு எதிராக பொலிஸார் மேலதிக அறிக்கைகளைச் சமர்ப்பிக்காததனாலும், 65 வயதையுடைய சந்தேகநபரின் உடல் நிலையைக் கவனத்தில் கொண்டும் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் மனுவை ஆராய்ந்த பின்னர் இந்த வழக்கை நீதிவான் தள்ளுபடி செய்தார்.

தற்போது வெளிநாட்டிலுள்ளவர் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் சரணடைந்திருந்தார். பின்னர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் சென்ற நாட்டில் நிரந்தர வதிவிட உரிமையைப் பெறுவதற்கு அச்சுறுத்தல் காரணமாக அவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னர் தஞ்சமடைந்திருந்தமை பற்றிய அதன் கடிதம் அந்த நாட்டில் கோரப்பட்டது.

அதனால் நீர்வேலியில் வசித்து வரும் தந்தையார், யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் சென்று கடிதம் கேட்டுள்ளார். அவர்கள் அதற்கான தரவுகளைப் பதிவு செய்துவிட்டு, சில நாள்களின் பின்னர் வரும்படி கூறி அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் ஆணைக் குழுவுக்குச் சென்றிருந்தவருக்கு ஒரு சில நாள்களில் தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் தொடர்பு கொண்டவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடிதம் கொண்டு வந்துள்ளேன் என்றும் ஐயாயிரம் ரூபா பணத்துடன் நல்லூர் கந்தசாமி கோயில் தேர் முட்டியடிக்குவரும் படியும் கூறியுள்ளார். ஆணைக்குழு சம்பந்தமான விடயம் என்பதால் பணம் வழங்குவது குறித்து எவருக்கும் கூறவேண்டாம் என்றும் தொலைபேசியில் கதைத்தவர் கூறியுள்ளார்.

அதனையடுத்து பிரஸ்தாப தந்தையும் பணத்துடன் உரிய இடத்துக்குச் சென்ற போது மோட்டார் சைக்கிளில் அங்கு நின்றிருந்த ஒருவர் கடிதத்தைக் கொடுத்து விட்டு பணத்தை ஏற்றுக் கொண்டு சென்று விட்டார். அந்தக் கடிதம் வெளிநாட்டிலுள்ளவருக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

அது அங்குள்ள அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டது. அதன் உண்மைத்தன்மை பற்றி அங்குள்ள அதிகாரிகள் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் உறுதிப்படுத்த முனைந்தனர். அதன் போதே இவ்வாறானதொரு சம்பவம் நடந்திருக்கின்றமை ஆணைக்குழுவினருக்குத் தெரியவந்தது.

அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து நீர்வேலியைச் சேர்ந்த தந்தையருக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் போதே பிரஸ்தாப தந்தையாரும் தான் பெற்றிருந்த கடிதம் போலியானதென்றும் தான் ஏமாற்றப்பட்டிருப்பதனையும் உணர்ந்து கொண்டார்.

தனக்கு நடந்த சம்பவத்தை அவர் மன்றில் தெரிவித்திருந்தார். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு வந்தது. இந்த நிலையிலேயே அவருக்கெதிராக பொலிஸார் மேலதிக அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்கவில்லை என்றும், சந்தேக நபரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டும், சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் செய்த மனுவையும் பரிசீலித்த நீதிவான் வழக்கைத் தள்ளுபடி செய்தார். (ஒ-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஈஸ்வரி சின்னத்துரை



புளியடி கரணவாய் தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஈஸ்வரி சின்னத்துரை நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும் தவேந்திரன் (பருத்தித்துறை டிப்போ), கோகுலநாதன் (யா/ இமையாணர் அ.த.க.வி), தேவேந்திரன் (தேவா ஸ்ரூடியோ, பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும், இராஜேஸ்வரி, யோகமலர், ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கோகுலநாதன்,
சி. தவேந்திரன், சி.தேவேந்திரன்
(தேவா ஸ்ரூடியோ)

போதாரமடம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

### மாதர் குமாரவேலு

எழுதுமட்டுவாள் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் குமாரவேலு நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அச்செழு வடக்கு, நீர்வேலியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.
(15565)

தகவல் :
குடும்பத்தினர்

உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு

அதிரடி விசேட சலுகை...!

கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## செல்வி யோகராணி கந்தசாமி
(ஆசிரியர், யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்)

மாசேரி, வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகராணி கந்தசாமி நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், வதனி - சிவனேஸ்வரன் (ஆசிரியர், கரம்பைக்குறிஞ்சி அ.த.க. பாடசாலை) அவர்களின் அன்பு சகோதரியும், சுப்பிரமணியம், உமையாத்தைப்பிள்ளை, முருகேசு யோகேஸ்வரி, கந்தையா, சுகி (ஜேர்மனி), இராசேந்திரம், சுபோதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகளும், சிவனேஸ் வரன் (ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்பு மைத்துனி யும் துஷாரா, மதுசிகன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவு' ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் ''யோகவாசா'', கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''யோகவாசா'', கொடிகாமம் வீதி,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

தகவல்:
சி. முருகேசு.



## திருமதி பராசக்தி பத்மநாதன்

விடத்தற்பளையைப், பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி பத்மநாதன் நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதனின் அன்புமனைவியும் பத்மஜா வின் (மட்டக்களப்பு பல்கலைக்கழக 1ஆம்வருட மாணவி) பாசமிகு தாயும் காலஞ்சென்ற குலசேகரம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் தவமணி தேவி (சுவிஸ்), குணபாலசிங்கம் (கனடா), சிவஞானம் (மீசாலை), வெற்றி வேல் (மீசாலை), நவமணிதேவி (மீசாலை வீரசிங்கம் ம.வி), கணேசலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் ஞானம்பிகை (சாவகச் சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஞானவடிவேல் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சரஸ்வதி, தமோதரம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சாவித்திரி மற்றும் நல்லம்மா, தியாகராசா, நாகரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கச்சாய் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

தகவல்:
பத்மநாதன் (கணவர்).



## திருமதி வைத்திலிங்கம் செல்வமணி (மணி) (மண்கும்பான்)

மண்கும்பானை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்வமணி (மணி) (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்திலிங்கத்தின் பாசமிகு மனைவியும், வள்ளியம்மை, காலஞ்சென்ற பொன்னுத்துரை, மற்றும் கண பதிப்பிள்ளை, பாலசிங்கம், தளையசிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற அன்ன லச்சுமி, ரத்தினம், நாகேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சீவரத்தினம், மற்றும் கேசலச்சுமி (இந்தியா), காலஞ்சென்ற மாணிக்கவாசகர், காலஞ்சென்றவர்களான நாகேந் திரம், ரத்தினமலர், மற்றும் ஜெயமணி (கனடா), காலஞ்சென்ற தனலச்சுமி, மகேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற மாணிக்கவாசகர் தவமலர், சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், சந்திரகுமார், காலஞ்சென்ற ஜெயகுமாரி, இந்திரகுமார், இராசகுமாரி, உதயகுமார், விஜயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமார், வசந்தகுமார் (ஜேர்மனி), ரவீந்திரகுமார், சசிக்குமார் (பிரான்ஸ்), கிருஸ்ணகுமார், சர்வானந்தகுமார் (பிரான்ஸ்), சிவலச் சுமி ஆகியோரின் பாசமிகுதாயும், கலைச்செல்வி, பராசலிங்கம், றோகினி, கனகநாயகம் (குஞ்சன்), மணிமாலா, வசந்தகுமாரி (பிரான்ஸ்), சுவர்ணா (ஜேர்மனி), நிதியா, ஜவிதா (பிரான்ஸ்), வினோ திகா ஆகியோரின் அன்பு மாமியும் தர்ஷிகன், நிறோஜன் (பிரான்ஸ்), சதுர்ஷிகன் (பிரான்ஸ்), கௌசிகன், கஸ்தூரி, மதுஷாயினி, பிரியலக்ஷன் (பிரான்ஸ்), ஜெயலக்சன், மயூரி, சரணியா, ஜானுதி, சரத்குமார், மதுரா, சஜீவன், வினோதன், றஜிதரன், பபிதரன், கோபிசியானு, சியாமினி, சாம்பவி, சங்கவி, நிகேஜன் விஷால் (பிரான்ஸ்), விஸ்வா (பிரான்ஸ்), சாளு (பிரான்ஸ்), பிரணவி (ஜேர்மனி), துஷாரா (ஜேர்மனி), பவீனா (ஜேர்மனி), தனுஷாந், இந்துஷியா, நவசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்,

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்கும்பான் சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புலம்பெயர்ந்தோர் நிதியின் மூலம்

# மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள்

பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் தென்மராட்சி அறவழி நிலையத்தினர் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 15 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 15 மாணவிகளுக்கு சைக்கிள்களும் வழங்கவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை தீவகத்தைச் சேர்ந்த நாரந்தனையிலும், 13 ஆம் திகதி வடமராட்சி சமரபாகுவிலும் தென்மராட்சி அறவழி நிலையத்திலும் இவை வழங்கப்படவுள்ளன.

பிரிட்டனில் வசிக்கும் யாழ். மத்திய கல்லூரியின் 1970 ஆம் ஆண்டு பழைய மாணவர்கள் சக்கர நாற்காலிகளையும் பிரான்ஸில் உள்ள கார்க்கில்லா தமிழர் நலன்புரி அமைப்பினர் துவிச்சக்கரவண்டிகளையும் வழங்க நிதி உதவி வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் வ.ஸ்ரீசக்திவேல், பிரான்ஸிலிருந்து வருகை தந்துள்ள கே.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு இவற்றை வழங்குவர் என்று அறவழி நிலையச் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் தெரிவித்தார். (ஒ-9)

# மின்சாரம் தாக்கி அளவெட்டி இளைஞர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

அளவெட்டிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். மின்சாரம் தடைப்பட்டிருந்த போது இவர் மின்னிணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தார். அவ்வேளை திடீரென மின்சாரம் வந்ததால் அவர் தூக்கி வீசப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் அளவெட்டி தெற்கு குருவளைப் பகுதியைச் சேர்ந்த சிறிஸ் கந்தராசா பிரசாத் (வயது-19) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.
(ஒ-15-36)

# கிரிக்கெட் போட்டியில் மாணவர்களிடையே முரண்பாடு

வலி. வடக்கு, மார்ச் 11

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிகெட் போட்டியில் பழைய மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட முரன்பாடுகள் காரணமாக இருவர் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாகினார்கள்.

சுப்பிரமணியம் பூங்கா முன்றலில் இரு பகுதியினரும் மோதுண்டதில் ஒருவரின் மண்டை உடைந்தது. மற்றுமொருவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

இந்த சண்டையின் போது பொல்லுகள், தடிகளுடன் மாணவர்கள் குழுக்களாக மோதலில் ஈடுபட்டனர்.

இதேவேளை மைதானத்தில் இறங்கி குழப்பங்களை உண்டாக்கிய ஒரு சிலரை மைதானத்தில் இறங்கவிடாது தடுப்பதில் முனைந்த பொலிஸாரும் அங்கு நின்ற ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டனர்.

இதனால் மேலதிக பொலிஸார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்து குண்டாந்தடிகள் சகிதம் வரவழைக்கப்பட்டு அமைதியாகத் தொடர்ந்து போட்டி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.
(10-86)

## சிறீக்குமரன் இசை மன்றம்

ஓகன், வயலின், நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், தபேலா ஆகிய வகுப்புக்கள் இன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. மேற்படி மன்றத்துக்கு கிளாக் தேவை.
[illegible]
[illegible]
நல்லூர். (வடக்கு வீதி)

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ, அரச பணிபுரியும் அழகிய 36 வயதுடைய RC மணமகனுக்கு, அழகிய நற்குணமுள்ள மணமகள் தேவை.
தொடர்பு: 0776577356

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
க.யோகராணி
அவர்களின்பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வரணி வடக்கு,
சைவப்பிரகாச வித்தியாலயம்.

பாடசாலை சமூகம்.

# மரண அறிவித்தல்கள்



## ஐயாத்துரை சிங்கராசா

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோகுல வீதி உரும்பிராய் மேற்கில் வசித்தவரும் தற்போது ஏழாலை வடக்கில் வசித்தவருமான ஐயாத்துரை சிங்கராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் ஏழாலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''மணி மன்றம்'',
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
ஞா. சுகர்ணராஜ் (மருமகன்)

## குகநாதன் புனிதவதி (றமணி)
(ஆசிரியை யா/ செல்வியாத்தை அ.த.க. பாடசாலை- நீர்வேலி)



கூவில், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகநாதன் புனிதவதி (ஆசிரியை) நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவலிங்கம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்), - காலஞ்சென்ற மங்களேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், நடேசு - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமக ளும், குகநாதனின் அன்பு மனைவியும், அஸ் வினின் அன்புத் தாயும், மகேந்திரம், மனோ கரன், சாந்தினி, அமலஸ் ஆகியோரின் அன்பு மருமகளும், மஞ்சுளா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், பத்மாவதி (லண்டன்), தமயந்தி (சுவிஸ்), வினோதன் (லண்டன்), தயாளினி, ஜெனார்த்தன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், கிருபாகரன், தயானந், மயூரி ஆகியோரின் மைத்துனியும், அனுதினா, அனுஜன், அனுலாஷ், ஆரிஷ், அபிஷேக் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2012.03.11) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூவில், புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.



## நாகலிங்கம் செல்வரத்தினம்

உரும்பிராய் மேற்கு,சங்கானையைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வரத்தினம் (06.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பவள ராணி (பவளம்) அவர்களின் பாசமிகு கணவரும், சகீலா (வன் கூவர்), சங்கர் (லண்டன்), சேகர் (சுவிஸ்), சோபனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பொன்னையா - முத்து லெட்சுமி, மனோன்மணி, செல்வராணி, இராசம்பாள், ரத்தினசிங்கம், குண சிங்கம் ஆகியோரின் சகோதரனும், நெடுஞ்செழியன்,வசீகரன், அனிதா, சுயந்தினி, சுதர்சன் ஆகியோரின் மாமனும், துஷாந்த், தனுஷன், சோபியா, ஜெயரிஷி, ஜெயசிதா, ஜெயனி, பாதுஷன், சோபிகன், ஜேவின், சஹானா, ஜெயலக்ஷ்ன், ஜெசீனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேகர் (சங்கர்)
0041443822982 (சுவிற்சர்லாந்து)

(15530)(6-12-14)

தகவல்:
வ.சிவசோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 106 ஆவது வடக்கின் பெரும் போர்

## சமநிலையில் முடிந்தது வடக்கின்பெரும்போர்


வெற்றிக் கிண்ணத்தை இணைந்து பெற்றுக்கொள்ளும் சென்.ஜோன்ஸ் - மத்திய கல்லூரி அணித்தலைவர்கள்

**2007ஆம் ஆண்டு முதல் வடக்கின் பெரும் போரில் தொடர் வெற்றிகளை ஈட்டிவந்த மத்திய கல்லூரியின் பயணத்துக்கு இந்த வருடம் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெறாவிட்டாலும் சமநிலைப்படுத்தி தொடர் தோல்வியில் இருந்து தப்பித்துக்கொண்டது.**

வலி.வடக்கு, மார்ச் 11

கள நிலைமையை உணர்ந்து யாழ். மத்திய கல்லூரி துடுப்பெடுத்தாடியதாலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி இலகுவான பிடிகளைக் கூட தவறவிட்டதாலும் 106ஆவது வடக்கின் பெரும் போர் சம நிலையில் முடிவடைந்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையேயான 106 ஆவது வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டி கடந்த மூன்று நாள்களாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் இனிங்ஸில் யாழ். மத்திய கல்லூரி அனைத்து இலக்குகளையும் தேனீர் இடைவேளைக்கு சற்று முன்னதாகவே இழந்து 144 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 237 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. இதன் படி சென்.ஜோன்ஸ் அணி 93 ஓட்டங்களால் முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்றிருந்தது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவில் 03 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

நேற்றுக் காலை மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது ஆட்டமிழக்காது இருந்த டார்வினும் சௌமிகரனும் துடுப்பெடுத்தாட களமிறங்கினர். ஆனால் இவர்கள் எதிர்பார்த்தளவு சோபிக்காத நிலையில் இருவரும் முறையே 27, 08 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார்கள்.

எனினும் அதன் பின்னர் களமிறங்கிய வதுசனன் அணியின் நெருக்கடி நிலைமையை உணர்ந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையைச் சீராக உயர்த்த முனைந்தார். இவர் 51 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னரும் இலக்குகள் சரியத் தொடங்கிய போது களமிறங்கினார் யூனிஸ் கலிஸ்ரன். இவர் பொறுப்புடன் விளையாடி ஆட்டத்தின் போக்கை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.


அடிக்க வேண்டிய பந்துகளை மிகவும் கவனமாக அடித்து எல்லைக் கோட்டைத் தாண்டச் செய்ததுடன், ஆபத்தான பந்துகளை சரியாகக் கணித்து தற்காப்பு ஆட்டத்திலும் ஈடுபட்டார்.

அவரை வீழ்த்துவதற்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பந்து வீச்சாளர்களை அடிக்கடி மாற்றியமைத்து புதிய வியூகங்களை அமைத்த போதும் கலிஸ்ரன் அவற்றை எல்லாம் தாக்குப் பிடித்தார். கலிஸ்ரனுக்குத் துணையான சர்மிகனும் மறுமுனையில் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார்.

எனினும் கலிஸ்ரனின் ஆட்டத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. 133 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவர் ஒரு பந்தை அடித்தாட முற்பட்டு இலக்கை விட்டு முன்னேறிச் சென்றார். எனினும் பந்து கலிஸ்ரனுக்கு போக்குக் காட்டிவிட்டு இலக்குக் காப்பாளரின் கைகளைத் தஞ்சமடைய, அவர் 'ஸ்ரொம்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவடைய இரண்டு பந்துப் பரிமாற்றங்கள் இருக்கும் நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. மத்திய கல்லூரியின் பின் வரிசை வீரர்கள் இருவரும் நின்று நிதானமாக தடுத்து விளையாடியதால் யாழ். மத்திய கல்லூரி 138 பந்துப் பரிமாற்றங்களைச் சந்தித்து 09 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி முடிவுக்கு வந்தது. இரு அணிகளும் சளைக்காது துடுப்பாட்டச் சமரில் தமது திறனை வெளிப்படுத்தியதால் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. (ங-23-86)


டயலொக் நிறுவன அதிகாரியிடம் இருந்து சகலதுறை வீரருக்கான விருதினைப் பெறும் வதுசனன் (மத்திய கல்லூரி)


டயலொக் நிறுவன அதிகாரியிடம் இருந்து ஆட்டநாயகன் விருதைப் பெறும் சஞ்சயன் (சென்.ஜோன்ஸ்)


யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனிடமிருந்து சிறந்த களத் தடுப்பாளருக்கான விருதினைப் பெறும் கபிலன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)


யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனிடமிருந்து சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதினைப் பெறும் விந்தாரகன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)


சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் [illegible]விடமிருந்து சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதைப் பெறும் யூனியஸ் கலிஸ்ரஸ் (யாழ். மத்திய கல்லூரி)

### சென்.ஜோன்ஸ் எதிர் சென்றல்

யாழ். மத்திய கல்லூரி மைதானம்

சென்றல் 144 & 288 (138)  சென்.ஜோன்ஸ் 237 (32)

போட்டி சமநிலையில் முடிந்தது

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கபில்ராஜ் | c யூனிஸ்கலிஸ்ரன் b மதுசனன் | 0 | 2 | 0 | 0 |
| ரஜிந்தன் | c யூனிஸ்கலிஸ்ரன் b மதுசனன் | 27 | 78 | 3 | 0 |
| துவாரகசீலன் | c & b கோகுலன் | 30 | 98 | 3 | 0 |
| விந்தாரகன் | b வதுசனன் | 2 | 24 | 0 | 0 |
| அமிர்தயன் | c சர்மிகன் b வதுசனன் | 8 | 13 | 2 | 0 |
| அற்றியன் | lbw b கோகுலன் | 8 | 12 | 1 | 0 |
| சஞ்சயன் | c நிசாந்தரூபன் b சௌமிதரன் | 68 | 76 | 12 | 0 |
| பிருந்தாபன் | ரன் அவுட் | 31 | 81 | 2 | 0 |
| எ.பி.அனோஜன் | c யூனிஸ்கலிஸ்ரன் b சௌமிதரன் | 23 | 50 | 3 | 0 |
| கவாஸ்கர் | c நிசாந்தரூபன் b கோகுலன் | 16 | 36 | 2 | 0 |
| கபிலன் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 9 | 0 | 0 |
| உதிரிகள் | | 24 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 237 | | | |

இலக்கு இழப்பு: 1-1, 2-59, 3-72, 4-72, 5-86, 6-90, 7-188, 8-208, 9-225, 10-237

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வதுசனன் | 28 | 5 | 63 | 4 |
| ஸ்ரீவர்ணன் | 2 | 0 | 6 | 0 |
| கோகுலன் | 34.1 | 7 | 89 | 3 |
| டார்வின் | 4 | 0 | 18 | 0 |
| லக்சன் | 3 | 0 | 20 | 0 |
| நிஷாந்தரூபன் | 1 | 0 | 8 | 0 |
| சௌமிதரன் | 7 | 1 | 19 | 2 |

**சென்றல் கல்லூரி 2ஆவது இனிங்ஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கபிலன் | b பிருந்தாபன் | 6 | 16 | 1 | 0 |
| ஸ்ரீவர்ணன் | c பிருந்தாபன் b சஞ்சயன் | 12 | 52 | 1 | 0 |
| நிரோஜ் | c விந்தாகரன் b அமர்தயன் | 41 | 109 | 6 | 0 |
| சௌமிதரன் | lbw b றஜிந்தன் | 6 | 122 | 0 | 0 |
| டார்வின் | c கபிலன் b கவாஸ்கர் | 26 | 146 | 1 | 0 |
| வதுசனன் | c கபிலன் b பிருந்தாபன் | 51 | 101 | 5 | 0 |
| கோகுலன் | b சஞ்சயன் | 1 | 24 | 0 | 0 |
| யூனிஸ் கலிஸ்ரன் | st கபில்ராஜ் b துவாரகசீலன் | 72 | 133 | 10 | 0 |
| சர்மிகன் | c கபில்ராஜ் b சஞ்சயன் | 9 | 28 | 2 | 0 |
| நிஷாந்தரூபன் | ஆட்டமிழக்காமல் | 15 | 88 | 1 | 0 |
| லக்ஷன் | ஆட்டமிழக்காமல் | 0 | 11 | 0 | 0 |

உதிரிகள் 49

மொத்த ஓட்டங்கள் 288

இலக்கு இழப்பு: 1-11, 2-30, 3-76, 4-83, 5-176, 6-177, 7-189, 8-213, 9-285.

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிருந்தாபன் | 22 | 3 | 69 | 2 |
| சஞ்சயன் | 3 | 9 | 45 | 3 |
| கபிலன் | 11 | 4 | 17 | 0 |
| விந்தாகரன் | 18 | 6 | 24 | 0 |
| அமிர்தயன் | 20 | 5 | 32 | 1 |
| கவாஸ்கர் | 11 | 2 | 14 | 1 |
| துவாரகசீலன் | 5 | 2 | 12 | 1 |
| அற்றியன் | 3 | 1 | 13 | 0 |
| ரஜிந்தன் | 15 | 2 | 33 | 1 |
| ஏபிரகாம் அனோஜன் | 3 | 0 | 12 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ST.JOHN'S COLLEGE JAFFNA**
**OLD BOYS' ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING**

The 96th Annual general Meeting of the Old Boys' Association will be held on Saturday the 24th of March 2012 at 10.30 a.m in the College Auditorium.

**PROGRAMME FOR THE DAY**

08.00 a.m - Holy Communion Service
09.00 a.m - Fellowship Breakfast
10.30 a.m - Annual General Meeting

**AGENDA**

1. Prayer
2. Vote of Condolence
3. Minutes of the last AGM
4. Principals Review
5. Annual Report
6. Statement of Accounts
7. Election of Office Bearers

11.30 a.m - Cricket match (Old Boys' Vs Present Boys')
12.30 p.m - Fellowship Lunch
04.30 p.m - Principals Tea
05.00 p.m - Soccer match (Old Boys' Vs Present Boys')

Note:- Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 20 th of March 2012.

No individual invitations would be sent

Breakfast (Rs.100/-), Lunch (Rs. 300/-), Tickets are available from the Treasurer Mr. S. Chandramoulesan at the college till 23rd of March 2012.

M.Elampirayan
Secretary. (C/9634) (6.9.10)

# இடர் முகாமைத்துவம் தொடர்பில் மாணவரிடையே போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச். 11.

இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காகவும், சிறந்த மனப்பாங்கு, தெளிந்த திறன் போன்றவற்றை வளர்த்தெடுக்கும் நோக்குடனும் யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினால் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதுகுறித்து இடர் முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் சகல துறை மாணவர்களும் பங்கேற்கக் கூடிய வகையில் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியிலிருந்து 10.30 மணி வரை இடர் முகாமைத்துவம் தொடர்பான போட்டிப் பரீட்சை அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

திறன்வாய்ந்த இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டுமாயின், நேர்த்தியான மனப்பாங்கும் திறன்களில் தெளிவும் அத்தியாவசியம். தெரியாதவற்றைத் தெரிந்து கொள்வதும், தவறுகளைத் திருத்திக் கொள்வதும், பிரதேசம் சார் திறன்களும் அறிவும் அதனைப் பிரயோகிக்கக் கூடிய இயலுமை கொண்ட சமூகத்தினைக் கட்டியெழுப்புவதினூடாகவே இடர்களில் இருந்தும் விடுபட முடியும்.

மேலும் திறன், அறிவு போன்றவற்றை பரீட்சித்தல் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். க.பொ.த உயர்தர மாணவர்கள் அடுத்து தமது உயர்கல்விக்காகவோ, வேலைக்காகவோ, சமுதாயத் தொண்டர்களாகவோ இணையக் கூடியவர்கள். இந்த நிலையில் அவர்கள் இவ்வாறான விழிப்புணர்வைப் பெறுதல் நமது மாவட்டத்தின் எதிர்கால இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு வாய்ப்பாக இருக்கும் - என்றுள்ளது. (ஒ-05)

**கடை வாடகைக்கு**

A9 பாதையில் நாவற்குழி, சந்தியில் (11 x 22) அளவுள்ள கடை வாடகைக் குண்டு.
தொடர்பு : 077 3446035, 077 3991585
(15557)(6-7-8)

**பணிப்பெண்**

வீட்டில் தங்கியிருந்து வயோதிப தம்பதியினரை பராமரிக்கக் கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர் மானிக்கப்படும்.
(C/9687) (6 ,9 ,12) தொடர்பு: 0777260974

## சிறுமி தலைமறைவு; இளைஞரை தேடும் பொலிஸார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கோண்டாவிலைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியுடன் தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படும் 21 வயது இளைஞரைத் தேடிக் கோப்பாய்ப் பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

சிறுமியுடன் தலைமறைவாகியுள்ள இளைஞனும் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவர். இருவரும் மறைவிடம் ஒன்றில் தங்கியிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி தொடர்பாக பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு ஒன்றை நேற்றுமுன்தினம் பதிவு செய்திருந்தனர். அதை அடுத்து இளைஞனின் வீடு சென்று தேடியபோது இளைஞன் தலைமறைவாகி விட்டார் என்பது தெரிய வந்தது என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. சிறுமியை மீட்டு இளைஞனை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (ஒ-14)

## 'கண்டனன் சீதையை' இசைநாடகம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் 'கண்டனன் சீதையை' இசை நாடகம் உதயன் ஊடக அனுசரணையுடன் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அருணாசல கவிராயரின் இராமநாடகத்திலிருந்து தொகுக்கப்பட்ட இந்த நாடகத்தை யே.ம.ஜோசப் மேரி, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் எழுத்து உருவாக்கி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் காண்பிக்கவுள்ளனர். (10)

## கடத்தப்பட்டார்

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வான் ஒன்றில் வந்தவர்களால் இந்த நபர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.



அள்ளிக் கொஞ்சுவதற்கும்!
ஆசை முத்தம் பொழிவதற்கும்!!
பிள்ளைச் செல்வம் இல்லையே என்று
ஏங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும்!!!

**புத்திர பாக்கியம்! மழலை அற்றோருக்கு**

தமிழகத்தைச் சேர்ந்த வம்சம் கருவுருவாக்கல் மையத்தின் வைத்தியர்கள் பங்கு பற்றும்

**Free Infertility Medical Camp**

Organized By: Lanka Medical Mission
Sponsered By: Mighty Health Club of Colombo

இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# 7, 57th Lane, Wellawetta, Colombo-06
திகதி : 25.03.2012 நேரம் : 9.00am - 2.00pm

**The most successful IVF Team from India**

உங்கள் வம்சம் தழைக்க வாருங்கள்

இலவச முன் அனுமதிக்கு
0777 56 93 82

Dr. S. Paramasivan MS.,
Dr.D. Silambuchelvi M.D., DGO., DIP NB.,
Vamsam Fertility Research Centre
Shree Siva Hospital, Athipalayam Pirivu
Sathy Road, Ganapathy, Coimbatore. 641006
0422 2536001

**உடனடி வேலை வாய்ப்பு**

பிரபல கணினி கல்வி நிறுவனத்தின் சாவகச்சேரிக் கிளைக்கு பின்வரும் பணிகளுக்கு
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

★. கணினி போதனாசிரியர் (Computer Lecturer)
★. ஆங்கில போதனாசிரியர் (English Lecturer)

(நகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமைவழங்கப்படும்)
விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர்.

விளம்பர இல. 4232
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
(C/9659)(6-8-9)

**Vacancy For English Teachers**

Urumpirai KIDS' PARK/ Thirunelvely SMART KIDS

Retired English Teachers, HNDE or equivalent qualified can apply.

**Closing date : 15.03.2012**

Urumpirai Kids' Park,
Gnanavairavar Road,
Urumpirai.
(15555 (6,7,12)

# கண்ணீர் அஞ்சலி

## அரியகுட்டி கதிரேசபிள்ளை

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், எமது ஆலயத்தின் முன்னாள் பொருளாளரும், தைப்பூசத் திருவிழா உபயகாரரும், ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி நிதியுதவிகள் வழங்கியவருமான அரியகுட்டி கதிரேசபிள்ளை அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு எமது அனுதாபத்தை அன்னாரது குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற அருளுமாறு எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையார் பாதம் பணிகின்றோம்.

பரிபாலன சபை,
ஓடையம்பதி கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
உரும்பிராய். (C/9690) (6 ,9 ,12)

# மரண அறிவித்தல்கள்

## நாகநாதர் கனகரத்தினம்



மட்டுவில் நாடு மேற்கு, பூநகரியைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கை, சாவகச்சேரியை விசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் கனகரத்தினம் (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்புச் சகோதரனும், பத்மநாதன் (டீசல் மெக்கானிக் பவா), பத்மாவதி, பத்மதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இளம்பிறை நாதன் (V.M.K டிப்பர் சாரதி-நாதன்), சாந்தவதனி (றூபி), விமலா தேவி (விமலா - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கை,
சாவகச்சேரி.
(14682) (9,7,10)

தகவல்:
**பிள்ளைகள்.**



## *சின்னையா பொன்னம்பலம் (வெற்றி)*

(சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட சின்னையா பொன்னம்பலம் நேற்று (10.03.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தெய்வானை தம்பதியரின் சிரேஸ்டபுத்திரனும் காலஞ்சென்ற செல்வபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசு, தில்லைநாதன், சிதம்பரநாதன்(ஜேர்மனி) மற்றும் இராசபூபதி, இரத்தினபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிறேமலதா, ஜீவலதா (கனடா), கோமலதா, புஸ்பலதா ஆகியோரின் அன்புத்தந்தையும் புவனேந்திரன், பகீரதன் (கனடா), இந்திரராஜ், ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் பகீரதன், கஸ்தூரி, ஜெயராம், கீர்த்திகா, நேத்திரன், வர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய் (15532)(7-8-9)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமெரிக்க 'ரீ-மேக்' 19


மகா நடிகன் 02


சரிந்ததுவோ இமயம் 23


அறிவுசார் வளம் தேவை 08


எதற்காக 'பிக் மச்' ? 21



# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 11 மார்ச் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


■ ஓரண்யன்

# குருதியில் குழந்தைகள்

பெண் குழந்தைகள் குருதிக்குள் குளிப்பாட்டப்படுகிறார்கள். அவர்களின் மழலை மொழியும், தளிர் உடலும் பாலியல் பொருள்களாக உருமாறி சில மிருகங்களுக்குத் தெரிகின்றன. மிருகத்தனமான காமம் குழந்தைகள் என்றோ குமர் என்றோ பேதங்கள் பார்ப்பதில்லை. மிருகங்கள் தம் இச்சை தீர்ந்ததும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள குழந்தைகளை குருதிக்குள் அமிழ்த்துகின்றன. குழந்தைகள் மீட்பர்கள் இன்றித் தவிக்கிறார்கள்.



அந்த நடுத்தர மனிதரின் கைகளில் இருந்த காகிதம் படபடத்துக்கொண்டிருந்தது. காற்று வீச மறந்து 'கனநேரம்' ஆகியிருந்தது. ஆக, காகிதத்தின் படபடப்புக்குக் காரணம் காற்றாக இருக்கமுடியாது. பயத்தால் அந்த மனிதரின் உடல் முழுதும் ஏற்பட்ட நடுக்கமே காகிதத்தையும் பதற்றப்பட வைத்திருந்தது. கறுப்பு நிறப் பேனாவால் எழுதப்பட்டிருந்த சொற்களை அந்த மனிதர் உரத்த குரலில் வாசிக்கப் பணிக்கப்பட்டார்.

''...... ஆகிய நான் 15 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினேன். இது மன்னிக்கமுடியாத குற்றம். எனவே எனக்கு மரண....... தண்டனை....., வழங்கப்..... படுகிற.....'' அவர் அந்த வாக்கியத்தை முடித்து வைக்கும் 'து' என்ற எழுத்தை உச்சரிக்க முன்னரே மண்டையை துளைத்த சன்னங்களின் உபயத்தால் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருந்தார்.

சுடநின்று வேடிக்கை பார்த்த எவரும் அந்த சாவுக்காக ஒரு துளி கண்ணீர் சிந்துவதற்குத் தயாராகவில்லை. அசுர வதம் நிகழும்போது யாருக்குத்தான் அழுகை வரும்? அதன்பின்னர் சிறுமிகள் மீது மட்டுமல்ல, இளம் பெண்கள் மீது கூட எவரும் தவறாக நடக்க துணிவு வராது. ஒருவேளை வந்தாலும் கண்முன்னே துப்பாக்கிச் சன்னங்களின் நினைவு வந்து எல்லாத் தீய எண்ணங்களையும் குழிதோண்டிப் புதைத்து விடும்.

அது போர்க்காலம். எப்போதும் எங்கு வேண்டுமானாலும் குண்டுகள் வீழ்ந்து யாருமே இறந்து போகலாம் என்ற அநித்திய வாழ்வுகளின் காலம். ஆனாலும் அந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் பெண்கள் பயமின்றி திரியமுடிந்தது. இரவிரவாக குடும்பங்களை சுமந்து கொண்டு பெண்கள் இடம்பெயர முடிந்தது. வீட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற இரவு பகலாக வேலை செய்யமுடிந்தது. சுக துக்கங்களை விசாரிக்க இரவு நேரத்திலும் செல்லமுடிந்தது. அது அந்தக் காலம். வாழ்வைப் போர் தின்றுகொண்டிருந்தபோதும் நாங்கள் நிம்மதியாக இருந்தகாலம் அது.

★★★

''அம்மா! மீன் வாங்கப் போட்டுவாறன்'' உற்சாகமாகச் சொல்லிவிட்டு அந்தச் சிறுமி சந்தையை நோக்கி துள்ளிபடி விரையத் தொடங்கினாள். அவளுக்கு சந்தைக்குச் செல்வதென்றால் அலாதி பிரியம். தானும் ''பெரிய ஆள்'' ஆகி விட்டதாக பாவனை பண்ணுவதற்கு அவளுக்கு இத்தகைய வேலைகள் தேவையாக இருந்தன. ஆடிப் பாடியபடி சந்தைக்குச் சென்றவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சந்தைக்கு மீன் வரத்துக் குறைவாக இருந்தது. அனேகமான கடற்றொழிலாளர்கள் கச்சதீவுத் திருவிழாவுக்குச் சென்றுவிட்டதால் நெடுந்தீவுக் கடலில் மீன்கள் பயமின்றி அன்றைய நாளைக் கழிக்கமுடிந்தது. மீன்களுக்கு நல்லகாலம். அதுவே அந்தச் சிறுமிக்கு போதாத காலமாகிப்போனது.

'சந்தையில் மீன் வாங்க முடியவில்லையே' என்ற கவலையோடு வந்து கொண்டிருந்தவள், தன் பக்கத்தில் ஒரு சைக்கிள் வந்து நிற்பதை கண்டதும் நடையை நிறுத்தினாள். சைக்கிளில் வந்தவரை அவளுக்குத் தெரிந்திருந்தது. சில நாள்களுக்கு முன்னர் அவள் வீட்டில் வேலை செய்வதற்காக அவர் வந்திருந்தார். கொடுத்த சம்பளத்துக்கு அதிகமாக ஓடியாடி வேலைகளைச் செய்திருந்தார். அவள் அப்பாவின் நம்பிக்கைக்குரிய வேலையாளாக மாறிப் போனார்.

''என்ன பிள்ளை சந்தையில மீன் கிடைக்கேலையோ?'' கேட்டவனின் வார்த்தைகள் வருமுன்னே, 'குப்' பென்று சாராய நெடி சிறுமியின் நாசியைத் தாக்கியது.

''இல்லையண்ணா. வாங்காமல் போனால் அம்மா பேசுறாவோ தெரியேல்ல'' என்றாள் சிறுமி.

வந்தவனின் முகம் மலர்ந்தது.

''எனக்குத் தெரிந்த ஒருத்தர் வீட்டில வைச்சு விக்கிறார். நீ என்னோட சைக்கில்ல வா. நான் கதைச்சு வாங்கித் தாறன்''

அவனின் வார்த்தைகளுக்கு மகிழ்வோடு தலையாட்டிபடி சைக்கிளில் ஏறிப் போனாள் சிறுமி. சைக்கிள் நெடுந்தீவு மகாவித்தியாலத்துக்கு முன்னால் செல்லும் ஒரு பாதைக்குள் இறங்கியது. சைக்கிளின் பயணம் முடிந்த இடம் ஒரு வெறும் வளவு. அங்கே மீன் விற்பவர்கள் யாருமே இல்லை. நெடுந்தீவில் உள்ளவர்களில் பலர் கச்சதீவுக்குப் போய்விட்டதால் அந்தப் பகுதியில் ஆள் அரவமும் இல்லாதிருந்தது. சிறுமி சந்தேகத்தோடு அவனைப் பார்ப்பதற்கிடையில் காலம் கடந்துபோயிருந்தது. வெறிகொண்ட வேட்டை நாயொன்று சிறுமியின் கதறலை காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் இச்சையைத் தீர்த்துக் கொண்டது. அவளை உயிரோடு விட்டால் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்ற பயம் அவனுக்குள் தொற்றிக்கொள்ள கையிலிருந்த கல் ஒன்றால், அந்தப் பிஞ்சின் முகத்தை இயலும் மட்டும் குத்திக் குதறி அவளின் மூச்சை முற்றாக நிறுத்தினான். அப்படியே எழுந்து சென்றவன் தவறணை ஒன்றுக்குச் சென்று இன்னும் மூக்கு முட்ட குடித்துவிட்டு அங்கேயே குப்புறப் படுத்துக்கொண்டான்.

பிள்ளையைக் காணாது தேடியவர்கள் வெறும் வளவு ஒன்றில் அவளின் சிதைந்த உடலத்தைத்தான் காணமுடிந்தது. பெரும் கூட்டம் கூடியது. போதை முறிந்த 'அந்த மிருகமும்' அந்தக் கூட்டத்தில் இருந்தது.

''பாவம்! சின்னப் பிள்ளையை இரக்கமில்லாமல் இப்படிச் செய்திருக்கிறாங்களே'' கௌதம புத்தர் போல கருணை கொண்ட இந்த வார்த்தைகளை பக்கத்தில் நின்றவர்களிடம் அவளைச் சிதைத்த அதே மிருகம் சொல்லிக்கொண்டது. அப்போது யாரும் அவனைச் சந்தேகப்படவில்லை. ஆனால் காலம் அவனைத் தப்பவிடுவதாக இல்லை. சிறுமியை அவன் சைக்கிளில் மீன் தருவதாக கூறி ஏற்றிச் சென்றதை தற்செயலாகக் கண்ட ஒருவர் அதைப் போட்டுடைக்க, மழை பெய்யாமலே குள்ளநரி பூசியிருந்த சாயம் கரைந்து ஒழுகத் தொடங்கியது.

ஆவேசத்தோடு சென்ற மக்களிடம் இருந்து தப்புவதற்காக அவன் ஓடத்தொடங்கினான். ஆனாலும் எல்லா வழிகளிலும் அவன் தடுக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்டான்.

[சூரியகாந்தி 04 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொட்டப்பாக்கள்

அண்மையில் நெடுந்தீவில் வன்புணர்வின் பின் கொல்லப்பட்ட பச்சிளம் பாலகிக்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரீன்தான் தொட்டப்பா [கிறிஸ்தவத்தில் திருமுழுக்கின்போது தலையைத் தொடும் நபரே தொட்டப்பா அல்லது ஞானத் தந்தை என்படுவார்]. இந்த விடயத்தை ஊடகங்கள் மறைத்துவிட்டன என்பது அவருக்குப் பெரும் கவலை. அது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் விடுத்திருந்தார்.

அதில், இறந்த சிறுமியின் தொட்டப்பா, தான் என்பதை மறைத்து ஊடகங்கள் அரசியல் செய்துவிட்டன என்று குறிப்பிட்டிருந்தார். அத்தோடு நின்றுவிட்டிருந்தால் பரவாயில்லை. சிறுமியைக் கொலை செய்தவர் என்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கும் நபர் தங்கள் கட்சி உறுப்பினர் இல்லை என்றும் கட்சியிடம் உதவிகளைப் பெற்று வந்தவரே என்றும் சொல்லி இருக்கிறார்.

இதன் மூலம் அவர் சொல்ல வருவதெல்லாம் இறந்தவருக்கு நான் தொட்டப்பா கொன்றவருக்கு எனது கட்சி தொட்டப்பா என்பதாகும்மா. இதற்கும் மேல் அவரது சகபாடியான கமல் என்பவர் மேலுமொரு கருத்தைச் சொல்லி இருக்கிறார். போதைப் பொருளும் மதுபானமும்தான் இத்தகைய கொலை மற்றும் கொடூரங்களுக்குக் காரணமாம்.

இத்தகைய கொடூரங்களுக்கு எதிராக அனைவரும் இணைந்து போராட வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார். 90களின் நடுப்பகுதியில் இருந்து நெடுந்தீவு ஈ.பி.டி.பியினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது உலகறிந்த உண்மை. அங்கு அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் இன்னும் தனது தலையைக் காட்டாமலேயே இருக்கிறார். அந்தளவுக்கு ஈ.பி.டி.பி. அங்கு கோலோச்சுகிறது. அப்படிப்பட்ட தீவுக்குள் போதைப் பொருளும் மதுவும் தாராளமாக நுழைகின்றன என்றால் அதற்கு யார் பொறுப்பு? என்று எகத்தாளம் பேசுகின்றனர் விசயம் தெரிந்த ஊர்ப் பெரிசுகள் சிலர்.

போதாக்குறைக்கு கைதான நபரை அடித்துக்கிடித்துத் துன்புறுத்த வேண்டாம் என்று கட்சியின் பெருந்தலை ஒன்று பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருக்கிறதாம். இதுவெல்லாம் குறைகளாகத் தெரியவில்லை அலன்ரீன் எம்.பிக்கு, ஊடகங்கள் தொட்டப்பா விடயத்தை மறைத்துவிட்டு அரசியல் செய்தது [?!!]தான் தெரிந்திருக்கிறது.

## மகா நடிகன்



'ராவய' பத்திரிகையின் 25ஆவது ஆண்டு விழாவில் சம்பந்தன் ஐயா உட்பட நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ரணில் வந்ததும் ஜனாதிபதிக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அவரை அமரச் சொன்னார் டலஸ் அழகப் பெரும. அதற்கு ''டலஸ் என்னை மின்சாரக் கதிரையில் இருத்தி விடமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று பகிடி விட்டார் ரணில். பக்கத்தில் அதைக் கேட்டுச் சிரித்தபடியே பேசாதிருந்தார் மஹிந்தர்.

அவரிடம் ''ஐ.தே.கவிலிருந்து இன்னும் எத்தனைபேரை உங்களிடம் இழுக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன். அதற்கு ''என்னிடம் போதியளவு யானைகள் உள்ளன. இருப்பவற்றை எப்படி வெளியேற்றுவது என்பதுதான் இப்போதைய சிந்தனை'' என்று கடித்தார் மஹிந்தர்.



அப்போது, ''கோட்டையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனவை வைத்தியசாலையில் சென்று நீங்கள் பார்க்கவில்லைத்தானே'' என்று மஹிந்தரிடம் நக்கல் விட்டார் திஸ்ஸ அத்தநாயக்க. உடனே மஹிந்தரோ ''ஆ...... அது ஒரு மாகா நடிப்பு'' என்று பாராட்டி விட்டு ''எங்கே காயத்தைக் காட்டும்'' என்று ஜயலத்திடம் திரும்பினார்.

எந்த அலட்டலும் இல்லாமல் தனது கையில் காயம் இருப்பதாக மஹிந்தரிடம் காட்டினார் ஜயலத். உடனே ''ரீவியில் பார்த்தபோது தலையைப் பிடித்துக் கொண்டிருந்தீரே'' என்றார் மஹிந்தரும் விடாமல்.

## தூக்குங்கள் பீரிஸை!



ஜெனிவா ராஜதந்திரப் போர்க் களத்தில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெற்றிகரமான தளபதியாக இல்லை என்று அரச உயர் வட்டாரங்கள் குறை கூறுகின்றன. கதிர்காமர் இருந்திருந்தால் வெற்றி சுலபமாக வாய்த்திருக்கும் என்பதுதான் பலரும் எதிர்வுகூறுகிறார்கள். பீரிஸ் மீதான அதிருப்தியின் எதிரொலியாக அவரைப் பதவியில் இருந்து தூக்குவது குறித்து அரச உயர் மட்டத்தினர் அலரி மாளிகையில் மந்திராலோசனை கூட நடத்தியிருக்கிறார்கள்.

கூட்டத்தில் கோத்தபாயவின் ஆதரவு ரோகித்த போகொல்லாகமவுக்குத்தானாம். அவர் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையை சரிவரக் கையாண்டு இருப்பார் என்றாராம். ''பீரிஸும் சமரசிங்கவும் தோல்வி கண்டுவிட்டனர். அவர்களால் ஆகப்போவது எதுவுமில்லை'' என்றாராம். ஆனாலும் பீரிஸைத் தூக்குவதற்கு ஜனாதிபதி இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை என்றே தெரிகிறது.

## துமிந்தவும் காணாமல்போவார்

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கோஷ்டி மோதலொன்றின்போது படுகாயமுற்று சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வரும் செய்தி அவரைக் கைது செய்ய எதிர்பார்த்திருக்கும் பொலிஸாரைத் தவிர ஏனைய எல்லோருக்கும் தெரியும்.

விரைவில் துமிந்த காணாமல்போய்விடுவார் என்பதுதான் கடந்த வாரத்தில் அரசியல் வட்டாரத்தில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம். நீதிமன்றில் சிகிச்சை பெற்று வருகையில் துமிந்த காணாமல்போய்விட்டார் என்றும் அவரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் நீதிமன்றத்திடம் கதைவிட அரச உயர் மட்டம் தீட்டிய திட்டம் வெளியே கசிந்ததாலேயே இந்தப் பரபரப்புத் தொற்றியது.

அழகிய பெண் ஒருவருக்குத் தெரிவிக்கப்பட்ட தகவலால் இந்த விவகாரம் பரகசியமாகிவிட்டது என்று துமிந்த தரப்பு இப்போது கவலைப்படுகிறதாம். ''பயணம் செய்யக்கூடிய அளவுக்கு துமிந்த சில்வாவை அவசரமாகத் தயார்ப்படுத்துமாறு பெரியவர் சொல்லி இருக்கிறார்'' என்று துமிந்தவின் நெருங்கிய உறவினர் ஒருவர் தனக்கு நெருக்கமான அழகிய இளம்பெண்ணிடம் சொல்லியிருக்கிறார்.

அந்தப் ''பெரியவர்'' பாதுகாப்புச் செயலர்தான் என்று ஊகித்த அந்தப் பெண் சூதுவாது அறியாமல் அதை வெளியே சொல்லப்போக இப்போது விடயம் விவகாரமாகிப் போனதாம்.

## அமைச்சர்கள் அடிபாடு

அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, பௌசி ஆகியோருக்கு இடையிலான குத்துவெட்டுக்கள் பழைய கதை. அரச ஆதரவு தேசிய அச்சு ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தி மைத்திரிபால மீது சேறு பூச மற்றர்கள் முயற்சி செய்துள்ளார்கள்.



இதைக் கேள்விப்பட்டதும் மைத்திரிபால சும்மா இருப்பாரா? மார் தட்டிச் சண்டைக் களத்துக்குப் புறப்பட்டுவிட்டார்.

ஹிங்குராங்கொடவில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், ''அரசிலுள்ள அமைச்சர்கள் சிலர் கப்பம் பெற்று வருகின்றனர். வர்த்தகர்களும் பொதுமக்களும் இணைந்து இந்தக் கப்பக்கார அரசியல்வாதிகளை ஓடஓட விரட்ட வேண்டும்'' எனசீறியிருக்கிறார்.

அவரது இலக்கு எந்த அமைச்சர் என்று சரியாகத் தெரியாவிட்டாலும் அரசிலுள்ள பலருக்கு அந்தத் தொப்பி பொருந்தும் என்று பேசிக்கொள்கிறார்கள்.

## வெளியேதான் வீரம்


கூட்டமைப்பு ஜெனிவா போகவில்லை என்பதில் கருத்து மோதல் இருந்தது என்னமோ உண்மை. அது சம்பந்தர் ஐயா மற்றும் சுமந்திரன் ஆகியோர் மட்டும் எடுத்த முடிவு என்றும் நியாயம் கேட்போம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் இந்தியாவில் இருந்து கோபமாகக் குரல் கொடுத்தார்.

இத்தோடு கூட்டமைப்புக் குலைந்தது என்றே அரச ஆதரவாளர்கள் பலரும் நினைத்தனர். அதற்குத் தூபம் போடுவதுபோல கூட்டமைப்பு ஜெனிவா செல்லாமல் விடும் முடிவை எடுத்ததற்காக பொது நிகழ்வுகளில் அதனைப் பாராட்டி, சுரேஷ் தரப்பை உசுப்பேற்றவும் அவர்கள் தவறவில்லை.

இப்படியே போனால் நிலைமை விபரீதமாகிவிடும் என்பதைப் புரிந்து கொண்ட சம்பந்தர் உடனடியாக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தைக் கூட்டினார். அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்துக்கு வந்தாக வேண்டும் என்பது கண்டிப்பான கட்டளையாகப் போடப்பட்டது.

ஆனால், வெளியே ஒலித்த அளவுக்கு எதிர்ப்புக் குரல்கள் கூட்டத்தில் ஒலிக்கவில்லை என்பதுதானாம் உண்மை. வெளியே கொதித்துக் கொந்தளித்தவர்கள் எல்லோரும் உள்ளே பதுங்கிப் பம்மினார்கள் என்கின்றன தகவல்கள்.

## வீசத் தயாராகும் புயல்



கடந்த சில வாரங்களாக ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் கொஞ்சம் அமைதி காணப்பட்டது. விலைவாசி உயர்வு, பெற்றோல் உயர்வுக்கு எதிரான போராட்டம் என்று சிறிகொத்தா களம் கொஞ்சம் குழப்பங்கள் இன்றிக் காணப்பட்டது. ஆனால் இப்போது மீண்டும் உள்கட்சி விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. மாத்தறை எம்.பி. புத்திக்க பத்திரன மீதான ஒழுக்காற்று நடவடிக்கையே புதிய குழப்பங்களுக்குக் காரணம். வரும் 13ஆம் திகதி மற்றொரு எம்.பி. சிரால் லக்திகவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை இடம் பெறவுள்ளது.

இந்த விசாரணை அறிக்கைகள் வெளி வந்ததும் மீண்டும் ஒரு குழப்பத்துக்கு சிறிகொத்தா தயாராகி வருகிறது.


## விமல் ஓரம் போ

அமைச்சர்கள் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இராணுவ முகாமில் பயிற்சி ... விவகாரம் சர்ச்சையைக் கிளப்பியது. ஆனால் அந்தக் கருத்தரங்கில் அதிகாரப் பகிர்வு மற்றும் 13 பிளஸ் குறித்துத்தானாம் அதிகம் விவாதிக்கப்பட்டது. 11 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு விவாதமும் நடத்தப்பட்டது. சுதந்திரக் கட்சியினர் பொதுவாக ஓரளவு அதிகாரப் பகிர்வுக்கு இணங்கினர். அமைச்சர் வீரவன்ஸ இருந்த குழுவினரும் இதனை ஏற்றுக் கொண்டபோதும் அவர் மட்டும் 13 பிளஸ் பற்றிக் கதைப்பது நல்லதல்ல என்றாராம்.




... ஜனாதிபதிக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தி விட்டதாம். ... கோபத்தைப் பார்த்ததும் அமைச்சர் விமல் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டார் என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலைக்கு எல்லை இல்லை என்பதை நவீன முயற்சிகள் அற்புதமாக நிரூபித்து வருகின்றன. மும்பையில் நடந்த கண்காட்சி ஒன்றில் கைவிடப்பட்ட பொருள்களைக் கொண்டு காட்சி பொம்மைகளுக்கு ஆடை அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. உள்ளாடைகள், குப்பைகள் என்பனவே இந்த உடை அலங்காரத்துக்கான பிரதான மூலப் பொருள்கள். பார்த்தவர்கள் அசந்து போனார்கள்.



ஹொலிவூட், பொலிவூட் நடிகர் அல்லர் இவர். ஐயாதான் ரஷ்ய நாட்டு தற்போதைய பிரதமர். இவருக்கு எதிராகப் பெரும் பேரணி எல்லாம் நடத்தினார்கள். 'அரபு வசந்தம்' மாதிரி 'ரஷ்யப் பனிக்காலம்' என்றுகூட அதனை வர்ணித்தார்கள். ஆனால் மூன்று மாதங்கள் மட்டுமே கடந்துள்ள நிலையில் இப்போது இவரேதான் மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்ந்துவிட்டார். அப்படி என்னதான் மாயம் செய்திருப்பார் என்று மாய்ந்து போகின்றன மேற்கு ஊடகங்கள். ஏற்கனவே 2000, 2004 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இரு ஜனாதிபதித் தேர்தல்களை வென்றவர். மூன்றாவது முறையும் தொடர்ச்சியாகப் போட்டியிட முடியாது என்பதால் ஒரு தடவை பிரதமராக இருந்துவிட்டு இந்த ஆண்டு மீண்டும் மூன்றாவது முறை ஜனாதிபதியாகப் போட்டியிட்டார். வெற்றிக்காகக் களம் இறக்கப்பட்டுள்ள புடினின் படங்களில் ஒன்றுதான் இது. காட்டில் புலியைப் பிடித்து சோதனை செய்வதாகவும் படமும் எடுத்து விட்டிருக்கும் இவருக்கு வயது ஆக 60 தான்.




ஜேர்மனியில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை ஒன்று தனது முன்பக்கத்தில் பெண்களின் நிர்வாணப் படம் பிரசுரிப்பதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. 1984ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அந்தப் பத்திரிகை 5,000 நிர்வாணப் படங்களைப் பிரசுரித்துள்ளது. இந்த மகளிர் தினத்தை யொட்டி பெண்களின் நிர்வாணப் படங்கள் வெளியிடுவதை நிறுத்துவதாக அது அறிவித்துள்ளது. பெண்களைப் பொறுத்தவரையில் இது சிறிய விடயமானாலும் 'பில்ட்' என்ற அந்தப் பத்திரிகையையும் ஆண்களையும் பொறுத்தவரை இது மிகப் பெரிய விடயம் என்று வர்ணித்துள்ளது பி.பி.ஸி.




3,600 மைக்ரோ போன்களை (ஒலி வாங்கிகள்) கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது இந்த உருளை. இதனை சவூதி அரேபியாவின் ஜெட்டா நகர வீதி ஒன்றில் வைப்பதற்குத் திட்டமிடுகிறார்கள். இதைக் கடந்து செல்பவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்பதுதான் ஏற்பாட்டாளர்களின் திட்டம். மனிதர்கள் பலவிதம். சம்பந்தமே இல்லாமல் அவர்கள் பேசுவதைக் கேட்பது என்பது ஒருவகைக் கலை என்கிறார்கள்.



உலகெங்கும் ஆணுக்கு நிகராக மகளிர் வளர்ந்து விட்டனர் என்ற கருத்து இருந்தாலும் அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பு ஒன்று இது பொய் என்கிறது. அதிகாரமுள்ள பதவிகளை ஒப்பிடும்போது ஆகக் கூடுதலாக விற்பனைத் துறையில் 14.91 சதவீதமும் ஊடகத்துறையில் 14.47 சதவீதமும் மட்டுமே பெண்கள்.

தமிழர்களின் மரபுக் கலைகளில் ஒன்றான மல்யுத்தம் இன்று தமிழர்களிடம் இல்லை. அது ஒரு விளையாட்டாகி ஒலிம்பிக் வரைக்கும் சென்றுவிட்டாலும் தமிழர்கள் அதனை மறந்து விட்டார்கள். ஆனால் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான செனகல் நாட்டில் மல்யுத்தத்தை மரபாகப் பயிலும் ஆர்வம் இப்போது அதிகரித்திருக்கிறது. அங்கு இது பணம் கொழிக்கும் விளையாட்டாக வளர்ந்துவிட்டது. நட்சத்திர மதிப்பைப் பெற்றுவிட்ட மல்யுத்த வீரர் ஒருவர் ஒரு போட்டியில் 20 லட்சம் ரூபா வரைக்கும் வருமானம் ஈட்டுகிறார்.





இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் முன்னாள் வீரர் கொலிமோர் தனது ருவிட்டரை மூடப்போவதாக அறிவித்துள்ளார். நாளாந்தம் வந்து குவியும் 200 இனவெறி கருத்துக்களைத் தாங்க முடியாமல் அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார். சட்டத்துறை மாணவன் ஒருவன் "நீ ஏன் கறுப்பாக இருக்கிறாய்? பார்க்கக் குரங்கு மாதிரி இருக்கிறாய்" என்று எழுதியதில் இருந்து ஆரம்பித்தது இந்தப் பிரச்சினை.



'போர்முலா வன்' கார்ப் பந்தயம் உலகப் புகழ்பெற்றது. வேகம், விறுவிறுப்பு, அச்சம், துணிச்சல் என்று எல்லாவற்றையும் கலந்த கலவையான இந்தப் பந்தயத்தில் ஆண்களே கலந்துகொள்ள அஞ்சுவார்கள். கடந்த 20 வருடங்களாக நடக்கும் இந்தப் பந்தயங்களில் ஒன்றில்கூட பெண்கள் கலந்துகொண்டதில்லை. அதற்கு முன்னர் மூன்று போட்டிகளில் மட்டும் ஜியோவன்னி அமதி கலந்து கொண்டிருந்தார். இப்போது ஸ்பெயினைச் சேர்ந்த மரியா டிவிலோட்டா களம் புகுந்துள்ளார். ஆண்களுக்கு நிகராக கார்களின் வேகத்தை உயர்த்தி தன்னாலும் பறக்க முடியும் என்று நம்பிக்கையுடன் தெரிவிக்கும் மரியாவுக்கு வயது 32. ரஷ்யாவைச் சேர்ந்த அணிக்காக அவர் களம் புகுகிறார். இந்த ஆண்டு தொடங்கும் 'எவ்-1' பந்தயங்களில் அவர் கலந்துகொள்வார். இப்போது 'சோதனைச் சாரதி'யாகத்தான் அவர் இணைந்துள்ளார் எனினும் விரைவில் களம்புகுவார் என்று அவரது பயிற்சியாளர் உறுதியாக நம்புகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் பண்பாடு

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் என்பதை நோக்குவதற்கு முன்னர் பண்பாடு என்றால் என்ன என்பதை வரையறை செய்து கொள்வது அவசியமாகும்.

மக்கள், தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு.

பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுதியாகும்.

இதில் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதர்கள் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியும் அடங்கும்.

குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருள்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடை முறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும்.

ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியுமாகும்.

இவையெல்லாம் ஏதோ ஒருவகையில் பெருமளவுக்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் அமைவிடம் பற்றியும் புவியியல் பற்றியும் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

சில அறிஞர்கள் பண்பாட்டைப் புவியியல் அடிப்படையில் நோக்கியுள்ளனர். இலங்கைப் பண்பாடு, இந்திய பண்பாடு எனக் குறிப்பிடுவதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

எனினும் இவற்றுக்கிடையே பல்வேறு வகையான வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்டபோதும் பொதுவாக இவ்வாறு அழைக்கும் வரலாறு இன்றுவரை தொடர்கிறது.

பண்பாடு என்பது பன்மைத்தன்மை கொண்டது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணம் என்னும் பெரு வட்டாரத்துக்குள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவு முதலிய பகுதிகள் உள்ளடங்குகின்றன.

இப் பிரிவுகளுக்கிடையான பண்பாட்டுக் கோலங்களில் சிற்சில நுண்ணிய வேறுபாடுகள் அல்லது தனித்தன்மைகள் காணப்படுவது உண்மையே.

பண்பாடு என்ற சொல் வாழ்க்கை முறை அல்லது வாழ்வியல் என்ற அர்த்தத்திலும் பயின்று வருகிறது.

தமிழில் பண்பாடு என்ற சொல் பயன்பாடு மிக அண்மைக் காலத்திலேயே அறிமுகமானது. இதன் ஆங்கிலப் பதத்திற்கு நாகரிகம் என்ற சொல்லே பெரு வழக்காக இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டைக் குறிக்கச் சால்பு என்ற பதமே கையாளப்பட்டுள்ளது. கலாசாரம் என்ற சொல்லுக்குப் பண்பாடு என்ற சொல் மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. வாழ்வியல் அல்லது வாழ்க்கை முறைகள் எனப் பன்மையில் சுட்டுவதும் பண்பாட்டின் பன்மைத் தன்மையை மனங்கொண்டே எனக் கருதலாம்.

பண்பாடு பற்றிய ஆய்வைச் செய்தவர்கள் பண்பாட்டை பொருள் சார் பண்பாடு, பொருள் சாராத பண்பாடு என இரண்டாகப் பாகுபாடு செய்வர். ஆய்வு வசதிக்காக இவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ள போதும் பொருள்சார் பண்பாடும் பொருள் சாராத பண்பாடும் ஒரேவழி ஒன்றிணைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. ஒரு சமுதாயப் பண்பாட்டு முறையைத் தெளிவாக அறிந்து கொள்ள முதலில் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்வது அவசியமெனப் பண்பாட்டு மானிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய்பொருள்கள், வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற் கருவிகள், சடங்குப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறியப் பெரிதும் உதவும்.

யாழ்ப்பாணத்தில் இன்று பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றை நாம் இழந்துவிட்டோம். சிலவற்றை மாற்று உருவத்தோடு பேணி வருகின்றோம். இன்னும் சிலவற்றை பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மெல்ல மெல்ல போக விட்டு விட்டோம். பண்பாடு என்பது ஓர் ஓட்டம். அது இயங்கியற் சாத்தியமுடையது. அது மாறுவது அல்லது மாற்றப்படுவது தவிர்க்க முடியாதது. இது மாறாத தன்மை கொண்டது என்ற கருத்தியலாளர்களும் உள்ளனர்.

பண்பாடு மாறுவதற்கு அல்லது மாற்றுருப் பெறுவதற்கு அல்லது மறைவதற்குப் பல காரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று மாற்றங்களும் இம்மாற்றங்களால் உருவான கல்வி, தொழில், உலகத் தொடர்புகள் முதலானவையும், பண்பாட்டைக் கொள்ளலும் கொடுத்தலும் என்ற பரிமாற்ற முறையும் இந்த நிலைக்குப் பிரதான காரணிகள்.

# அழிக்கப்படும் பாவச் சின்னம்

நித்தியா

இன்று இலங்கையில் குறிப்பாகத் தமிழர் வாழும் பகுதிகளில் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் முக்கிய செய்திகளில் ஒன்று சிசுக் கொலை பற்றிய செய்திகளே. இது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இத்தனை காலம் நன்றாக இருந்த தமிழ் இனத்துக்கு இப்படியொரு அழிவு வரக் காரணம்தான் என்ன? எங்கும் கண் கொண்டு பார்க்க முடியாத, காது கொண்டு கேட்க முடியாத அளவுக்கு சமூகச் சீரழிவுகள் கொட்டிக் கிடக்கின்றன.



அந்தக் கொடுமையிலும் தாங்க முடியாத கொடுமை பிறந்து சில மணி நேரங்களே, சில நாள்களேயான குழந்தைகளைப் பாழடைந்த கிணறு, பற்றைகள் மற்றும் வெற்றுக் காணிகளில் வீசி விடுகின்ற செயல். இவ்வாறான கொடூரமான மன்னிக்க முடியாத கொலையை கலாசாரத்துக்கே பெயர்போன யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் செய்ய எவ்வாறுதான் துணிந்தார்களோ? இதற்குத் தீர்வுதான் என்ன? இது எமது பண்பாட்டை கட்டிக்காத்த தமிழினத்துக்குமே ஏற்படுகின்ற இழுக்காகவே உணரப்படுகின்றது.

தாங்க முடியாத வறுமை நிலைதான் தங்கள் குழந்தைகளைக் கொலை செய்யத் துணிய வைக்கிறது என்று சிலர் பொதுவான ஒரு கருத்துக் கூறப்பட்டாலும் இன்றைய இளம் சமுதாயத்தின் (ஆண், பெண் இருபாலாரினதும்) கண் மூடித்தனமான செயற்பாடுகளே இத்தகைய துயரச் சம்பவங்களுக்கு மூல காரணமாகின்றன.

இன்றைய பெண்களும் சரி, ஆண்களும் சரி, தமது பண்பாட்டை மறந்து நாகரிக மோகத்தில் சிக்குண்டு தவறான பாதைகளைத் தேடிச் செல்கின்றனர். பெண்களும் நட்பு என்ற போர்வையில் ஆண்களுடன் கூச்சமில்லாமல் பழகுகிறார்கள்.

தேவையற்ற ஆண்களின் அநாகரிக உறவு முறையில் தங்களது கற்பையும் இழக்கின்றனர். இதன் மூலம் தங்களது வயிற்றில் பாவச் சுமையைச் சுமக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அந்தக் குழந்தையை சமூகத்தில் வளர்க்க வெட்கப்பட்டு கருவிலே அழிக்கத் துணிந்து விடுகிறார்கள். இந்த அவல நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வது வேதனைக்குரிய விடயம். இந்தச் செயற்பாடுகளால் ஒன்றுமே அறியாத அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் என்னதான் செய்யும். அவை என்னதான் பாவம் செய்தன.

உலகம் அறிவியல் துறையில் முன்னேற்றங்களைக் கண்டுகொண்டு செல்கையில் எம் இனம் அறிவே இல்லாத செயல்களில் ஈடுபட்டு தன் இனத்தையே அழித்துக் கொண்டிருக்கிறது. கருவிலே அழிக்கும் தாய்மார் ஒருபுறம், அறியாமையின் காரணத்தால் பெற்ற பின்னர் அழிக்கும் தாய்மார்கள் மறுபுறம் எனத் தமிழ்ப் பெண்கள் புதிய புதிய அவதாரங்கள் எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஐந்தறிவு கொண்ட பிராணிகள் கூடத் தங்கள் குட்டிக்கு உலகம் தெரியும்வரை கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுக்கின்றன. அந்தத் தாய்ப் பாசம் கூட ஆறறிவு உள்ள மனிதனுக்கு இல்லாமல் போயுள்ளதுதான் கவலையளிக்கிறது. பெற்றெடுத்த குழந்தையை புதை குழிக்குள் புதைத்தும் பற்றைக்குள் எறிந்துவிட்டும் எப்படித்தான் அவர்களால் நிம்மதியாய் இருக்க முடிகிறதோ?

எந்தவித பயமோ அச்சமோ இன்றித் துணிந்து இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். அது மிகப் பெரிய பாவம் என்பது அவர்களுக்குப் புரிந்திருக்கவில்லை போலும்.

இந்தச் சம்பவங்களைப் புரிபவர்களை சட்டம் கண்டித்து வருகின்ற போதிலும் ஆங்காங்கே இவ்வாறான சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

இவற்றையெல்லாம் சட்டங்களால் மட்டும் தடுத்துவிட இயலாது. குழந்தை என்பது இறைவனால் படைக்கப்பட்ட வரம் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். உயிரின் பெறுமதியை மதிக்க வேண்டும். இறைவனைப் பற்றிய பயமும் பாவ புண்ணியப் பயமும் மனதால் எழ வேண்டும். இவை இருந்தால் தான் சிசுக் கொலை என்கின்ற கொடூரச் செயலை இல்லாதொழிக்க முடியும்.

அதுமட்டுமன்றி ஆண், பெண், எவராயிருந்தாலும் ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல் தமிழர்களுக்கென வரையறுக்கப்பட்ட கற்பு நிலைக் கோட்பாட்டின் வரையறைகளுக்கு உட்பட்டு வாழ்ந்தால் இவ்வாறான பாவச் செயலைச் செய்ய அவசியம் இருக்காது.

சிசுக் கொலை மானிட ஜென்மத்தின் மானங்கெட்ட செயல். இது போன்ற ஈனச் செயல்களைச் செய்பவர்கள் சடலங்களுக்கு ஒப்பானவர்கள். பெண்களே உங்கள் தாய்மையைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். இன்றைய சமுதாயத்துக்குத் தேவை இது பற்றிய விழிப்புணர்வே. அதன்படி ஒவ்வொருவரும் நாகரிக மோகத்தில் இருந்து ஒதுங்கி ஒழுக்கத்துடன் வாழ உறுதி பூணுங்கள் தானாகவே சமுதாயச் சீரழிவுகள் குறைந்து விடும்.

# குருதியில்...............

[சூரியகாந்தி முதலாம் பக்க தொடர்ச்சி]

வழமையாக எந்தவொரு குற்றம் சம்பவம் நிகழும்போதும் அசமந்தமாக இருக்கும் பொலிஸ், ஒரு வேட்டை மிருகம் தாக்கப்படும் செய்தியறிந்து உடனடியாக அங்கு விரைந்தனர். மிருகம் காப்பாற்றப்பட்டு சட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகம் சிதைந்து போன அந்தப் பிஞ்சின் மரணத்துக்கு நீதி கேட்கும் போர் அந்தப் பகுதி எங்கும் முளைகொள்ளத் தொடங்கியுள்ளது.

★ ★ ★

குற்றங்கள் குடாநாட்டில் காட்டாறுபோல முழுவீச்சோடு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியுள்ளன. அதிலும் பாலியல் நோக்கோடு சிறுமிகள் இலக்கு வைக்கப்படுவது சடுதியாக அதிகரித்துள்ளது. முன்னரும் இத்தகைய பாலியல் ரீதியான குற்றங்கள் நிகழ்ந்த போதும் அவை இளம் பெண்களை மாத்திரமே குறி வைத்து நடத்தப்பட்டன. ஆனால் இப்போது ஐந்து வயதுக் குழந்தைமீது கூட துஷ்பிரயோகங்கள் அரங்கேறத் தொடங்கியுள்ள அருவருப்பான தருணம் வந்து சேர்ந்திருக்கின்றது. மிக மோசமான பாலியல் தாக்கங்கள் இதனால் ஒவ்வொரு பெற்றோருக்கும் ஏற்பட்டுள்ளன. தண்டனைகள் பற்றிய பயமின்மையும், தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற துணிச்சலுமே குழந்தைகளையும் பாலியல் கண்கொண்டு பார்க்கும் மனநிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இதைவிட யாழ்ப்பாணத்தில் பரவத் தொடங்கியுள்ள 'ஹெரோயின்' போன்ற போதைப்பொருள்களின் நுகர்வும், இணையங்கள், ஆபாசப் படங்கள் என்பவற்றின் கேட்டுக்கேள்வியில்லாத வரவும் இளையோரை இன்னும் சீரழிவுக்குள் தள்ளிவிடும். இன்னும் ஓரிரு வருடங்களில் இதுபோன்ற பாலியல் குற்றங்கள் பலமடங்கு அதிகரிக்கலாம் என்று அபாய மணி அடிக்கப்பட்டுள்ளது. இப்போதே பெற்றோர் தம் பிள்ளைகள் மீதான பாதுகாப்பையும், கண்காணிப்பையும் தீவிரப்படுத்தவேண்டும். சட்டத் துறை சார்ந்தவர்களும் ஏனோ தானோ என்று வாளாவிருக்காமல் இத்தகைய பாலியல் வெறியர்களை இனங்கண்டு உரிய தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அப்போதுதான் ஓரளவுக்கேனும் நிலைமைகளைக் கட்டுப்படுத்தலாம். இல்லாவிட்டால் கருவில் இருக்கும் பெண் சிசுவைக்கூட வன்புணர்வு செய்யப்பட்ட செய்தியைக் கூட அனைவரும் படிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் வன்முறையான வரலாறு

## மகாவம்சம் ஓர் மீள்பார்வை

ஜெரா

*நூலின் பெயர் :* மகாவம்சம்
காலம் : கி.பி. 3 – 6ஆம் நூற்றாண்டுகள்.
*பாடியவர் :* மகாவிகாரையைச் சேர்ந்த மகாநாமதேரர்.
*நூல் நோக்கு :* ''புனிதப் பெருமக்களின் மன எழுச்சிக்கும், ஆனந்தத் திற்குமானது''
*நூல் வகை :* மதச்சார்புடைய/காவிய/வம்ச/வரலாற்று நூல்.

இவ்வாறுதான் அந்த வரலாற்று நூலுக்கான எளிய அறிமுகத்தை வழங்கலாம்.

அது முன்பிருந்து பேணப்பட்டு வந்த மரபுகளின், ஐதீகங்களின் இறுதித் தொகுப்பாக விளங்குவதோடு, பல்வேறு மூல நூல்களின் கலப்பாகவும் இருக்கின்றது.

இதனுள் இலங்கைத்தீவின் வரலாற்றுத் தொடக்க கால நிலைமைகள், குடியேற்றங்கள், பௌத்த வருகை, அனுராதபுர காலம் வரையிலான மன்னர்களின் வம்சப் பட்டியல், அவர்களின் சமய, பொருளியல், பண்பாட்டு பணிகள் போன்றன உள்ளடங்குகின்றன.

இவ்விடயப் பொருள் யாவும் இலக்கிய படைப்பாளியின் விருப்பு, வெறுப்பிற்கமைய சில விடயங்கள் மிகைப்படுத்தப்பட்டு அதிக அத்தியாயங்களிலும், சில அரிய விடயங்கள் குறைக்கப்பட்டு ''தேவையற்றனவாக''வும் காட்டப்பட்டுள்ளன. அவை வரலாற்றிலும் ''மற்றமையாக'' இன்றுவரை நோக்கப்பட்டும் வருகின்றன.

ஆரம்ப காலம் முதல் இற்றைவரை இந்தியத் துணைக் கண்டத்தில் நிகழ்ந்த, நிகழும் மாற்றங்கள் இலங்கையின் வரலாற்றையும் அதன் அரசியலையும் பாதித்தே வந்துள்ளன. குறிப்பாக இலங்கையின் தொடக்க காலத்தில் தமிழகத்தில் நிகழ்ந்த அசைவுகள் இங்கு பேரசைவுகளையே நிகழ்த்திப் போயிருக்கிறது.

மகாவம்சம் படைக்கப்பட்ட காலப் பகுதியில் தமிழகம் புதியதொரு பண்பாட்டுத் தடத்தில் பயணிக்கத் தொடங்கியிருந்தது. நிலவுடமை சமூகப் பின்னணியில் வீசிய பக்தி இயக்கம், களப்பிரர் காலம் முதல் வேர் கொண்டிருந்த பௌத்த தத்துவத்தை அங்கு வீழ்ச்சிக்குள்ளாக்கியது.

மனித வாழ்வை நிர்வாணமாய் பார்க்கும் பௌத்த, சமண தத்துவங்கள் நிலவுடமை சமூகத்தை எதிராகக் காட்டுவதனால் அல்லது இதற்கு எதிராக அது இருப்பதால் ஆழ்வார்களும், நாயன்மார்களும் அதற்கு எதிராக பக்தி இயக்கத்தை தொடங்கி முன்னெடுத்தனர்.

அதீத வேகத்தோடு இயங்கிய இந்து, வைணவ பக்தி இயக்கத்திற்கு முன்னால் பௌத்தம் சரியத் தொடங்கியது. பிக்குகள் ஆதரிப்பாரின்றி புலம்பெயர்ந்தனர். ஏழாம் அறிவில் வரும் போதி தர்மன் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழக நிலை இவ்வாறிருக்க வட இந்தியாவிலும் பௌத்த மதத்துக்கு எதிரான அரசியல் நிலமைகளே காணப்பட்டன. வேத காலத்தை தொடர்ந்து, அங்கு அசோகனால் அரச மதமாக்கப்பட்டிருந்த பௌத்தம், மீள் எழுச்சி பெற்றுவந்த இந்து மதத்தால் பாதிக்கப்பட்டிருந்தது.

வட இந்தியவில் குப்த மன்னர்கள் மனுதர்மத்தின்படி இயங்க மிகப் பெரிய இந்துப் பேரரசையே உருவாக்கியிருந்தனர். இவ்வாறு இந்தியாவில் எழுச்சியடைந்து வந்த ஆகமம் சார்ந்த பக்தி இயக்கத்தினால் அங்கிருந்த பிக்குகள் இலங்கை நோக்கிப் புலம் பெயர்ந்தனர். அவர்களால் இலங்கையில் பௌத்தம் பேரெழுச்சியடையச் செய்யப்பட்டது.

இலங்கையில் இந்து பக்தி இயக்கத்திற்கு எதிரான ஆயுதமாக பௌத்தம் பயன்படுத்தப்பட்டது. இங்கும் தமிழகத்தைத் தழுவிய தீவிர இந்துக்களாக மாறிவந்து இந்துமத செல்வாக்கை கட்டுப்படுத்தும் வேலையை மகாவம்சத்தின் ஊடாகப் பிக்குகள் படைத்தனர்.

குறிப்பாக சமகாலத்தில் வாழ்ந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழகத்திலிருந்து பாடக்கூடிய புகழ்மிகு இந்துக் கோயில்கள் இங்கிருந்திருக்கின்றன. பெருகிவரும் இந்துப் பேராபத்திலிருந்து பௌத்த மதத்தை இலங்கையில் மட்டுமாவது காப்பாற்றவேண்டிய நிர்ப்பந்தத்தினால், ''புனித பௌத்தமதம் நீண்டகாலம் நிலைபெற்று வரும் தீவு'' என இலங்கையைக் குறித்து வைத்தனர். அதற்காக அதன் வரலாற்றை பௌத்த சாயலில் வளர்க்க முற்பட்டனர்.

இந்த இலக்கியம் பாடப்பட்ட காலத்திலும் அதற்கு முன்பும் தமிழர்களின் படையெடுப்புக்கள் நிலப் படர்ச்சிகள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. மகாநாம தேரர் தன் காலத்திலும் இதனை எதிர்கொண்டிருக்கின்றார். வடக்குத் தமிழர்களின் படையெடுப்புக்கள் பற்றிய கதைகள் அக்காலத்தில் உலாவியிருக்கின்றன. அதில் எல்லாளன் சேனன், குத்திகன் போன்ற உள்ளூர் தமிழ் ஆட்சியாளர்கள் முக்கிய இடம்பிடித்திருக்கின்றனர்.

மகாவம்சம் இவர்களை அந்நிய நாட்டவர் என்றே காட்ட விளைந்திருக்கின்றது. ஆனால் சமகாலத்தில் இலங்கையின் வடபாகத்தில் தமிழர் அரசொன்று உருவாகிவிட்டதை பல்வேறு சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் வரலாற்றுத் தொடக்க காலத்திற்கு முன் நிலவிய திராவிட, ஆரியப் பண்புகளுடன் கூடிய பன்மைத் தன்மை கொண்ட தீவை மகாவம்சத்தில் தனிச் சிங்களத் தீவாக காட்ட முனைந்துள்ளார். எல்லா தமிழ் படையாளர்களும், தமிழர்களும் அந்நியரென்றும், படையெடுப்பாளர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

சிங்கள மன்னர்களை நோக்கி அடிக்கடி நிகழ்ந்த தமிழ்ப் படையெடுப்புக்களின் காரணமாக ஆட்சியின் இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே கடினமாக இருந்தது. துட்ட காமினி தொடக்கம், விஜயபாகுவரை பிரதான மன்னர்கள் யாவரும் தமிழர் படையெடுப்பிற்குப் பயந்து ஒளிந்து வாழ வேண்டிய சூழல் நிலவியது. இதுவே மகாநாம தேரர் கால மன்னனாகிய தாதுசேனனுக்கும் நிகழ்ந்தது.

அதாவது பாண்டு என்ற தமிழனின் படையெடுப்பினால் அவனும் பிக்குகளுடன் மறைந்து வாழ வேண்டியேற்பட்டது. இந்நிலைமைகளை சிங்களவர்களுக்குச் சாதகமாக காட்டுவதற்கு, மன்னருக்கும், மகாவிகாரைக்கும் எதிரான/ ஒத்து வராதவர்களை மக்களுக்கும், வரலாற்றுக்கும் எடுத்துக்காட்டவே, தனது காலச் சூழலை மகாவம்ச ஆசிரியர் சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்.

மேல் குறிப்பட்டபடி இக்காலத்தில் உருவாகியிருந்த தமிழர் விரோதப் போக்கினை, மகாவம்சம் ''துட்டகாமினியின் வெற்றி'' என்ற 25ஆவது அத்தியாயத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளது.

மன்னன் : ''மரியாதைக்குரியவர்களே! பல லட்சக்கணக்கான மக்கள் உயிர்கள் இழக்க காரணமாயிருந்த எனக்கு எவ்வாறு ஆறுதல் கிடைக்கும்?''

பிக்குக்கள் : ''நீ சுவர்க்கம் செல்ல இந்த ஒரு செயல் தடையாக இருக்காது. உன்னால் ஒன்றரை மனிதரே உயிரிழந்தனர். பௌத்த சமயத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும், தீயவர்களுமான மற்றவர்கள் மிருகங்களைபோலவே கருதப்படவேண்டும்''

என்று மகாவம்சத்தின் 25ம் அத்தியாயத்தில், 19ஆவது வரி குறிப்பிடுகிறது.

பல்லவர் காலத்தில் எழுச்சி பெற்றுவந்த கடலாதிக்கமும், வணிக கணங்களின் தோற்றமும் சமகால இலங்கைக் காலச்சூழலைப் பாதிப்புறச் செய்து வந்துள்ளன. ஏற்கனவே உள்நாட்டில் பல்லவர் சார்ந்தவர்களாலும், தமிழர்களாலும் நெருக்கடிகள் அதிகரித்துக் கொண்டே போயின.

சமகாலத்தில் பல்லவர்கள் தமிழகத்தின் இயற்கை எல்லையையும் தாண்டி அரசியல் மேலாதிக்கமும், பண்பாட்டு மேலாதிக்கமும் செலுத்தி வந்தனர். இவ்வாறான அரசியலுறவுகள் பற்றிய செய்திகள் தமிழக ஆதாரங்களில் இருந்து கிடைக்கின்றன. குறிப்பாக படையெடுப்புக்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

மானவர்ம[illegible] படைத் தலைவர்களினாலும், உள்நாட்டில் வாழ்ந்த தமிழர்களும் சிங்கள அரசுக்கு எதிராக போரிடும் நிலைமை காணப்பட்டது. உதாரணமாக கி.பி. 6,7ஆம் நூற்றாண்டுவரை வட இலங்கை அரசியல் நிலைபற்றி மகாவம்சத்தில் எதுவும் குறிப்படாத மகாநாம தேரர், இக்காலத்திலிருந்து நாகதீபம், உத்தரதேசம் போன்றவற்றில் இருந்து அனுராதபுரம் நோக்கி படையெடுத்ததாக குறிப்பிடுகிறார். மேலும் பல்லவர் காலத்துடன் உருவாகி வந்த சுய ஆதிக்கம் மிக்க வணிககணங்களும் மறை முகமாகவேனும் இலங்கையின் அரசியலையும், இடங்களையும் ஆக்கிரமித்து வந்தன.

இலங்கையின் சுரையோப் பட்டிணங்களிலும், தலைநகரான அனுராதபுரத்திலும் பிற உள்ளூர்ப் பட்டிணங்களிலும் தமிழகத்திலிருந்து வந்த வணிக கணத்தவர் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். மணிக் கிராமம், நான்கு நாடு எனும் வணிக கணங்களை பற்றிய குறிப்புக்கள் இலங்கை சாசனங்களில் காணப்படுகின்றன.

நான்கு நாட்டாரும், செட்டிகள் பலரும் அனுராதபுரத்திலே நிலைகொண்டிருந்தனர். ஹோரம்மட்டிகம என்னும் இடத்தில் மணிக் கிராமத்தினரின் குடியிருப்புக்கள் அமைந்திருந்தமையும் கவனத்திறகுரியது. வணிகச் செல்வாக்கினால் பெருகிவந்த தமிழர் பொருளாதாரம் அனுராதபுரத்தில் ஆட்சி செய்ய வேண்டிய மன்னர் யாரென்பதை தீர்மானிக்கும் பொறுப்பு வரை நீடித்திருந்தது.

மகாநாம தேரர் வாழ்ந்த காலப் பகுதியானது பௌத்த மதத்திற்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த அரசியல் சூழமைவுகளைக் கொண்டிருந்தது. மகா விகாரையை சேர்ந்த தேரவாதிகளும் அபயகிரி விகாரையை சேர்ந்த மகாயானிகளுக்கும் இடையே நிலவிய சமயப் போட்டியானது அரசாட்சியிலும், வாழ்வு முறைகளிலும் இக்காலத்தில் இரு பெரும் பிரிப்புகளை உருவாக்கியிருந்தது.

மகாநாமர் மகாவிகாரையை சேர்ந்த தேரர் ஆனபடியினால் தேரா வாதத்தையே மகாவம்சத்தின் காவியப் பொருளாக கொண்டார். தேராவாத பௌத்தத்திற்கு ஆதரவளித்த மன்னர்களையும், மக்களையுமே உண்மையான பௌத்தர்கள் எனக் காட்டியுள்ளார். குறிப்பாக தேராவாத பௌத்த மன்னர்களுக்கே அதிக இடம் மகாவம்சத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காவியநாயகனாக துட்டகாமினி படைக்கப்பட்டமைக்கு ஒரே காரணம் அவன் தேராவாத பௌத்தனாக இருந்தமையே ஆகும்.

37 அத்தியாயங்கள் கொண்ட மகாவம்சத்தில் 4 அத்தியாயங்களில் துட்டகாமினி மகாவிகாரை கட்டிய வரலாறு, அதற்கு அளித்த தொண்டுகள் பற்றியே கூறப்பட்டுள்ளன. அதேவேளையில் நீர்ப்பாசனத்துக்குப் பெரும் தொண்டாற்றிய, இலங்கை மக்களால் ''மின்னேரியா தெய்வம்'' என அழைக்கப்பட்ட மகாசேனன் மகாஞான பௌத்தத்தை சேர்ந்தவனாதலால் அவனது வரலாறு சில செய்யுள்களில் மட்டுமே சுருக்கமாக கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு அக்காலத்தில் நிலவிய மதசார் நிலைகள் மகாவம்சத்தில் தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

இலங்கையின் மொழியியல் வரலாற்றில், மகாவம்சம் தோற்றம் பெற்ற காலமானது குறைவிருத்தியுடைய காலம் எனக் குறிப்பிடப்படுவதுண்டு. இக்காலப் பகுதியில் அதிகளவான பிராமிக் கல்வெட்டுக்கள் தோன்றவில்லை என்பதே அவ்வாறான குறிப்பிடலுக்கு காரணம். ஆனால் இக்காலப் பகுதியில் பிராமணிய மதத்தின் தேவ மொழியாகிய சமஸ்கிருதத்தின் செல்வாக்கு இலங்கையில் ஏற்படுவதைக் காணலாம்.

மகாஞான பௌத்த பிக்குகளைச் சேர்ந்த அபயகிரி, ஜேகுவன விகாரைகள் சமஸ்கிருத மொழிக் கல்விக்கு புகழ் பெற்றனவாக விளங்கின. இக்காலத்தில் மகாவிகாரை பாளி மொழி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வந்தது. ஆனாலும் குறிப்பட்ட சில மன்னர்கள் சமஸ்கிருதத்தினை ஆட்சி மொழியாகவும், விளம்பரங்களை மக்களுக்கு அறிவிக்கும் மொழியாகவும் பயன்படுத்தினர்.

உதாரணமாக மகாஞான கருத்துக்களை கூறும் [illegible]வெளிக் கல்வெட்டு, திரியாய் கல்வெட்டு போன்றன சமஸ்கிருத மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. மேலும் அனுராதபுரத்திலுள்ள விஜயராம எனும் இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பஞ்சவிம்சதிசஹஸ்திகா, பரமஞ்சபாரமுதா போன்ற மகாஞான நூல்களில் சமஸ்கிருத மொழிச் சுலோகங்களின் பகுதிகள் பொறிக்கப்பட்டள்ளன.

இதே சமஸ்கிருத மொழியில் சாரார்த்த சங்கிரகம், ஜானகீ ஹரணம், ஜாதகமாலா போன்ற சமஸ்கிருத நூல்களும் எழுந்தன. இவ்வாறு தனித்த பண்பாட்டோடு விளங்கும் இலங்கைத் தீவில் சமஸ்கிருத மயமாக்களின் செல்வாக்கை தடுக்கும் நோக்கில், பல்வேறு வழிகளில், பாமர மக்களிடையேயும், பக்குகளிடையேயும் நிலவி வந்த சுதேச மரபுகளையும் தழுவி பாளி மொழியின் இலக்கண, இலக்கிய அமைதிக்கு ஏற்ப வரலாற்றையும், பௌத்த பண்பாட்டையும் வலியுறுத்தும் ஒரு ''பெறுமதியான இலக்கியம்'' எழவேண்டிய சூழ்நிலை நிலவியது. அதனை மகாநாம தேரர் நிறைவேற்றினார்.

இலங்கையில் மகாநாம தேரர் காலம் வரையிலும் ஒழுங்கான வகையில் வரலாற்றை கூறும் நூல்கள் எழவில்லை. அட்டசதா மகாவம்சம், தீபவம்சம், போன்றவை குறிப்பட்ட சிலவற்றை மட்டும் தருகின்றனவே தவிர, மகாவம்சத்தை போல் தொடர்ச்சியான, மன்னார் ஆட்சிக் காலம், ஆட்சிப் பரப்பு, தொண்டுகள், பொருளியல் பணி என்ற விடயங்களைத் தரவில்லை. மகாவம்சத்தில் மட்டுமே இலங்கையின் வரலாறு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் எழுதப்பட்டுள்ளன.

இதற்கு அக்காலச் சூழல் எவ்வாறு உதவியதெனில்? மகாகாம தேரர் வாழ்ந்த சமகாலத்தில் உலகம் முழுவதும் தனித்த பண்பாடுகளுடன் கூடிய இனக்குழுமங்கள் உருவாகிவந்தன. உதாரணமாகத் தமிழகத்தில் பல்லவர்கள், ஐரோப்பாவில் தனித்தனி வம்சங்கள், வடஇந்தியாவில் குப்தர்கள் என நீள்கிறது. இவ்வாறான இனக்குழுமப் பண்பாட்டு உருவாக்கச் சிந்தனை தொன்று தொட்டு பூர்வீகக் குடிகளாக வாழ்ந்து வரும் பல்லினங்கள் மத்தியில் பலமிக்க ஒரு குழுவிடம் உருவாவது வரலாற்று இயங்கியலின் போக்கு என்பார்.

இதனை உருவாக்கி கொள்ளவும், வரலாற்று இலக்கியத்தின் தேவை ஒன்று தேவைப்பட்ட காலமாகவும் இக்காலம் இருந்ததால், அதற்கேயுரிய பௌத்த தன்முனைப்பு பண்போடு மகாவம்சம் பாடப்பட்டது.

இலங்கை வரலாற்றில் கி.பி. 6, 7ஆம் நூற்றாண்டுகள் சீரழிவுத் தொடக்கத்தினதும், வீழ்ச்சியின் தொடக்கத்தினதும் காலமாகும். வெளியகத் தமிழர் படையெடுப்புக்கள், உள்ளகத் தமிழர் படையெடுப்புக்கள், பௌத்த சங்கத்தின் பிளவு, சிங்கள அரசர்களிடம் உருவாகி வந்த அதிகாரப் போட்டிகள், நோய்கள் போன்றன அவ்வாறான ஒரு சூழலை உருவாக்கியது.

இவ்வாறான சமூக இயங்கியல் தன்மையை மாற்ற வேண்டிய பொறுப்பு பௌத்த தேரர்களுக்கு இருந்தது. அப்பணியை ஆற்றுவதில் இலக்கியங்கள் முதலிடம் வகிப்பதை வரலாற்றின் ஊடாக அறியலாம். உதாரணமாக சங்க காலத்தை தொடர்ந்து வந்த் தமிழக அரசியல் குழப்ப நிலையை நீக்க, சிலப்பதிகாரம் எழுந்தது.

மூவுடை வேந்தர்கள் முடியுடைக்குரியவர்களாக மாறியிருந்தனர். இந்நிலையை அந்த இலக்கியம் சரிவரப் புலப்படுத்தியிருந்தது. அதுபோல் மகாவம்சமும் தன்னினத்தின் கடந்த கால செழிப்புத் தன்மைகளையும், தன்னின தோற்றம் பற்றிய ஐதீகத்தையும், தாம் எதிர்கொள்ளும் தமிழர்களின் சவால்களையும், தாம் போற்றி வளர்க்க வேண்டிய பௌத்தம் பற்றிய செய்திகளையும் அதீத கற்பனா உணர்வோடு படைத்திருக்கிறது. இவற்றையெல்லாம் அறிந்து செயலாற்றுபவர்களை காவியத் தலைவர்களாக காட்டியுள்ளது. எனவே நிகழ்கால சமூகத்தை மாற்றவேண்டிய பொறுப்பை மகாவம்சம் ஏற்றது எனலாம்.

இன்றை வரைக்கும் இலங்கை வரலாற்றை முதன்மைப்படுத்தும் ஒரு சான்றாக இருக்கும் மகாவம்சம் இவ்வாறுதான் காலத்தால் வன்முறையாகியது. பொய்களை நேர்த்தியாகக் கட்டமைப்பதன் ஊடாக அதனை யுகங்களுக்கான வரலாறாக்கலாம் என்பதை இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த பௌத்த ஞானியொருவன் கண்டுபிடித்து, அறிவித்திருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக்கும் ஒரு படம் எடுப்பேன்...

சினிமாத்துறையில் தனக்கொரு இடம்பிடித்து பல வெற்றிப் படங்களைக் கொடுத்த திரைப்பட இயக்குநர் விக்கிரமன். அவருடன் உதவி இயக்குநராகப் பல படங்களில் பணியாற்றிய பெருமையுடன் வெளியேவந்து தனது திறமையை தனது படங்களில் வெளிக்காட்டியவர் தமிழ்நாடு கும்பகோணத்தைச் சேர்ந்த இயக்குநர் லிங்குசாமி. உதயனுக்கு அவர் வழங்கிய செவ்வி இது.


இயக்குநர் லிங்குசாமி

***கேள்வி:-*** நீங்கள் இயக்கி வெளிவந்த திரைப்படங்கள் பற்றி..

***பதில்:-*** ஆனந்தம், ரன், ஜீ, சண்டைக்கோழி, பீமா, பையா, வேட்டை போன்ற படங்களை எடுத்து வெளியிட்டு பல ரசிகர்களின் பாராட்டை பெற்றுள்ளேன். 2001ஆம் ஆண்டு இயக்கிய எனது முதல் படமான ஆனந்தம் தந்த வெற்றி மிகுதிப் படங்களை எடுப்பதற்கு துணிவைத் தந்தது. அதனால் மீண்டும் பல வெற்றிப் படங்களை இயக்கி சினிமாத்துறையில் எனக்கென ஒரு இடத்தினை எடுத்துவிட்டேன். மீண்டும் பல வெற்றிப் படங்களைக் கொடுப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

***கேள்வி:-*** வியாபாரத்தை மட்டும் கவனத்தில் கொண்டு இயக்கியிருக்கும் படம்தான் சமீபத்தில் வெளிவந்த வேட்டை திரைப்படம். இந்தப் படத்தைப் பற்றி..

***பதில்:-*** நான் கல்லூரியில் படிக்கும் போது எந்தமாதிரி படங்களைப் பார்க்க விரும்பினேனோ அந்த மாதிரி ஒரு படம் எடுக்க ஆசைப்பட்டேன், அது முழுக்க முழுக்க பொழுது போக்காகவும் இருக்க வேண்டும், அதேசமயம் நாகரிகமாகவும் விறுவிறுப்பாகவும் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். அதையே இப்பொழுது படமாக எடுத்திருக்கின்றேன்.

நான் நினைத்த மாதிரியே வேட்டைப் படமும் வெளிவந்திருக்கிறது. எந்தப் படக்காட்சியில் ரசிகர்களின் கை தட்டல் கிடைக்கும் என்று நினைத்தேனோ அந்தக் காட்சிகளுக்கு ரசிகர்களின் கை தட்டல் கிடைத்திருக்கிறது. இதுவே எனக்கு வெற்றியை அள்ளித் தந்திருக்கிறது.

***கேள்வி:-*** உங்கள் ஒவ்வொரு படத்திலும் புதிதாக வில்லன்களை அழைத்து வருவது ஏன்?



***பதில்:-*** மாதவன் நடித்த ரன் படத்தில் புதிதாக அதுல் குல் கர்னியை வில்லனாக நடிக்கவைத்து ரசிகர்கள் மனதில் இடம் பிடித்ததால் ஒவ்வொரு படத்திலும் புதிய வில்லன் முகங்களை தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டி னேன். 'வேட்டை' படத்திற்கு வில்லனாக ராணாவைக் கொண்டு வந்தேன். இந்தப் படத்தின் கதையை முதலில் விஜயிடம் சொல்லியிருந்தேன். பின்பு சிம்பு நடிப்பதாக இருந்தது. எல்லாவற்றையும் தாண்டி ஆர்யா, மாதவன் என்று முடிவானது. மாதவனுக்கு அண்ணன் வேடத்தில் நடிப்பதற்கு தயக்கமிருந்தது. கதையை முழுமையாகக் கேட்டதும் அவருக்கும் பிடித்துவிட்டது. உடனே நடிக்க சம்மதித்தார். இருவர் கூட்டும் படத்தின் வெற்றிக்குத் தீனி போட்டது.

***கேள்வி:-*** தயாரிப்பாளராக இருந்துகொண்டு இயக்குநராகவும் பணியாற்றும் திறமை பற்றி...

***பதில்:-*** எமது சேவையைச் சரியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் எதைப்பற்றியும் பயமில்லாமல் படம் எடுக்கலாம். இன்னொரு தயாரிப்பாளர் என்றால் எவ்வளவு நாள்கள் படப்பிடிப்பு பிலிம் றோல் எவ்வளவு செலவு என்பதற்கு எல்லாம் கணக்குச் சொல்ல வேண்டி இருக்கும். நானே தயாரிப்பாளராக இருப்பதால் எவ்வளவு பணம் செலவாகும். படப்பிடிப்பு நாள்கள் பற்றிய கருத்துக்களைக் எவருக்கும் சொல்ல சந்தர்ப்பம் இல்லாமல் நான் நினைத்த மாதிரிச் செய்ய முடிந்தது.

***கேள்வி:-*** கடைசியா நீங்கள் எடுத்துவெளிவந்த படம் 'வேட்டை' இந்தப் படத்தில் கற்றுக் கொண்டது.

***பதில்:-*** வழக்கமாக முப்பது நாள்கள் முன் வேலைகள் நடக்கும் என்றால் இந்தப் படத்தின் முன் தயாரிப்பு வேலைகளைப் பத்து நாள்களில் முடித்தோம். அந்தப் பத்து நாள்களும் நானும் எனது உதவியாளர்களும் தொழில்நுட்பக் கலைஞர்களும் தூங்கவே இல்லை. இவ்வளவு அவசரமாக வேலையை முடிக்கக் காரணம் திரைப்பட வெளியீட்டுத் திகதியை முடிவுசெய்துவிட்டு வேலை செய்ததுதான். இனிமேல் எப்போதும் இவ்வாறு செய்யக்கூடாது என்பதை இந்தப் படத்தில் உணர்ந்துகொண்டேன்.

***கேள்வி:-*** முதன்முதலில் திரையில் தோன்றியிருக்கிறீர்களா?

***பதில்:-*** 'வேட்டை' படத்தில் ஒரு காட்சி மக்கள் நெரிசல் உள்ள வீதியில் எடுத்துக் கொண்டிருந்தோம். அதில் நடித்தவர் சரியாக நடிக்கவில்லை. பல தடவைகள் எடுத்தும் பயனில்லாமற் போக, நடிகர் மாதவன் நீங்களே நடித்து விடுங்கள் என்றார். நடித்துவிட்டேன்.

***கேள்வி:-*** உங்கள் தயாரிப்பில் உருவான 'வழக்கு எண் 18 –9' படத்தின் வெளியீடு தாமதமாகிறதே..

***பதில்:-*** இந்தப் படம் தமிழ் சினிமாவில் ஒரு முக்கிய படமாக இருக்கும். அவ்வளவு பிரமாதமாக உருவாகியிருக்கிறது. அப்படி அதைச் சிறப்பான படமாக மாற்றுவதற்காகவே இவ்வளவு காலம் பிடித்தது. விரைவில் இந்தப் படம் வெளிவரும்.

***கேள்வி:-*** நீங்கள் தயாரிக்கும் ஏனைய படங்கள் குறித்து..

***பதில்:-*** எனது தயாரிப்பில் உள்ள இன்னோரு படம் பிரபு சாலமன் இயக்கும் 'கும்கி', இந்தப் படத்தின் 75 வீத வேலைகள் முடிவடைந்திருக்கின்றன. மிரட்டலான படம். பருத்திவீரன் கார்த்தி மாதிரி இந்தப் படதில் கதாநாயகன் வருவார். சரவணன் இயக்கத்தில் ஆர்யா நடிக்கும் ஒரு படத்தினையும் தயாரிக்க உள்ளோம்.

***கேள்வி:-*** நீங்கள் அடுத்து இயக்கும் படம்..

***பதில்:-*** இன்னும் முடிவுசெய்யவில்லை. ஆனால் இந்தப் படத்தை விளையாட்டுத்தனமாக ஜாலியாகச் செய்துவிட்டோம். அடுத்த படம் அப்படியிருக்காது என்பதில் உறுதியாக இருக்கிறேன். எனவே இந்தப் படத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட படமாக இருக்கும் என்பது உண்மை.

***கேள்வி:-*** ஈழத்தமிழர்களுகக்காக ஒரு திரைப்படம் எடுப்பீர்களா?

***பதில்:-*** ஈழத்துத் திரைப்படம் என்றால் இலகுவாக எடுக்கமுடியாது. தமிழ் நாட்டில் சினிமாவாக வாழ்கின்றோம். ஈழத்தில் அதையே வாழ்வாக வாழ்கிறார்கள். ஈழத்தமிழர்களுக்கு ஒரு திரைப்படம் எடுப்பது என்றால் எவ்வளவோ சிந்திக்க வேண்டும். அவர்களின் இயல்பு வட்டத்தில் இருந்து ஈழத்து மண்ணிலே ஒரு திரைப்படம் எடுக்க எனக்கு நெடுநாள் விருப்பம் இருக்கிறது. இனிவரும் காலம் இதற்கு வழியேற்படும் என நினைக்கின்றேன். அப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிற்பேன். யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்க்கையை படமாகக் கொண்டுவந்து அவர்களின் பாராட்டைப் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதுவரை எடுத்த திரைப்படங்களுக்கு பலர் ஈழத்தமிழர்கள் பாராட்டுத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

துன்னாலைச் செல்வம்.

# எமது அரச அலுவலகங்களில் இப்படியும் நடைபெறுகிறது

நா.நல்லதம்பி

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களின் நிர்வாக எல்லைக்குள் வரும் கிராமங்களில் வசிப்பவன் நான். நான் தளபாடங்களை கொழும்பு கொண்டு செல்வதற்காக உரிய அனுமதியைப் பெறுவதற்கு குறித்த பிரதேச செயலகத்துக்கு சென்றிருந்தேன். அங்கு சென்று இது தொடர்பான உரிய வழி முறைகளை வினாவினேன். ஒரு கடிதத்தில் தெளிவாக என்ன வகையான தளபாடங்கள், அவை எனது பாவிப்பில்தான் உள்ளன என்பதனை வெளிப்படுத்தலாக எழுதி அதனை உரிய பிரிவு கிராம அலுவலரிடம் சான்றுப்படுத்தி வந்தால் அனுமதி தருவதாக எனக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நானும் ஒரு கடிதத்தை வரைந்து கிராம அலுவலர் அலுவலகத்துக்கு நடையாய் நடந்தேன். நான் சென்ற வேளைகளில் எல்லாம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இல்லை. கடைசியாக அங்குள்ளவர்களிடம் இது தொடர்பில் வினாவினேன். அவர்களின் பதில் பின்வருமாறு இருந்தது. '' நீங்கள் படித்த தம்பி மாதிரித் தெரியிறியள்; உமக்கு திங்களும் வியாழனும்தான் கிராம அலுவலர் அலுவலகத்தில் கடமையிருப்பார்; அதுவும் காலை 9 மணியிலிருந்து 12 மணிவரை தான். அது தெரியாதோ? நான் எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்.

நானும் இரண்டு மூன்று நாள்களுக்கு மேலாக அலைந்து கிராம அலுவலரிடம் அக்கடிதத்தைச் சான்றுப்படுத்தி மீண்டும் பிரதேச செயலகம் சென்றேன். அங்கு வாயிற் கரும பீடத்தில் இருந்த பெண்மணி இது குறித்த நிர்வாக அலுவலரிடம் தொடர்பு கொள்ளச் சொன்னார்கள். அவரிடம் சென்ற போது அவர் எனக்கு சொன்ன பதில் இன்னொரு நடைமுறையாக இருந்தது. இதற்கென்று குறித்து விதந்துரைக்கப்பட்ட படிவம் ஒன்றுள்ளது. அதனை உரிய முறையில் பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் சான்றுப்படுத்தினால் எமது அலுவலகம் அனுமதி வழங்கும் சிபார்சை மட்டும் வட்டார வள அலுவலருக்கு தரும் என்பதாகும்.

மீண்டும் படிவம் பூரணப்படுத்தல்; கிராம அலுவலர் அலுவலகத்துக்கு அலைதல்; ஒருவாறு சான்று பெறுதல்; இதன் பின்னர் மீண்டும் பிரதேச செயலகத்துக்கு சென்றேன். அப்போது இவ் விடயம் குறித்த விடயத்துக்கு பொறுப்பானவரை அணுகச் சொன்னார்கள்; நான் பூரணப்படுத்தியதும் சான்றுப்படுத்தியதுமான விண்ணப்பத்தைக் கையளித்தேன்; அப்போது அவர் இது இதற்கான படிவமல்ல; இதற்குரியது வேறொரு படிவம்; அதனைப் பூரணப்படுத்தி வாருங்கள்; அதன் பின்னர் பிரதேச செயலக கலாசார அலுவலர் தளபாடங்களைப் பார்வையிட்டு சான்றுப்படுத்தல் வேண்டும்; அதன் பின்பு தான் வட்டார வள அலுவலருக்கு சிபார்சு இது தொடர்பில் தரப்படும் என்பதாகும்.

பொறுமை என்பதும் அளவு மீறும்போது முரண்பாடுகள் வரும். அதனால் தான் நான் இவ்விடயத்திற்கு பொறுப்பானவரிடம் பின்வருமாறு கேட்டேன்; நான் இவ் அலுவலகத்திற்கு மூன்று முறைகள் வந்துள்ளேன். இப்படி அலைக்கழிப்பது முறையோ என்றேன்.

உடனே விடயத்துக்குப் பொறுப்பானவருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''நீர் விடயங்களை தெளிவாகக் கூறவில்லை. அதனால்தான் அலைக்கழியிறீர்'' என்று சீற்றத்துடன் பதில் தரப்பட்டது. தளபாடங்களை வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்வ தற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் குறித்த பிரதேச செயலகம் சரியான ஊடு கடத்தல்களை கொண்டிருக்கவில்லை. மேலதிகாரிகளும் சரியான வேலை விவரத்தை அளிக்கவில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாக என் எண்ணங்களிலே தோன்றி மறைந்தது. இதனை வெளிப்படையாகக் கூறி என்ன பயன்? அந் நிலையிலே நான் பட்டறைக்கல்; அடி தாங்குவதனைத் தவிர வேறென்ன வழி. அதனால் தான் எனது பிரச்சினைகளையெல்லாம் அங்குள்ளவர்களிடம் கூறினேன். மன்றாடினேன் ஒருவரும் மசியவில்லை. பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் அரச கடமையின் நிமித்தம் வெளிக்கள வேலைக்கு சென்று விட்டார்கள். நான் என்ன செய்வது?

> “
>
> **உங்களையெல்லாம் குறை கூறுவது நோக்கமல்ல. உங்களுக்கு இறைவன் தந்த அருட் கொடைதான் சேவை. அதனை பொது மக்களை அலைக்கழியாமல் ஆற்றுங்கள். உங்களுக்கு அவர்களது சேவையை ஆற்ற முடியாமல் போனால் நான்கு வார்த்தைகளை ஆதரவாகப் பேசுங்கள்**

ஈழத்துக் காந்தி தந்தை செல்வா சொன்னதைப் போன்று தமிழர்களை ஆண்டவன் தான் காக்க வேண்டும் அது போன்று அலைக்கழிக்கும் அரச அலுவலர்களிடமிருந்து எம்மைப் போன்றவர்களை இறைவன் தான் இறைஞ்ச வேண்டும். இதுதான் எனது பிரார்த்தனையாகவும் இருந்தது. இருந்தாலும் அப்பிரிவுக்கு அப்போது பொறுப்பானவரிடம் இது தொடர்பில் சென்று முறையிட்டேன். குறித்த செயலுக்கு வருத்தத்தை தெரிவித்ததோடு நாம் என்ன செய்வது முடிவுகள் எடுக்கும் அதிகாரம் எம் கையில்லை; இது தொடர்பான கடமைகளை மேற்கொள்வது தொடர்பில் எனக்கு கையளிப்பும் இல்லை. எனவே தாங்கள் பிரதேச செயலாளர் அல்லது நிர்வாக அலுவலரை தேடி உரிய பரிகாரங்களை பெற்றுக் கொள்ளவும் என பணிவாக அவரால் பதில் தரப்பட்டது.

இப்படியெல்லாம் முகம் தெரியாத மனிதர்களை நான் குறை கூறவில்லை. நான் படித்து நல்ல உத்தியோகம் ஒன்றில் கொழும்பில் வேலை பார்ப்பவன். அரச அலுவலகங்களில் எவ்வாறு அணுகி சேவைகளைப் பெற்றுக் கொள்வது என்பதை ஒரு வகையில் நன்கு அறிந்து கொண்டவன். எனக்கே இக் கதியென்றால் பாமர மகா சனங்களின் கதி அதோ கதிதான்.

ஐயா! அம்மணி ! அரச சேவையில் இருக்கின்ற அனைவர்களுக்கும் எனது பணிவான வேண்டுகோள் என்னவென்றால் உங்களையெல்லாம் குறை கூறுவது நோக்கமல்ல. உங்களுக்கு இறைவன் தந்த அருட் கொடைதான் சேவை. அதனை பொது மக்களை அலைக்கழியாமல் ஆற்றுங்கள். உங்களுக்கு அவர்களது சேவையை ஆற்ற முடியாமல் போனால் நான்கு வார்த்தைகளை ஆதரவாகப் பேசுங்கள். சட்டங்களும் நியமங்களும் ஒழுகலாறுகளும் விதிகளும் சுற்றறிக்கைகளும் எழுத்தாணைகளும் தாபன விரன்முறைகளும் மக்களின் சேவைபெறும் உரிமையையும் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளையாத வகையில் தகவல்கள் பெறும் உரிமையையும் கட்டுப்படுத்தவில்லை என்பதைத் தயவுடன் கூறிக் கொள்கிறேன். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்காலத்திலும் வன்முறைகள்

ஜனநாயகன்

பெண்களின் விடுதலையையும் உரிமைகளையும் உணர்வுகளையும் இன்றைய ஆணாதிக்கவர்க்கம் முற்றாகப் புறந்தள்ளியே வருகின்றது.

அடக்குமுறைகள், சுரண்டல்கள் என்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுக்கு மீறியே சென்றுகொண்டிருக்கின்றன. 'பெண்ணாய்ப் பிறந்திடப் பெரும் தவம் செய்தல் வேண்டும்' என்ற கவிஞனின் எண்ணத்தை இன்றைய சூழ்நிலை முற்றாகப் புறந்தள்ளியே வருகின்றது.

உலக அரசியலோடு ஒப்பிடும் போது பெண்களுக்கு அதிமுக்கியம் கொடுத்த நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணி வகித்தாலும் பெண்கள், சிறுமிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பில் இலங்கை அரசு கண்மூடித்தனமாக நடந்து கொள்கிறது என்ற வலுவான குற்றச்சாட்டு விமர்சகர்களிடம் தலைதூக்கி வருகின்றது.

குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் அகிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டம் எனப் பல்வேறு கட்டங்களில் பெண்களின் பங்களிப்பு அபரிமிதமாதாக இருந்தது. இந்திய ஆயுதப் படைகள் தமிழ்ப் பிரதேசத்துக்குள் காலடி எடுத்து வைத்தபோது அதற்கெதிராக கிளர்ந்தெழுந்து காந்திய தேசத்தின் முகத்திரையை கிழித்தெறிந்த பூபதி போன்ற பெண் தியாகிகள் வாழ்ந்த மண்ணில் இன்று பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

நாம் வாழ, நற்றமிழ் வாழ, நம்மின மங்கையர்தான் வாழ, ஊர் வாழ, உன்னத தேசம் தான் வாழ தம்மை ஆகுதியாக்கிய மாலதி, விதுசா உட்பட பல பெண் வேங்கைகள் வாழ்ந்த மண்ணில் இன்று பெண்களுக்கெதிரான வன்முறை தலை விரித்தாடுகின்றன.

தமிழ்த்தேசம் ஆயுதக் கரத்தால் அடக்குமுறைக்குள் உட்படுத்தப்பட்ட காலத்தில் அரச படைகளால் பெண்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவசரகால சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் ஆயுதப் படைகளுக்கு அளிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான சுதந்திரம் போர்க் காலத்தில் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் ரீதியிலான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தன.

சந்தேகம் என்ற பெயரில் பெண்களைக் கைதுசெய்து முகவரி அறியப்படாத இடங்களில் அவர்களை வேட்டையாடுவதற்கும் இந்தச் சட்டங்கள் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தன.

இந்தக் காலத்தில் காணாமல்போன பல சிறுமிகள் கொடூரமாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் பலரது சடலங்கள் செம்மணி போன்ற புதை குழிகளுக்குள்ளும் பதுங்கு குழிகளுக்குள்ளும் மண்போட்டு மூடப்பட்டன. கிருஷாந்தினி உட்பட பல பெண் பிள்ளைகள் இவ்வாறு பிற்காலத்தில் பதுங்கு குழிகளுக்குள்ளும் புதை குழிகளுக்குள்ளும் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டனர்.

இதன்பின் வன்னிப் போர் உக்கிரமடைந்த, யாழ்ப்பாணம் திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்ட காலத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறை அளவுக்கதிகமாக இடம்பெற்றன.

தமிழ் மக்களின் விடுதலைப் போர் உலக வல்லரசுகளின் முண்டு கொடுத்தலுக்கு மத்தியில் தோற்கடிக்கப்பட்ட காலகட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்த பல பெண்கள் என்ன ஆனார்கள் என்பது இன்னும் வெளித்தெரியாத மர்மமாகவே உள்ளது. குறிப்பாக சரணடைந்த பொதுமக்களின் மத்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு விசாரணை என்ற பெயரில் களையெடுப்புக்களில் சிக்கிய பெண்களின் கதி என்ன என்பது அச்சம் நிறைந்த மர்மம் சூழ்ந்த, பதில் தரமுடியாத கேள்விகளாகவே நீள்கின்றன.

போர் மும்முரமாக இடம்பெற்ற காலத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை கள் தாராளமாக இடம்பெற்றாலும் போர் முடிவடைந்து விட்டது என அறிவிக்கப்பட்ட இன்றைய காலப் பகுதியிலும் பெண்களுக்கெதிரான வன்முறை தலைதூக்கி இருப்பதான செய்திகள் அச்ச உணர்வையும் பதற்றத்தையும் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன.

போர்க் காலத்தில் பெண்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்தவர்களில் அவ்வாறு தாம் செயற்பட்டால் மரண தண்டனைக்குள்ளும் உள்வாங்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக தனி மனிதர்கள் மற்றும் சமூக மட்டத்தினரால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டன.

ஆனால், இன்றைய சூழ்நிலை தட்டிக் கேட்க ஆளில்லை என்ற நிலையிலேயே உள்ளதாக அங்கலாய்க்கின்றனர் மக்கள்.

அண்மையில் நெடுந்தீவு சிறுமி கொடூரமாகக் கடத்திச் செல்லப்பட்டு மிருகத்தனமாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை இலங்கையில் குறிப்பாக வடக்கில் பெண்கள் மீதான வன்முறை, சிறுமிகள் மீதான வன்முறை எந்தளவுக்கு உச்சம் பெற்றுள்ளது என்பதைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

அத்தோடு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரு இளம் பெண்கள் பாலியல் வன்புணர்வு முயற்சிக்கு உள்ளாக்கப்பட்டமை பெண்கள் மீதான அடக்குமுறையின் இன்றைய போக்கை வெளிக்காட்டுகின்றது.

இதேவேளை அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் எனவும் பெண்கள் மீதான வன்முறைகள் இல்லாது ஒழிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறை தலைவிரித்தாடும் போது அதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ள அரசு வெட்டிப் பேச்சுக்களில் வீரம் காட்டுவதை விடுத்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதுவே அவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

# வெளியூரை திருப்திப்படுத்த வழிதான் என்ன...?

சோபனா

ஊரில இருந்து என்னத்த தம்பி உனக்கு அனுப்பிவிடுறது?" "நான் என்னத்தையம்மா சொல்லுறது. ஊர்ப் புழுக்கொடியல் மறக்குமோ. இப்ப ஊரில அதுதானே சீசன். உடன ஊருக்கு வரோணும்போல இருக்கு. அதைத் தான் வாங்கி அனுப்பி விடுங்கோ".

அது சரிதான். எங்கள் ஊரில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களின் சின்னச் சின்ன ஆசைகள் இப்படியானவையாகவே அமைந்துள்ளன. என்னதான் இருந்தாலும் ஊர்ப் புழுக்கொடியல் மறக்கவா முடியும்.

யாழ்ப்பாணத்தின் பெருமையைப் பறைசாற்றும் பெரும் சொத்தான பனை வளத்தின் பலாபலன்கள் நிறைவாகக் கிடைக்கும் காலம் இது என்பதால் தேசம் கடந்து சென்றாலும் கடந்த கால ஊர் நினைவலைகளைக் கொஞ்சம் நினைத்துப் பார்க்கச் சொல்லும்.

அந்தளவுக்கு பனைவளத்தின் மூலம் கிடைக்கும் உணவுப் பொருள்களை நினைத்துப் பார்க்கும்போது கொஞ்சம் பொறாமையுடன் நாக்கூறும்.

நாகரிக முன்னேற்றம், நவீன சாதனங்களின் பயன்பாடு எம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தினமும் அருகில் இருப்பது போல் '''ஸ்கைப்'' என தொலைத்தொடர்பு) இணையத்தளம் செய்து விட்டது; மாற்றிவிட்டது.

இதனால் தனது குடும்பத்தார், உறவுகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்சிகளாக ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டு உணவு வகைகளில் ருசி, உப்பு, காரம் இல்லாமல் நாக்குச் செத்துப் போய்க் கிடக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கு தமது ஊர்ப் பொருளை நினைத்துப் பார்க்கும்போது நாக்கில் உமிழ்நீர் சுரந்து வழியத் தொடங்கிவிடும்.

பனங்கிழங்கு நீண்ட நாள்கள் வைத்துச் சாப்பிட முடியாது என்பதால் அதனை வெயிலில் போட்டு உலரவிட்டு ஒடியல், புழுக்கொடியல் எனச் சேமித்து வைப்பவர்கள்தான் எம்மவர்கள். இது புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களுக்கு மிகவும் பிடித்த உணவுப் பொருள்கள். அதனால்தான் போலும் ஒடியல், புழுக்கொடியலுக்கு மவுசு அதிகமாயிற்று.



எமது பனை வளத்தின் பாதியை போர் சின்னாபின்னம் ஆக்கிவிட்டது. இதனைவிட இருந்ததில் அரைவாசியை வீடு கட்டுவதற்காக வகை வகையாகத் தறித்து இருந்த இடமே இல்லாமல் செய்து விட்டார்கள். பனைவளம் காணப்பட்ட காணிகள் தோறும் கட்டடங்களும் வீடுகளும் எழுப்பப்பட்டு ஆங்காங்கே ஓரிரு இடங்களில் மட்டும் இந்தப் பனைமரங்கள் உள்ளன.

ஆனாலும் இவற்றில் எத்தனை இதுவரை பாதுகாக்கப்படுகின்றன? வெட்டப்படும் ஒவ்வொரு பனைக்கும் பதிலாக எத்தனை பனை விதைகள் நடப்படுகின்றன? எமது பழைமைவாதிகள் மறைந்து போனதால் அதனை நாம் பாதுகாக்காமல் கைவிட்டு விட்டோமா? என்னும் பல்வேறு கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

இன்று புலம்பெயர்ந்து வாழ்பவர்களதும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களதும் ஆசைகள் நம்மூர் "புழுக்கொடியல்" என்பதால் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றோம்.

யாழ்ப்பாணத்து மக்களின் தொண்ணூறு விதமான வீடுகளில் அந்தக் காலத்தில் பனைவளத்தின் மூலம் பெறப்பட்ட உணவுப் பொருள்கள் உரப்பைகளில் போடப்பட்டு அநாதரவாகக் கிடக்கும்.

இன்று ஐம்பது வீதமானவர்களின் வீடுகளிலாவது இவை காணப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறிதான். எல்லாமே பணம் கொடுத்தால் கிடைக்கும் எனும் கலாசாரத்துக்குள் எம்மைத் தொலைத்து இவற்றைச் சேமிக்காது கைவிட்டுவிட்டுள்ளோம்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், புலம்பெயர்ந்து வாழ்பவர்களும் எமது ஊர்ப் புழுக்கொடியலை மறக்காமல் இருக்கும் போது நாம் அதனை மறந்து விட்டோம் என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

நமது மூதாதையர்கள் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்த எமது சொத்துக்களை நாம் நாகரிகம் பெருகப் பெருக அழித்துக் கொண்டிருக்கிறோம்.

வீதியோரங்களிலும், மேட்டு நிலங்களிலும் எமது மூதாதையர்களால் நடப்பட்ட பனை மரங்கள் இருந்த அடையாளம்கூடத் தெரியவில்லை. அவற்றுக்குப் பதிலாகப் புத்தர் கோயில்களும், இராணுவக் காவலரண்களும் அமைக்கப்பட்டதையும் இங்கு சற்று நினைவுபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

காலங்கள் மாறினாலும், கடந்தாலும் எமக்கான பாரம்பரியங்கள் என்றைக்குமே மறைந்து போகா. அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மவர் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

பனை வளத்தின் பயன்பாடு தொடர்பாக கிராமப் புறங்களில் விழிப்புணர்வைத் ஏற்படுத்த வேண்டியது துறைசார்ந்த அதிகாரிகளின் கடமைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. நகரமயமாக்கலில் பனை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றன. கிராமங்களில்தான் அதுவும் குறிப்பிட்ட பகுதிகளில் தான் பனை மரங்களூடாகக் கிடைக்கும் பயன்கள் இன்றும் பெறப்படுகின்றன. அதுவும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக் குத்தான் உள்ளன. இதனைவிட அதன் வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதில் எவரும் அக்கறை எடுத்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

காலபோகங்களுக்கு ஏற்றால்போல் யாழ்ப்பாணத்தின் அரிய சொத்தான பனை வளத்தை பாதுகாப்பதற்கு சரியான வழிகாட்டல் தேவை என்பதுதான் இங்கு சுட்டிக் காட்டக்கூடிய விடயமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் வளத்தில் உச்சப் பயனடைய அறிவுசார் வளம் தேவை

■ சங்கர்

பொருளாதாரத்தில் தன்னிறைவு காண்பதற்கு எமது பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் ஆராயப்பட்டு திட்டமிட்ட முறையில் பயன்படுத்துவது அவசியமானது.

வடக்கில் விவசாய உற்பத்தி நடவடிக்கைக்கு அடுத்த படியாக கடற்றொழில் துறையோ, பொருளாதாரத்தில் முக்கிய இடம்பிடித்துள்ளது.

விவசாயம், கடற்றொழில், பனைசார் உற்பத்தி ஆகியன எமது பகுதி பொருளாதாரத்தை மேம்படுத்தப் போதுமானவை. இவை சரியாக ஆராயப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமானால் பொருளாதாரத்தில் தன்னிறைவு காண முடியும்.

உள்ளூர் வளங்கள் மூலம் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதுக்கு அறிவுசார் நவீன முறைக் கல்வி பிரதானமானதாகும்.

வடமாகாணத்தில் 60 வீதத்துக்கும் அதிகமான பகுதி கடலை எல்லையாகக் கொண்டுள்ளது. கடற்றொழில் சார் துறைகளுக்கு மிகவும் சாதகமான நிலைமை உள்ளது.

கடற்றொழில் துறையை வளர்த்தெடுப்பதுக்கு எந்தளவுக்கு இந்த அரசு உதவுகிறது என்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கிறது. வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம் இந்தத் துறைக்கு ஏதும் பயனுடையதாக இருந்ததாகத் தெரியவில்லை.

''கடற்றொழிலாளர்கள் அதிக அளவில் மீன் பிடிப்பதுக்காக நவீன செயன்முறைகளை அறிமுகப்படுத்துவேன்.

''சமுத்திரத்திலிருந்து இன்னும் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதுக்காக பல்கலைக் கழகங்கள், ஏனைய ஆய்வு நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பேன்.

"கடல் வள ஆய்வுக்கான நவீன தொடர்பாடல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவேன்''

மஹிந்த சிந்தனைத் தொலை நோக்கில் தேசத்தின் சுபீட்சத்துக்கு கடல் வளம் என்ற தலைப்பில் இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி பதவியைத் தக்க வைத்துக் கொள்வதுக்காக மஹிந்தரால் முன்மொழியப்பட்ட இந்தத் தொலைநோக்கு ஏட்டுச் சுரங்காய் போலப் பயனின்றியே உள்ளது.



மஹிந்தரின் சிந்தனைக்கு வடக்கு கிழக்கில் முக்கியமாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் கிடப்பில் உள்ளன.

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞானத்துறையிலுள்ள குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

மீன்பிடியியல் கற்கை நெறியை துறையாகத் தரமுயர்த்த வேண்டும் என கடந்த 2007 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவுக்கே வேண்டுகோள் விடப்பட்டிருந்தது.

கடந்த 2009 இல் அந்த கற்கை நெறி தனியே ஒரு துறையாகத் தரமுயர்த்துவதாக பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது.

எனினும் இதுவரை அந்தத் துறைக்கான ஆளணி வளம் நிரப்பப்படாமல் உள்ளது. துறைத் தலைவர் விரிவுரையாளர் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஒரேயொரு விரிவுரையாளர் மூலமே அந்தக் கற்கைநெறி தொடரப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மீன் பிடியியல் விஞ்ஞானத் துறையை மாணவர்கள் தெரிவு செய்வதைப் புறக்கணித்து வருகின்றனர். இது எமது உள்ளூர் உற்பத்தித் துறையான கடல் வள அபிவிருத்திக்குப் பாதமாகவே அமையும்.

எனவே தனித்துறையாக மீன்பிடியியல் விஞ்ஞானத்துறையை அங்கீகரித்த பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அந்தத் துறைக்குத் தேவையான ஆளணி வளத்தையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

மீன்பிடியியல் விஞ்ஞானத்துறையை எமது பகுதி மாணவர்கள் தெரிவு செய்வதற்கு ஏற்றதாக அந்தத் துறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அத்துடன் கடல் வள ஆய்வு நிலையம் கடற்கரையோரமாக நிறுவப்படுவதும் அவசியமானதாகும்.

இவ்வாறான வசதி வாய்ப்புக்களை தேடியறிந்து பூர்த்தி செய்தால் எமது பகுதி பொருளாதாரத்தில் தன்னிறைவு காண முடியும். அபிவிருத்திக்கு, பொருளாதார தன்னிறைவுக்கு ஏற்ற அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த மஹிந்த அரசு முன் வர வேண்டும். ✱

# வியாபாரத்துறைகளில் கிரகங்களின் ஆதிக்கம்

பிரம்மஸ்ரீ சண்முகதியானேஸ்வரசர்மா
ஜோதிடர், நுணாவில்மத்தி,
சாவகச்சேரி

அன்றைய காலம் முதல், எம்மவர் களில் சிலர், தொழிற்துறைகள் பல இருப்பினும், குறித்த ஒரு தொழில் தான் ஆர்வம் கொண்டிருப்பர். அந்த இலக் கின் காரணமாக, நல்ல தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்களும், இருக்கவே செய்கிறார்கள். உண்மையிலேயே ஒருவருடைய ஜாதகத்திலுள்ள கிரக அமைப்புத் தான், அவருடைய வியாபாரத் துறை சார்ந்த தொழில் சிறப்பில் ஆதிக்கம் செலுத்துகிறது.

சனி, செவ்வாய், சந்திரன் விவசாயம், பண்ணை போன்ற தொழில்துறைகளுடன், வீடு - மனை வியாபாரத்துறையுடன் சம்பந்தப்படும் கிரகச் சேர்க்கையாகும். அதே போன்று சனி, செவ்வாய் இரும்பு சம்பந்தமான வியாபாரம் மற்றும் தொழில்களுக்கான கிரகச் சேர்க்கையாகும். அதேவேளை சுக்கிரன், புதன், செவ்வாய், துணி புடைவை, அலங்காரப் பொருள்களுக் குரிய வியாபாரத்துக்கான கிரகச் சேர்க்கையாகும்.

அதே போன்று புதன் செவ்வாய், சனி அச்சகத்துறை சார்ந்த வியாபாரத்திற்கான கிரகச் சேர்க்கையாகும். புதன் - செவ்வாய் - சனி பங்கு வியாபார கிரகச் சேர்க்கையாகும். அதே போன்று சுக்கிரன், புதன், செவ்வாய், போக்குவரத்துத்துறை, வாகனங்களில் சிறப்புக்களைத் தரக்கூடிய கிரகச் சேர்க்கையாகும்.

அதேவேளை சுக்கிரன், குரு, செவ்வாய் தங்க நகைகள், வைர வியா பாரம் போன்ற தொழில் சிறப்புச் கிரகச் சேர்க்கையாகும்.

மேற்படி கிரகங்களில் சேர்க்கைப்படி 05 ஆம் வீடு அல்லது 10 ஆம் வீட்டோடு தொடர்புபட்டிருக்க வேண்டும். அது சேர்க்கையாகவோ, அல்லது அதிபதிகளில் வீடாகவோ, அல்லது பார்வை பலமாகவோ இருக்க வேண்டும்.

01 ஆம், 04 ஆம், 07 ஆம் வீடுகளின் கேந்திராதிபதிகளும், 01 ஆம், 05 ஆம், 09 ஆம் வீடுகளின் கோணாதிபதிகளும் சேர்க்கை பெற்று 10 ஆம் வீட்டில் இருந்தால் ஜாதகரின் வியாபாரத் தொழிலும், தொழில் விருத்தியும் சிறப்புற அமையும். முன்னைய பிறப்பில் செய்த புண்ணியங்களைக் குறிக்கும் 05 ஆவது அதிபதி பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி என்று அழைக்கப்படுகிறார். ஒருவரால் மேற்கொள்ளப்படும் எந்தத் தொழிலும் அவரது பூர்வ புண்ணியத்தைத் தழுவியே அமையும். அதனால்தான் வியாபாரத்துறையிலும் 05 ஆம் பாவமும் முக்கியத்துவம் பெறுகிறது.

கேந்திராதிபதிகளின் வீட்டதிபதிகளும், கோணாதிபதிகளின் வீட்டதிபதிகளும், கர்மஸ்தானம் என்று கூறப்படும் 10 ஆம் பாவத்தில் சேர்ந்திருப்பது அவரது தொழில் உயர் நிலையைக் கொடுக்கிறது.

10 ஆவது பாவத்தின் அதிபதி கேந்திரம், திரிகோணம், தனஸ்தானம் (2ஆம் பாவம்) அல்லது இலாப ஸ்தானத்தில் (11 ஆவது பாவம்) இருந்தால் அந்த ஜாதகர் அவரது வியாபாரத்தில் உயர் நிலையை அடைவார். சுபக் கிரகங்களின் பார்வை 10 ஆவது பாவத்திற்கு இருப்பதும் சிறப்பு.

06 ஆவது, 08 ஆவது, 12 ஆவது வீடுகளின் அதிபதிகள் சுபக்கிரகங்களாக இருந்து, 10 ஆவது வீட்டில் இருந்தாலும், ஜாதகர் எந்தவிதமான உயர்நிலையும் சுய தொழிலில் அடையமாட்டார். அதேவேளை, 10 வது வீட்டின் அதிபதி 06 ஆம், 08 ஆம், 12 ஆம் வீட்டல் இருந்தாலும் ஒரு சுபக்கிரகத்தின் பார்வையைப் பெற்றிருக்காவிட்டாலும், சுய தொழிலினால் சிறப்புக்கள் சாதாரணமாகவே அமையும்.

சுக்கிரன், புதன், குரு போன்ற சுபக்கிரகங்கள் கேந்திர வீடுகளில் இருக்க, செவ்வாய், 10 வது கேந்திர வீட்டில் இருக்கும் அமைப்பில் ஒரு ஜாதகர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருப்பினும் கூட, சமூகத்தில் உயர் நிலையைப் பெறுவார். 10ஆவது வீட்டின் அதிபதி கேந்திரஸ்தானம், கோணஸ்தானம், அல்லது தன ஸ்தானத்தில் இருந்தால், அந்த ஜாதகர் தொழிலில் புகழையும், மதிப்பையும் அடைவார். லக்கினத்துக்கு ராஜயோகத்தைக் [illegible] 10 ஆவது வீட்டில் இருந்தாலும் ஜாதகரின் சுய தொழில், அல்லது வியாபாரம் உயர்ந்த நிலையை அடையும்.

வியாபாரத் தொழிலுக்கு 02 ஆம், 07ஆம், 10 ஆம் வீடுகள் சிறப்புற அமைவது அவசியம். இந்த வீடுகளில் ஜாதகரின் வாழ்க்கையில் உள்ள சிறப்பான அதிஷ்டங்களையும், இலாப நட்டங்களையும், அவர் சம்பாதிக்கும் பணத்தையும், செல்வத்தையும், தன ஸ்தானம் என்கின்ற 02 ஆவது பாவம் குறித்து நிற்கிறது. 07 ஆவது வீடு அவர் பங்கு வியாபாரத்தில் ஈடுபடுபவராக இருந்தால், பங்காளருடைய அதிஷ்ட்டம் போன்ற வற்றையும் குறிப்பிடும் பாவமாகவும், மக்களுடன் ஜாதகருக்கு உள்ள தொடர்பையும், குறித்துக் காட்டுகிறது. 10 ஆவது பாவம் ஜாதகர் எந்த மாதிரியான வியாபாரத் துறையில் ஈடுபட்டால் சிறப்பு என்னும் நிலையைக் குறித்துக் காட்டுகிறது.

ஒருவர் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கு அவருடைய ஜாதகத்திலுள்ள புதன், சூரியன், சனி, குரு போன்ற கிரகங்கள் பலமாக அமைவது உயர்வைத் தரும் என்று கூறலாம். முதலீடு செய்கின்ற அனைத்துத் தொழிலிற்கும் முதன்மையானவர் புத பகவானே! இவருடைய பலமில்லாமல் சொந்த முதலீட்டுடன் செய்யும் தொழில்கள் சிறப்படைவது குறைவே. வியாபார நுணுக்கங்கள், நெளிவுகள், சுழிவுகள் போன்ற அனைத்து விடயங்களையும், மதி நுட்பத்துடன் சிந்திப்பதற்கு இவரே காரணகர்த்தா.

அடுத்து சூரிய பகவான், இவர் அரசுத் தொடர்புடையவர். அரசு வழியால் உதவி பெற்று தொழில் நடத்துபவருக்கு இவருடைய அனுசரணை அவசியம். உழைப்பிற்குரிய சக்தியைக் தருபவரும் இவர் தான் சூரிய பகவான் 01ஆம்,05ஆம், 09ஆம், 10 ஆம் வீடுகளில் பலமான நிலையில் இருப் பதும், சொந்தமாக தொழில் புரிபவருக்குச் சிறப்பே!


அடுத்ததாக சனி பகவான் தொழிலாளர்களைக் குறிக்கும் கிரகமாகும். பெரிய தொழிற்சாலைகளை நடத்துபவர்களுக்கு இவரது அனுக்கிரகம் அவசியமானது. தொழிலாளர்களால் ஏற்படும் பிரச்சினைகளால் கூட சில நிறுவனங்கள் சரிவுகளைச் சந்தித்துள்ளன. அங்கும் முதலீடு செய்யும் ஜாதகருக்கு சனி பிடித்தது போலவே ஆகிவிடும்.

அடுத்ததாக, முதலீட்டுக்கு அதிபனாக விளங்குபவன் குரு பகவானே! குரு பகவானின் துணையின்றி எந்தவொரு முதலீட்டிலும் சிறப்புக்களை எட்ட முடியாது. நேர்மை, நாணயம், செல்வாக்கு, வாக்குறுதி, சொந்தமாக தொழில் புரிபவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். இந்தச் சிறப்புக்களுக்கு சொந்தக்காரனும் குருபகவானே! குரு பலம்பெற்ற நிலையில் 01ஆம், 04ஆம் 09 ஆம், 11 ஆம் வீடுகளில் இருப்பது சொந்தத் தொழிலுக்குச் சிறப்பைத் தரும்.

10 ஆம் வீடு, 10 ஆம் அதிபதி, 10 இல் இருக்கும் கிரகம் பலம்பெறுவதும் அவசி யமாகிறது. சொந்தத் தொழில் புரிபவர்களுக்கு சந்திரன், சூரியன், புதன், சனி, குரு ஆகிய கிரகங்கள் லக்கினம், 05 ஆம் 09 ஆம் வீடுகளுக்கு தொடர்பு இருக்குமானால் சொந்தமாக தொழில் தொடங்கலாம். 02 ஆம், 07ஆம், 11 ஆம் வீடுகள் தொழில் துறையுடன் தொடர்புடைய ஸ்தானங்களாகும். சிறந்த முதலீட்டாளருக்கான கிரகங்களின் சேர்க்கைகள், 01 ஆம் 02 ஆம் அதிபதி 11 இல் இருப்பது, 11 ஆம் வீட்டதிபன் 02 இல் இருப்பது, அல்லது 02 ஆம் 11 ஆம் வீடுகள் அல்லது அதன் அதிபதிகளுக்குள்ள தொடர்பு, 10 ஆம் அதிபதி 110 அதிபதிக்குள்ள தொடர்பு, 11 ஆம் அதிபதி 07 ஆம் அதிபதிக்குள்ள தொடர்பு 07 ஆம் அதிபதி 02 ஆம் அதி பதிக்குள்ள தொடர்பு, 10 ஆம் அதிபதி 07 ஆம் அதிபதிக்குள்ள தொடர்பு, அல்லது 02 ஆம் அதிபதிக்குள்ள தொடர்பு, வியாபாரத் துறையில் உயர்வைத் தரும். அதேவேளையில் சூரியன், புதன், சனி, குரு சந்திரன் 02 ஆம், 07 ஆம், 10ஆம், 11 ஆம் வீட்டிற்கு ஏதாவது ஒன்றிற் குள்ள தொடர்பும் சொந்தத் தொழிலில் சிறப்பைத் தரும்.

05 கிரகங்கள் 07 ஆவது வீட்டிலிருந்து 12 ஆம் வீடு வரையிலும், அல்லது 10 ஆம் வீட்டிலிருந்து 03 ஆம் வீடு வரையும் இருப்பது, புதன் ஆட்சி உச்சம் பெற்று 10 ஆம் வீட்டில் அல்லது 10 ஆம் அதிபதி யுடன் தொடர்பு படுவதும் சிறந்த தொழிலதி பராகும் சிறப்பைத் தரும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் நல்லதம்பி

# காயும் கனியும்

முற்காலத்தில் வனஞ்சென்று தவஞ் செய்யும் முனிவர்கள் அங்கு காணப்படும் காயும், கனியும் கிழங்கும் அருந்தியே வாழ்ந்தனர். நாவிற்கினிய நறுங்கனிகளும், காய்களும் தமிழ்நாட்டு மலைகளில் நிறைந்து காணப்பெற்றன. வனவாசஞ் செய்யச் சென்ற இராம இலக்குமணரும், சீதையும் அங்குள்ள காய்கனி, கிழங்குகள் அருந்தியே பதினான்கு ஆண்டு காலங் கழித்ததாக இராமாயணம் கூறுகின்றமையும் நாம் அறிந்ததே.

முத்தமிழ் முனிவரான அகத்தியர் கடும்தவம் புரிந்தது பொதிய மலையிலே. அதனாலேயே "பொருப்பிலே நம் தமிழ்மொழி பிறந்தது" என்று புகழ் பெறுகின்றது. இந்த மலையிலே வாழ்ந்த ஒரு முனிவர் தவம் முடிவுற்ற நிலையில், ஒரு நெல்லிக்கனியைப் பறித்து, ஒரு தேக்கம் இலையில் பொதிந்து, அங்குள்ள ஓர் ஆற்றங் கரையில் வைத்துவிட்டு நீராடச் சென்றார்.

அப்பொழுது, அந்த வழியால் தன் காதலனுடன் வந்த ஒரு பேதைப் பெண், அந்தப் பொதியைக் காலால் மிதித்துச் சிதைத்துவிட்டாள். அதனைக் கண்ட முனிவர் சினங்கொண்டு, பன்னிரண்டாண்டு நீ கடும் பசியால் நலிந்துவருந்துவாய் என்று சபித்துவிட்டார்.

இந்தப் பெண்ணே பிற்காலத்தில் அமுதசுரபியிலிருந்து மணிமேகலை வழங்கிய அன்னத்தை உண்டு பசி தீர்த்தாள் என அறிய முடிகிறது. இந்த நெல்லிக்கனி, பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறையே கிடைக்கும். ஆதலால் சாவா மருந்தான அமுதம் போன்ற சக்தி உடையது. இதனை அறிந்த அதியமான் என்ற சிற்றரசன் அதனை அருந்தி நெடுங்காலம் வாழ ஆசைப் பட்டான். மரங்கள் அடர்ந்த மலைப்பகுதியில் அந்த நெல்லிமரம் இருப்பதையும் காவலர் மூலம் அறிந்தான். அந்த மரத்தைச் சென்றடைவதற்கான பாதையைச் செப்பனிட்டுக் காலம் வரும் வரை காத்திருந்தான். தக்கதருணத்தில் காவலரை அனுப்பி நெல்லிக் கனியைப் பெற்றான். அதனைக் கையில் வைத்து மனமகிழ்ந்து இருக்கும் போது, முத்தமிழ் மூதாட்டி ஔவையார் செந்தமிழ்க் கவிபாடி வழக்கம் போல் அதியமான் முன் சென்றார்.




ஔவையாரின் கவியின் சுவையைச் செவியாரப் பருகிய அதியமான், மதுவுண்ட வண்டுபோல் மகிழ்ந்தான். ஔவையாருக்கு பரிசு கொடுக்க எண்ணினான். அமுதமான அந்த நெல்லிக்கனியை அகமகிழ்ந்து அளித்தான். அற்புதமான அதன் சுவையை அருந்தியுணர்ந்த ஔவையார் ஒரு கணம் திகைத்துப் போனார்.

அந்த நேரம்,

*"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்து எனினும் வேண்டற்பாற் றன்று"* [குறள் 82]

என்ற வள்ளுவர் வழிநின்ற அதியமான், ஔவையார் சுவைத்து உண்பதைக் கண்டு மகிழ்ந்து, அந்த நெல்லிக்கனியின் அருமை பெருமைகளைக் கூறிக்கொண்டிருந்தான் ஔவையாருக்கு.

தான் அருந்திப் பலகாலம் இன்புற்று வாழக்கருதாது, பல நாள் முயன்றுபெற்ற அந்தக் கனியைப் பாடிவந்த கிழவிக்குப் பரிசாக வழங்கிய வள்ளலின் அருங்குணத்தை வாயார வாழ்த்தினார் ஔவையார்.

*"நீலமணி மிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்*
*பெருமலை விடரகத்துத் தருமிசைக் கொண்ட*
*சிறையிலை நெல்லித் தீங்கனி குறியாது*
*ஆதல் நின்னகத் தடக்கிச்*
*சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!"*

பாற்கடல் அமுதினைப் பிறருக்களித்து, நஞ்சுண்டு கறுத்த செஞ்சடைக் கடவுள் போல, நீயும் என்றென்றும் வாழ்வாயாக! என்ற ஔவையாரின் வாழ்த்துரையால், நெல்லிக்கனியின் வரலாறும், அதியமானின் வள்ளண்மையும் ஒருங்கே கண்டுகொள்ளக் கூடியதாக [illegible] இன்புறத்தக்கது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இறப்பை நோக்கி வாழ்தல்......!

■ கலா






சித்திரவதைகளைத் தொடர்ந்தான் மனோகரன். அவனது உடன் பிறப்புக்களின் ஆக்கிரமிப்புகளும் இன்னும் இன்னும் அதிகமாகின. வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்ட காலகட்டத்தில் வெறுமனே சோம்பேறியாக வாழும் மனோகரனோடு முள் மேல் வாழ்வது போல் வாழ்ந்தாள் மாலா.

அந்த உறவுகளோ சோகத்தில் மூழ்கியிருந்தன. இதயத்து வேதனைகளைக் கண்களில் சுமந்தபடி பரபரப்பாகப் பலரும் அங்குமிங்குமாக அவளின் துயர முடிவை வேதனையோடு எடுத்தியம்பியபடி ஏன்? ஏன்? இப்படி? என்ற கேள்விகள் அன்பு மனங்களில் நெருடலாய் நின்றன. மாலாவின் மூன்று பிள்ளைகளும் மயங்கிக் கிடக்கும் அவளது உடலைச் சுற்றி அழுதபடி இருக்கின்றனர். வாழ வேண்டிய வயதில் வாழாது தன் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணியவள் மயக்கம் தொடரக் கட்டிலில் கிடக்கிறாள். அவள் கிடக்கும் பரிதாபக் காட்சி பார்ப்பவர்களை "ஓ.." எனக் கதற வைக்கிறது. மாலாவோடு மிக நெருக்கமாகப் பழகியவள் நான். இன்றோடு இவள் கதை முடிந்துவிடுமோ; இல்லை அவள் எவ்வாறெனினும் மீண்டெழ வேண்டும். இவளது அழகிய முகத்தை இனி எங்குமே காணமுடியாது போய்விடக் கூடாது.

"வறுமை தான் என் சொத்து" என அடிக்கடி மாலா சொல்வது என் காதுகளில் ரீங்காரமிடுகிறது. ஐந்து ஆண் சகோதரர்களுடன் ஒரு பெண் பிள்ளையாக மாலா பிறந்தவள். தந்தையின் முகமே இவளுக்குத் தெரியாது. சிறுவயதில் தந்தை இறந்து விட்டார். வறுமையில் இருந்தாலும் கல்வியில் கெட்டிக்காரி. கல்வி ஒன்றே அவளின் இலக்காக இருந்தது. அவளின் கல்வியறிவும் அழகும் உயர்ந்த நிலையில் அவளை வாழ வைத்திருக்கும். விதி யாரைத்தான் விட்டு வைத்தது. இளமைத் துடிப்போடு பதினெட்டு வயதில் காதல் வலையில் சிக்கி, மனோகரனைக் கரம் பிடித்தாள். வாழ்வின் சுகந்தமும், வனப்புக்களும் வானமளவில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு கரம்பிடித்தவனை நம்பிக் குடும்ப வாழ்வில் பிரவேசித்தாள். எதிர்பார்த்தது கிடைத்ததா? சந்தோசமாக வாழ்ந்தாளா? வசந்தம் அவளின் வாசல் கதவைத் தட்டவேயில்லை. கஷ்டமும், வேதனையும், அடிஉதை, சித்திரவதைகளுமே குடும்ப வாழ்வில் தாராளமாகக் கிடைத்தன. அவளுக்கு எதிர்மாறான புருஷனும், புதிய குடும்பமும் அவளை ஒரு சுமைதாங்கியாகச் சமுதாயத்தில் நிறுத்தியது. வறுமையைத் தாங்கினாள். துன்பத்தை சுமந்தாள். கட்டியவன் மட்டுமா கொடுமை? அவனது உறவுகளும் தொடர்யுத்தம் நடத்தின.

அழகிய மூன்று குழந்தைகளுக்குத் தாயானாள். தன் வாழ்வின் வேதனை பிள்ளைகளைப் பாதிக்கக் கூடாதென்பதற்காக, பிள்ளைகளின் வாழ்வுக்காகப் பெரிதும் கஷ்டப்பட்டாள். தையற்கலையைத் தொடர்ந்து பிள்ளைகளின் தேவைகளை சந்தித்தாள். பிள்ளைகள் கல்வியில் முன்னேறி பல்கலைக் கழகம் வரை சென்றனர். இத்தனைக்கும் இரு துருவங்களாக அவளது வாழ்க்கை ஓடியது. அவள் எதையும் அனுபவித்ததில்லை. அவமானங்களும், பழிச்சொற்களும், மனோகரனாலும் உறவுகளாலும் அவளுக்கு நிறைவாகக் கிடைத்தன. ஒரு சுமைதாங்கியாக ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் இறுதி எல்லை வரை ஓடினாள். வெற்றியும் கண்டாள்.

இவ்வளவு வேதனைகளையும் சந்தித்தவளை இன்னும் புரியாத நிலையிலேயே அடிஉதை சித்திரவதைகளைத் தொடர்ந்தான் மனோகரன். அவனது உடன் பிறப்புக்களின் ஆக்கிரமிப்புகளும் இன்னும் இன்னும் அதிகமாகின. வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்ட காலகட்டத்தில் வெறுமனே சோம்பேறியாக வாழும் மனோகரனோடு முள் மேல் வாழ்வது போல் வாழ்ந்தாள் மாலா. ஓர் அழகிய பெண் கணவனாலும் கணவனின் உறவுகளாலும் சித்திரவதைப்படுகிறாள் என்பதைப் பரிதாபமாகப் பார்த்து அவளைத் தீண்ட நினைத்த காமுகர்களும் உண்டு. அவளை வாழ வைக்க நினைத்த நல்லவர்களும் இருந்தனர். ஆனால் தன் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்காகக் கட்டுப்பாட்டுடனும் கண்ணீருடனும் வாழ்ந்தாள்.

கற்றவர் சமுதாயத்தில் பிள்ளைகளை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அவளது உளவாஞ்சையும், அவளது அழகும் மனோகரனுக்கு சந்தேகத்தை தோற்றுவித்து பெரிய விருட்சமாகி வீட்டை விட்டுத் துரத்தும் அளவுக்கு வந்தது. இனியும் இந்தச் சீரழிவுகள் வேண்டாம் என வீட்டை விட்டு வெளியேறி வாடகை வீட்டில் குடியேறினாள். தையல் இயந்திரத்துடன் வெளியேறியவள் தனது தொழிலுடன் பொழுதைப் போக்கினாள். (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 19

# ஒரே நாடு ஒரே குரல்

ரம்யன்

நிலத்தினாலும், நீரினாலும் ஒரு நாடு பிரிக்கப்படாமல், மற்றும் பிரிக்கப்பட்டிருந்தாலும் தனக்குட்பட்ட பிரதேச ஆள்புலத்தைக் கொண்ட இறைமையுள்ள நாடாக இருக்கும் போது அதனை ஒரே நாடு என்று சொல்வது மிகப் பொருத்தமான சொற்பதமாக இருக்கலாம். ஆனால் அந்த நாட்டில் பல்வேறு இனங்கள், கலாசாரங்கள், மொழிகள், சமயங்கள் நிலவுகின்ற போது, பல்வேறு அரசியல் சிந்தனைகள் நிலவும் போது அந்த நாட்டின் குரல் எவ்வாறு ஒரே குரலாக இருக்க முடியும்?

ஒரு வேளை அந்த நாட்டின் ஆட்சியாளர்கள், நீதிநேர்மை, தார்மிகக் கொள்கைகள், எல்லா இனங்களையும், மொழியினரையும், சமயத்தவர்களையும் ஒரே விதமாகப் பார்த்து, ஒரேவித சட்டத் திட்டங்களின் கீழ் ஆட்சி நடத்துவார்களானால், அந்த நாட்டின் அரசமைப்பில் எல்லா மக்களும், இனம், மொழி, கலாசாரம், சமயங்களும் ஒரே விதமாகப் பார்க்கப்படுமானால் அந்த நாட்டின் குரல் -(மக்களின் குரல்) ஒரே குரலாக அமையலாம். ஆனால் ஜனநாயகம் பேசப்படும் ஒரு நாட்டில் பல கட்சிகள் செயற்படும் ஒரு நாட்டில் பல்வேறு குரல்களுக்கும், சிந்தனைகளுக்கும், எதிரும் புதிருமான கருத்துக்களுக்கும் இடம் இருக்க வேண்டும். இல்லையெனில் அங்கு ஜனநாயகம் செயல்பட முடியாது. அங்குள்ள ஆட்சி சர்வாதிகார ஆட்சியாக- ஒரு கட்சி ஆட்சியாக மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்காத எதேச்சதிகார ஆட்சியாகவே இருக்க முடியும்.

இந்த நாட்டில் மக்கள் யாவரும் ஒரே குரலில் பேச வேண்டும் என்று அரசாங்கம் கருதுமானால், அதற்கு ஏற்றாற் போல் அதன் செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புவார்கள். ஆனால் என்ன நடக்கிறது?

நாட்டின் அரசாங்கம் பெரும்பான்மை இனமக்களால் தெரிவு செய்யப்பட்டது. அதன் ஜனாதிபதி, பிரதமர், ஏனைய முக்கிய அமைச்சர்கள் யாவரும் அந்தப் பெரும்பான்மை இனத்தலைவர்களைக் கொண்டவர்களாகவே இருக் கின்றனர். அதனால் நாட்டின் முக்கிய துறைகள் யாவும் அந்த இனத்தவர்களா லேயே நிரப்பப்பட்டும், அவர்களின் தலைமைப் பொறுப்புக்கள் அந்த இனத்தவர்களேயே நியமிக்கப்பட்டும் இருக்கும் போது, ஏனைய இனத்தவர்கள் ஒரே குரலில் எவ்வாறு பேச முன்வரு வார்கள்.

உண்மையில் இந்த நாட்டின் அரசமைப்பிலேயே இன மத பாகுபாடுகள் காணப்படுகின்றன. பௌத்த மதத்துக்கு தரப்பட்டுள்ள முதல் முக்கியத்துவம் ஏனைய மதங்களைப் பின்தள்ளி விட்டுள்ளது. இந்த நிலையில் ஏனைய மதத்தவர்களை ஒரே குரலில் பேசும்படி எப்படிக் கோரலாம்.

### பன்மைத் தன்மை

உண்மையில் ஜனநாயகத்தின் அழகு அதன் பன்மைத் தன்மையிலேயே வெளிப்படுகின்றது.

அண்மையிலுள்ள இந்தியாவை எடுத்துக் கொள்வோம். பல இனங்கள் பல கலாசாரங்கள், பல மொழிகள், பல மதங்கள், பல்வேறு அரசியல் அமைப்புக்கள். இவைகள் எல்லாவற்றுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அதன் அரசமைப்பு விளங்குகின்றது. மொழிகள் கலாசாரங்களைப் பேணிக் கொள்ளும் வகையில் அதன் இணைப்பாட்சி முறை விளங்கின்றது. மொழிவாரியாக மாநில ஆட்சி முறையையும் பார்க்கின்றோம். இவ்வளவுக்கும் இடையில் மொழிவாரி நிலங்களை மேலும் பிரித்து வழங்கும் படியாக கோரிக்கைகள் தலை தூக்கியிருக்கின்றன.

அந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட அமைச்சரவையின் தலைவராக - பிரதமராக எந்த ஒரு சிறுபான்மை இனத்தவரும் வருவதற்கு வாய்ப்பு உண்டு. அவ்வாறு வந்தவர்கள் தான் நரசிம்மராவ், தேவகவுடா ஏன் இப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் ஆகியவர்கள். அவ்வாறே அந்த நாட்டின் ஜனாதிபதி பதவிக்கும் சிறுபான்மையோர் எவரும் தெரிவு செய்யப்படலாம். இங்கே என்னவென்றால் ஒரு பிரதேசத்தில் பாரம்பரியமாக சிறுபான்மை இனமக்கள் தமது தனித்துவத்தைப் பேணிவந்திருக்கும் நிலையில் அந்த தனித்துவத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியவர்களே அதனை அழித்தொழிக்க வழிகளைக்காண முயல்கிறார்கள். நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதை உணர முடிகிறது.

தனிச்சிங்களம் என்ற சட்டம் கண்மூடித்தனமாகக் கொண்டு வரப்பட்ட போது, அதனால் எழுந்த விளைவுகளும் நேற்று நடந்தவை போல் தென்படுகின்றன. அது தவறான சட்டம், நாட்டின் நலனுக்கு உதவாத சட்டம், மக்கள் மத்தியில் இணக்கப்பாட்டினை உருவாக்க உதவாத சட்டம் என்று உணர்ந்து கொள்ளப்படுவதற்கு முன், வார்த்தைகளால் சொல்ல முடியாத எத்தனையோ விதமான கொடுமைகள் நடந்து முடிந்தன.

இப்பொழுதும் மொழிச் சட்டம் ஒன்று உயிருடன் இருக்கிறது. ஆனால் அதற்கு எந்த ஒரு அரச திணைக்களமும் மதிப்பளிப்பதில்லை. ஓரிரு அமைச்சர்கள் இப்பொழுது அது பற்றிக் குரல் கொடுக்கிறார்கள். மொழிகளின் செயல் பாட்டுக்கென ஓர் அமைச்சரும் இருக்கிறார். அவரும் தம்மாலானதை செய்யப் பார்க்கிறார். அதிகாரிகள் மனம் வைக்கிறார்கள் இல்லை.

பொதுமக்களுக்கோ - அரச பணியாளர்களுக்கோ அனுப்பப்படுகின்ற கடிதங்கள், பணிப்புரைகள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. சிங்களம் தெரியாத அரச பணியாளர்கள், சிங்களம் தெரிந்த வேறு பணியாளர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம், சிங்களம் தெரியாத கிராமத்து பொதுமகன் என்ன செய்வான்?

மும்மொழிகளிலும் அரச கருமம் நடைபெறுவதற்கு சட்டமிருந்தும், அதை நடைமுறை படுத்த வேண்டியவர்கள் யார்? இவைகளைச் செய்யாமல் நாட்டில் மீள் இணக்கப்பாட்டை எங்ஙனம் எதிர்பார்க்கலாம்? மக்கள் எங்ஙனம் ஒரே குரலில் பேசுவார்கள்?

அண்மையில் தமிழ்ப்பகுதியிலுள்ள அரச செயலகம் ஒன்றுக்கு முழுக்கவும் சிங்கள மொழியில், தெற்கு அரச திணைக்களம் ஒன்றிலிருந்து வந்த கடிதங்களை அப்பகுதியின் தலைவர் மொழிக்கம் தேவை என்று கூறி திருப்பி அனுப்பியதாக செய்திகளைப் படித்தோம். அதேவித தைரியமும் துணிவும் ஏனைய பகுதி அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்தத் திணைக்களங்களில் தமிழ் மொழி பெயர்ப்புக்கு அல்லது தமிழில் பணிபுரிவதற்கு பணியாளர்களை நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதேசமயம் சில திணைக்களங்களின் தலைவர்களே தமிழ் மக்களுக்கும், தமிழ்ப்பகுதி திணைக்களப் பிரிவுகளுக்கும், தாம் அனுப்பும் கடிதங்கள், அறிக்கைகளை சிங்களத்திலேயே அனுப்புவதில் அக்கறை கொண்டவர்களாய் இருக்கிறார்கள். அப்படிச் செய்வதால் தமிழர்களை சிங்களம் படிக்கும் படியான நிலைமையைத் தோற்றுவிப்பதும், சிங்களம் பேசுபவர்களே இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் என்பதை உணர வைப்பதும் அவர்களின் நினைப்பாக இருக்கலாம்.

அண்மையில் அமைச்சர் வீரவன்ச தமது அரச நிறுவனம் ஒன்றினால் இரு தமிழ்ப் பணியாளர்களுக்கு சிங்களத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததை அறிந்து, அதனை நிவர்த்தி செய்ததாக கூறியிருந்தார். தேசிய ஐக்கியத்துக்கு இவ்வாறான செயற்பாடுகள் அவசியம் என்றும், அரச பணியாளர்கள் மும் மொழி களிலும் பணியாற்ற முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். பேரினவாத மனப்பான்மை கொண்டவராக கருதப்படும் அமைச்சர் இவ்வாறு நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

தேசிய நல்லிணக்கத்துக்கான ஒரு படிக்கல்லாக இதனை மதிக்கலாம். ஆனால் அதற்கு இன்னமும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

தேசிய நல்லிணக்கம் ஒன்று ஏற்படுவதை முற்றிலும் விரும்பாத சக்திகள் நாட்டின் பல பகுதிகளிலும் செயற்பட்டு வருகின்றன. இவைகளைக் கண்டுபிடித்து வாய்ப்பூட்டு போடுவது அரசின் கடமையல்லவா?

நாட்டு மக்களை ஒரே குரலில் பேசும்படி கேட்பதை விட அதற்கானசூழலை உருவாக்க முயல்வதே சாலச் சிறந்த நடவடிக்கையாக இருக்கும். ✸

---

கறுப்பி

# மக்கள் பிரச்சினை கருவாக்கப்படுமா?

**இன்றைய இளைய தலைமுறையினர் கைத்தொலைபேசியின் அதீத பாவனையால் ஏற்படும் விளைவுகள், வன்புணர்வுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், போரால் ஏற்பட்ட வடுக்கள் ஆகியவற்றையே சிறுகதைகளாகவும், கவிதை, குறும்பட திரைப்படங்களாகவும் வெளியிட்டு வருகின்றனர்.**

சமூகத்துடன் தொடர்புடைய உணர்வின் தாக்கங்கள், எண்ணக் கருக்கள், துயரங்கள் ஆகியவற்றை, கதை உருவில் எழுதி வெளியிடுவது இன்று சாதாரணமாகி விட்டது.

இவை யதார்த்தமான உணர்வுகளின் வெளிப்பாடுகளாக இருக்கும் போதும், எம்மவர்களுக்கு மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும். காரணம் இவை யாவும் தமிழ் மொழிகளில் மட்டும்தான் வெளிவருகின்றன.

சமூகத்தின் யதார்த்த வடிவங்கள் தமிழ் மொழியில் எழுத்தாக்கப்பட்டுள்ள போதும் இவை வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு சமூகத்தின் ஏக்கங்களையும், தாக்கங்களையும், பிரதிபலிப்புக்களையும் ஏனையவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அமைவது அவசியம்.

இன்று பல சிறுகதை நூல்கள், கவிதைகள் வெளியிடப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கம் தமிழ்ப் பற்றாளர்கள், இலக்கியவாதிகள், பண்டிதர்கள்வரை இவ்வாறான நூல்களை வெளியிட்டு வருகின்றனர்.

சில தமிழ்ப் பண்டிதர்கள் அருகிப் போகும் சிறுகதைகள், சிறுவர் இலக்கியங்களை மீள் பிரசுரம் செய்து வருவதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

சிறுகதை எழுத்தாளர் புதுமைப்பித்தன் தொடக்கம் இன்றுவரை பல சிறுகதைகளை தமிழ் எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். பல ஆயிரம் கதைகளை எழுதி வெளியிட்டும் உள்ளனர். இவற்றில் எத்தனை கதைகள் வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது கேள்விக்குறியே.

ஈழத்தில் பல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றியுள்ள போதும், அன்றிலிருந்து இன்றுவரை ஒரு சில எழுத்தாளர்களே நிலைத்துள்ளனர். இவர்கள் தமது எழுத்துக்களை சமூகம் சார்ந்ததாகவும், சாதியம் சார்ந்த தாகவும் அதிகமாக எழுதியுள்ளனர்.

சிறுகதை என்பது ஒருவன் வீட்டின் யன்னல் வழியே வெளியே பார்க்கும் போது தென்படும் காட்சிகளை வைத்து உருவாக்கப்படுவதாகும்.

ஒவ்வொரு சிறுகதை எழுத்தாளர்களும் தனது தாய் மொழி ஊடாகவே எழுதிவருகின்றனர்.

திருவள்ளுவருடைய திருக்குறள் இன்று உலகத்தில் உள்ள அத்தனை மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது என்றால், தமிழ் எழுத்தாளர்களுக்கே அது ஒரு பெருமைதான்.

அவற்றில் உள்ள இரண்டு வரிகளில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆழமானவை. கருத்துக்களை இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் சொற்பதங்கள் வகுக்கப்பட்டு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

பின்வந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் அவற்றுக்குரிய விளக்கங்களை மேலும் எழுதியுள்ளனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் கைத்தொலைபேசியின் அதீத பாவனையால் ஏற்படும் விளைவுகள், வன்புணர்வுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், போரால் ஏற்பட்ட வடுக்கள் ஆகியவற்றையே சிறுகதைகளாகவும், கவிதை, குறும்பட திரைப்படங்களாகவும் வெளியிட்டு வருகின்றனர்.


இவற்றில் தலைசிறந்த படைப்புக்களை மொழிபெயர்த்து எமது துன்ப துயரங்களையும், எழுத்தின் ஆளுமைத் திறன்களையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

தற்போது உள்ள எழுத்தாளர்கள் முதியவர்களின் பிரச்சினை பற்றியோ, அனாதரவாக வீதிகளில் கைவிடப்பட்டவர்களின் நிலைமை பற்றியோ எழுதுவது அரிது. சமூகம் சார்ந்ததில் இவையும் முக்கியம் வகிக்கின்றன.

உணர்வுகளின் தாக்கங்களின் வெளிப்பாடுகளை மொழிபெயர்ப்பதற்கு சங்கங்கள், கழகங்கள் என்பன களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். ✸

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பின் மதிப்பு



அரசன் நோய் வாய்ப்பட்டு, பல நாள்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருள்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், "அரசே........உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளிக்க அளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

## பச்சைக் கிளி



புலம் பெயராத பறவைகளில் கிளியும் ஒன்று. இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இது உள்ளது. அழகான பச்சை நிறத்தையுடைய பறவையில் ஆண் இனத்தின் கழுத்தில் மண்ணிறமும் பெண்ணினத்தில் சாம்பல் நிறமும் கொண்ட வளையம் காணப்படும்.

இது பழம், பருப்பு, தானியங்களை உண்ணும். விவசாயிகளுக்கு எதிரியான பறவையாகும். இந்தப் பறவை இந்தியாவில் 3 ஆயிரம் வருடங்களுக்கு முன்பே வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து ஐரோப்பிய வர்த்தகர்கள் மேற்குலகுக்கு எடுத்துச் சென்றமையாலேயே இது பிரசித்தம் அடைந்தது. அத்துடன் இது செல்லப் பிராணியாகும். 250 வார்த்தைகள் பேசக்கூடிய வல்லமை கொண்டது. இது மூன்று முதல் 6 முட்டைகள் வரை இடும். 23 நாள்கள் அடைகாத்து குஞ்சு பொரிக்கும்.

சா.பபிதா,
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

# கல்வியின் சிறப்பு

கல்வி மனிதனின் வாழ்வில் முக்கியமானது. கல்வியின் பயன் கற்ற பின்புதான் தெரியும் அதன் சிறப்பும் மக்கள் நம்மீது காட்டும் மரியாதையும் நாம் மற்றவர்களைப் போற்றி வணங்கவும் நாமும் பண்பாக நடக்கவும் உதவுகின்றன.

கல்வி ஒரு வழி காட்டி, அறிவூட்டி ஒளி கொடுத்து அறியாமையை போக்கி நல் வழி காட்டும் வல்லமை கொண்டது. மனிதர்களாக பிறந்தவர்கள் கற்கவேண்டியவற்றை கற்று கற்றபடி நன்றாக வாழ்வதே சிறந்தவையாகும்.

கல்வி கற்றுக்கொள்ளாதவன் கண் இருந்தும் கண் அற்றவன் போலாவான். உலகில் மிகச் சிறந்த செல்வம் கல்வி. கல்வி கற்றால்தான் செல்வம் பெருகும் இல்லத்தில்.

பணத்தால் நாம் எதையும் வாங்கி அழகுபார்க்கலாம். வாங்கும் பொருள்கள் அழிந்துவிடக்கூடியன.

இத்தனைக்கும் சிறப்பாக அமைவது எதனாலும் அழித்துக்கொள்ள முடியாதது நம்மோடு கூட வருவது நாம் கற்ற கல்வி ஒன்றுதான்.


கல்வி அழியாது நிலையானது நாம் கற்ற கல்வியை மற்றவர்களுக்கு கொடுத்து வளம் பெறச்செய்து கொள்ள முடியும்

கற்றவருக்கு செல்லும் இடம் எல்லாம் சிறப்பு உண்டாகும் கல்வியின் அழகே ஒருவருக்கு பெரும் அழகு.


அந்த கல்வி அழகை பெற நாம் முயற்சித்து நன்றாக படிக்க வேண்டும். சிறுவர்களே விளையாட்டில் கவனம் எடுப்பது போல் கல்வியில் முக்கியமாக கவனம் எடுத்து படித்து [illegible]

[illegible]





எஸ்.பிரேமினி
சாவகச்சேரி மத்திய கல்லூரி



செ.ரிஷிகரன்
யாழ்.மத்திய கல்லூரி




செ.மதுராங்கன்
அச்சுவேலி மத்திய கல்லூரி



இ.ராகேஸ்
உடுத்துறை மகாவித்தியாலயம்



ப.ஜஸ்ரிக்கா
புனித திரேசா மகளிர் கல்லூரி



கி.சோபிதா
சாவகச்சேரி மகளிர் கல்லூரி

## விடை தெரியுமா? 150

### உங்களுக்கும் பரிசில்கள்

1. ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள நாடு எது?
2. ஆசிய இனக்காகங்கள் எவை?
3. அலுமினியம் எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது?
4. மகாத்மா காந்தி பிறந்த இடம் எது?
5. கிரிக்கட் போட்டியின் போது தலைக்கவசம் அணிவதை அறிமுகப்படுத்திய நாடு எது?

### விடைகள் 148

1. இங்கிலாந்து
2. 270
3. செந்தூர மரம்
4. தாய்லாந்து
5. இத்தாலி

### வெற்றி பெற்றோர் விவரம் (149)

★ ப.அனுஷை, தரம் -4, உடுவில் மகளிர் கல்லூரி
★ சூ.பிரியதக்ஷி, தரம்-8சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
★ ப.அரங்கன், தரம் -4, உடுவில் மகளிர் கல்லூரி
★ கி.விதுசன், தரம்-8பி, கொக்குவில் இந்துக் கல்லூரி
★ கு.மாதங்கி, தரம்-4, இணுவில் இந்துக் கல்லூரி
★ கி.கிருஷாந்தன், தரம்-9, யாழ்.மத்திய கல்லூரி

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 17.03.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்களிலிருந்து மொழி பெயர்த்தவை

- அபிதவன்

ஆயுதத் தரகனும், அனுபவக் கவிஞனும்
பார்த்துக் கொள்ள நேர்ந்தது
கம்பிகளின் முன், பின்னால் கடந்தூர்ந்த வார்த்தைகளை
தடித்த கதவுகள் உற்று உறிஞ்சின!

*''சிறைப் பறவையே சுகமெப்படி?''*

''சொர்க்கத்துப் பிச்சைக்காரரே! நான் நலன்!!!''

*''கொழுப்பெடுத்த எழுத்தனே
வார்த்தையாலாவது விசாரிக்கமாட்டாயா என்னை?''*

''பிணங்களை புகைப்படமெடுப்பவன்,
'சிரிக்கச்' சொல்வதில்லையே!''

*''என்..... இப்படித் தினமும் சாகிறாய்?,
'ஆயிரம் தலைவாங்கிய அபூர்வனை'யும் வாழ்த்திப் பாடு!
என்னைப் போல் நீயும் நாளை!!''*

''கல்லையும் செரிக்கும் கடுமனம் நான் கற்றது,
பாலும் புளிக்கும், 'பகட்டுப்பசி' நீ இரந்தது,
துரோகிகள் தூங்கியதுண்டா எங்காவது?
கையணையிலேயே கடுந்தூக்கம், முடிகிறது என்னால்!
''இக்கல் அறை, எனக்கின்றுமொரு கருவறை!
நேற்றெழுதிய 'சரணத்தை' விட்டத்துப் பல்லியிடம்
சரி பார்க்கச் சொல்கிறேன்
கம்பிகளிடம் 'துருவேறிப் போவது' எப்படியென
தனி வகுப்புக் கேட்கின்றேன்
அழுக்குச் சுவர்களிடம், அடகு வாங்கிய மௌனத்தை
அதிகாரிகளிடம் துப்புகின்றேன்
போதுமிது!!''

*''பொய்யெழுதிப் பிழைத்தவனே!
பிடிவாதமுன் பரம்பரையை, பிடித்து விழுங்கப் போகிறதே?''*

''மௌனிக்கும் மரண முடிவு, நீ விற்ற
இரும்புக் குழல்களுக்கும், கந்தகக் குடுவைகளுக்கும் ஆகலாம்!
பேனாக்கள் 'மூடி'க் கொள்வது தற்கொலையல்ல
தியானம்!!
திறக்குகையில் தீ கக்கும்''

*''வேடிக்கையான கனவு
விடியாத கோழியாய் வீணாகப் போகிறாய்?''*

''சொற்பனே 'விடியுமென' விதந்துரைப்பது பறவைகள் குணம்
நாளைய 'வெயிலில்' கொண்ட நம்பிக்கை அது!
அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமாவுனக்கு?''

*''கருகிய விதைக்கு பாத்தி கட்டிப் பாய்ச்சியவர்களே!,
பொய்களுக்கு புனுகிடுவதா, போராட்டம்?''*

''மண்ணுக்குமுன், சில விதைகள்
மக்கிய செஞ்சாம்பலில் குளிப்பதுண்டு!
'முளைதிறன்' கூட்டும் முத்திக்கான யுக்தியது
செம்மண் சித்தர்கள் தெரிந்த ஞானமது!!''

*''போகட்டும், உன் முடிவென்ன?''*

''வேசமிடுவதை விரும்பவில்லை என் விரல்கள்!
முகமூடியில்லாத இதே முகவழகே என் முடிவு!!
உன் வார்த்தைத் தூளுக்கு, என் 'வைராக்கியக் கறை'யை
வெளிற்றும் வீரியம் போதாது, புறப்படு நீ!''


*''என்ன செய்யப் போகிறாய், என்னையும் விட்டு!
இறுதித் தூது இதுவே?
பார்த்தாயா, உன் கண்கள் கரைகின்றதே?''*

''மரணத்தை மலிவுப் பதிப்பில் விற்றவனே!
எனக்காகவில்லையடா! இந்த 'உப்பு' நீர்த்துளிகள்
உங்களையும் முன்பொரு நாள் நம்பி
தாலியிலும் 'தகடுமுறித்துத் தந்த' தமிழினத்துக்காய்...''

*''போகவா நான்?.... நீ....?''*


''அழகிய என் தேசத்தின் அத்திவாரக்கல்லை
அங்குலங்களால் செதுக்கப் போகின்றேன்!
அந்திச் சூரியன், சிந்தும் குருதியால் தானே
அடுத்த நாளும் வாழ்கின்றது!!
'மேற்கு' இருப்பதால் தான் 'கிழக்கு'க்கும் மரியாதை!!!''

# வாழ்க்கையென்பது......



கற்பனையில் வாழ்ந்தபடி
கனவுகளில் மிதந்தபடி – தினம்
நித்திரையில் இருந்தபடி
கழிவதல்ல வாழ்க்கை....
வலிகளினில் புதைந்து
விழிகளோரம் பனித்து – மனம்
விரக்தியினால் மெலிந்து
விடுவதல்ல வாழ்க்கை...
மகிழ்ச்சி மட்டும் இருக்க
மனதில் ஆசை பொங்க – தினம்
நினைப்பதெல்லாம் நடந்து
முடிவதல்ல வாழ்க்கை
முயற்சியென்ற மூச்சை
முழுமனதாய் ஏற்று
முடியுமென்ற நினைப்பை
குருதிதன்னில் விதைத்து
வருந்தடைகள் தகர்த்து
வாழ்வதுதான் வாழ்க்கை
முள்படுக்கை வருதென்னி
விசும்புவதை விடுத்து
முறித்தெறியும் மனவலிமைதனை
ஆழ்மனதில் வளர்த்து
விதிப்பயனை உடைத்து
நடப்பதுவே வாழ்க்கை
கவலைகளை மறந்து
சோகங்களைத் துறந்து
சூரியனால் சுடர் பற்றி
இருளகற்றி விடுவதுதான்
இனிமை பொங்கும் வாழ்க்கை.

பா. பொன்நிலவன்,
மீசாலை.



# காலத்தை தொலைத்தபடி

கனவுகளைத் தொலைத்த
காலக்கிளைகளில் நின்று
கரைந்தழுகின்றோம்
யாரும் எமக்காய்
வாதாடப் போவதில்லை
என்பதை அறிந்தும்
நீதியின் சோதனைக் களத்தில்
மீண்டும் மீண்டும்
நிர்வாணப்படுகிறது
எங்களின் எதிர்காலம்
காலகாலமாய்
காலத்தை தொலைத்தவர் நாம்
எந்தக் காலத்தில் எது நடந்தாலும்
எமக்கென்ன அதனால் தான்
இந்தக் காலத்தில் இதற்குள்ளும்
நாம் கை தட்டுகிறோம்

புலோலியூர்
வேல்நந்தன்

# பாசம்

நீங்கள் நேசிக்கும் இதயத்தில்
பல மணி நேரங்கள் வாழ்வதை
விட உங்களை நேசிக்கும்
இதயத்தில் சில நொடிகளாவது
வாழ்ந்து பாருங்கள்
அன்பின் அர்த்தம் புரியும்
பல் மணி நேரம் பேசும்
உதடுகளை விட
சில நொடிகளாவது நினைக்கும்
இதயத்துக்கே பாசம் அதிகம்



மு.வேணுகா
நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

**உழைக்கும் பெண்களின் சுமை இரட்டிப்பாகியுள்ளது. ஏற்கனவே வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு என உழைப்பில் மூழ்கியிருந்த பெண்கள் தாம் தொழில் செய்யும் இடங்களிலும் உழைக்க வேண்டிய நிலை எழுகிறது. அதாவது பெண் ஓய்வே பெற முடியாத அளவுக்கு வேலைகளைச் சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் பெண்களின் உரிமையைப் பாதுகாக்க முடியுமா?**

# அறிக்கைகளுக்குள் அடங்கிவிடும் பெண் விடுதலை

ஞாயிறு காரம்

முனிவர்களுக்கெல்லாம் பிரம்ம ரிஷி என்று கருத்தப் படுபவர் வசிட்டர். இவரது தவ வலிமை மட்டுமன்றி போர்க் கலையில் உள்ள ஆற்றல் கூட பல புராணக் கதைகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவர் ஒருமுறை தவம் செய்ய வனம் நோக்கிப் புறப்படும் போது தன் மனைவியான அருந்ததியிடம் ''நில்! வருகிறேன்!'' என்று விட்டுப் போய்விட்டாராம். அவர் தவம் செய்து முடிந்து பல ஆண்டுகள் கடந்து வீடு திரும்பிய போது அவரின் மனைவி அருந்ததி அதே இடத்தில் அப்படியே அசையாது நின்றிருந்தாராம். அவள் ''நில்! வருகிறேன்!'' என்ற கணவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு பல ஆண்டுகளாக அப்படியே அதே இடத்தில் அசையாமல் நின்றிருந்தாளாம்.

கணவன் சொல்லைத் தட்டாத அவளின் பதிவிரதத்தனத்தை மெச்சிய வசிஷ்டர் அவளுக்கு முத்திப்பேறளித்து அவளை ஒரு நட்சத்திரமாக்கி வானமண்டலத்தில் நிலைநிறுத்தினாராம். அதுவே அருந்ததி நட்சத்திரம் என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இன்றும் இந்துக்களின் திருமண வைபவங்களில் அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் என்பவை முந்திய சம்பிரதாயங்களாகப் பேணப்பட்டு வருகிறன. அதாவது அம்மி மிதித்தல் மூலம் பெண்களுக்குரிய சமையலறைக் கடமைகள் சுட்டிக்காட்டப்படுவதுடன் அருந்ததி காட்டப்படுவதன் மூலம் அவளிடம் எக்காரணம் கொண்டும் கணவனின் சொல்லைத் தட்டக் கூடாது என்ற செய்தியும் சொல்லப்படுகிறது.

அதாவது வர்ணசிர தர்மகாலத்தின் பெண் ஒடுக்கு முறைச் சிந்தனைப் போக்குகள் இப்போதும் எம்மிடம் சம்பிரதாயங்களாக எஞ்சிக் கிடக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.

சங்க காலத்தில் கூட ''இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க'' எனப் பெண்களைப் பூவிலும் மென்மையானவர்களாக்கி'' ஆண்களின் போகப் பொருளாகவே பார்த்து வந்தனர்.

பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையான கார்ல் மாக்ஸ் உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடமையாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்த போது கம்யூனிஸ்டுகள் பெண்களையும் பொதுவுடமையாக்கி விடுவார்கள் எனக் கூக்குரலிட்டனர். அதற்குப் பதிலளித்த கார்ல் மாக்ஸ் ''நாம் உற்பத்தி சாதனங்களைத் தான் பொதுவுடமையாக்க வேண்டும்'' எனக் கோருகிறோம். ஆனால் முதலாளித்துவ வாதிகள் பெண்களையும் ஒரு உற்பத்தி சாதனமாகப் பார்ப்பதால் நாம் அவர்களைப் பொதுவுடமையாக்கி விடுவோம் என அஞ்சுகின்றனர். ஆனால் நாம் பெண்களை மனித ஜீவன்களாகவே பார்க்கின்றோம் எனத் தெளிவாக விளக்கினார்.

அதாவது நாகரிகமடைந்துவிட்டதாகக் கூறப்படும் ஐரோப்பிய நாடுகளில் கூடப் பெண்ணடிமைத்தனம் மேலோங்கியிருந்தமையை நாம் இதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் பிரான்ஸில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களும் நிலமானிய சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட உடைவுகளும் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியன. அதுமட்டுமன்றி வேகமாக வளர்ந்து வந்த கைத்தொழில் ஆலைகளுக்கு ஏராளமான மனித வளம் தேவைப்படவே பெண்களும் வீடுகளை விட்டு வெளியே வந்து தொழில் செய்யும் நிலை உருவாகியது. எனவே மெல்ல மெல்லப் பெண்கள் தங்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் நிலைமையும் தோன்றியது. பெண்கள் அமைப்புகளும் உருவாக ஆரம்பித்தன.

பிரான்ஸில் உருவான இந்த மாற்றங்கள் மெல்ல மெல்ல ஐரோப்பாவெங்கும் பரவ பெண்கள் விடுதலை பற்றிய குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தன. இந்தப் போராட்டங்கள் காரணமாக ஏற்கனவே நிலவி வந்த பெண் ஒடுக்குமுறை வடிவங்கள் உடைக்கப்பட்ட போதிலும் அவை புதிய வடிவங்களில் பிறப்பெடுக்க ஆரம்பித்தன. எனவே பெண் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களும் தொடர்ந்து கொண்டேயுள்ளன.

இப்படியான ஒரு சூழலிலேயே மார்ச் எட்டாம் நாள் உலக மகளிர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தத் தினத்தில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான அறிக்கைகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், ஆர்ப்பாட்டங்கள், விழாக்கள் எனப் பல விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையிலும் இவ்வருடம் மார்ச் எட்டாம் நாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் மகளிர் தின விழா இடம்பெற்றது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மகளிர் அமைப்புகளால் இவ்விழா கொண்டாடப்பட்ட போதும் நாட்டின் அதிபரின் தலைமையில் இடம்பெறும் விழா ஏனையவற்றை விட முக்கியத்துவம் வாய்ந்தது என்றே கூற வேண்டும்.

அதுமட்டுமன்றி அங்கு அவர் ஆற்றிய உரையையும் சாதாரணமாக எடுத்துவிட முடியாது. அவர் அங்கு உரையாற்றும் போது நாட்டில் பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் அரசியல்வாதிகளாக அரச அதிகாரிகளாக மருத்துவத் தாதியராக ஆசிரியைகளாக பாதுகாப்புப் படையினராக நாட்டுக்குச் சேவை செய்து வருவதாகவும் தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்தை எவரும் மறுதலித்துவிட முடியாது. ஆனால் வாழ்க்கைச் செலவும் சமாளிக்க முடியாத அளவில் அதிகரித்துள்ள இவ்வேளையில் குடும்பத்தில் ஒருவர் மட்டும் உழைத்தால் போதாது என்ற நிலையில் பெண்கள் வீதியில் இறங்கி தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அது தவிர்க்க முடியாத தேவையுமாகிவிட்டது.

அந்த நிலையில் ஜனாதிபதி கூற மறந்த அல்லது கூறாது தவிர்ந்த ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது. அதாவது உழைக்கும் பெண்களின் சுமை இரட்டிப்பாகியுள்ளது. ஏற்கனவே வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு என உழைப்பில் மூழ்கியிருந்த பெண்கள் தாம் தொழில் செய்யும் இடங்களிலும் உழைக்க வேண்டிய நிலை எழுகிறது. அதாவது பெண் ஓய்வே பெற முடியாத அளவுக்கு வேலைகளைச் சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் பெண்களின் உரிமையைப் பாதுகாக்க முடியுமா? குடும்பம் என்ற கட்டுக்கோப்பின் விலங்கு பூட்டாத அடிமையாக அவள் மாற்றப்படுகிறாள். இதன் காரணமாக பெண்கள் சந்திக்கும் உடல் உபாதைகள், மன உளைச்சல்களுக்கு இந்தச் சமூகத்தில் நிவாரணம் தேட முடியுமா?

அடுத்த கேள்வி அவள் ஓர் உயர் அதிகாரியாக இருந்தால் என்ன, கடைநிலை ஊழியராக இருந்தால் என்ன ஒரு பெண்ணாக அவளால் செயற்பட முடியுமா? மாறாக ஆணாதிக்க சமூகத்தின் அரசு இயந்திரத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் ஒரு கருவியாகவே பார்க்கப்படுகிறாள். இன்று பல பெண் அரச அதிகாரிகள், தமது மேலாளர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் செயற்படுவதன் மூலம் பெண்களிடம் மட்டுமன்றி ஒட்டுமொத்தமாகப் பொதுமக்களிடமிருந்தே வெறுப்பைச் சம்பாதிப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அங்கு அவள் ஒரு பெண்ணாக இன்றி ஒரு கருவியாகச் செயற்படுவதன் மூலம் அவள் தன்னையே இழக்கிறாள்.

அதேவேளையில் இன்னும் சில பெண்களைப் பற்றி ஜனாதிபதி கணக்கில் எடுக்காமல் விட்டுவிட்டார். அதாவது மலையகப் பெண்கள் வெளிநாடுகளின் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணி புரிபவர்கள் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள், பாலியல் தொழிலில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் என மனிதப் பிறவிகளாகக் கருதப்படாது இந்தச் சமூகத்தால் சகல உரிமைகளும் பறிக்கப்பட்டுத் துன்பம் ஒன்றை மட்டுமே அனுபவிக்கின்றனர். இப்பெண்கள் பற்றியோ அவர்களின் விமோசனம் பற்றியோ ஜனாதிபதி கவலைப்படவில்லை. மாறாக அழகிய இளம் பெண்களைப் பாலியல் தொழில் ஈடுபடுத்தி சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதன் மூலமும் மேலும் மேலும் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலமும் அதிகளவு அந்நிய செலவாணியை ஈட்டுவதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது. நாட்டில் 40,000இற்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்ற புள்ளி விவரம் இந்த நாட்டில் பெண்கள் உரிமைக்கு எவ்வளவு முக்கியத்தும் கொடுக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

இது மட்டுமன்றி மகளிர் தினத்துக்கு சில நாட்களின் முன்பு இடம்பெற்ற இரு கொலைச் சம்பவங்கள் பல கேள்விகளை எழுப்புகின்றன. ஒன்று - நெடுந்தீவில் 13 வயதுப் பள்ளி மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கல்லால் தலை சிதைக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். இதைச் செய்ததாக முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கில் மூன்றாவது எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டவர்.

அடுத்து, இரத்தினபுரி கஹவத்தையில் ஒரு தாயும் மகளும் வெட்டிப்படு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாகக் கொதிப்படைந்த மக்கள் ஆவேசம் கொண்டு மூன்று அரசியல்வாதிகளின் வீடுகளைத் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் பெண்கள் மீதான வன்முறைகளை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து மேற்கொள்கிறார்களா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

போரின்போது பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் கொடூரமானவை. கிரிஷாந்தி முதற்கொண்டு ஏராளமான பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்டுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். விசாரணை என்ற பெயரில் பெண்கள் மீது பாலியல் வல்லுறவு உட்படப் பல விதமான கொடுமைகள் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்டன. இப்போர் காரணமாக தொண்ணூறாயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டு விட்டனர். குடும்பத்தின் உழைக்கும் கணவன்மாரை இழந்ததால் அவர்கள் கொடிய வறுமைக்குள் தள்ளப்படுகின்றனர். தமது குடும்பத்தைக் காப்பாற்ற ஏதாவது தொழில் செய்யப் போனால் அவர்கள் அங்கு சந்திக்கும் பாலியல் துன்புறுத்தல்கள் அளவற்றன. அதுமட்டுமன்றி நியாயமான முறையில் தமது பாலியல் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையில் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு நடைப்பிணமாக வாழும் நிலையும் உருவாகிறது. அதாவது மகிழ்ச்சி என்பது நிரந்தரமாகவே பறிக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறு பெண்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளை அனுபவிக்கும் அதேவேளையில் தமிழ் பெண்கள் இராணுவத்தினர், அரச சார்பு ஆயுதக் குழுவினர் போன்றவர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் நிலையும் கொல்லப்படும் நிலையும் உருவாகிறது.

ஆட்சியிலிருக்கும் அரசோ, அரச அதிகாரிகளோ பொலிஸாரோ இவற்றைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய முறையில் தண்டிக்கப்படுவதுமில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளின் மறைமுக அழுத்தங்கள் காரணமாக குற்றவாளிகள் தப்பியும் விடுகின்றனர்.

இப்படியான நிலையில் பெண்களின் சமூகப் பங்களிப்பு பற்றிப் பெருமையுடன் அறிக்கைகள் விடப்படுகின்றன. அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் அவற்றை நியாயப்படுத்தும் பெண் அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பெண் விடுதலை பற்றி விழாக்கள் எடுக்கப்படுகின்றன. எமது பெண்கள் இப்போலித்தனங்களைப் புரிந்துகொண்டு அமைப்புகளாக உருவாகி பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டும். அது ஒன்று மட்டும்தான் பெண்விடுதலைக்கு வழிகாட்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனோ...!



பிறந்த மண், பாயும் நதி,
காயும் நிலவு, சுழன்றடிக்கும் புயல்
எதிலும் பெண் வடிவம் கண்டு மகிழ்ந்தவன்
தன்தன் மனைவியை மதியாமல் போனானே !

கல்வி கற்ற கலைமகளை விட
கை நிறைய பொருள் கொணரும்
திருமகள் தேவை எனத் தேடியவன்
அதிலும் திருப்தி அடையாமல் போனானே !

தேவதை போலொரு மனைவி
அடைந்தால் சுவர்க்கம் வேறில்லை
தலையில் வைத்து கூத்தாடியவன்
சந்தேகக்கண் கொண்டு எரித்தானே !

அன்புக் கடங்குவதிலும்,
துன்பத்தில் இன்பம் கண்டவள்
இவள் போல் யார் என்றவன்
அதிலும் பெண்மை உணராமல் போனானே !


இதுவே பெண்மையின் விதி
தலை கவிழ்ந்தது முடியுங் காலம்
வந்ததம்மா - 'வென்றிடும் பெண்மை'
எங்கோ தூரத்தில் ஒரு குரல்.....

ஏனோ எனக்கு மட்டும் கேட்கிறது !!

(சுரபி)

# பெண்களை மதிக்க கற்றுக்கொள்ளுங்கள்

விமலதர்சினி, நவாலி.



"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" அதனினும் அரிது பெண்களாய்ப் பிறத்தல்" என்று தான் கூறவேண்டும். இன்றைய நவீன உலகத்திலும் சரி தற்காலத்திலும் சரி பெண் என்பவள் அடிமைத்தனத்தாலும் அடக்குமுறையாலும் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்ட முடியாத நிலையிலே தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதை மறுக்கமுடியாது.

ஆணுக்கு நிகராய் பெண் எல்லாவற்றிலும் முன்னேறிவிட்டாலும் பெண்களுடைய மதிப்பும், சுய கௌரவமும் இழக்கப்பட்டு வருகின்றமையை நாம் அறிவோம்.

பாரதி கூறிய புதுமைப் பெண்கள் பலர் சாதனைகளை நிலைநாட்டினார்கள். இன்றும் அதைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள், என்றாலும் அவர்கள் வாழ்க்கைப் பாதையை சற்று அலசினால் அதற்காக அவர்கள் பட்டவேதனைகளும் அவமதிப்புகளும் தான் அதிகம். பெண்கள் மனித குலத்தின் குத்து விளக்குகள் என்று கூறலாம். ஆனால் ஆண்களால்தான் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகின்றார்கள் என்று ஒட்டு மொத்தமாக கூறினால் அது தவறு. பெண்களே பெண்களுக்கு மரியாதை இல்லாமல் நடத்துகின்ற சம்பவங்களும் உண்டுதான்.

ஒரு பெண் தாயாக, சகோதரியாக, தாரமாக இருக்கின்றாள். சில குடும்பங்களில் ஆண்களை விடப் பெண்களே பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுகின்றார்கள். எந்த ஒரு பெண் தன்னுடைய சுயமரியாதையை இழக்கின்றாளோ அது அவளது குடும்பத்தையும் சேர்த்துத்தான் பாதிப்பை உண்டாக்கும்.

பெண்களே! நீங்கள் முதலில் உங்கள் மரியாதையை இழந்துவிடக்கூடாது என்ற கொள்கையோடு வாழ முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் சமுதாயம் உங்களை மதிக்கும். உங்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் அதாவது உதாரணமாக நடை, உடை, கலாசாரம், பண்பாடு என்று எதிலுமே எவரும் உங்களைத் தரக்குறைவாகப் பேச வழி வகுத்து விடாதீர்கள். பெண்கள் என்பது வெறும் ஒற்றை பிறவி அல்ல.

பல அவதாரப் பாத்திரங்கள். உங்களுடைய மதிப்பையும் மரியாதையையும் குறைத்துக்கொண்டு பிறர் எம்மை கேலி செய்கின்றனர் என்று தாழ்வு மனப்பான்மையில் உளன்று விடாதீர்கள்.

இன்றைய தொலைக்காட்சித் தொடர்களும் திரைப்படங்களும் பெண்களின் மரியாதையைக் கெடுத்துவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். இந்த உலகில் பெண்ணியம் போற்றப்படாது விட்டாலும் இனிவரும் காலங்களில் பெண்களுக்கு எதிரான கொள்கைகள் இல்லாது ஒழியவேண்டும். பாரதி கண்ட புதுமைப் பெண்களாக நம்முடைய பெண்களை சமூகம் மதிக்க வழியேற்படுத்துவோம்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்"
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# துணை புரிந்து வழிகாட்டுங்கள்

ஜீவன், மானிப்பாய்.

பெண்களின் முன்னேற்றங்களை எமது சமுதாயம் ஓரளவேனும் ஏற்றுக் கொண்டாலும் அவர்களின் சுய முயற்சிகளுக்குத் தடைபோட பின்னிற்கவில்லை.

"நான் சொல்வதைத் தான் நீ செய்ய வேண்டும்" என்னும் ஆதிக்கத் தொனியில் பெண்களை அடக்கி அவர்களின் சுய விருப்பங்களைக் கட்டுப்போட நினைக்கிறார்கள்.

வருடங்கள் உருண்டோடி எவ்வளவு முன்னேற்றங்கள் கண்டு அபிவிருத்தி அடைந்தாலும் பெண்களை எப்போதும் வேறுபாடு கொண்டவர்களாகவே சமுதாயம் உற்று நோக்குகிறது.

இதனால் தனக்குள் போடும் தடைகளையும் தாண்டி தனது விருப்பத்துக்கு அமைவாக துணிவுடன் காரியங்களை நிறைவேற்றி சமுதாயத்தில் வெற்றி நடைபோடும் பெண்கள் இன்று சமுதாயத்தில் எத்தனை பேர்.

பேச்சுரிமை என்பது மனிதனின் அடிப்படை உரிமையாக இருக்கும் பட்சத்தில் அதனைப் பெண்ணுக்கு மட்டும் வேலியாகப்



போட்டு அவளை பேசா மடந்தையாக மாற்றுவதில் என்ன நியாயம்.

வீட்டின் பொறுப்புகள், சுற்றத்தாரின் அரவணைப்புகள், குடும்ப உறவுகளின் நீடிப்பு என குடும்பம் என்னும் வரையறைக்குள் மட்டும் பெண்களை நடத்த நினைப்பது ஏன்?

அவளுக்குள் இருக்கும் திறமைகளை வெளிப்படுத்த சமுதாயத்தில் இடங்கொடுக்கப்படும் பட்சத்தில் சாதனைப் பெண்களாக ஒவ்வொரு பெண்களும் தம்மை மாற்றி அமைக்க வாய்ப்பாக அமையும்.

சகலதுறைகளிலும் தாமாகச் செயற்பட நினைக்கும் பெண்களின் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடாமல் அவளின் முயற்சிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

"உன்னால் முடியும்" என்னும் ஒரு கரம் துணையாக இருக்கும் போது பெண் தானாகவே வெற்றிப் பாதையை நோக்கிப் பயணிப்பாள்.

இது கட்டாயம் கிராமப் புறப் பெண்களுக்குத் தேவையான ஒன்றாகும். அவர்களின் மன நிலைக்கு ஏற்ப அவர்களின் விருப்பங்களுக்கு வழி காட்டியாக இருக்கும்போது எந்தப் பெண்ணும் தவறான வழியில் செல்வதற்குச் துணியமாட்டாள்.

# தன்னம்பிக்கை...




கல்வியறிவின்மை, தொழிலின்மை, தன்கையில் பொருளாதாரப் பலமின்மை இவற்றோடு இவற்றால் ஏற்படும் தன்னம்பிக்கையின்மை என்பன ஒரு பெண் ஆணில் தங்கி வாழ்வதற்கான பிரதானமான காரணங்களாக அமைகின்றன. தன்னையும் பிறக்கப் போகும் தன்பிள்ளைகளையும் பேணிப் பாதுகாப்பான் என்னும் நம்பிக்கையுடன் தன் தங்கி வாழ்தலை ஆரம்பிக்கும் பெண் தன் கனவுகள் பொய்த்து குடும்பம் சீரழியும் நிலையை அடையும் போதும்கூட தங்கிவாழ்தலிருந்து மீள முடியாமல் போவதுதான் மிகக் கொடுமை. சில பெண்கள் அதற்கும் மேலே போய் பொறுப்பற்றிருக்கும் கணவனின் சுமையையும் சேர்த்து இளம்பிள்ளைகளின் கைகயில் கொடுப்பதும் இன்று சமூகத்தில் மலிந்து போய் காணப்படும் ஒரு விடயமாகி விட்டது.பெண்களின் கருத்தமைவில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமே இந்த நிலைமையை மாற்றியமைப்பது சாத்தியமாகும். இளம் பெண்களின் மத்தியில் கருத்து மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நாளைய சந்ததியை சிறந்த தன்னம்பிக்கை மிக்க சந்ததியாக உருவாக்க வேண்டும். ஏனெனில், ஒரு தாயே குடும்பத்தில் சகலதுமாகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நாட்டியக் கலையின் ஆடலரசன் நாட்டியமாமணி வேல் ஆனந்தன்


34

ஆடற்கலை என்பது இயலும் இசையும் அபிநயமும் கலந்து முக்கனிச்சாறு போல் இனித்திடும் ஒப்பற்ற கலையாகும். தமிழரின் ஆடல் வகைகள் உலக நடனங்களுள் தொன்மையான வரலாறு கொண்டவையாகவும் ஆன்மிகத்தோடு இரண்டறக் கலந்ததாகவும் மிளிர்கின்றன. ஈழத்தின் ஆடற்கலை வரலாற்றில் உலகப்புகழ் பெற்ற நடனக் கலைஞராகவும் தொள்ளாயிரத்துக்கும் அதிகமான நாட்டியாஞ்சலி நிகழ்வுகளை மேடையேற்றிய ஆற்றுகையாளராகவும் பலநூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய நாட்டியப் பேராசானாகவும் ஈழத்தமிழர் ஆடற்கலையுலகின் குறியீடாகவும் அரை நூற்றாண்டு காலப் பட்டறிவு கொண்ட மாபெரும் கலைஞராகவும் விளங்குபவர் தாண்டவச் செல்வன். வேல் ஆனந்தன்.

மறைந்த வேலாயுதபிள்ளை மீனாட்சி தம்பதியரின் மகனாக 12.02.1941 இல் நெடுந்தீவில் இவர் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையாவிடம் ஆடற்கலையைக் கற்கத் தொடங்கிய இவர் மேலும் தன்னை வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் 1959 இல் கேரளா கலாகேந்திராவிலும் 1962 இல் திருவனந்தபுரம் சுவாதித்திருநாள் அரச நுண்கலைக் கல்லூரியின் இணை நிறுவனமான விஸ்வகலா கேந்திராவிலும் கதகளி பரதநாட்டியம் மோகினியாட்டம் கீழைத்தேய ஆடற்கதை போன்ற நாட்டியப் பயிற்சி நெறிகளைப் பெற்றுக் கொண்டார்.

இந்தக் காலத்தில் கலாநிதி கோபிநாத் பந்தணைநல்லூர் சுப்பிராயபிள்ளை சேட்டன்பிள்ளை உன்னிவாரியார் ஆலப்பொழா ரேவம்மா சுந்தரநாராயண மேனன் போன்ற நடன மேதைகளிடம் நாட்டிய நுட்பங்களை அர்ப்பணிப்புடனும் பெருவிருப்புடனும் கற்றுக் கொண்ட இவர் விஸ்வகலாகேந்திராவில் நான்கு ஆண்டுகள் கற்று உயர் டிப்ளோமா ஆடற்கலைப் பயிற்சியை நிறைவு செய்து ஆடற்கலையின் தலைமகனாக 1966இல் தாயகம் திரும்பினார்.

1970ஆம் ஆண்டிலிருந்து பத்தாண்டுகள் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் 1980ஆம் ஆண்டிலிருந்து பதினாறாண்டுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் ஆடற்கல்வி விரிவுரையாளராக கடமையாற்றிய இவர் 1996இல் இருந்து வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சில் அழகியற்கல்வி உதவிப் பணிப்பாளராக 2001வரை அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். இவை தவிர 1976ஆம் ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகளாக யாழ்.பல்கலைக் கழக நடனத்துறையில் வருகை விரிவுரையாளராகவும் பதவி வகித்தவர்.



**சாதனைக் கலைஞரைச்**
**சந்திப்போம் சிந்திப்போம்**

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவரது அரைநூற்றாண்டு காலக் கலைப் பணியானது இலங்கை முழுவதும் பரந்து விரிந்த தாகவும் உலகில் தமிழர் வாழும் பற தேசங்களையும் உள்ளடக்கிய தாகவும் என்றும் அழிக்க முடியாத தனித்துவமான புகழ் கொண்டதாகவும் காணப்படுகின்றது. 1967இல் கலைக்கோவில் என்னும் நிறுவனத்தைத் தொடங்கிய இவர் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கியதுடன் நடன ஆற்றுகைகளையும் மாணவர்களுடன் இணைந்து ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்புடன் வழங்கியதுடன் சைவ ஆலயங்களில் நடைபெற்று வந்த சின்னமேளம் எனப்படும் ஆடல் நிகழ்வுகளை மக்கள் புறந்தள்ளக் கூடிய வகையில் சிறந்த நாட்டிய நிகழ்வுகளையும் பொதுமக்களிடம் எடுத்துச் சென்றவர்.

1982இல் இவர் தலைமையிலான நாட்டியக் குழுவே முதல் முதலாக ழத்தமிழர் மத்தியிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப் பயணத்தை மேற்கொண்டது. மேலைத்தேசத்தவரும் வியக்கும் வண்ணம் ஏராளமான நாட்டிய நிகழ்வுகளை அங்கே மூன்று மாத காலம் தொடர்ச்சியாக ஆற்றுகைப்படுத்தி நாடு திரும்பினர். அதன்பின் இவரால் உருவாக்கப்பட்ட மட்டு திருமலை ஆடலணியுடன் 2000ஆம் ஆண்டு வட அமெரிக்கா சென்ற இவர் தனது நீண்டகாலக் கனவாக அடி மனதில் ஆழமாக வேரூன்றியிருந்த ஈழத்து ஆடல் துணுக்குகள் என்னும் ஆடல் நிகழ்வை உருவாக்கி நெறிப்படுத்தி ஆற்றுகை செய்து பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டார்.

நவரசமுத்திரா அபிநயங்கள் என்னும் நடனப் பகுதியை இவர் போன்று இந்தியாவிலோ இலங்கையிலோ இவரது ஆசிரியரான கோபிநாத் காலத்துக்குப் பின்னர் எவரும் வழங்கியதில்லை என்பது நடனவியலாளர்களின் கருத்தாகும். பதினேழுக்கும் அதிகமான ஆடற்கதை ஆக்கங்களை நெறிப்படுத்தி மேடையேற்றிய இவர் தனது அறுபதாவது வயதில் 870 ஆவது நாட்டியாஞ்சலி நிகழ்வை திருமலை. புனித சையப்பர் கல்லூரி அரங்கில் வழங்கி மகிழ்ந்தார்.

வருமானத்துக்கான தொழிலாகக் கலைத்துறையில் ஈடுபடாமல் நாட்டியக் கலையைத் தன் உயிராக நேசித்து வரும் இவர் தொள்ளாயிரம் அரங்குகள் கண்ட ஒரேயொரு ஆடற்கலை ஆற்றுகையாளராக ழத்தின் நாட்டியக்கலை வரலாற்றில் தடம் பதித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். கதகளி ஆடலை நமது மயப்படுத்திய இவர் ஏராளமான விருதுகளையும் தங்கப் பதக்கங்களையும் தனதாக்கிக்கொண்ட தேசியப்புகழ் கொண்ட ஒருவராகவும் விளங்குகின்றார்.

ஆடற்கலைக்கு அடிப்படையானது இசையாகும். அந்த இசையை எமதாக்கி எம்மை அடையாளப்படுத்தக்கூடிய முறையில் உருவாக்கி அவற்றுக்கு ஆடலமைப்புச் செய்தால் இங்கே முகிழ்த்திடும் ஆடல் நிச்சயமாக எம்மை அடையாளப் படுத்தும். இவ்வாறான முயற்சிகளின் ஊடாக ஈழத்து ஆடல் என்னும் புதிய பாணியையோ ஆடலையோ எம்மால் உருவாக்க முடியும். எனினும் தனிமனித முயற்சியால் இத்தகைய பணியை நிறைவேற்ற முடியும் என்று கருத முடியாது.


நுண்கலைகளைக் கற்பித்து வரும் உயர் கல்வி நிறுவனங்களின் முன்னெடுப்பும் ஊக்குவிப்புமே இவ்விடயத்தில் தேவையான ஒன்றாக உள்ளது. ஆனால் கலையுணர்ச்சி சிறிதளவும் இல்லாத அதிகாரிகள் இங்கே உயர் பதவிகளில் இருப்பதால் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமானதே. **கண்டிய நடனம் பரத நாட்டியம் என்னும் சொற்கள் மக்கள் வாழும் இடப்பெயர்களைக் கொண்டதாக இருக்கும் போது ஈழத்து ஆடல் ஒன்றை எம்மால் உருவாக்க முடியாதா என்னும் எண்ணம் என் மனதில் பல தசாப்தங்களாக இருந்து வருகின்றது.**

**■ வசாவிளான் தவமைந்தன்**

இறக்குமதிக் கோலங்களை அப்படியே அடுத்த பரம்பரையிடம் திணித்து விட்டு நாங்கள் கலாசூரி கலாபூசணம் என்று தற்பெருமை கொண்டால் போதுமா? இத்தகைய மனப்பாங்கு எமது இயலாமையை வெளிப்படுத்த வில்லையா? எமக்குச் சொந்தமான ஆடற்கலை ஒன்றை உருவாக்குதல் நமது தன்மானத்துடனான தனித்துவத்துக்கு எடுத்துக்காட்டாக அமையாதா? என்னும் ஆழமான சிந்தனைகளை உறுதியுடனும் தெளிவுடனும் இவர் கூறுகின்றார். ★

# வீக்கங்களுக்கு சிறந்தவை கொறுக்காய்ப் புளி இலைகள்






**கொறுக்காய்ப் புளி**

**வேறுபெயர்** - கொருக்காய்ப்புளி, கொறக்காப்புளி, ஈழப்புளி.

**தாவரவியற் பெயர்** (Garcinia cambogia) காசீனியா கம்போஜியா

**குடும்பம்** - Guttiferae (கற்றிஃபேரே)

**சிங்களப்பெயர்** - கொறக்கா

**சமஸ்கிருதப் பெயர்**- விருக்ஷாம்ல

**ஆங்கிலப் பெயர்**- Malabar Tamarind

கொறுக்காய்ப்புளி, கொடுக்காய்ப்புளி என்பன பேச்சுவழக்கில் ஒன்றுபோல இருந்தாலும் இவை இரண்டும் வேறு வேறான தாவர மூலிகைகளாகும். கொடுக்காய்ப்புளி கோணற்புளி என்றும் அழைக்கப்படும் என்றது Pithecellobium dulce என்னும் தாவரவியற் பெயரைக் கொண்ட ஒரு மரமாகும். இதன் கனிகள் இனிப்புச் சுவையுடையதாகவும் சிறுவர்களால் விரும்பியுண்ணத்தக்கதாகவும் உள்ளது.

கொறுக்காய்ப் புளியானது சிறு மர வகுப்புக்குரியது. ஈரலிப்பான இடங்களில் செழித்து வளரும். அடர்த்தியான கிளைகளையுடையது. மரப்பட்டை கருமை நிறம். பட்டை வெடித்து கரடுமுரடாக இருக்கும். தனி இலைகள், பெரியவை. நீள்வட்டம் அல்லது முட்டையுருவானவை. நுனி கூரானது. கரும்பச்சை நிறம். சிறிய பூக்கள். காய் மஞ்சள் அல்லது செந்நிறம். மரப் பட்டையிலிருந்து பிசின் வடியும்.

இதன் பழத்தை பழப்புளிக்குப் பதிலாகப் பாவிக்கலாம். குறிப்பாக தமிழ் மருந்துகள் சாப்பிடும்போது பழப்புளி பாவிக்கக் கூடாத சில நிலைமைகளிலும் பழப்புளி ஒத்துக் கொள்ளாதவர்களும் கொறுக்காய்ப் புளியைப் பாவிக்கலாம்.

**வீக்கத்துடன் கூடிய விரணங்களுக்கு**

கொறுக்காய்ப்புளியிலையை அவித்து அந்த நீரால் கழுவிவர வீக்கம் வற்றும்.

**கட்டுக்கு**

கொறுக்காய்ப்புளியிலையை தீயில் வாட்டிக் கட்ட உடைக்கும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 205

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. இரண்டரை டசின் தொகை
4. ஒரு பாத்திரம்
6. கூட்டம்
7. புகழ்
9. உதவும் ஏற்பாடு
11. வேறுபட்டு வருவது
12. பெண்கள் சேர்ந்து ஆடும் கிராமிய நாட்டியம்
13. பதில்
14. ஈரமான இடத்தில் வளரும்
16. தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கும் செயற்பாடு
18. தங்குமிடம்
19. கிடுகிடுவென உயர்வது
21. சூறாவளி
22. இம்மரத்தின் இலைகளை இந்துக்கள் பூசைக்குப் பயன்படுத்துவர்.

### மேலிருந்து கீழ்

1. பூரண சந்திரன்
2. பிரிப்பு
3. தென்னம் மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது
4. ஐஸ்வர்யம்
5. மதி
8. விபீஷணன் புத்திரி
10. உணவுத் தொகுதியில் நடக்கும் செயற்பாடு
12. வெயிலுக்கும் உதவும்/ மழைக்கும் உதவும்
13. குளிகை
15. அழிந்துபோன பின் மிச்சம்
16. தடி
17. ஒரு தோல் வாத்தியம்
18. ஊதும் கருவி
20. பெரும் நீர்த்தேக்கம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 203 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விவாகம் (4) பாதம் (6) வேட்டு (7) முல்லை (8) கடுக்கன் (10) வித (12) காளி (13) மாதிரி (14) பேய் (15) பாசி (16) தர (17) அணி (18) அதி (19) சம்சாரி (21) நகர (22) விசித்திரம்

**மேலிருந்து கீழ்**

(1) விவேகம் (2) வாட்டு (3) கடுக்காய் (4) பால் (5) தலைவிதி (7) முன் (9) கவி (11) தரித்திரம் (13) மாசி (14) பேரம் (15) பாணி (16) தசம் (17) அரிசி (18) அகர (20) சாவி (21) நதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 205**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 21.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலப்பெட்டியில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.205 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.03.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 203 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**சி.திலக்ஷன்,**
இல.108, என். இரட்சகர் ஆலய வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**வே.சந்திரலீலா,**
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

**3 ஆம் பரிசு**
**சு.அருள்செல்வி,**
4 ஆம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
**கு.பிரஜாத்,**
வட்டு - வடக்கு, சித்தங்கேணி.

**5 ஆம் பரிசு**
**சி. உதயகுமார்,**
கைதடி மேற்கு, கைதடி.

**பாராட்டுப் பெறுவோர்**

**சி.கீதநந்தினி,**
இல.47/15, கலைமகள் வீதி, கல்வியங்காடு.

**எச்.எஸ்.சர்மா,**
இல.56, மூத்தவிநாயகர் வீதி, முதலாவது ஒழுங்கை நல்லூர்.

**ர.பிரிந்தா,**
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.*

## காயும்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" பண்புடைய அதியமான், பகுத்தால் நெல்லிக்கனியின் பண்புக்கு இழுக்கென உணர்ந்து, கனியை முழுமையாக ஈந்தான் என்பதை வியந்த புலவர் ஒருவர்,

"கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவினை தீங்கனி ஔவைக்கு ஈந்த
அரவக் கடற்றானை அதிகன்"

எனப் புகழ்ந்துரைத்தமையும் காண்போமாக.

மேலும், இத்தகைய அமுதம் போன்ற கனிகள் தமிழகத்தில் இருந்தமையைக் கருத்திற்கொண்டே வள்ளுவப் பெருந்தகை,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந் தற்று" (குறள் 100)

எனக் கனியையும் காயையும் ஒப்பிட்டுக் குறள் பாடினார் எனக் கொள்ளுதல் ஏற்றதாகும். மேலும், நன்மை பயக்கக் கூடிய இன்சொல் பேசுவதை விட்டுத் தீமை விளைவிக்கக்கூடிய இன்னாத சொல்லை பேசுவதைத் தவிர்க்க வேண்டுமென வள்ளுவர் இலக்கணம் வகுத்த இந்தக் குறளுக்கு உரை செய்த பரிமேலழகர், கனி என்ற சொல், ஔவையார் உண்ட நெல்லிக்கனியையே குறிக்கும் என்றும், காய் என்ற சொல், காஞ்சுரங்காய் போன்ற தீமை விளைவிக்கும் காயையே குறிக்கும் என்றும் காட்டியுள்ளமையும் நோக்கத்தக்கது. நெல்லிக்கனி அமுதம் போல் நீண்ட ஆயுளைத் தருவது போல், இன்சொல் மக்களிடையே நீண்ட நட்பைப் பெற்றுத் தரும் என்பதும், இன்னாச் சொல் தீமை தந்து உயிருக்கு இறுதியையே தந்துவிடும் காஞ்சுரங்காய் போன்றது என்பதும் நாம் அறிந்த உண்மைகளேயாகும்.

இத்தகைய கருத்தினையே திருநாவுக்கரசு நாயனாரும் கொண்டிருந்தார் என்பதனை அவர் பாடியருளிய,

*" கொய்யுலா மலர்ச் சோலைக் குயில் கூவ*
*மயில் ஆலும் ஆரூ ராரைக்*
*கையினாற் தொழா தொழிந்து கனியிருப்பக்*
*காய் கவர்ந்த கள்வ னேனே"*

என்னும் தேவாரத்தின் மூலமும் அறிந்து கொள்வோமாக.

இத்தகைய அருங்கயைப் பெற்றும், அதனைத் தான் அருந்தாது, தக்கார் ஒருவருக்கு ஈந்து இன்பமுற்ற வள்ளல் அதிகமானை ஈன்ற தமிழ்நாடு அறநெறி வாழ்வில் தலைசிறந்தது என்பதனை இத்தகைய இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

## இறப்பை.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையுடன் இருந்த பிள்ளைகள் மெல்ல மெல்ல மாலாவுடன் சேர்ந்தார்கள். பிள்ளைகளைக் காரணம் காட்டி மனோகரனும் வரத் தொடங்கினான். மாலாவின் வீட்டுக்கு வரும் மனோகரன் தன்னுடன் மாலா எல்லாத்தையும் மறந்து இல்லறம் நடத்துவாள் எனக் கனவு கண்டான். வெறுப்பான அவளது நடவடிக்கைகளைப் பார்த்து மீண்டும் வார்த்தைப் பிரயோகமும் அடி உதைகளும் ஆரம்பமாகின. பிள்ளைகளும் தங்களின் எதிர்காலத்துக்காக நடந்தவைகளை மறந்து தந்தையுடன் வாழும்படி தாய்க்கு வார்த்தைகளால் சொல்லாது நடவடிக்கைகளால் காட்டினார்கள். பசியோடு கிடந்து சித்திரவதைகளைத் தாங்கி வளர்ந்த பிள்ளைகள் தகப்பனுக்காகத் தன் வேதனைகளைப் புரியாது இம்சைப்படுத்துகிறார்களே எனக் குமுறினாள். தனக்காக யாருமில்லை. அநாதையாகி விட்டவள் போன்ற பிரமையில் விரக்தியடைந்தாள். மரணத்தில் கூட மனோகரனை சந்திக்க விரும்பாத நிலையில் உயிரை ...

'வாழ்வில் எதையும் நான் அனுபவிக்கவில்லை
நானாக தேடிய வாழ்வை நானே முடிக்கிறேன்
எனக்கு நியாயம் சொல்ல யாருமில்லை
தற்கொலை தான் எனக்கு நியாயம்'

என் மரணத்தின் இறுதிக் கிரியைகளை மிகவும் எளிமையாகச் செய்து கிறிஸ்தவ முறைப்படி சபையாருடன் அமைதியாக நல்லடக்கம் செய்யுங்கள். என்னை சீரழியவிட்ட தாய், சகோதரர்களோ எனது கணவனோ எனக்கு எந்த கடமையும் செய்ய நான் அனுமதிக்க மாட்டேன். அறியாத வயதில் காதலுக்கு மரியாதை செய்து வாழ்வை கேள்விக்குறியாக்கும் பெண்களுக்கு இவ்வருட மகளிர் தினத்தில் எனது மரண ஊர்வலம் நல்ல பாடமாக அமையட்டும்" என இறுதியாக அவள் கைப்பட எழுதிய கடிதம்.

என்னை, என் எண்ணத்தை வேதனைக்குள் வீழ்த்திய போது கண்கள் நீர் சொரிந்தன. அவள் இன்னமும் மயக்க நிலையிலிருந்து மீளவில்லை. அவளது துயரங்களை நீக்க, அல்லது நீங்க அவளது முடிவு சரியானதா? அவளை இப்பொழுது காப்பாற்ற எடுக்கும் முயற்சி வெற்றி பெற்றுவிட்டால்....! என்மனம் துடித்தது அவளால் வாழ முடியுமா? அவளது கணவன் மனேகரன் மனந்திருந்தி இந்த மாலாவின் நல் வாழ்க்கைக்கு வழிசமைப்பானா? எனது மனம் குழம்பியது.

மாலா கண்விழித்து விட்டாள். அவளின் அருகில் இப்பொழுது அவளின் உயிரைக் காப்பாற்றிய வைத்தியர் வயதில் சிறிவர்.

"அம்மா ஏன் இப்படிச் செய்தீர்கள்? பிறந்தவர்களுக்கு இறப்பு நிச்சயமானது தான். ஆனால் வாழ்தல் என்பதே உங்களின் வரவுக்கான வெற்றி. பிறந்தவர்கள் வாழ்வதற்காகப் போராடி வெல்வதே வாழ்க்கை. பிறப்பு எவ்வாறு எம்மிடம் எம்மால் நாமே கேட்டுக் கொள்ளாமல் தரப்பட்டதோ? அவ்வாறே இறப்பும் எமது விரும்புக்குரியதாக வலிந்து அடையப்படுவதல்ல. அது வாழ்க்கை அல்ல. அது எமது பிறப்புக்கும் வாழ்க்கைக்கும் மகிமை தரும் முடிவாக இருக்க வேண்டும். தற்கொலை உங்களை மாத்திரமல்ல உங்கள் வம்சத்தையோ அவர்தம் மகிமையையோ குலைத்து விடுதல் என்றால் நீங்கள் பிறந்ததில் வாழ்ந்ததில் பெருமை இல்லையே. இனிமேல் இத்தகைய முயற்சியை செய்யாதீர்கள்". வைத்தியரின் வார்த்தைகளால் விழிப்படைந்த மாலா கண் கலங்கி நிற்கும் பிள்ளைகளையும் உறவினரையும் திரும்பிப் பார்த்தாள் அவளின் பார்வையில் வாழ்வதற்கான வாழவேண்டுமென்ற நியாயமான தீர்க்கமான துணிவான முடிவைத் தேடுவது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் கௌவியது காங்கிரஸ்

■ யமுனா





இந்தியாவின் சட்டபேரவைத் தேர்தல்களின் முடிவுகள் அனைத்தும் அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அந்த வகையில் கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழக சட்ட சபைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும்பான்மையான தொகுதிகளில் வெற்றிபெற்றது.

கட்சியின் தலைவி செல்வி ஜெயலலிதா தமிழக முதல்வராக மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டார். இதன் மூலம் அதுவரை தமிழக முதல்வராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணா நிதிக்கு மக்கள் தமது வாக்குப் பலத்தின் மூலம் தகுந்த பாடம் புகட்டினர் என்பது நிதர்சனம்.

இதுபோன்றுதான் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசம் உட்பட 5 மாநிலங்களில் இடம்பெற்ற இந்தியாவின் ''மினிப் பொதுத் தேர்தல்'' என்று அழைக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் கடந்த 6 ஆம் திகதி வெளியாகின. இதன்படி உத்தரப்பிரதேசத்தின் 403 சட்ட சபைத்தொகுதிகளில் 226 தொகுதிகளைக் கைப்பற்றியதன் மூலம் முலாயம் சிங்கின் சமாஜ்வாடிக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்றுள்ளது. இதுவரை அங்கு ஆட்சியில் இருந்த மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி 77 இடங்களில் மாத்திரம் வெற்றி பெற்றதன்மூலம் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது. இதனால் ஆட்சி அதிகாரத்தை இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாகக் கட்சி 50 இடங்களையும் காங் கிரஸ் கட்சி 38 இடங்களையும் கைப்பற்றி யுள்ளன. இது காங்கிரஸுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

> “ தேர்தலில் வெற்றி பெற்றவர்மீது தோல்வியைத் தழு விய தரப்பு குற்றம் சாட்டுதல் இயல்பான ஒன்றாகிவிட்டுள்ளது. தமது ஆட்சிக் காலத்தில் மாநில வளர்ச்சிக்காக மத்திய அரசு எந்தவிதமான உதவிகளையும் வழங் கவில்லை

ராகுல் காந்தி உட்பட முன்னணி காங்கிரஸ் தலைவர்கள் பலரும் மாநிலம் முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட போதிலும் காங்கிரஸுக்கு 38 இடங்கள் மாத்திரமே கிடைத்துள்ளன. இதனால் காங்கிரஸ் பெரும் அதிர்ச்சியில் உறைந்துள்ளது.

இந்தத் தோல்வி தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி செய்தியாளர் சந்திப்பின் போது,

''தவறான வேட்பாளர் தெரிவுதான் காங்கிரஸின் தோல்விக்கான முக்கியமான காரணம்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதே வேளை இந்தத் தேர்தல் தோல்வி, மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் இது கட்சிக்குப் ஒரு பாடமாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்றுள்ள சமாஜ்வாடிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் உத்தரப்பிரதேச முதல்வராக தமது மகனைத் தேர்வு செய்ய உத்தேசித்துள் ளார். அந்த வகையில் முதல்வர் பதவிக்கு அகிலேஷ்யாதவை நியமிப்பது குறித்து சமாஜ் வாடிக் கட்சியின் உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் பேரவை உறுப்பினர்கள் அகிலேஷ் யாதவை முதல்வராக்க வேண்டும் என்று கோரியா தாகவும் தெரிகிறது. அந்த வகையில் வெற்றி பெற்ற சமாஜ்வாடி கட்சி தலைவர் களும் ஆதரவாளர்களும் தமது வெற்றிக் கொண்டாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த கட்டமாக எதிர்பார்க்காத நிலையில் தோல்வியைத் தழுவிய பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியும் மாநில முதல்வருமான மாயாவதி, மத்திய அரசின் மீது பரபரப்பான குற்றச்சாட்டொன்றை முன் வைத்துள்ளார். இது ஒன்றும் ஆச்சரியமானதல்லவே. அரசியல் வாதிகளின் வழமையான குணாதிசயம்தான்.

அதாவது தேர்தலில் வெற்றி பெற்றவர்மீது தோல்வியைத் தழு விய தரப்பு குற்றம் சாட்டுதல் இயல்பான ஒன்றாகிவிட்டுள்ளது. தமது ஆட்சிக் காலத்தில் மாநில வளர்ச்சிக்காக மத்திய அரசு எந்தவிதமான உதவிகளையும் வழங் கவில்லை என்றும் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு மக்கள் அந்தக்கட்சி மீது அவநம்பிக்கை கொண்டிருந் தமையே காரணம் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் ஆட்சியமைக்கப் போகும் புதிய அரசால் உத்தரப்பிரதேச மாநில வளர்ச்சிகள் பின்னடைவு காண நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு நின்று விடாது கடந்த 8 ஆம் திகதி ஆளுநரைச் சந்தித்துத் தனது பதவி விலகல் கடிதத்தையும் கையளித்துள்ளார். ✱

■ கல்பனா

# தமிழனுக்கு எழுதப்படாத விதி?

தமிழனாகப் பிறந்துவிட்டால் வாழ் நாள் முழுவதும் துன்பம்தான் எனக் கூறும் அளவுக்கு நாட்டின்தமிழ்மக்களை தொடர்ச்சியாக துன்ப, துயரங்கள் வாட்டிவதைக்கின்றன. இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு எப்போது விடிவு காலம் பிறக்கும் என்ற அங்கலாய்ப்பு இன்று எம் சகலரது மனங்களிலும் நிலை பெற்றுள்ளது.

இயற்கையின் சீற்றம், போர் போன்றவற்றால் ஏற்பட்ட இழப்புக்கள் காரணமான துயரத்தில் இருந்து ஓரளவுக்கு மீளமுற்படுகின்ற போது , ஏதோ ஒரு வடிவத்தில் துன்பங்கள் விஸ்வரூபமெடுத்து தமிழ் மக்களை வாட்டி வதைக்கின்றன. அந்த வகையில் கிழக்கு மாகாண தமிழ் மக்களும் பல்வேறு சோதனைகளுக்கு முகம்கொடுத்து, இனிமேலாவது எமது வாழ்வில் வசந்தம் வீசாதா? என்ற எதிர்பார்ப்புடன் வாழ நேர்ந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது கல்முனை தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் பதவி வகித்த முதல்வர்கள் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கையில் நியாயமாகச் செயற்பட்டனர். ஆனால் தற்போதைய கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தமிழ்ப் பிரதேசங்களை புறக்கணித்து வருகின்றார் என்று அண்மையில் மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.



சம்பூர் பகுதி மக்கள் கடந்த காலத்தில் பல அழிவுகளையும், வேதனைகளையும் சந்தித்தவர்கள். இந்த மக்கள் தற்போது வேறு மாவட்டங்களில் உறவினர்கள் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வாழ்வைக் கழித்து வரும் நிலையில், இதுவரை காலமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை உடனடியாக நிறுத்துமாறு அரசு உத்தரவிட்டுள்ளமை, 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது' போல அவர்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த மக்கள் தற்போது பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் அளவுக்கு அவர்களது நிலை சென்றுவிட்டது. இந்திய அரசின் அனல் மின் நிலைய நிர்மாணிப்பை காரணம் காட்டி இந்த மக்களை மீளக் குடியமர்த் தாமலும் அவர்களுக்கான நிவாரணத்தை வழங்காமலும் இருப்பதால் வகையில் அடிப்படை உரிமை மீறலாகும். இந்த மக்கள் அரசின் நிவாரணத்தை மட்டும் நம்பி வாழ விரும்பவில்லை. தமது சொந்த இடத்தில் மீளக் குடியமர விட்டாலே போதும் என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கில் அமைந்துள்ள தமிழ் பாடசாலைகள் கூட அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் மட்டக்களப்பு, ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம் தமிழ் பாடசாலை என்ற ஒரே காரணத்தினால் அபிவிருத்தியில் காலா காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. 118 ஆண்டுகளைக் கடந்த இந்தப் பாடசாலை பல ஆண்டுக்களுக்கு முன்னர் கொண்ட கட்டடங்களுடனேயே இன்றும் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்திலும் தமிழ் மக்கள் கால காலமாக அரசியலிலும் சரி பொருளாதாரத்திலும் சரி நசுக்கப்பட்டே வருகின்றனர். இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வைத்தியசாலையானது கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின்போது 1963 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த வைத்தியசாலை கடந்த கால போர்ச் சூழல் காரணமாக கடும் சேதம் உற்றது. இதன்பின்பு எந்தவித அபிவிருத்தியையும் காணாத நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது.


ஆற்றில் மண் அகழ்வுக்கு பல்வேறுபட்ட இடங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மட்டக்களப்பு, செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள சந்தனமடு ஆற்றில் மண் அகழ்வதற்கு பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் தடைவிதிக்கப்பட்ட போதும், பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மண் அகழ்வில் ஈடுபட்டுவருகின்றார். கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள சந்தனமடு ஆற்றை அண்மித்த கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த வெள்ள அனர்த்தம் ஏற்பட அகழ்வு இடம் பெற்றமையே காரணம் என்று பல பேராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த ஆற்றிலிருந்து கடந்த மாதத்திலிருந்து தினமும் பல வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படும் செயலானது, செங்கலடிப் பிரதேசத்தில் மக்களை வாழவிடாது வீதிக்குக்கொண்டு வரும் நிலையை தோற்றுவித்துள்ளது.

முப்பது வருட காலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாகப் பறைசாற்றும் அரசு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டும் காணாதது போல் செயற்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்ந்தும் அபிவிருத்தி செயற்பாடுகளில் புறம் தள்ளப் படுவார்களா அல்லது அவர்களது பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு கிடைக்குமா? என்பதே தமிழ்மக்கள் மனங்களில் இன்று எழும் கேள்வியாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலைக்குடிசைகளுமின்றி அவலப்படும்

## ஒட்டுசுட்டான் மக்கள்



பாண்டியம்மா

ஓலைக் குடிசை என்றாலும் கிடைக்கிறதைக் கொண்டு ஒரு வேளை கஞ்சியாவது குடிச்சம். இப்ப கிடந்ததையும் இடிச்சுத் தரைமட்டம் ஆக்கிப் போட்டு அவங்கட பாட்டுக்கு இருக்கிறாங்கள் கஸ்டப்படுகிறது நாங்கள் தானே! வானம் கூரை, நிலம்தான் எமது படுக்கை என்றுஎங்கட வாழ்க்கைபோகுது.

இது கதையல்ல. வன்னி மாவட்டத்தின் ஒட்டு மொத்த நிலையே இதுதான். அதுவும் ஒட்டுசுட்டான் பிரதேச மக்களின் அவல நிலை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

போரின் போது இருந்த ஓலைக் குடிசை முதல் ஓட்டு வீடுவரை எல்லாம் மண்ணோடு மண்ணாகத் தரமட்டமாக்கப்பட்டு அங்கிருந்து மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டனர்.

மீளவும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்வு செய்யப்பட்ட போது தமது வீடு இருந்த காணியின் அடையாளம் கூடக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு எல்லாமே பற்றைக் காடுகளாகவும் பாம்புக்கும் கறையானுக்கும் வாழிடங்களாகக் காட்சியளித்தன.

இந்த நிலையில் மக்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்து கிடைத்த தறப்பாள்களைப் கொண்டு தற்காலிக் கொட்டகைகளை அமைத்து தமக்கான உறைவிடங்களைத் தேடிக் கொண்டனர். கிடைத்த தறப்பாள்கள் மூன்று பேர் தஞ்சமடைவதற்கே போதுமானதாக இருந்தது. பெண்களையும் குழந்தைகளையும் அதற்குள் விட்டு குடும்பத் தலைவன் காவல் நாய்களைப் போல் வீட்டு வாசல் முற்றம் என மழையிலும் பனியிலும் தமது உறக்கத்தைத் தொலைக்கின்றனர்.

ஆனால் மீள் குடியமர்வு செய்யப்பட்டு வருடங்கள் கடந்தும் இவர்களின் அவல நிலைக்கு மீள் குடியமர்வு அமைச்சு என்ன செய்தது. மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான இருப்பிடத்தை பறித்தெடுத்து அதனை மீளப் பெற்று கொடுப்பதற்கு என்ன செயற்பாடுகளை மேற்கொண்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசம் ஓர் பரந்துபட்ட காட்டுப் பிரதேசமாக இருக்கும் போது ஆறறிவு படைத்த மனிதனும் ஐந்தறிவு கொண்ட மிருகங்களும் ஒன்றிணைந்து காட்டிலேயே வாழ வேண்டிய பரிதாப நிலை.

" பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்" என்பது போல வறுமை ஒரு புறம் இவர்களை வாட்டி எடுக்கும் போது ஒரு சாண் வயிற்றுப் பசியைப் போக்க நாய் படாத பாடு பட வேண்டியுள்ளது. இந்த நிலையில் இதர தேவைகளை நிறைவேற்ற இவர்களால் என்னதான் செய்ய முடியும்.

அன்றாட கூலி வேலைகளைச் செய்து தனது குடும்பத்தின் பசி போக்க காடு மேடு என குடும்பத் தலைவன் வேலை தேடி அலையும் போது, இழந்த சொத்துக்களை மீளப் பெற்றுக் கொடுப்பது என்பது ஓர் கடினமாக விடயம்தான்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 27 கிராம சேவகக் பிரிவுகளில் உள்ளன. இந்தக் கிராம சேவகர் பிரிவுகளில் மீள் குடியமர்வுச் செயற்பாடுகளின் போது ஆறாயிரத்து 200 இற்கும் மேற்ப்பட்ட குடும்பங்கள் குடியமர்வு செய்யப்பட்டனர்.

ஆனால், இங்கு குடியமர்வு செய்யப்பட்டவர்கள் யாருக்கு யார் உதவி செய்ய முடியும். தனது குடும்பம். தனது பிள்ளைகள் தனது பசி என தனது குடும்பத்தின் சிந்தனை மட்டுமே ஒவ்வொரு குடும்பத்தையும் சேர்ந்தவர்களிடம் இருக்கும்.

வறுமை ஒரு காரணமாக இருந்தாலும் உதவி செய்வதற்கு மனம் இடம் கொடுத்தாலும் அவற்றை செய்ய முடியாத சூழலில் தான் அவர்கள் உள்ளனர்.

வாழ்க்கைக் செலவின் உயர்ச்சி மனிதனை இவ்வாறு இயல்படையச் செய்து விட்டது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் 27 கிராம சேவகர் பிரிவிலும் ஆறாயிரத்து 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் இன்று மூவாயிரத்து 420 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகள் அற்று நிர்கதியான நிலையில் உள்ளன.

"எலி வலை என்றாலும் தனி வலை வேண்டும்" என்று எமது பெரியவர்கள் சும்மா சொல்லி வைக்கவில்லை. மனித குணவியல்புகள் அவ்வாறு இருக்கும் போது இன்னொருவருடன் தங்கி வாழ்வது நீண்ட நாள் வாழ்வில் குடும்பத்தில் பிளவுகளைத்தான் கொண்டுவரும்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களில் மூவாயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு மட்டுமே அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏனைய இந்திய அரசின் வீட்டுத் திட்டம், நேர்ப் திட்டம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யூ.என். ஹபிற்றாட் போன்ற அமைப்புகள் ஊடாக நிரந்தர வீடுகளும், 'அரை நிரந்தர வீடுகளும், இருந்த வீடுகளில் திருத்தப் பணிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

இந்தத் திட்டம் மூலம் மீள்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களில் சரி அரைவாசிக் குடும்பங்களே பயன்பெற்றன.

இது இவ்வாறு இருக்கும் போது ஏனைய குடும்பங்களின் நிலை தொடர்பாக ஏன் அக்கறை கொள்ளப்படவில்லை.

இதனை விட ஆயிரத்து 735 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை எந்த விதமான வாழ்வாதார உதவிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்பதும் கவலை தரும் விடயமாகவே உள்ளது.

மக்களில் மீள் குடியமர்வுச் செயற்பாடுகள் வாழ்வாதார உதவிகள் அனைத்தும் செவ்வனவே நிறைவேற்றப் படுவதாகக் கூறும் அரசு ஒட்டு சுட்டான் பிரதேசத்தைப் போன்று வன்னி மாவட்டதில் இன்றும் எத்தனை குடும்பங்களை நிர் கதியில் தள்ளி இருக்கின்றது என்பது கேள்விக் குரிய விடயம்தான். மழையிலும், வெய்யிலும், பணியிலும் தமது உடலை வருத்தி நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கும் இத்தகைய குடும்பங்களை யார்தான் திரும்பிப் பார்க்கப் போகின்றார்கள்.

வன்னி மக்களின் அவல நிலையை வெளி நாடுகளுக்கு வாய்விட்டு கூறிப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகள் எங்கே போயின என்ற கேள்விகளும் எழுப்பப் படாமல் இல்லை. அரசின் ஆடம்பரச் செலவுகளுக்கும் பகட்டான அபிவிருத்திகளுக்கும் நிதியை ஏப்பம்விட்டு விட்டு மக்களை பரிதாபத்தில் தள்ளிய அரசு இனியும் எதைச் செய்வதாகத் திட்டம் போட்டிருக்கிறது.

காலங்கள் மாறினாலும் கொண்ட கோலங்கள் மாறாது என இதுதான் எமது வாழ்க்கை என்று தொடர்ந்து இப்படித்தான் வாழ வேண்டும் என்று இவர்கள் தலையில் எழுதி இருக்கிறதா என்ன. இருப்பிடத்தைக் கூடச் சரியாக அமைத்துக் கொடுக்க முடியாத அரசு இவர்களில் வாழ்வாதரத்தை எவ்வாறு உயர்த்த முன்வரும். வன்னி மக்களின் பரிதாப நிலை ஓர் தொடர் கதைதான். காணி இருந்தும் வீடில்லாமல், வீடிருந்தும் படுக்க இடமில்லாமல் நிம்மதியற்ற வாழ்வுதான் இவர்களைத் துரத்துகிறது.

எப்போது எமது பழைய வாழ்வு மீளக் கிடைக்கப் போகிறது என ஏக்கத்துடன் காத்திருக்கும் இந்த மக்களுக்கு விடிவு காலம் என்பது எப்போது? தொடர்ந்தும் நிர்கதியற்ற நிம்மதியற்ற வாழ்வு தானா இவர்களின் தலை எழுத்து. ✱

# வெளிவரும் ஆளுமைகள்

பிறேமினி

'இண்டைக்கு நான் இந்த ஓட் டோவை கையில எடுக்கிறன். இன்னும் ஒரு வருஷத்தில சுயமாக மினிபஸ் வாங்கி, சிறந்த சாரதியாகி என்னுடை குடும்பச் சுமையை இலகுவாக்கி சமுதாயத்தில் உயர் நிலைக்குவர வேண்டும் என்பதே என்னுடைய ஆசை'.

இது தனித்துவமாய் குடும்பச் சுமையைத் தாங்கி நிற்கும் ஒரு தாயின் சபதம்.

5 பிள்ளைகள், கணவன் நோய் வாய்ப்பட்டு இறந்துபோக குடும்பத் தின் சுமையை தன் தலையில் ஏற்றுக் கொண்டு சமூகம் விதித்த தடைகளைக் கடந்து வெளியில் வருகிறாள்.

சொந்தக் காலில் நின்று தொழில் ஒன்றைத் தேடவேண்டும். கல்வி ஆய்வு நிறுவனம் அவளுக்கு வழிசமைத்துக் கொடுத்திருக்கிறது.

இப்போது, அவள் தன்னைப் போல் குடும்பச் சுமையைத் தூக்கமுடியாது தள்ளாடிக் கொண்டு, சமூக வரம்புக்குள் கட்டுண்டு கிடக்கும் பெண்களையும் வெளியில்வரும்படி அறைகூவல் விடுகின்றாள்.

நான் வெளியில் வந்து, எனது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு முதலில் எனது கணவன் நல்லதொரு வழிகாட்டியாக இருந்தார். அவர் இறந்துபோக, எனது வெளிவருகைக்கு எனது பெற்றோர், சகோதரர்கள், அயலவர்கள், உயவுகள் என எல்லோருமே தட்டித் தாந்தார்கள்.

அதனால் இன்று நான் நிமிர்ந்து நிற்கிறேன். என்னைப் போன்ற பெண்கள் வெளியில் வருவதற்கு எங்கள் சமூகம் முதலில் முன்னிற்க வேண்டும். எங்களைப் போன்ற குடும்பத் தலைவர்களை இழந்த, போரால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பெண்களுக்கு நல்லதொரு வழியைக் காட்டுங்கள் என்பது அவரது நியாய மான கோரிக்கை. இன்று சுயதொழிலை ஊக்குவிப்பதாக இருந்தால் கோழி வளர்த்தல், தையல் மெசின் வழங்கல், பயிர்செய்ய விதைகள் கொடுத்தல் எனப் பெண்களுக்கென சில வரைமுறை களுக்கு உட்பட்டதாகவே தொழில்கள் அமைந்து இருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், யாழ்ப் பாணத்தில் முதல் தடவையாக ஓட்டோ செலுத்துவதற்குத் துணிச்சலும் தற்துணிவும் உள்ள பெண்கள் முன் வந்திருப்பது ஒரு புதிய வரமே.

அவர்களது எழுகைக்கு உந்து சக்தியாக இருந்து பயிற்சித் திட்டங்களை வழங்கி, பாதிக்கடன் சுமையைத் தாமே பொறுத்து - மீதிச் சுமையை மாதா மாதம் தாம் உழைக்கும் வருமானத்தைக் கொண்டு பயனாளிகளே மீளச் செலுத்துவதற்கான ஒரு வழியையும் காட்டி நிற்கும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதே.



யாழ்ப்பாணச் சமூகத்துக்கு என்று ஒரு கருத்தியல், பார்வை இருக்கின் றது. அந்தச் சமூகப் பார்வைக்குள் இருந்து, தம்மை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற வரையறைகளைக் கடந்து, முதல் கட்டமாக இவர்கள் துணிந்து வெளியில் வந்திருப்பது உண்மையிலேயே நல்லதொரு தொடக்க முயற்சியே.

101 ஆவது சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் பரபரப்பாகக் கொண்டாடப்பட்டு நிறைவுபெற்று விட்டது. வழமைபோலவே சாதனையாளர்களைத் திரும்பிப் பார்ப்பதும் ஆக்ரோசமாகக் கோஷங்களை எழுப்புவதும், சமவுரிமை சமத்துவம் பற்றித் தொண்டைத் தண்ணி வற்றப் பேசுவதாலும் பெண்களுக்கான உரிமைகள் வந்துவிடப் போவதில்லை. மாறாக தற்துணிவும், ஆளுமையும் உள்ள பெண்கள் தமது சொந்தக் காலில் நின்று சமூகத்துக்கு முன்மாதிரி யாக வாழ்ந்துகாட்ட வேண்டும். இவர்களின் செயற்பாடுகளே இனி புதிய வருகைக்கான தொடக்கப் புள்ளியாக இருக்கப் போகின்றது. உலகத்தில் பெண்கள் சாதனை களின் சிகரங்களைத் தொட்டுவிட்டார்கள். அதேபோல் எங்கள் தாய்க்குலமும் சிகரங்களை நோக்கி தங்கள் கால் தடங்களைப் பதிக்கட்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும், கல்வியும் விளையாட்டும் என மகிழ்வாக இருக்க வேண்டிய இந்தப் பருவத்தில், அவர்களை அன்போடும் ஆதரவோடும் அரவணைத்து நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்குமே உரித்தானது

# பிஞ்சுகளின் கரங்களில் அன்பை கொடுங்கள்

அருவி

வடக்கில் அண்மைக் காலத்தில் மிகப் பர பரப்பாக பேசப்படும் விடயங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் என்பது முதலிடத்தை வசிக்கின்றது. நாளாந்தம் ஊடகச் செய்திகளில், குறைந்தது ஒன்று, இரண்டாவது சிறுவர் துஷ்பிரயேகம் பற்றிய செய்திகளைத் தாங்கி வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இன்று வடக்கில் மட்டுமல்ல முழு உலகுமே எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக இருப்பது இந்த சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் எவராலும் மறுக்க முடியாது. உலகம் நாகரிகம் நோக்கி விரைவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நாளும் எங்கோ ஒரு மூலையில் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

முதலில் சிறுவர் துஷ்பிரயேகம் என்றால் என்ன என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். சிறுவர்களுக்கே உரிய உணர்வுகள் உரிமைகள், எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள் உயரிய சிந்தனைகள் மறுக்கப்படுகின்ற போது, பறிக்கப்படுகின்ற போது, சிறுவர்கள் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்படுகின்ற போது அவற்றை சிறுவர் துஷ்பிரயோகமாகக் கருதலாம்.

உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம் எனத் துஷ்பிரயோகங்களை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

இன்று தென்னாசிய நாடுகளில் சிறுவர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சட்டவிரோதமான செயல்களைப் புரிவதில் சிறுவர்களை ஈடுபடுத்தல், போரில் பயன்படுத்துதல் என எங்கு பார்த்தாலும் சிறுவர்கள் மீது பெரிய அம்புகள் பாய்ந்த வண்ணமே இருக்கின்றன.

அண்மைய யுனிசெப் அறிக்கையின்படி உலகில் 3 கோடி சிறுவர்கள் சாலை ஓரங்களில் வசிக்கின்றனர். 5 கோடி சிறுவர்கள்



பாதுகாப்பு, சுகாதாரமற்ற வேலைகளில் அமர்த்தப்படுகின்றனர். 70 லட்சம் பேர் அகதிகளாக வாழ்கின்றனர். 10 லட்சம் சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி கூடக் கிடைப்பதில்லை. 15 கோடி சிறுவர்கள் போதிய ஊட்டச்சத்தின்றி இருக்கிறார்கள்.

இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் நடைபெற்று முடிந்த போரின் பின்னர் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் தங்கி வாழ்ந்தாலும், இன்னும் பலர் உறவினர் வீடுகளில் தங்கி' வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைவிட வறுமை, குடும்ப வன்முறை, பெற்றோரின் பராமரிப்பு இன்மை, தந்தை குடிபோதைக்கு அடிமையாக தாய் குடும்பச்சுமையை தூக்க முடியாது அல்லாட, குடும்பத்துக்கு உதவுவதற்காய் சிறுவர்கள் என்ன தொழில் செய்கின்றோம் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காது கடின வேலைகளுக்கு அமர்த்தப்படுகின்றனர்.

இதனால் பாடசாலையிலிருந்து சிறுவர்கள் இடைவிலகுதல், இலக்கின்றி அலைதல், மதுவுக்கு அடிமையாதல், ஏமாற்றப்படல், சமூகக் குற்றச் செயல்களில் ஈடுபடல், பாலியல் தொழிலாளர்களாக சிறுவர்கள் மாற்றப்படல் போன்ற குற்ற செயல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சென்ற ஆண்டில் மட்டும் வடக்கில் 618 சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்று இருப்பதாக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தகவல் வெளியிட்டு இருக்கிறது. உண்மையிலே இந்தத் தகவல் பேரதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்கின்றது.

பொதுவாக சிறுவர்கள் எனப்படுபவர்கள் ஒன்று தொடக்கம் பதினெட்டு அகவையைக் கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் ஒரு நாட்டினுடைய வளமான சொத்துக்கள்.

பெற்றவர்களது அன்பும் பரிவும் பாடசாலைகளில் ஆசிரியர்களின் நல்வழிப் படுத்தலும் வழிகாட்டலும், வளர்ச்சியில் ஆதரவும் அரவணைப்பும் கிடைத்தால் போதும் புதிய உலகம் ஒன்றை படைத்து விடும் திறனும் வல்லமையும் அவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றது. இந்த வளமான சொத்தைக் காப்பாற்ற வேண்டிய சமூகப் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் சொந்தமானது.

அந்த வகையில் லீட்ஸ், டிப்லிங் நிறுவனங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து யாழ்.மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் நடத்திய சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இந்த நேரத்தில் சிறுவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும் வகையில் ப்யனுள்ளதாக அமைந்திருந்தது.

சிறுவர்கள் எப்படித் தம்மைத் தாமே பாதுகாக்க வேண்டும், சிறுவர்கள் தமக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்ற தளமாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.

எப்போதும், கல்வியும் விளையாட்டும் என மகிழ்வாக இருக்க வேண்டிய இந்தப் பருவத்தில், அவர்களை அன்போடும் ஆதரவோடும் அரவணைத்து நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்குமே உரித்தானது.

சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் என்ற சேற்றைஅள்ளி வீசும் கரங்கள், ஒரு பொழுது இந்தக் குழந்தைகளைப் பற்றி சிந்தித்தால் போதும். சிறுவர் துஷ்பிரயோகம் என்ற சொல்லே இல்லாமல் போய்விடும்-அந்த நாளின் வரவுக்காய் காத்திருக்கிறது நம் தேசம். ✱

# அமெரிக்க 'ரீமேக்'

ஆதங்கன்

சனத்துக்கு அலுப்பு வந்துவிட்டது. பலர் தூங்கியும் விட்டார்கள். நான்கு மணித்தியாலத்துக்கு முன்னர் ஆரம்பமாக வேண்டிய கூத்து இதுவரை தொடங்க வில்லை. திடீரென ஓர் அறிவிப்பு.


''இதுவரை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த காத்தவராயன் கூத்து இதோ ஆரம்பமாகிறது. காத்தானாக நடிப்பவர் எங்கிருந்தாலும் ஒப்பனை அறைக்கு வந்து சேரவும்''

இவ்வாறான நகைச்சுவை அறிவிப்புகளை முன்னர் அடிக்கடி கேட்க முடியும். கோயில் திருவிழாக்கள் முன்னர் விடியவிடிய நாடகங்களும், கூத்துக்களும் நடப்பது வழமை. அதன்போது பத்துமணிக்குத் தொடங்குவதாக விளம்பரப்படுத்தப்பட்ட ஆற்றுகைகள் விடிகாலை ஒரு மணி அளவில்தான் முக்கித் தக்கி அரங்கிற்குவரும். சில வேளைகளில் அதில் நடிப்பவர்கள் ஒரு சாமம் நித்திரை கொண்டும் எழும்பியிருப்பர். சிலர் முறியாத நித்திரையோடு மேடையேறி சம்பந்தமில்லாமல் உளறவும் செய்வர்.

ஆனால் இத்தகைய ஆற்றுகைகளுக்கு முன்னர் மேலே சொல்லப்பட்டதைப் போன்ற அறிவிப்பு ஒன்றைச் செய்வார்கள். இப்போதும் அதே போன்ற அறிவிப்பு சர்வதேச அரங்கில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. எல்லோரும் வரிந்து கட்டிக்கொண்டு ஆற்றுகையைக் கான தயாராகின்றனர்.

**அறிவிப்பு இதுதான்**

''இதுவரை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த இலங்கைக்கு எதிரான பிரேரணை இதோ ஜெனிவாவில் அரங்கேறுகிறது'' அமெரிக்கா என்ற பிரபல ஆற்றுகையாளர் விடுத்த அறிவிப்பென்பதால் அரச ஆற்றுகையாளர்கள் கொஞ்சம் சலசலத்துத்தான் போனார்கள். தாங்கள் பனங்காட்டு நரிகளாக அவர்கள் காட்டிக் கொண்டாலும், உள்ளூர என்ன நடக்குமோ என்று அஞ்சவே செய்தார்கள். ''பொடி ஸ்ட்ரோங். ஆனா பேஸ் மட்டும் வீக்'' என்ற தலைநகரம் வடிவேலு கணக்கில் பிலிம் காட்டிக் கொண்டிருந்தார்கள். மூளை உள்ளவர்கள் என்று நம்பப்படும் முக்கியமான அமைச்சர்கள் ஜெனிவா



பாதிக்கப்பட்டவர்களும் தமக்கு ஏதேனும் நியாயம் கிடைக்குமா? என்ற ஆவலை முகங்களில் ஏந்தியபடி இணையங்களிலும், பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வருகின்ற ஜெனிவா தொடர்பான செய்திகளை அக்கறையோடு சேகரித்துக் கொண்டார்கள்.

பெரிய பம்பாய் வெங்காயம் பார்ப்பதற்கு பிரமாண்டமாக இருக்கும். ஆனால் அதற்கு சின்ன வெங்காயத்துக்குள்ள காரமுமில்லை; ருசியும் இல்லை. ஒவ்வொரு இதழ்களாக பிரிக்க கடைசியில் எதுவும் எஞ்சாது. மிகைப்படுத்தி விளம்பரப்படுத்தப்பட்ட ஜெனிவா பிரேரணை ஒரு மாதிரி சபைக்கு வந்து விட்டது. ஆனால் வந்த பின்னர் தான் அது ஒரு பம்பாய் வெங்காயப் பிரேரணை என்பது தெரிகிறது.

ஏற்கனவே ஜனாதிபதியின் நெறியாளுகையில் முன்னாள் பிரதம நீதியரசர் சீ.ஆர்.டி.சில்வாவின் திரைக்கதை வசனத்தில் பாதுகாப்பு அமைச்சின் தயாரிப்பில் அமைச்சர்கள் டக்ளஸ், கருணா போன்றோர் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த, '' நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை '' என்ற பழைய கூத்தைத்தான் அமெரிக்கா ''ஜெனிவா பிரேரணை'' என்ற பெயரில் 'ரீ-மேக்' [மீள் உருவாக்கம்] செய்திருக்கின்றது. தம்மால் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை என்ற பெயரில் முன்னர் வெளியிட்ட பரிந்துரைகளை தாங்களே எதிர்க்கும் இலங்கை அரசின் நடவடிக்கைதான் வேடிக்கையானது. என்ன ஏதென்று தெரியாமலே அமெரிக்காவின் பிரேரணையை இலங்கை எதிர்க்க முடிவு செய்திருந்தது. ஏனெனில் எப்போதுமே குற்றமுள்ள நெஞ்சுதான் குறுகுறுத்துக் கொண்டே இருக்கும். கறைபடிந்த கரங்களைக் கொண்டிருக்கும் மஹிந்த வாதிகள் தம்முடைய குட்டுகள் வெளிப்பட்டு சர்வதேச தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்குமோ என்று ''ஓவராக'' யோசித்ததன் விளைவே ஜெனிவா பிரேரணையை எதிர்க்க எடுத்த முடிவு. இப்போது அரசுக்கு ஆறுதல். ஏனெனில் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மிகமிக அற்பமான உரிமைகளையே சிறுபான்மையினருக்கு வழங்குமாறு கூறியுள்ளது. அத்துடன் இறுதிக்கட்ட போரில் நிகழ்ந்த நிர்வாணப் படுகொலைகளை இட்டுக்கட்டிய நாடகம் என்று புறந்தள்ளியிருந்தது. புலிகளே பொதுமக்களை அதிகளவில் கொன்று குவித்தார்கள் என்று புளுகியிருந்தது. இப்போது அந்த அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு அமெரிக்கா பிரேரணை கொண்டுவந்ததன் மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேசமே ஏற்றுக்கொண்டுவிட்டதாக ஆகிவிட்டது. ஒரு வகையில் பேரினவாதிகளுக்கு இது வெற்றிதான். ஆனாலும் ஏதோ பரபரப்புக்காகவேனும் ஈழத்தமிழர்களுக்காக அமெரிக்கா கரிசனை காட்டுவதை எண்ணி இலவு காத்த கிளிகளான ஈழத்தமிழர்கள் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அருட்தந்தை
சூ.ம.ஜெயசீலன்

# மாவீரனைப் பெற்ற நான் ஏன் பயந்து கிடக்க வேண்டும் 13

## உணர்வுகளை இறக்கி வைத்த நேரம்

பால்குடித்த குழந்தையின் வாயில் இரத்தத்தை புகட்டியவன் பின்னாலேயே சென்றோம், எம் மகனின் மகளின் அங்கங்களை குதறியவனுடன் கோபத்தை வெளிக்காட்டாதபடி போனோம். சங்கறுத்தவனுடன் சமபந்தி காணவா முடியும். இருந்தாலும் என்ன செய்வது எங்கள் நிலமை அப்படி, நஞ்சு கொடுத்தவனுடன் நடக்கவேண்டிய துர்ப்பாக்கியம்.

துக்கத்தில் தூக்கம் மறந்த நாங்கள், எப்படியோ அந்த கட்டாந்தரையிலும் கால் நீட்டித் தூங்கிப்போனோம். எங்களைச்சுற்றி நாடகம் ஒன்று அரங்கேறுவது பற்றி யாதொரு உணர்வும் இன்றி கனவில்லா உறக்கத்தில் உறைந்து போனோம். சூரியன் எங்களை எழுப்பினான். கடற்கரையிலும், காட்டிலும், மேட்டிலும் காலைக் கடனில் வெட்கம் தொலைத்த நாங்கள், அங்கும் வெட்கம் மறந்து எங்களைத் தயார் செய்து கொண்டோம்.

காலை பத்து மணிக்கு அதிகாரம் காற்றில் மிதக்க இராணுவ வீரனின் குரல் எங்கள் செவிகளுக்குள் சில்லென்று வந்திறங்கியது. அவன் சொன்னதைச் செவிமடுத்தோம். 10 மணிக்கு அவனது அதிகாரிகள் நிற்குமிடத்தில் குழுமினோம். சந்தையில் நிறுத்தப்பட்ட ஆடுமாடுகள்போல, அச்சம் கருவிழியில் கவிதை எழுத நின்றோம். குழந்தைகளின் அழுகையும், பட்சிகளின் சத்தமும் நடக்க இருக்கும் அநியாயத்தைக் குறிப்பாய் உணர்த்தியதோ என்றுகூட இப்போது நினைக்கத் தோன்றுகின்றது. அப்படித்தான் அங்கு நடந்தது. எங்கள் எல்லோரையும் கும்பல் கும்பலாக நிற்க வைத்தார்கள். கையில் அவரவர் சொத்துக்களை வைத்திருக்குமாறு கூறினார்கள். பூம் பூம் மாடுபோல, அவன் சொன்னதையெல்லாம் செய்தோம். கட்டளை பறந்தது: வீடியோக்களும் கமராக்களும் தயாராயின.

உள்ளத்தில் கோபத்தை உருக்குலைந்த இதயத்தை, சமாதியான குடும்பத்தை கரடையனின் அயோக்கியத்தனத்தை அனைத்தையும் மறந்துவிட்டு நாங்கள் சிரித்தவாறு நிற்க வேண்டும். முகத்தில் நின்மதியான மகிழ்ச்சியை வெளிக்காட்ட வேண்டும் என்றான். நாங்கள் நாங்களாகவே நின்றோம். கருநாகம் படமெடுத்து முடித்தது. அடுத்து என்ன நடக்குமோ என எதிர்பார்த்திருந்த வேளையில் உயர் அதிகாரி உலக மக்களுக்குப் பேட்டி கொடுத்தார்.

கடலில் தத்தளித்த மக்களைக் காப்பாற்றி வந்திருக்கின்றோம். நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரிகள் இல்லை. அவர்கள் வாழவேண்டும் என்று அவர்களைவிட அதிக விருப்பம் கொள்கிறவர்கள் என்றெல்லாம் தொடர்ந்து பேசிக் கொண்டே சென்றார். நல்லவேளை புத்தர் காலையும், கையையும் மடக்கி அமர்ந்துவிட்டார். இல்லை என்றால் வந்து இரண்டு இழு இழுத்திருப்பார் அவர்களை என்று கூறி தனது கோபத்தை கொட்டி சிறிது மூச்சு வாங்கினார் அவர்.

அவ்வளவு மக்களும் அங்கே இருக்கிறாங்களே, அவர்களுக்கு சாப்பிட ஏதாவது கொடுக்கணுமே என்ற எந்தக் கவலையும் அவர்களுக்கு வரவில்லை. பேட்டி கொடுத்தாச்சு எங்கட முகத்தையும் காட்டியாச்சு. இனிமே நாங்கள் அவனுக்குத் தேவையில்லைத்தானே.

நா வறண்டு கிடந்த எங்களுக்கு பின்னேரம் நான்கு மணிவரைக்கும் குடிக்க கொஞ்சம் பச்சத்தண்ணிகூடத் தரவில்லை. சின்னப் பிள்ளைகளெல்லாம் பாவம் தாயின் மடியே கதியென்று முனகிக் கொண்டு கிடந்தாங்க. நான்கு மணிக்கு மேலதான் தண்ணி தந்தாங்க. அதுவும் சும்மா படம் காட்டினான். தண்ணி கொடுக்கிறமாதிரி படம் எடுத்தான். பிள்ளை அழுகிறதப் பார்த்து தாய் முதலில் ஆறுதல் சொன்னாள். நேரம் கடந்து பிள்ளைகளைத் தாய் அடிக்கிறா. இரண்டு பேருமே பாவம் ஆதங்கத்துடன் சற்று நிறுத்தினார்.

அடுத்த குழுவை கூட்டிக்கொண்டு வருவதற்குள் அங்க இருந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு எங்கள பஸ்சில கூட்டிக்கொண்டு போயிட்டாங்க, பிறகு சாவகச்சேரி இந்து கல்லூரியில் வைச்சாங்க. அங்கயிருந்து கொடிகாமம் முகாமுக்கு கொண்டு போயிட்டாங்க.

அந்த முகாமில் எங்களமாதிரி ஏகப்பட்ட மக்கள் இருந்தாங்க. மறுநாள் எல்லோரையும் ஓரிடத்தில் கூடச்சொன்னாங்கள். அவங்க அவங்க பிள்ளை குட்டிகளோடு அவன் முன்னால் அமர்ந்தோம். அந்த மீற்றிங்கில சிங்கள அதிகாரிகள் நிறையப்பேர் இருந்தாங்க அதில பெரியவரா இருந்தவர் முதலில் பேச ஆரம்பித்தார். அவரது தொனியே பயமுறுத்துவதாக இருந்தது.

உள்ளத சொல்லுங்க இயக்கமென்றா இயக்கமென்று சொல்லோணும். யாரிடம் மறைச்சாலும் எங்ககிட்ட மறைக்க கூடாது. அப்படி மறைச்சிங்களெண்டா உங்களுக்குதான் ஆபத்து. உங்க மக்களே உங்களக் காட்டிக் கொடுப்பாங்க. அதனால நீங்களே உண்மையை சொல்லிடுங்க என்றார்.

உண்மைதான் பாதர். எங்கட சனங்கள் அப்படித்தான். நட்புக்கும் நஞ்சுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். தமக்கு காரியம் ஆகணும் என்றால் பிறந்த சகோதரர்களைக் கூட காட்டிக் கொடுத்திடுவாங்க. முகாமில் இருக்கும்போதே நாள் ஆக ஆக சிலபேர் சிங்களவனோட சகசமா கதைக்கத் தொடங்கிட்டாங்க. அவங்களோட நல்லதா பேசி காரியம் சாதிச்சிட்டாங்க. அதனால அவன் சொல்லுறதில உண்மை இல்லாம இல்லை.

என்ன செய்வது என்று தெரியாம நான் குழம்பிப்போனன். இப்போது அடுத்த பெரிய அதிகாரி எல்லோரையும் ஒருமுறை பார்த்தபடி தன்குரலைச் செருமிக்கொண்டு பேசினார். உங்களில யாரெல்லாம் மாவீரர் குடும்பம்; எத்தனை பேர் போராளி குடும்பம்; கையை உயர்த்துங்க என்றான். அறிந்துகொள்ளும் ஆர்வத்தை விட அதிகார தொனியே அதிகமாக இருந்தது.

முதலில் மாவீரர் குடும்பம் என்றான். எங்கும் அமைதி நெஞ்சமெல்லாம் படபடப்பு. வலியச் சென்று பிணக் குழியில் விழுகின்றோமா என்ற ஐயம். துணிச்சலுடன் மூன்றுபேர் கையை உயர்த்தினார்கள். அவர்கள் அசந்து போனார்கள். எங்களைக் கேலியாக பார்த்தார்கள். நாங்கள் அவனிடம் பொய் சொல்கிறோம் என்பதில் அவனுக்கு கோபம் வரவில்லை. மாறாக எம்மவரின் வீரத்தைக் கேலி செய்ய ஆரம்பித்தான்.

இவ்வளவு மக்களில் மூன்று மாவீரர்தானா? என்று கேட்டான். காறித் துப்பினான். நான் யோசித்துப் பார்த்தேன். மாவீரனைப் பெற்ற நான் ஏன் பயந்து கிடக்க வேண்டும்? என் பிள்ளையுடன் சேர்ந்து துவக்கு தூக்கத்தான் முடியவில்லை. அவன் துவக்கு தூக்கியவன் என்று சொல்லவாவது செய்யலாமே. யாரோ காட்டிக் கொடுத்து கோழையாகப் போய் நிற்பதைவிட துணிந்து எழுந்து நிற்கலாமே என்று தோன்றியது.

பெயரை பதியுங்கள் என்றான் நான் முதல் ஆளாக எழும்பிப் போனேன். ம்... வாங்க என்றான். போராளியா என்றான். இல்லை மாவீரர் குடும்பம் என்றேன். ம்...எங்க... 2000 த்தில... வேற பெடியங்கள்... இல்லை... அவன் செத்திட்டான் தானய்யா... ஓம்...

வேற எதையும் கேட்பான்கள் என்பதால் வார்த்தைகளை அளந்தே பயன்படுத்தினேன். அதன் பிறகு எங்களை முகாமிற்கு கொண்டு போய் விட்டாங்கள்.

குடும்பத்துடன் நான் ஒன்றாகத்தான் இருந்தேன். முகாமில் சில மாதங்கள் இருந்தேன் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே இப்போது உலகில் உள்ள தமிழர்கள் எல்லோரும் ஈழத் தமிழர்களைப் பார்க்கும் போதெல்லாம் கேட்கும் கேள்வியை நானும் கேட்டேன்.

தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? பிரபாகரன் என்று காட்டப்பட்ட உடலைப்பற்றி நீங்கள் முகாமில் இருந்த நாள்களில் கதைத்திருக்கிறீர்களா?

இப்போது அவரின் குரலில் ஆவேசம் ஊற்றெடுத்தது. அதன் அனல் மூச்சுக்காற்றாய் முன்னேறியது. பொம்மையைக்காட்டி தலைவர் என்று சொன்னா நம்பி விடுவோமா..? எங்களுக்குத் தெரியாதா எங்கள் தலைவருடைய முகம் எப்படி இருக்கும் என்று. சொன்னவர், ஏன் இவ்வளவு பெரிய அரசு தமிழ் மக்களை ஆபத்திலிருந்து [illegible] டோம் என்று உ[illegible] யும் என்று ஆர்ப்பரித்து அலையும் அரசு அந்த உடலை அப்படியே போட்டு உங்களுக்கு கொடுமை செய்தவன்தானே அவனைக் கல்லால எறியுங்கள் என்று சொல்லிருக்கலாம் தானே கேள்வியில் அர்த்தம் இருந்தது.

இது பிரபாகரனின் உடல் இல்லையென்று அவனுக்குத் தெரியும். அப்படிச் செஞ்சா யுத்தத்தில் தப்பிய மக்கள் எங்கே நம்மை வகுந்துவிடுவார்களோ என்று கோபத்திலும் வீரம் தெரிந்தது அவரது முகத்தில்.

மூன்று மாதங்களுக்கு பிறகு வயது அடிப்படையில் என்னையும் மனைவியையும் விட்டிட்டாங்க. பிள்ளைகள் மேலும் மூன்றுமாதம் இருந்தார்கள்.

அங்க இருந்து இப்ப இருக்கிற இடத்திற்கு வந்தோம். இதுதான் எங்கள் பூர்வீக இடம். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்பதான் வந்திருக்கின்றோம். தொலைந்துபோன நகரத்தின் எச்சங்கள் மட்டும் இன்னும் அப்படியே இருக்கின்றன. இடிந்து கிடக்கும் வீடுகளைப் பார்க்கின்ற போதெல்லாம் எனது நினைவு பின்னோக்கியே போகின்றது. அது தரும் வலி, எதனாலும் ஆற்றமுடியவில்லை. நாங்கள் பேசித்திரிந்த வீதிகளும் கடற்கரையும் ஏறி இறங்கிய மரங்களும் எங்களது அலறலை இன்னும் அப்படியே வைத்திருக்கின்றன. நாங்கள் அமர்ந்து பேசிய திண்ணைகள் அடையாளமாய் இடிபாடுகளுடன் காட்சி தருகின்றன.,கோவிலும் எங்களைப் போலவே ஒளியிழந்து நிற்கின்றது. அவர் சொல்லச் சொல்ல எனது நினைவு தமிழகத் திற்குள் பயணித்தது.

தமிழ் நாட்டின் தென்பகுதியில் இராமேஸ்வரம் தீவில் கடலை முத்தமிட்டபடி தனுஸ்கோடி தீவு இருக்கிறது. அச்சிறிய தீவில் ஆனந்தம் பூரிக்க ஏறக்குறைய இரண்டாயிரம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். சுற்றுலா வந்தவர்கள்; அங்கே பணியாற்றுபவர்கள் என்று பலர் அங்கிருந்தார்கள்.இத்தீவில் தொடர்வண்டி நிலையம் இருந்தது. துறைமுகம் இருந்தது. சுங்க இலாகா பரிசோதனை நிலையம் இருந்தது.

1964 டிசெம்பர் 23ஆம் திகதி மதுரை இராமனாதபுரம் மாவட்டங்களில் வீசிய பேய் மழையுடன் கூடிய புயல் இந்த தீவைத் தாக்கியது. இரவு எட்டரை மணியிலிருந்து கூவ ஆரம்பித்த அலை, அதிகாலை மூன்று மணிக்கு மேல் நகரைத் துவைத்து எடுத்தது. அங்கிருந்த கட்டடங்கள் அனைத்தும் இடிந்து விழுந்தன.

பெரும்பாலான வீடுகளும், வீதிகளும் இருந்த சுவடு தெரியாமல் தண்ணீருக்குள் மூழ்கின. தனுஸ்கோடி சென்று கொண்டிருந்த தொடர் வண்டியை அலை விழுங்கியது. அதில் பயணித்த அத்தனைபேரும் மாண்டார்கள். நிலப் பகுதியில் கடைசியான மண்டபம் என்ற பகுதியும், இராமேஸ்வரம் தீவின் தொடக்கமான பாம்பன் என்ற பகுதியும், இணைந்த தொடர் வண்டிப் பாதையில் தூண்கள் மட்டுமே நின்றதால் அனைத்து உதவிகளுக்கும் அல்லலுற வேண்டியதாயிற்று.

இவை நடந்து 47 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இன்று எந்த மறுமுயற்சியும் இன்றி தனுஸ்கோடி தீவானது, புதைந்துபோன தொடர் வண்டிப் பாதை மிச்சத்தையும், அதன் நிலைய கட்டடத்தின் நிலைய சுவரையும் சுமந்தபடி காலம் கனியாதோ எம் நிலத்தில் மீண்டும் மலர்ச்சி வராதோ என்று கவனிக்கப்படாத கைப்பெண்ணாக ஏங்கி நிற்கின்றது.

இப்படித்தான் பெரியவர் சொன்ன இடமும் இருந்தது. அவர் என்னைச் சந்திக்கவரும் முன்பே நான் அந்த இடங்களைப்போய் பார்த்திருந்தேன்.

இப்ப வீடு கட்டித் தந்திருக்கிறான். ஒரு வடை எடுத்து சாப்பிட்டு முடிக்கிறதுக்கிடையில ஒருபக்கச் சுவரைப் பூசிட்டான். நாலு நாளில வெடிச்சிட்டுது. மண்ணை குழைத்து குழைத்து அடிப்பான் பூசுவான் எல்லாம் செய்வான். அந்த வீடுகளுக்கும் திறப்புவிழா வைத்தார்கள். எங்களை ஒரு அதிகாரி வந்து பார்த்தார். நீங்கள் எங்களுக்கு ஒன்று செய்ய வேணும் என்றார். உங்களுக்கு புதுவீடு கட்டித்தருகின்றோம் தானே நீங்கள் எங்களப்பற்றி நல்லதா சொல்லவேணும் என்றான்.

நாங்கள் வந்து ஏழுமாதம் ஆகிட்டுது உயர்பாதுகாப்பு வலையம் நீக்கியாச்சு. நீங்க குடியேறலாம் என்று சொன்னீங்க. எங்கட மக்கள் 56 குடும்பம் வந்திருக்கு. இவ் வளவு மக்களும் கொட்டிலோ குடிலோ ஒன் றும் இல்லை. இந்த வெக்கையில என்னென்று குடியேறுவது. நீங்கள் என்ன நினைக்கிறீங்க என்று கேட்டான். சரி அதுக்குத்தான் உங்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தாறோம் என்றான்.

அந்தப் பணத்தை உங்கிட்டயிருந்து வாங்கிறதுக்கிடையில மூன்றுவருடம் ஆகிடும். அதுவரை சாப்பாடு கஷ்டம். நாங்க பணத்தை மடியிலையா வைச்சு படுத்து தூங்கமுடியும் அத எங்க பாதுகாப்பா வைக்கிறது. முதல்ல இருபத்தி ஐயாயிரம் தருவோம் என்றான். அதநான் பாதுகாத்து வைக்கிற அளவுக்கு எங்கள பசிவிடாது. அவரிடம் அதற்கு பதில் இல்லை. சரிங்க ஐயா, கடல்ல இறங்க விடமாட்டிங்க இப்படிப்பட்ட இடத்தில என்னத்துக்கு எங்கள குடியேற்றினீங்கள்? கடல்ல இறங்க கூடாது என்றா எப்படி தொழில் செய்யிறது. நாங்கள் என்ன மண்ணையா சாப்பிடுறது?

இந்த இடத்தினுடைய பெயர் இன்னும் யாருக்கும் தெரியாது. இப்ப குடியமர்த்தினதால தான் தெரியவந்தது. இந்த நிலத்தின் பிரதிநிதியாக பேசுகின்றேன். இந்த வீடுகளில் உள்ள சகோதரர்கள் உங்கள் குடும்பங்கள் ஒரு நேரம் தங்கி இருக்குமா என்று கேட்டேன். அவர் அமைதியாக இருந்தார்.

வீடு திறப்பு விழாவுக்கு வந்தவன் உடனேயே போயிட்டான். அங்க வந்தவங்க ஒருசிலர் கேட்டாங்க அவர்களிடம் சொன்னேன். நாங்கள் வந்து சேரும்வரை உயர் பாதுகாப்பு வலையமாக இருந்த இடம் இது. நாங்க வன்னியில இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த உயிரைக்காப்பாற்றிக்கொண்டு வர எவ்வளவு பணம் செலவழிச்சோம். எங்கட பொருள்கள் எல்லாத்தையும் இழந்து நாங்கள் பசியில வந்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒருசில நாட்களான என்னுடைய நியாயத்தை கேட்டுக்கொண்டிருந்த அதிகாரி வழிமறித்தார். சரி ஐயா எங்களைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள் நல்லா கொஞ்சம் சொல்லுங்க என்றார். நான் நெடுக கஷ்டத்தை சொல்லிக்கொண்டுபோக அவன் இப்படி சொல்கின்றான் என்பது புரிந்தது. நான் டக்கெண்டு நிப்பாட்டிப்போட்டு, இந்த இடம் எமக்கு இல்லாம இருந்த இடம். இன்றைக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கு. வீடு கட்டிக் கொடுத்திருக்கு. கொஞ்சம் கொஞ்சமா எங்கள பீச்சுக்குத் தான் அனுமதிச்சிங்க. இப்ப இறங்கிப்போக அனுமதிக்கிறீங்கள். எங்கள முற்றுமுழுதா அனுமதிச்சாதான் நாங்கள் சரியான உழைப்பு உழைக்கலாம் என்று பேசிக்கொண்டிருக்கும் போதே மீண்டும் எம்மக்களின் ஏமாற்றத்தையும் எதிர்பார்ப்புக்களையும் ஏக்கங்களையுமே அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தேன். உள்ளத்தில் இருப்பதுதானே வரும்.


நான் சொன்ன எதற்கும் அவர்களிடத்தில் இருந்து பதிலே இல்லை. அமைதியாக இருப்பதுதானே ஆதிக்க சக்திகளான வல்லரசுகளின் குணமாக இருக்கின்றது.

இதனை சொல்லி முடித்தபோது கூட்டத்திற்கு நேரமாகிவிட்டது வாருங்கள் என்று கிராமத்திலிருந்து தொலைபேசி வந்தது. அப்ப நான் போயிட்டு வாறன் இயன்றால் மீண்டும் சந்திப்போம் என்று இருவரும் விடைபெற்றார்கள். மகனுக்கு வீரம் எப்படி வந்தது என்பதையும் புலிக்கு பிறந்தது பூனையாகாது என்பதையும் உணர்ந்தேன். பெற்றோர்கள் இத்தகைய உத்வேகத்துடன் தொடர்ந்து செயற்பட்டார்கள் என்றால் அடுத்த தலைமுறை நிச்சயம் ஈழத்தை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு பிறந்தது.

*(சந்திப்போம்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அதிரன்



# எதற்காக 'பிக் மச்'?

யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல நாட்டின் பல பாகங்களிலும் இப்போது 'பிக் மச் சீசன்' அதாவது பாடசாலைகளுக்கு இடையிலான மிகப் பெரும் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. பெரும் வியாபார, விளம்பர நிறுவனங்களின் அனுசரணையுடன் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு பெரும் தொகையான பணப் பரிசில்களும் வாரி இறைக்கப்படுகின்றன. கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதுடன் சிறந்த எதிர்கால வீரர்களை வளர்த்தெடுக்கும் நோக்குடன் இந்தக் கிரிக்கெட் போட்டிகள் நாடு முழுவதும் நடைபெறுகின்றன.

யாழ்.குடாநாட்டிலும் இந்தக் கிரிக்கெட் போட்டிகளுக்குப் பெரும் மவுசு இருக்கிறது. இவ்வாறான கிரிக்கெட் போட்டிகள் பெரும் கொண்டாட்டங்கள், கோலாகலங்களுடன் ஆரம்பமாகி நடைபெறுவது வழமை. இந்தக் கிரிக்கெட் போட்டிகளில் சில இப்போது 100 ஆண்டுகளைக் கடந்தும் தொடர்ந்து வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் போட்டிகளைக் கண்டுகளிப்பதற்கென இங்கு ஒரு ரசிகர் கூட்டமே இருக்கிறது. அது தவிர இந்தப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்து மட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்தும் அந்தந்தப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுப்பதும் வழமை. அந்தளவுக்கு மிகவும் எதிர்பார்ப்பும் விறுவிறுப்பும் கொண்டவையாக இந்தப் போட்டிகள் அமைந்துவிடுகின்றன. வழமையான கிரிக்கெட் போட்டிகளை விட இந்த 'பிக் மச்' போட்டிகள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் அடைந்து காணப்படுகின்றன. குறிப்பாகச் சில பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி - யாழ். மத்திய கல்லூரி இடையிலான 'வடக்கின் பெரும் போர்' , யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இடையிலான 'பொன் அணிகளின் போர்', யாழ். இந்துக் கல்லூரி - கொக்குவில் இந்துக் கல்லூரி இடையிலான 'இந்துக்களின் போர்' , தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி - சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இடையிலான 'நாயகர்களின் போர்' என்பன அதிக எதிர்பார்ப்பு மிகுந்தவையாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்த 'பிக் மச் சீசன்' ஆரம்பித்துவிட்டால் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் ஒரே கொண்டாட்டம் தான். இந்தப் போட்டிகளைச் சாட்டாக வைத்து பாடசாலைகளுக்கு 'கட்' அடிப்பது, பாடசாலை செல்லாமல் ஊர் சுற்றுவது போன்ற பல்வேறு செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவது வழமை. போட்டிகளுக்கு இரண்டு, மூன்று தினங்கள் இருக்கும்போதே மாணவர்கள் தமது இந்தத் திருகுதாளங்களை ஆரம்பித்துவிடுவர். பாடசாலை அதிபர்களும் ஓரிரு நாள்கள் தானே என்பதற்காக மாணவர்களின் இந்த விளையாட்டுக்களைக் கண்டும் காணாதது போல இருந்துவிடுவார்கள். 'பிக் மச் சீசன்' முடிவடைந்ததும் மாணவர்களின் இந்த விளையாட்டுக்களும் ஒருவாறு அடங்கிவிடும். இவ்வாறு இந்த 'பிக் மச் சீச'னில் பல சுவாரஸ்யங்கள் இடம்பெறுவது காலாகாலமாக இருந்து வருகின்றது.

ஆயினும் கடந்த ஒரு சில வருடங்களாக இந்தக் கிரிக்கெட் போட்டிகளின் பெயரால் அரங்கேற்றப்பட்டு வரும் அருவருக்கத்தக்க பல செயல்கள் பலரையும் விசனம் கொள்ள வைப்பதாகவே அமைந்து வருகின்றன. சில வருடங்களாகச் சாடைமாடையாக ஆரம்பமான இந்தச் செயல்கள் இந்தவருடம் இப்போது நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளின் போது உச்சக் கட்டத்தை எட்டிவிட்டமை பலரையும் அதிர்ச்சியிலும் ஆத்திரத்திலும் ஆழ்த்தியுள்ளதுடன் மாணவர்களின் எதிர்காலம் தொடர்பான அபாய மணியையும் அடித்திருக்கின்றன. அந்தளவுக்கு மிக மோசமான நடவடிக்கைகள் இந்த 'பிக் மச் சீச'னில் அரங்கேற்றப்பட்டுள்ளமை குறித்துச் சமூக ஆர்வலர்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளதுடன் இவ்வாறான சம்பவங்களை இப்போதே இனங்கண்டு முறியடிக்காவிட்டால் நிலைமை மோசமடைந்து விளைவு விபரீதமாகிவிடும் எனவும் கூறியுள்ளனர். எனவே பாடசாலை அதிபர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தி மாணவர்களை வழிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இந்த 'பிக் மச்' எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பது குறித்து சிறிது கூடச் சிந்திக்காமல் மாணவர்களில் ஒரு சிலர் போடும் குத்தாட்டம் ஒட்டு மொத்த மாணவ சமூகத்தையும் பாதிப்பதுடன் அவர்கள் மீதான அவப்பெயரையும் தோற்றுவிக்கிறது.

பிரபல பாடசாலைகளுக்கிடையிலான இந்தக் கிரிக்கெட் போட்டிகள் இப்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகவதற்குசில தினங்களுக்கு முன்னரும் போட்டிகள் நடைபெறும் தினங்களிலும் அந்தந்தப் பாடசாலைகளின் உயர்தர மாணவர்கள் சிலர் மேற்கொண்ட விரும்பத்தகாத நடவடிக்கைகளே இவ்வாறு பலரையும் விசனம் அடையச் செய்வதற்கான காரணங்களாக அமைந்துவிட்டன.

போட்டிகள் ஆரம்பமாவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் பாடசாலைகளிலிருந்து வீதியில் இறங்கும் மாணவர்கள் தத்தமது கல்லூரிகளுக்கு ஆதரவு கோரி மேளதாளங்களுடன் ஆரவாரம் செய்தவாறு யாழ். நகர் உட்படப் பல இடங்களையும் வலம் வருகின்றனர். பாடசாலை சீருடை மற்றும் சிவில் உடையுடன் மாணவர்கள் இந்த முயற்சியில் இறங்குகிறார்கள். இப்போது ஆரம்பிக்கப் போகிறது அவர்களின் 'பிக் மச்' சாகசம். இதற்குத் தமது பாடசாலைகளின் கொடிகளையும் அவர்கள் விட்டு வைப்பதில்லை. அவற்றை தடிகளில் கட்டி உயர்த்தி பிடிப்பார்கள் சிலர். வேறு சிலர் அந்தக் கொடிகளால் தங்களைப் போர்த்திக் கொள்வார்கள். இன்னும் சிலரோ அதற்கு ஒரு படி மேலே சென்று அந்தக் கொடிகளை இடுப்பில் கட்டித் தமது ஆடையாக்கிக் கொள்வார்கள். அத்துடன் சிலர் தமது பாடசாலைகளின் பெயர் பொறிக்கப்பட்ட ரீ-சேட்களையும் அணிந்திருப்பர். இவ்வாறு குறிப்பிட்ட தொகைகளைக் கொண்ட அணி அணியாக அவர்கள் திரள்வர். ஒன்று கூடிய பின் பாண்ட் வாத்தியங்கள், மேளதாளங்கள், பாடசாலைக்கு ஆதரவான கோஷங்கள் ஆகியவற்றுடன் அவர்களின் பயணம் தொடரும். இனித்தான் இருக்கிறது அவர்கள் செய்யும் முக்கிய திருவிளையாடல்கள்.

அணி அணியாகக் கூடிய மாணவர்கள் தமது கைகளில் ஒவ்வொரு தொப்பிகளை வைத்துக்கொள்வார்கள். அவை அவர்களின் 'கப் கலக்ஷன்' செய்வதற்கான அட்சய பாத்திரங்கள். வியாபார நிலையங்களை நோக்கி அவர்களது முதலாவது நகர்வு ஆரம்பிக்கும். அங்கே அந்தத் தொப்பிகளான அட்சய பாத்திரங்களை நீட்டி தமது பணவசூல் நடவடிக்கைகளை அவர்கள் கனகச்சிதமாக மேற்கொள்வர்.

சிறிது, பெரிது என்ற வேறுபாடு இல்லாமல் அனைத்து வியாபார நிலையங்களும் இவர்களது ரோந்து நடவடிக்கைக்குள் சிக்கிக் கொள்ளும். கடை வாசலில் திரண்டு இருப்பவர்களைக் கலைத்துவிட வேண்டும் என்பதற்காகக் கடை உரிமையாளர்களும் இவர்கள் வந்தவுடன் ஐந்தோ, பத்தோ உடனேயே கொடுத்தனுப்பிவிடுவார்கள். காரணம் தாமதமானால் இவர்கள் அங்கு செய்யும் வேலைகளை அந்தக் கடை உரிமையாளர்களால் சகித்துக் கொள்ள முடியாது. அதனால் அவர்கள் தூரத்தே வருவதைக் கண்டதும் கடை உரிமையாளர்களின் கையில் காசு 'ரெடி'யாக இருக்கும். இப்படி மாணவர்களின் இந்தப் பணவசூல் பயணம் நண்பகல் வரை தொடரும். இதன்போது பெருந்தொகையான பணம் அவர்கள் கைகளுக்கு வந்திருக்கும். அவர்கள் முகங்களில் அது நன்றாகத் தெரியும். இதன் பின்னர்தான் அவர்கள் தமது அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பார்கள்.

பெருந்தொகையான பணம் கையில் கிடைத்ததும் அவர்கள் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. அதனை எப்படியாவது கொண்டாடித்தானே ஆக வேண்டும். அதற்காக அவர்கள் தம்முடன் தமது கல்லூரியில் பயின்ற பழைய மாணவர்கள் சிலரையும் இணைத்துக் கொள்வார்கள். பழைய மாணவர்களும் இதில் கைதேர்ந்தவர்கள் என்பதால் அழைத்த மாத்திரத்திலேயே அவர்களும் மறுப்பு சொல்லாது இணைந்து கொள்வார்கள். இப்போது இரு தரப்பு இணைந்து கொண்டதால் அவர்களது பலம் இரட்டிப்பாகி விட்டது. இனிமேல் எங்களை யார் என்ன கேட்பது? இதுதான் அவர்களது அடுத்த கேள்வி. வசூலான பணத்துடன் பழைய மாணவர்கள் முன்னே நடக்க பின்னே நடக்கிறார்கள் இளைய மாணவர்கள். எங்கே என்று கேட்கிறீர்களா? இவ்வளவு நேரமும் பணத்தை வசூலிப்பதற்காக கடை கடையாக ஏறி இறங்கி களைத்துவிட்டார்கள் அவர்கள். அதனால் அவர்களுக்கு அடங்காத தாகம். தாகத்தைத் தீர்ப்பதற்கு தண்ணி தானே அடிக்க வேண்டும். வேறென்ன செய்ய முடியும். தண்ணி அடிப்பதென்றால் தண்ணீர் பந்தலுக்குத்தான் போக வேண்டும். அந்தப் பந்தல்கள் எங்கே இருக்கின்றன என்பது பழைய மாணவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். அதற்காகத்தான் அந்த அனுபவசாலிகளை இளைய மாணவர்கள் கூப்பிட்டிருக்கிறார்கள். பாடசாலைக் கொடி, பாடசாலையின் பெயர் பொறித்த ரீ-சேட், பாடசாலைச் சீருடை ஆகியவற்றைத் தாங்கித் தமது பாடசாலைக்கான அடையாளங்களையும் வெளிப்படுத்திக் கொண்டு தண்ணீர் பந்தல்களுக்குள் நுழைகிறார்கள் அவர்கள். வசூலான பணத்தைக் கொடுத்துத் தாகத்தைத் தீர்ப்பதற்காகக் குளிர்பானங்களை அல்ல சுடுபானங்களைக் கொள்வனவு செய்கிறார்கள் . அவற்றை அருந்தும் படலமும் அங்கேயே அரங்கேறுகிறது. வெயிலில் கால் கடுக்கக் கடை கடையாக ஏறி இறங்கி களைத்துப் போன அவர்களுக்கு உள்ளே போன இந்தச் சுடுபானங்கள் பெரும் உற்சாகத்தையும் புதுத் தென்பையும் தலைக்கேற்றி விடுகின்றன. பானங்களினால் உண்டான சூடு தலைக்கேறிய நிலையில் அவர்களது அடுத்த கட்டம் ஆரம்பமாகிறது.

சுடு பானங்களைப் பருகியதால் யாருடனாவது சூடாகக் கதைக்க வேண்டுமே. அதற்குத்தானே அங்கே தண்ணீர்ப் பந்தலில் இருக்கிறார்கள் பழம்பெரும் தண்ணிக்காரர்கள். அவர்கள் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள். இந்த இளசுகள் தாகம் தீர்க்கும் பாணியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். ஆயினும் அதன் பின்னர் ஒரு ருசியான நாடகம் அரங்கேறும் என்பது அவர்களுக்கும் தெரியும். இளசுகளின் சூடு தணியக் கூடாது என்பதற்காக அங்கு நிற்கும் பழைய மாணவர்கள் தமது கைக்கு வந்த பணக்கட்டுக்களை வைத்துக் கொண்டு இளைய மாணவர்களுக்குத் தண்ணீர் வார்க்கும் படலத்தை இடைவிடாது தொடர்ந்து கொண்டு இருந்தனர். இப்போது இந்த இளசுகளின் வாய்களிலிருந்து பழசுகளை நோக்கிச் சுடு சொற்கள் பறக்கின்றன. பதிலுக்கு பழசுகளும் தமக்கே உரித்தான பாணியில் பதிலடி கொடுக்கின்றன. ஆரம்பமாகியது நாடகம். வாய்ச்சொல் முடிவடைந்து இப்போது பானப்போத்தல்களும் கோப்பைகளும் பழசுகளை நோக்கி வீசியெறிப்படுகின்றன. பாய்ந்து வந்தன பழசுகள். அடிதடி கைகலப்பு. களேபரம் ஆனது தண்ணீர் பந்தல். வீதியால் போவோர் வருவோர் எல்லாம் திரண்டனர் அங்கு. பார்த்தால் பாடசாலைச் சீருடையில் மாணவர்கள். என்ன அநியாயம் இது. நெற்றியில் கையை வைத்துத் தலையைக் குனிந்து கொண்டார் ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர். நிலைமை இந்த அளவுக்கு வந்துவிட்டதை எண்ணி தனக்குள் நொந்துகொண்ட அவர் பாடசாலைகளின் அதிபர்களைத் திட்டித் தீர்த்தார். மாண வர்களின் இந்த எல்லை மீறிய அருவருப்புச் செயலுக்கு காரணம் அதிபர்கள் தான் எனப் பொரிந்து தள்ளினார்.

இது ஒன்றும் கட்டுக்கதையல்ல. நடைபெற்ற சம்பவம்தான். பாடசாலைகளினதும் மாணவர்களினதும் எதிர்காலம் கருதி பெயர், விவரங்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

இதுதான் நடக்கிறது இப்போது. கிரிக்கெட்டை வளர்ப்பதற்காக அந்தக் காலத்தில் ஆரம்பித்த இந்த 'பிக் மச்' இப்போது மாணவர் சமுதாயத்தை நாசமாக்கவா நடக்கிறது எனப் பலரும் விசனம் கொள்கிறார்கள். மாணவர்கள் கடைகடையாக ஏறி இறங்கி சேகரிக்கும் பணம் எதற்காக? அப்படி என்ன தேவை இருக்கிறது அவர்களுக்கு? பாடசாலை அதிபர்கள் இதனை சற்றேனும் சிந்திப்பதில்லை. அது மாணவர்களுக்கும் வாய்ப்பாகிவிடுகிறது. மாணவர்களின் பெயரைப் பயன்படுத்தி வெளியாரும் இந்தப் பண வசூலில் குளிர் காய்ந்து கொள்கிறார்கள். எனவே பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் உடனடியாக இந்த விடயத்தில் அக்கறை காட்ட வேண்டிய தேவையும் அவசியமும் இப்போது எழுந்துள்ளது. பாடசாலை நாள்களில் மாணவர்கள் வீதிகளில் இவ்வாறு படையெடுப்பதை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். விபரீதத்தை இப்போதே இனங்கண்டு சீர்செய்யாவிட்டால் தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்னமுழம் என்ன? என்பதுதான் நிலைமை ஆகிவிடும்.

இது Pig (பன்றிகள்) Match அல்ல Big (பெரிய) Match என்பதை அனைவரும் விளங்கிக் கொண்டால் நல்லது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி........

தருபவர் - வித்தியா

## 11.03.2012 முதல் 17.03.2012 வரை

### மேடம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் தொல்லைகள், சிரமங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் உருவாகலாம். குழப்பங்கள், தடுமாற்றங்கள் நேரும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் உண்டாகலாம். வீண் பேச்சுக்களால் அவதிப்படலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்ப்புகள் போட்டிகள் இல்லாமல், சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், பத்திரப் பதிவுகள் செய்தல் போன்ற வகையில் செலவுகள் உருவாகலாம். தந்தை வழியில் நன்மை அடையலாம். பல நாள்களாகத் தடைபட்ட சில வேலைகளை முடித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

### இடபம்

எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்து சில இடங்களுக்குச் செல்லலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். கடந்த கால இழப்புகளை ஈடுசெய்யும் வகையில், புதிய வருமானம் வரலாம். நினைத்த காரியங்களைச் சாதித்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. எதிர்பாராத திடீர் செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். பூர்வீக சொத்து விவகாரங்களிலும் சிக்கல்கள் ஏற்படலாம். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். குழப்பம், தடுமாற்றம் நேரும். வயிறு, வாயு உபாதை களைச் சந்திக்கலாம்.

### மிதுனம்

ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு உருவாகலாம். மற்றவர்களை கேலி பேசி அதில் இன்பம் காண்பீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பல நாள்களாக வாங்க நினைத்த சில பொருள்களை வாங்கலாம். புதியவர்கள் நட்புக் கிடைக்கும். பெரிய மனிதர்களின் உதவிகள், நட்பு கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதைத் தவிர்க்கவும். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை தேவை. பணம் கொடுக்கல் வாங்கல்களிலும் உஷாராக இருப்பது நல்லது. மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள்.

### கடகம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். தம்பதியர் இடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சிலரிடம் வாக்குக் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப்போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பல விடயங்களில் நீங்கள் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பணிபுரிவோர் தேவையற்ற, விரும்பத்தகாத இடமாற்றங் களுக்கோ, கடும் வேலைப்பளுவுக்கோ ஆள்படலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். புதியவர்களின் நட்புக் கிடைக்கும்.

### சிங்கம்

வீண் செலவுகள், விரயச் செலவுகள் உருவாகலாம். திடீர் வெளியூர் பய ணங்கள் செல்லலாம். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் பரபரப்பாகச் செயற்படலாம். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். நீண்ட நண்பர்கள் சிலர் மூலம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியான வருமானம் அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் கௌரவம் மேம்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகளுடன் ஏற்பட்ட பகை விலகி, பாசம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். அடிக்கடி கோபம் கொண்டு சிலருடன் சண்டை போடலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் தொல்லைகள் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம்.

### கன்னி

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். தேவையற்ற செலவுகள், அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம், பிரச்சினைகளைச் சந்திக்கலாம். சகோதரிகள், உறவுப் பெண்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மருத்துவ செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த நன்மைகள் [illegible] விவகாரங்களிலும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் [illegible] உண்டாகலாம். கொடுக்கல் வாங்கல்களிலும் பொறுப்பாகச் செயறபட வேண்டும்.

### துலாம்

பல நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம். உறவினர்கள் சிலருக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். ஊரார் மத்தியிலும், உறவினர்கள், நண்பர்கள் மத்தியிலும் உங்களின் செல்வாக்கு அதி கரிக்கும். பிள்ளைகள் வகையில் தொல்லைகள் உண்டு. வாகனங்களை பராமரிக்கவும், சகோதரிகள், தாயார், உறவுப் பெண்களின் தேவைகளை நிறைவேற்றவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சகோதரர்கள், நண்பர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள்.

### விருச்சிகம்

கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். தொழில் ரீதியாக பரபரப் பாகச் செயற்பட நேரிடலாம். அலைய நேரிடலாம். மருத்துவ செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் தொல்லையுண்டு. பிள்ளைகளின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். பெண்கள், திடீர் பயணங்கள், வாகன பராமரிப்பு போன்ற வகையில் செலவுகள் உருவாகலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### தனுசு

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச்செலவு போன்றவற்றால் அவதிப் படலாம். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டலாம். நண்பர்களுடன் கொண்டாட் டங்களில், தொழில் ரீதியான கூட்டங்களில் பங்கேற்கலாம். பணப் புழக் கத்துக்கு குறைவிருக்காது. எந்த வகையிலாவது தேவையான பணத்தை புரட்டிக் கொள்வீர்கள். பெண் பிள்ளைகளின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சகோதரர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். தண்டச் செலவுகள் ஏற்படலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். மனதுக்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

### மகரம்

காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். நீண்டநாளை நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். உறவினர்கள் சிலர் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களிடம் காட்டலாம். வழக்கத்துக்கு மாறான கூடுதல் வேலைப் பளு வால் அவதிப்படலாம். உடல் ரீதியான உபாதைகளால் திட்டமிட்ட சில வேலைக ளில் மாற்றங்கள் செய்யலாம். தொழில் ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கும். சிலர் இருக் கும் வேலையை விட்டு, விட்டு வேறு வேலைக்கு போய் விடலாமா என்ற அடிக்கடி மன உளைச்சல்களுக்கு ஆளாகுவர். பொறுப்புகளால் அடிக்கடி போராட்டமான நிலைமைக்கு ஆளாகலாம். தாயார் வழியிலும் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. குதர்க் கமான, குத்தலான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### கும்பம்

சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்து பெருமைப்படுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். பெண்களால் உருவான பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி பெறுவீர்கள். பல மாதங்களாகச் சேமித்த பணம் கணிசமாகக் கைக்குக் கிடைக்கலாம். பூர்வீக சொத்து விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். உங்களின் கோபம், வேகத்தைத் தூண்டும் வகையில் சிலர் நடக்கலாம். அதனால், அடிக்கடி பொறுமை இழக்கலாம். சகோதரர்கள் வகையிலும் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. பெரிய மனிதர்களின் அனுசரணை கிடைப்பது கடினம். எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். சபலங்களால், பேராசைகளால் தண்டச் செலவு களைச் சந்திக்கலாம்.

### மீனம்

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். உடல் சோர்வு, அசதி ஆள்கொள்ளும். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். ஆறுதலான, மாறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். நல்ல காரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். [illegible] காரியமும், நீங்கள் எதிர்பார்த்த வேகத்துக்கு நடக்காமல் இழுத்தடிக்கலாம். [illegible]ருக்கு சிறிய தவறுகள் கூட, சில நேரங்களில் பெரிய பிரச்சினைகளை உண்டாக்கலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிந்ததுவோ இமயம்?

டிலீப்



இந்திய அணியின் தடுப்புச் சுவராக 16 ஆண்டுகள் நிலைத்து நின்ற டிராவிட் என்ற இமயம் கிரிக்கெட்டிலிருந்து சரிந்திருக்கின்றது. அணிக்காக ஆடிய அந்த இமயம் நேற்று முன்தினத்துடன் கிரிக்கெட்டுடனான தனது உறவை முறித்துக் கொண்டுள்ளது.

1973 ஆம் ஆண்டு பிறந்து தனது 23 ஆவது வயதில் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த டிராவிட், இந்திய அணிக்காக பல பரிமாணங்களை எடுத்திருக்கின்றார். அணியின் துடுப்பாட்ட சுவராக, இலக்குக் காப்பாளராக, அணித்தலைவராக என்று அவரது பரிணாமங்கள் நீண்டு செல்கின்றன.

இந்திய அணியை டெஸ்ட் அரங்கில் தலைநிமிரச் செய்த வரலாற்றின் பக்கங்களில் அதிக தடவைகள் டிராவிட்டின் பெயரே பொறிக்கப்பட்டிருக்கின்றன. சச்சின், கங்குலி, அசாருதின் என்று நட்சத்திரங்கள் இருந்த காலத்திலும் இந்திய அணி மின்னவில்லை. டிராவிட் என்றவொரு தடுப்புச் சுவரினை இந்திய அணி எழுப்பிய பிற்பாடே இந்திய அணி டெஸ்ட் அரங்கில் தடம் பதித்தது.

டெஸ்ட் ஆட்டத்திற்கென்றே பெயர் பெற்றவராக டிராவிட் மாறினார். அதற்காக ஒரு நாள் ஆட்டங்களில் அவர் ஜொலிக்காமல் விடவில்லை. டிராவிட் அதிரடி ஆட்டங்களின் பக்கம் தனது பார்வையை திருப்புவதில்லை. நின்று நிலைத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதிலேயே குறியாயிருப்பார்.

இந்திய அணியினை பல தடவைகள் டிராவிட், லக்ஸ்மன் ஜோடி இணைந்து வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றது. இன்னிங்ஸ் தோல்வியை இந்திய அணி எதிர்நோக்கிய சமயத்தில் டிராவிட்டின் சதங்கள் இந்திய அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்திருந்தன.

இந்திய அணி 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் கங்குலியிடமிருந்த அணித்தலைமைப் பொறுப்பு டிராவிட்டுக்கு வழங்கப்பட்டது. அவ்வளவு தூரம் இந்திய கிரிக்கெட் நிர்வாகம் டிராவிட்டில் நம்பிக்கை வைத்திருந்தது. வழங்கப்பட்ட பொறுப்பை சரியாக டிராவிட் நிறைவேற்றிய போதும் 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ஆட்டத்தில் இந்திய அணி முதல் சுற்றுடன் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் டிராவிட்டின் ஆட்டமும் ஆட்டம் காணத் தொடங்கியது. அணித்தலைமையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் டிராவிட் அணிக்குள் உள்வாங்கப்படுவதும், வெளியேற்றப்படுவதுமாக இருந்தார். இந்த நிலைமை ஒரு நாள் தொடரில் மட்டுமே காணப்பட்டது.

ஏனெனில் டிராவிட்டின் நிலைத்து நின்றாடும் 'போர்மிலா' ஒரு நாள் ஆட்டங்களுக்கு 2007 இற்குப் பின்னர் பெரிதாகப் பொருந்தவில்லை. இந்திய அணியில் 2007 உலகக் கிண்ண தோல்வியின் பின்னர் பெருமளவான இளம் வீரர்கள் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் டிராவிட்டின் இடத்தை நிரப்புவதற்கு போதுமானவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்தவரையில், டிராவிட்டின் இடத்தை நிரப்புவதற்கு யாருமே கிடைக்கவில்லை. பெரும்பாலான இளம் வீரர்கள் பணம் கொழிக்கும் 'ரி–20' ஆட்டங்களையே விரும்புகின்றனர். அத்துடன் டெஸ்ட் ஆட்டங்களிலும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிப்பதையே விரும்புகின்றனர். இதனால் டிராவிட்டின் இடத்தை டிராவிட்டால் மட்டுமே நிரப்ப முடியும் என்பதால் டெஸ்ட் அணியில் எப்போதும் டிராவிட் உள்வாங்கப்பட்டார்.

இருப்பினும் 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெற்றி கொண்டதன் பின்னர் அந்நிய மண்ணில் டெஸ்ட் ஆட்டங்களில் அது தொடர் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியது. இந்திய அணியின் மூத்த வீரர்கள் சிறப்பாகச் செயற்படாததன் காரணமாகத்தான் அணி தோல்வியடைவதாக குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்பட்டன. இந்தப் பின்னணியிலேயே டிராவிட் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

இலங்கை அணி டெஸ்ட் ஆட்டங்களில் முரளிதரனை இழந்த பின்னர் அந்த இடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர் இல்லாது எவ்வாறு தத்தளிக்கின்றதோ, அதே போன்று இந்திய அணியும் டிராவிட்டின் இடத்தை நிரப்புவதற்கு தத்தளிக்கப் போகின்றது.


டிராவிட் தனது ஓய்வினை அறிவிக்கும் போது, "கிரிக்கெட்டில் வெற்றி பெறுவதற்காக பங்குபற்ற வேண்டுமே தவிர எப்போதும் எண்ணிக்கைகளுக்காக போட்டியில் பங்குபற்றக் கூடாது'' என்று தெரிவித்தார். டிராவிட்டின் வார்த்தைகளுக்குப் பொருத்தமானவர்களும் கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றால் சரி.

# தேவை புதிய வழி

உசிலமணி

எமது காலுக்கு அளவாகத்தான் சப்பாத்து வாங்க வேண்டுமே தவிர சப்பாத்தின் அளவுக்காக எமது காலை வெட்ட முடியாது. அதே போன்றுதான் சந்தை விலைக்கு அமைய எமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்ய வேண்டுமே தவிர எமது விலைக்கு சந்தை விலை அமைய வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களுக்கு நியாய விலை கிடைப்பதில்லை என்பது பெரும்பாலான விவசாயிகளின் உள்ளக் குமுறல். தற்போது திறந்து விடப்பட்டுள்ள சந்தை நிலையில் போட்டித் தன்மை என்பது முன்னைய காலங்களை விட அதிகரித்ததாகவே காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தாம் நிர்ணயித்த விலையில்தான் மக்கள் விவசாய உற்பத்திப் பொருள்களை வாங்க வேண்டும் என்று எமது உள்ளூர் விவசாயிகள் நினைப்பதும், மக்கள் விலைவாசி உயர்வான நிலையில் குறைந்த விலையில் விவசாய உற்பத்திப் பொருள்களை வாங்கவேண்டிய நிலையில் இருப்பதும் இயல்பானதே.



தற்போதைய நிலையில் யாழ். மாவட்ட சந்தைகளில் தம்புள்ளவிலிருந்து தாராளமாக மரக்கறிகள் தினமும் கொண்டு வரப்படுகின்றன. அந்த மரக்கறி வகைகளையே எமது மக்களும் வாங்குகின்றனர். இதன் காரணமாக எமது உள்ளூர் விவசாயிகளின் பொருள் விலைபோவதில்லை.

''கடனும் தருவாங்கள், மானியத்துக்கு உரமும் தருவாங்கள், எல்லாஞ் செய்து விக்கிற நேரத்தில வெளியில இருந்து மரக்கறியை கொண்டு வந்து இறக்கியும் விடுவாங்கள்'' என்கின்றனர் எமது உள்ளூர் விவசாயிகள்.

''எல்லாச் சாமானும் விலை கூடின நேரத்திலயும் மரக்கறி மலிவாய்க் கிடைக்குது. பெரும்பாலும் தம்புள்ள மரக்கறிதான். எங்களுக்கு இப்பத்தைய சூழ்நிலையில விலை குறைவாக எங்க மரக்கறி கிடைக்குதோ அதைத்தானே வாங்குவம்'' என்கின்றனர் நுகர்வோர்கள்.

இவ்வாறனதொரு சூழ்நிலையில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையினர் விவசாயிகளின் உற்பத்திக்கு நியாயமானதொரு விலையை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் முதற்கட்டமாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். [illegible] கறி விற்பனை [illegible] ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதற்கு அமைவாக தம்புள்ளவிற்கு ஏற்றுமதி செய்வதற்காக விவசாயிகளிடம் பொருள்கள் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தம்புள்ள வியாபாரிகளினால் குறிக்கப்பட்ட விலையிலும் கூடிய விலைக்கே தமது உற்பத்திப் பொருள்களை விற்க முடியும் என்று உள்ளூர் விவசாயிகள் தெரிவித்தனர். தமக்கு அதிகளவான உற்பத்திச் செலவாவதாகவும் அதனால் தாம் அதிக விலைக்கே விற்க முடியும் என்றும் [illegible] அதனால் மத்திய வங்கி [illegible] முயற்சி தடங்கல் நிலையை அடைந்தது.

உண்மையில் எங்களது விவசாயிகளின் விவசாய முறை காரணமாகவே இவ்வாறான அதிகரித்த உற்பத்திச் செலவு ஏற்படுகின்றது. தேவையற்ற செலவுகளைக் குறைத்தால் அவர்களாலும் இலாபத்தினை ஈட்ட முடியும். தம்புள்ளவிலிருந்து பயணச் செலவையும் உள்ளடக்கி எமது உள்ளூர் விலையிலும் குறைவான விலையில் தம்புள்ள மரக்கறியை விற்க முடியுமானால் எம்மால் ஏன் அது முடியாது. அவர்களும் இலங்கையில்தான் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். மலையில் படிக்கட்டு அமைத்து விவசாயம் செய்யும் அவர்களுக்கு குறைந்த உற்பத்திச் செலவே ஏற்படும்போது எங்களுக்கு மட்டும் ஏன் இவ்வாறு?

எங்களது உள்ளூர் விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப தமது உற்பத்திகளை மேற்கொள்ளவில்லை. இன்றும் பாரம்பரிய முறைமையிலேயே சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். விவசாயத் திணைக்களங்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி உள்ளூர் விவசாயிகள் நடப்பதேயில்லை.

நீர் இறைப்பின்போது தேவையற்ற விதத்தில் அதிகளவான தண்ணீரை பாய்ச்சுகின்றனர். இதனால் எமது நீர்வளம் வேகமாக அருகிக் கொண்டு செல்கின்றது. அத்துடன் இவ்வாறு நீர் பாய்ச்சுவதனால் மனிதக் கூலியும் அதிகளவில் விரயமாகின்றது. இவை விவசாயிகளின் உற்பத்திச் செலவை பன்மடங்காக்குகின்றன. தற்போதைய நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்றி தூவல் முறையில் நீர்ப்பாசனம் மேற்கொண்டால் நீர் வளமும் பாதுகாக்கப்படும், மனிதக்கூலியும் மிச்சமாகும்.

உள்ளூர் விவசாயிகள் தமது நடைமுறைகளை மாற்றியமைத்து புதிய தொழில்நுட்பத்துக்கு அமைவாக விவசாய உற்பத்திகளை மேற்கொண்டால், விவசாயிகளும் இலாபமடைவதோடு எமது மக்களும் நன்மையடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்

# ஈரான் வழி வகுக்குமா?

## பார்ப்போம் பொறுத்து, என்கிறார் ஒபாமா; பொறுத்தது போதும் என்கிறார் நெடன்யாகு

உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்

ஈரான் மீதான பொருளாதாரத் தடையின் விளைவுகளை இன்னும் சில காலம் பொறுத்துப் பார்க்கலாம் என்பது அமெரிக்க அதிபரின் உபாயம்- பொறுத்தது போதும்; எம்மை தற்காத்துக் கொள்ளும் உரிமை எமக்கு உண்டு என்கிறார் இஸ்ரேலிய பிரதமர் நெடன்யாகு. ஈரான் அணுகுண்டைத் தயாரிப்பதற்கு மிக அண்மித்த நிலைக்கு வந்துவிட்டதாக ஐ.நா. விலுள்ள மேற்கத்திய நாடுகள் பலவும் அபிப்பிராயம் கொண்டிருக்கும் நிலையில் அவ்வாறான திட்டம் எதுவும் தன்னிடம் இல்லையென்று ஈரான் கூறிவருகின்றது.

நிலைமைகளைப் பார்க்கையில் ஈரானின் நடவடிக்கைகள் சந்தேகத்தை எழுப்புபவையாகவே உள்ளன என்று ஐ.நா. வட்டாரங்கள் கருதுகின்றன. சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் பிரதிநிதிகள் சமீப காலத்தில் இரண்டு முறை ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுவிட்ட போதிலும், ஈரானிய அதிகாரிகளிடம் தாம் எதிர்பார்த்த விபரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை.

அத்துடன் ஈரான் நடத்தும் அணு சக்தி உலைகள் இருக்கும் பகுதிகளுக்கோ யுரேனிய சுத்திகரிப்பு நிலையங்களுக்கோ, அணுசக்தி முகவர் அமைப்பினர் அனுமதிக்கப்படவில்லை. இது ஈரான் மீதான சந்தேகங்களை அதிகரித்துள்ளது. ஒரு வேளை அணு குண்டு தயாரிப்பில் ஈரான் வெற்றி பெற்றிருக்கவும் கூடும் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இந்த நிலையில் ஈரான் அணு குண்டைத் தயாரித்துவிட்டால், அது தமக்கே பெரும் ஆபத்தாக முடியும் என்று இஸ்ரேல் கவலை கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஈரான் மீது ராணுவ நடவடிக்கைகளை எடுத்து, அதன் அணு உலைகளை அழித்துவிடும் திட்டமொன்றை இஸ்ரேல் தீட்டியிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இது பற்றி பேச்சு நடத்தவே இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நெடன்யாகு நியுயோர்க் சென்று பராக் ஒபாமாவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நெடன்யாகு நியுயோர்க் செல்லும் முன்பு கருத்து வெளியிட்ட போது தனது நாட்டுக்கு தற்காப்புக்கான உரிமை உண்டு என்று வலியுறுத்தியிருந்தார். அவர் இவ்வாறு கூறியமைக்கு இஸ்ரேல் மீது ஈரான் வெளிப்படையாகக் காட்டிவரும் பகைமை உணர்வே காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஈரானிய அதிபர் மஹ்மூத் அகதி நிஜாத் பல்வேறு சமயங்களிலும் இஸ் ரேல் மீதான பகைமை உணர்வுகளை வெளியிட்ட வேளைகளில் இஸ்ரேல் நாடு நிலைத்து இருபதற்கான உரிமை இல்லை என்றவாறு கூறிவந்துள்ளார். எனவே ஈரான் அணு ஆயுதம் ஒன்றை உருவாக்கி விடுமானால் நிச்சயமாக இஸ்ரேல் மீதே அதன் முதல் குறிக்கோள் அமையும் என்று இஸ்ரேல் கருதுவது நியாயமாக இருக்கலாம். அதனால் அப்படியான ஒரு நிலைமை ஏற்படாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அந்த நாடு அவசரப்படுவதாகத் தெரிகின்றது.

### அமெரிக்க நடவடிக்கை

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் இஸ்ரேலுக்கு முந்தியே அமெரிக்கா ஈரான் மீது போர் நடவடிக்கையொன்றை மேற்கொண்டாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள் சர்வதேச அவதானிகள். அதற்கு வேண்டியதெல்லாம் ஈரான் அணுகுண்டு ஒன்றை தயாரிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறது- அல்லது அணு குண்டு ஒன்றை தயாரித்து விட்டது என்பதற்கான ஆதாரம் தான்.

இதுவரைக்கும் சந்தேகம் எழுந்துள்ள அளவுக்கு ஆதாரம் கிடைக்கவில்லை. ஆதாரம் கிடைத்தால் நிச்சயமாக அவ்வாறான எதிர் நடவடிக்கையொன்றில் அமெரிக்கா இறங்குவது சாத்தியமே. அதனால் தான் அவசரப்பட்டு ஈரான் மீது தாக்குதல் எதையும் நடத்துவது பெரும் ஆபத்தாக முடியும் என்று பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

ஈராக் மீது நடவடிக்கை எடுக்குமுன் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் எதுவும் பின்னர் நிரூபிக்கப்படாமல் போனமையை அமெரிக்க அதிபர் கருத்தில் கொண்டிருக்கிறார் என்று தெரிகின்றது.

இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்காவுக்குப் போய்சேரும் முன்னதாக பராக் ஒபாமா வெளியிட்ட ஓர் அறிக்கையில் சரியான சமயம் ஏற்படும் முன் ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கலாகாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

''அமெரிக்க அதிபர் என்ற முறையில் நான் சும்மா பிதற்றிக் கொண்டிருக்கவில்லை என்பதை இஸ்ரேல் விளங்கிக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று அட்லாண்டிக் என்ற சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் ஒபாமா தெரிவித்திருந்தார்.

எமது எண்ணம் என்ன என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருப்பது எமது கொள்கைக்குரியது அல்ல. ஆனால் ஈரான் அணு ஆயுதம் ஒன்றைக் கொண்டிருக்கலாகாது என்று அமெரிக்கா கருதுகிறது என்றார். நாம் என்ன சொல்கிறோம் என்பதையே அர்த்தப்படுத்துகிறோம். இதை ஈரானும் இஸ்ரேலும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார் ஒபாமா.

தொஹ்ரானை [ஈரான்] அரசியல், பொருளாதாரம் மற்றும் ராஜதந்திர உறவுகளில் தனிமைப்படுத்த வேண்டும் என்பது எமது உபாயம். இதில் ராணுவ செயலும் உள்ளடங்குகிறது. இதை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன் என்றார்.

இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்கா செல்லும் வழியில் கனடாவில் தரித்தபோது, ஈரான் மீது ஏற்பட்டுள்ள சந்தேகத்தை அந்த நாடு இல்லாமல் செய்வதாய் இருந்தால் அந்த நாடு கோம் பகுதியில் பூமிக்கடியில் வைத்திருக்கும் யுரேனிய சுத்திகரிப்பு நிலைய வசதிகளை பிரித்து ஒதுக்க வேண்டும். யுரேனிய செறிவூட்டலை நிறுத்த வேண்டும். மருத்துவதேவைகள், அணு மின்சாரம், ஆகியவற்றுக்குத் தேவையானவற்றுக்கும் அப்பாலான செறிவூட்டப்பட்ட அனைத்து யுரேனியத்தையும் அப்புறப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெடன்யாகு, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் நடத்தியுள்ள பேச்சுக்களின் விவரம் முழுமையாக இல்லாவிட்டாலும் அதன் முக்கிய பகுதிகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

ஈரான் மீது ராணுவத்தாக்குதல் எதனையும் நடத்துவதற்கான தீர்மானத்தை இஸ்ரேல் எடுக்கவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்க அதிபரிடம் வலியுறுத்தியுள்ளார் என்று தெரிகின்றது.

இப்பொழுது அமுலில் உள்ள ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் எந்த அளவுக்கு பயன் அளிக்கின்றன என்பதைக் கண்டறிய இன்னும் சிலகாலம் பொறுத்திருக்கவேண்டும் என்பதில் இரு தலைவர்களும் ஒருமித்த கருத்து தெரிவித்திருந்தாலும், ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை நிறுத்தச் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக இருதலைவர்களுக்குமிடையில் கருத்து முரண்பாடு நீடிக்கவே செய்கிறது. இஸ்ரேல் நாடு தனது தலை விதியைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தானே கொண்டிருக்க வேண்டும் என்று [illegible] இஸ்ரேலிய பிரதமர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

கடைசியாகக் கிடைத்துள்ள ஒரு செய்தியின் படி மேற்குநாடுகளுடன் தனது அணுசக்தித் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதாகவும் இந்த நடைமுறையை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெடன்யாகு வரவேற்றிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### சீன கிராமத்தில் மக்கள் புரட்சி

சீனாவில் நடைபெறும்ஒரு கட்சி ஆட்சி முறைக்கு சவால் விடுத்து வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அந்த நாட்டின் தென்பகுதியில் ஒருகிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் குவாங்டொன் மாநிலத்தில் வூக்கான் என்ற கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஊழல் அதிகாரிகளுக்கு எதிராக போராட்டம் நடத்திவந்த கிராம வாசிகள், கடந்த சனிக்கிழமையன்று கிராம சபைக்கான தேர்தலில் பல உறுப்பினர்களை போட்டியிடச் செய்து நடத்தி முடித்தார்கள். இதன் மூலம் சீனாவில் ஜனநாயக நடைமுறைகளுக்கு மேலும் வழிவகுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

சீனாவின் உள்ளூர் பகுதிகளில் உள்ள கிராமங்களில் தேர்தல்கள் நடைபெறுவது வழக்கம் தான். இந்தத் தேர்தல்களுக்கு அதிகாரிகளே வேட்பாளர்களை நியமிப்பார்கள். அப்படி நியமிக்கப்படுபவர்கள் எதிர்ப்பேதும் இன்றி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வூக்கான் கிராமத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. கிராமவாசிகள் அதிகாரிகளின் அதிகாரத்துக்கு பணியமறுத்து எதிர்த்து நின்றார்கள். தங்கள் நிலங்களை பல ஆண்டு காலமாக ஆக்கிரமித்து வந்தவர்கள் என்று கூறி அதிகாரிகளைத் துரத்தி படித்துவிட்டு தேர்தலை நடத்தினார்கள். ஏழு குழு உறுப்பினர் பதவிகளுக்கு 21 பேர் போட்டிக்கு நின்றார்கள். கடந்த டிசெம்பரில் இந்தப் பகுதியில் ஒரு வாரத்துக்கு மேல் மக்கள் நடத்திவந்த போராட்டங்களின் பின்னர் சுதந்திரமான தேர்தல்கள் உட்பட, பலசலுகைகளை வழங்க அதிகாரிகள் முன்வந்தார்கள்.

குவான்டொங் மாகாணம் சீனாவின் அரை சுயாட்சி உரிமைபெற்ற ஹொங் கொங் பிரதேசமாகும். தேர்தலை சுயேச்சையாக நடத்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை கிராம வாசிகள் ஏதோ களியாட்ட விழாபோல் கொண்டாடி மகிழ்ந்தார்கள். ஏராளமான பெண்கள் தமது குழந்தைகளோடு வாக்களிக்க வந்திருந்ததோடு வயதான பெண்களும் வாக்களிப்பு நிலையங்களுக்கு தள்ளாடியபடி வந்திருந்தார்கள்.

### சிரிய புரட்சிப் படைகளுக்கு அமெரிக்கா உதவி வழங்கும்

உலக நாடுகளையோ, ஐ.நா.வையோ, அரபு நாடுகளையோ கவனத்தில் கொள்ளாமல் தனது நாட்டு மக்கள் மீதோ யுத்த தாங்கிகளாலும் பீரங்கிக் குண்டுகளாலும் தாக்கி நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றொழித்திருக்கும் சிரியாவின் அதி பர் பாஷார் அல் ஆசாத்துக்கு எதிராக, ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தி வரும் எதிர்ப்பாளர்களுக்கு உயிர்களைக் கொல்லாத வகையிலான உதவிகளை வழங்குவது பற்றி அமெரிக்கா ஆலோசித்து வருகின்றது.

சிரியா அதிபர் பாஷார் அல் ஆசாத்தை பதவியிலிருந்து இறங்கும்படி கோரி எதிர்ப்பாளர்களும் ராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களும் ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள்.

ஆசாத்தின் கொடுங்கோலாட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள மக்கள் மீது ஆசாத்தின் படைகள் கண் மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதல்களை நிறுத்தும்படியும், மக்கள் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கும் படியும் ஐ.நா.வும் அமெரிக்கா போன்ற நாடுகளும் கோரிக்கை விடுத்து வந்துள்ளன. அரபு லீக்கும் தனது பிரதிநிதிகள் குழுவொன்றை சிரியாவுக்கு அனுப்பி, அமைதியை ஏற்படுத்த முயன்றது. அவை எதற்கும் ஆசாத் அசையவில்லை. போராடி வரும் மக்களுக்கெதிரான தமது தாக்குதல்களை அதிகரித்துள்ளாரே தவிர, குறைக்கவில்லை. அவரைக் கண்டிக்கும் வகையில் ஐ.நா.பாதுகாப்பு சபையில் மேற்கு நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை சிரியாவின் நட்பு நாடுகளும் பிரதான ஆயுத வழங்குநர்களுமான ரஷ்யாவும், சீனாவும் தமக்குள்ள வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்துவிட்டன. அதன் பிறகு ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சிரிய அதிபருடன் நடத்திய பேச்சுக்களின் போது, தமது நாட்டுக்கான புதிய அரசமைப்பு ஒன்று பற்றி அறிவித்து, அதன் மீது கருத்துக் கணிப்பும் நடத்தினர். ஆனால் மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தாக்குதல்களையும் நிறுத்தவில்லை. இப்போது போராட்டப் பகுதியில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சென்றடைவதை ஆசாத் படைகள் தடுத்துவருவதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில் அவ்வாறான உயிர் கொல்லி அல்லாத உதவிகளை எதிர்ப்பாளர்களுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஆலோசித்து வருவதாக அந்த நாட்டின் பாதுகாப்பு செயலாளர் லியோன் பெனட்டா அறிவித்திருக்கிறார்.

பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா பெரிதும் கவலை கொண்டுள்ளது. அதனால் எதிர்ப்பாளர்களுக்கு உயிர்க் கொல்லி அல்லாத வகையிலான உதவிகளை வழங்குவது தொடர்பாக ஆலோசித்து வருகிறது என்று அவர் தெரிவித்தார். அவ்வாறு புரட்சியாளர்களுக்கு உதவி வழங்குவதனால் அது அமெரிக்காவின் சிரிய புரட்சியாளர்களுக்கான முதல் நேரடி உதவியாக இருக்கும்.

எதிர்காலத்தில் வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமா என்பதை நான் இப்போது மறுப்பதற்கு இல்லை. ஆனால் இப்போது ராணுவ நடவடிக்கைகளை விட, ராஜதந்திர முறைகளிலும், அரசியல் ரீதியிலும் பிரச்சினையை அணுகுவதையே அமெரிக்கா விரும்புகிறது என்று பெனட்டா கூறியுள்ளார்.

ஆனால் அமெரிக்க செனேட்டர் மக் கேயின் போன்ற வேறு சிலர், சிரியாவில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக விமானத் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். பொது மக்கள் மீது ஆசாத் ராணுவம் நடத்துகின்ற பீரங்கி மற்றும் தாங்கி தாக்குதல்களை நிறுத்துவதற்கு வெளியாரின் விமானத் தாக்குதலே சரியான செயலாக இருக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஓறிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஓறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

நிலையான வைப்புகளுக்கு வருடத்திற்கு +14% கவர்ச்சிகரமான வட்டி

12 மாதங்கள் நிறைவான வட்டி (வ.மொ.வ.வீ. 14%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880. தொலைநகல்: 2865602
ஈ-மெயில்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602

# கர்ப்பிணிகளுக்கு சொக்லேட்

கர்ப்பிணிப் பெண்கள் சொக்லேட் சாப்பிடுவது குறை பிரசவத்தை தடுக்கும், ஆரோக்கியமான குழந்தை பிறக்க வழிவகுக்கும் என்று சமீ பத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. சொக்லேட் பொருள்களில் உள்ள வேதிப் பொருள்களே குறைபிரசவம் ஏற்படுவதை தடுக்கிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர்.

சொக்லேட் சாப்பிடுவது உடல் நலத்துக்கு நன்மை தரக்கூடியது என்றும் 70 சதவித இதய நோயை குறைக்கும் என்றும் முந்தைய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. சொக்லேட்கள் புற்று நோய் வராமல் தடுக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கர்ப்பிணிப் பெண்கள் அதிக அளவில் சொக்லேட் சாப்பிட்டால் குறை பிரசவம் நடைபெறுவது தடுக்கப்படுகிறது என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.



அமெரிக்காவின் யாழ். பல்கலைக் கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் சிலர் 2500 கர்ப்பிணிகளிடம் இந்த ஆய்வை மேற் கொண்டனர். ஆய்வின் போது கர்பிணிகளுக்கு அளிக்கப்படும் உணவோடு காலையும், மாலையும் இளம் சூடான சொக்லேட் பானங்கள் அளிக்கப்பட்டன. மதிய உணவில் பழங்களுடன் சிறிதளவு சொக்லேட் அளிக்கப்பட்டது. ஆய்வின் முடிவில் சொக்லேட் தொடர்பான பானங்கள், மற்றும் பொருள்களை சாப்பிட்டவர்களுக்கு குறை பிரசவம் ஏற்படுவது வெகுவாக குறைந்து காணப்பட்டது .

பொதுவாக, வலிப்பு நோய், ரத்தம் உறைதல், கல்லிரல் பாதிப்பு, சிறுநீரக கோளாறு போன்றவற்றினால்தான் தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைகள் பாதிக்கப்பட்டு இறக்கின்றன. மேலும் தாய்க்கு ரத்த அழுத்தம் அதிகரிப்பது, அதன் மூலம் குழந்தைக்கு தேவையான ஆக்ஸிஜன் கிடைக்காமல் போன்றவையும் குறைப் பிரசவம் ஏற்பட காரணமாகும். இதன் மூலம் தாய்க்கும், சேய்க்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் சொக்லேட்டின் கோகோ உள்ள வேதிப்பொருள்கள் இது போன்ற கோளாறுகளை நீக்க உதவுகின்றன என்றும் ஆய்வு தெரிவித்துள்ளது. எனவே, கர்ப்பிணிகள் வாரத்துக்கு 3 நாள்களாவது சொக்லேட் சாப்பிட வேண்டும் என்றும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



ரன் வன்
ரூ.46,000/=
24 K

உங்கள் தங்க நகைகளுக்கு
அதிகூடிய கடன்
மற்றும்
தங்க நகைகளை இலவசமாக
மீட்டுக்கொள்வதற்குப் பொன்னான வாய்ப்பு!

மாதாந்தம் ரூ.10,000 வரை வெல்லுங்கள்
3 மாதங்களுக்கு ஒரு தடவை ரூ.100,000 வரை வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்படும்

யூனியன் வங்கி

தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. தொ: (011) 2374100 www.unionb.com

THE HIGHEST INTEREST RATE FOR 18th Month FIXED DEPOSITS

18 மாத நிலையான வைப்புக்கு அதிகூடிய வட்டி வீதம்
16%
AER 15.42%
சிரேஸ்ட பிரஜைகளுக்கு
CALL 077 22 68 723

கிளைகள்
யாழ்ப்பாணம், நுகேகொட, நீர்கொழும்பு, கொள்ளுப்பிட்டி, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா

அடகு நிலையங்கள்
அளுத்கம, மட்டக்களப்பு, சிலாபம், கம்பஹா, ஹற்றன், ஜா-எல, கண்டி, நாகம, செட்டித்தெரு, வத்தளை

*Conditions Apply

SWARNAMAHAL FINANCIAL SERVICES PLC
சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் பிஎல்சி
No. 338, Hospital Road, Jaffna. Tele/Fax : 0222 220 245
E-mail: info@sfs.lk | Web: www.sfs.lk
Registered by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனதுக்குப் பிடித்தமான மாளிகையின் கூரைக்கு...





றைனோ கூரைத் தகடுகள் பல வர்ணங்களில்

| கூடிய சில்லறை விலை | | றைனோ | கலர்-அப் |
|---|---|---|---|
| | அளவு | ரு. | ரு. |
| றூ.பிங் ஷீட்கள் | 3.5m | 2230 | 3045 |
| | 3.0m | 1830 | 2395 |
| | 2.5m | 1550 | 2005 |
| | 1.75m | 1095 | 1495 |
| சீலிங் ஷீட்கள் | 1.2m | 510 | 755 |
| புதிய முகடு (V வடிவம்) | | 270 | 305 |

Colorup
MARKETED BY RHINO
அழகிய சிகரம்
றூபிங் மற்றும் சீலிங் தகடுகள்

இலங்கையில் முதல் தடவையாக இயந்திரத்தைக் கொண்டு வர்ணமூட்டப்பட்ட உறுதி வாய்ந்த சிறந்த உயர்தரமான றூபிங் மற்றும் சீலிங் ஷீட்கள்

உங்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிட அனுபவமிக்க அலுவலர் ஒருவரை உங்கள் வீட்டிற்கே அனுப்புவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ள தொ. பே.: 5 748728 / 5 748738

RHINO
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
ஈ-மெயில்: marketing@rhino.lk வெப்: www.rhino.lk

# வரண்ட சருமத்தை மறந்துவிடுங்கள

மிகவும் சக்திவாய்ந்த சுத்திகரிப்புடன் கூடிய உலகின் மிகச் சிறந்த குளிர்ச்சிதரும் திரவம்
குளிர்ச்சி, வரட்சி அல்லது மழை காரணமாக சேதமடைந்த சருமத்திற்கென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டது



கண்களுக்கு கீழ் ஏற்படும் கருமையையும் சருமத்தின் வரட்சியையும் விரைவாகக் குறைக்கிறது.

### உங்களது சருமத்தில் NNO எவ்வாறு செயற்படுகிறது?

- வரட்சியான, மெருகற்ற, மாசடைந்த மற்றும் உப்பிய சருமத்திற்கு பூரண போஷாக்கை வழங்குகிறது.
- முதிர்ச்சியடைதல் மற்றும் சூழல் காரணங்களினால் ஏற்படும் சரும வரட்சியை குறைக்கிறது.
- கண்களுக்குக் கீழ் கருமை படர்வதை நீக்குகிறது.
- ஈரலிப்பைக் காப்பாற்றவென சருமத்தின் மேலான பாதுகாப்பு பூச்சு.
- சருமத்திலுள்ள அடையாளங்கள், சுருக்கங்களைப் போக்கி தழும்புகளை நீக்க உதவுகிறது.
- கடுமையான ஒளிக்கிரணங்கள், களைப்பு மற்றும் அசுத்தக் காரணிகளிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கிறது.

### NNO வை எவ்வாறு நாம் உபயோகிக்கலாம்?




நாடெங்கிலுமுள்ள பிரபல மருந்தகங்கள் நவீன சந்தைகளில் கிடைக்கும்.




## NNO

போஷாக்கு தரும் இரவுநேர எண்ணெய்
ஜோஜோபா எண்ணெய் மற்றும்
விற்றமின் ஈ யினால் வளமாக்கப்பட்டது

**சருமத்திற்கு போஷாக்கை வழங்கி புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது**

பிரான்ஸிலுள்ள ஸ்பின் கட்டுப்பாட்டு நிலையம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனாக **NNO** ஒரு தடவை உபயோகிக்கப்பட்டால் 6 மணித்தியாலங்களில் சரும ஈரலிப்புத்தன்மை 220% அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**NNO (போஷாக்கு தரும் இரவு நேர எண்ணெய்)** ஒப்பற்ற முறையில் தயாரிக்கப்பட்ட ஈரலிப்பை ஏற்படுத்தும் எண்ணெய் ஜொஜோபா ஒயில் விற்றமின் ஈ என்பனவற்றினால் வளமாக்கப்பட்டு உங்களது சருமத்திற்கு போஷாக்கை வழங்கி புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது. உங்களது சருமத்தைப் பளபளபாக்கவென சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய் வளத்தை மேம்படுத்துவதோடு உங்களது சருமத்தின் வரண்ட தன்மையை 2-3 வாரங்களில் நீக்கி விடுகிறது.

அனுமதிப்பத்திரம் வழங்கியவர் அவுஸ்திரேலியாவின் மெகா லைப்சயன்செஸ் நிறுவனம
துரித அழைப்பு : +94 77 3410071 | தொலைபேசி : +94 11 4305366
இணையத்தளம் : www.nnoforever.com | மின்னஞ்சல் : mega-sl@megawecare.com

MEGA We Care
Human Wellness

INMARC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் திறமைக்கு கை நிறைந்த அறுவடை



ஏசியா அசட் நிதி நிறுவனமானது, உங்கள் திறமையை அறுவடை செய்து கை நிறைந்த பயனை உங்களுக்குத் தருகின்றோம். எங்கள் வாடிக்கையாளர் ஒவ்வொருவரும் அவர்கள் திறமைகளை உணரும் சந்தர்ப்பத்தை உருவாக்க நாம் முனைகிறோம். வழமைக்கு மாறான உங்கள் வசதிக்கேற்ற நிதித் தீர்வின் மூலம் உங்களை பரந்தளவில் வெற்றியடையச் செய்கிறோம்.

• நிலையான வைப்பு • சிறு கடன்
• குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு
• உடமைகளுக்கான அடமானக்கடன் • விவசாயக்கடன் • சேமிப்பு
• முச்சக்கரவண்டி குத்தகை • தனிப்பட்ட குழு கடன் • காசோலை கழிவு
• பெரு நிறுவன கடன் மற்றும் வாடகைக் கார்
போன்ற சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

ASIA ASSET FINANCE LIMITED

வழமைக்கு மாறான நிதி நிறுவனம்

(இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் நிதி நிறுவனமாக உரிமம் அளிக்கப்பட்டது)

உடன் தொடர்புகளுக்கு: 0115 66 99 22

தலைமைக் காரியாலயம் இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
தொ.பேசி 0112 574 682-5, 0115 234 821-6, 0115 234 911/2 தொலைநகல்: 0112 577 477

கிளை அலுவலகங்கள் -
யாழ் நகர்: 021-5671804, நீர் கொழும்பு: 031-5678988, 031-2225138, களுத்துறை: 034-5623879, கம்பஹா: 033-5623220/1,033-2226800,
வென்னப்புவ: 031-5675608,031-5676209, குருநாகல்: 037-5628681/2, காலி: 091-5633002, மட்டக்களப்பு: 065-5672212, கிளிநொச்சி: 021-5671140, மொறட்டுவை: 011-5741957


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கணினிக்கு முன் நீண்ட நேரம் அமர்வதால் ஏற்படும் நோய்களுக்குத் தீர்வு



கணினியானது பல வகைகளில் மனிதனுக்கு உதவுகின்ற போதிலும் அதன் முன் அதிக நேரம் அமர்வதால் ஏற்படும் மூட்டுவலி, இரத்த ஓட்டம் தடைப்படல் போன்ற நோய்களும் ஏற்படத்தான் செய்கின்றன.

இவ்வகையான நோய்களுக்கு நிவாரணமாக தற்போது நின்ற நிலையிலும், அதே நேரம் தேவையேற்படின் உடற்பயிற்சி செய்து கொண்டும் கணினியில் எமது வேலைகளை செய்யும் வகையில் stand up desk அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு மணித்தியாலங்களிற்கு மேல் கணினியில் வேலை செய்பவர்களுக்கு இந்த மேசையானது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது முன்னோட்டமாக நிறுவனம் ஒன்றில் 30இற்கும் மேற்பட்ட கணினிகள் stand up desk இனால் பிரதியிடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

HERO HONDA

நீங்கள் 100CC மோட்டார் சைக்கிள் ஒன்றை தேடுகின்றீர்களா?

| அம்சங்கள் | நன்மைகள் |
| --- | --- |
| காற்று துடைப்பான் – கடதாசி பொருத்தப்பட்டது: காற்றுவடிகட்டியானது வழமையானதைவிட அதிக காலம் பாவிக்கும் தன்மையுடையது. | அதிகநேரம் முறையாகவடிகட்டிய காற்றை வழங்குகிறது. சிறப்பான எரிபொருள் திறன் |
| டிஜிற்றல் DC CDI அலகு: DC CDI ஆல் தொடர்ச்சியாகவும் நிலையாகவும் உருவாக்கப் படும் பொறியானது ஒரு உயர்தர மைக்ரோ செயற்பாட்டினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. | காற்று எரிபொருள் கலவையின் பயன்பாட்டை உறுதிசெய்து எரிபொருள் திறனை அதிகரித்து புகை வெளிப்பாட்டை குறைக்கிறது |
| கற்றவிற்றிக் மாற்றியுடன் கூடிய சைலென்சர்: பிலாட்டினம் மற்றும் றேடியம் பூச்சு கொண்ட சைலென்சர்கள் | குறைந்த புகை வெளிப்பாட்டை உறுதிசெய்கிறது. |
| MF பாற்றரிகள் (CD-DAWN சாதனங்களுக்கு பொருந்தாது): பராமரிப்பு அவசியமற்ற பற்றரிகள் | * பழுதானாலும் மின் ஒழுக்கு ஏற்படாது<br>* குளிர் நிலையாலும் இலகுவாக இயக்க வல்லது<br>* மின்வலு இழப்பு வீதம் மிகவும் குறைவு |
| Pro தொடர் APDV இயந்திரம்: APDV (உயர்தர Pro தொடர் டிஜிட்டல் மாறும் தன்மை உடையது) இயந்திரத்தோடு இயக்கும் கட்டுப்பாட்டு அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. (TCIS) மற்றும் உராய்வுத் தன்மை குறைந்த தொழில்நுட்பம்) | உயர் செயற்பாடும் எரிபொருள் திறனும் |
| றோலர் றொக்கர் பிடிகளைக் கொண்ட காம் ஷாப்ற்: இயந்திரத்தின் உராய்வுத் தன்மையைக் குறைக்கிறது. | சக்தி விரயத்தைக் குறைத்து எரிபொருள் திறனுக்கு வழிவகுக்கிறது. |








இந்த விலைகள் முற்றிலும் வரி இன்றி



CD Dawn - Rs. 105,268* CD Deluxe - Rs. 114,196*(Alloy/Kick) Rs. 123,125*(Spoke/Self) NXG- Rs. 132,946* Passion Pro - Rs. 145,446*(Drum) Rs. 153,482*(Disk)

Hero Honda 100CC ரக மோட்டார் சைக்கிள்கள் மேலே காட்டப்பட்ட உதிரிப் பாகங்கள் இணைக்கப்பட்டு பல நன்மைகளுடன் மேலும் பல நன்மைகளையும் கொண்டது, உங்களுடைய கீரோ ஹொண்டாவில் இன்றே முதலீடு செய்யுங்கள்

ஸ்ரபோட் மோட்டார்ஸ் (தனி) வரையறுக்கப்பட்டது

- 10. 011-7607200, ரத்னபிட்டிய. 011-7607450. மேலும் சகல அதிகாரமளிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மீன் எண்ணெய் சாப்பிட்டால் மூளை இளமையாக இருக்கும்!!

தொடர்ந்து மீன் எண்ணெய் சாப்பிட்டு வந்தால் மனிதனின் மூளை மிகவும் இளமையாக இயங்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மீன் எண்ணெயில், ஒமேகா-3 கொழுப்பு அமிலம் என்ற ஊட்டசத்து அதிக அளவில் உள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒமேகா-3, மூளையை இளமை யாக வைத்திருக்க உதவுவதாக கண் டறிந்துள்ளனர்.

67 வயதுள்ள சுமார் 1,500 பேரிடம் ஆய்வு நடத்தி, அவர்கள் இதை கண்டு பிடித்துள்ளனர். ஒமேகா அமிலத்தைக் குறைவாக சாப்பிட்டவர்களின் மூளை சுருங்கியும், ஞாபக மறதி, மனநிலை பிறழ்வு போன்ற பாதிப்புக்கும் ஆளாகி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்ட றிந்துள்ளனர்.

எனவே ஒமேகா அமிலம் நிறைந்த மீன்களையும், மீன் எண்ணெயையும் சாப்பிட்டால் மூளை இளமையாக இருக் கும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந் துள்ளனர்.

# இவைதான் உலகின் பழைய ஏழு அதிசயங்கள்

### கிசாவின் பெரிய பிரமிட்

இது கி.மு.2680 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டாதாகக் கணக்கிடப்பட்டுள்ள எகிப்திய பழங்கால அரசன் பாரோ கூபுவின் சமாதி.

### பபிலோனின் தொங்கும் தோட்டம்

இது கி.மு. 600இல் ஈராக்கில் கட்டப்பட்டது

### ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை

இது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கச் சிற்பி பீடியாஸ் என்பவரால் இன்றைய கிரீஸில் செதுக்கப்பட்டது.

### எபேசஸ் ஆர்டெமிஸ் கோயில்

இது கி.மு.350 இல் இன்றைய துருக்கியில் எபேசஸ் என்ற இடத்தில் கட்டப்பட்டது. இது ஆர்ட்டெமிஸ் என்னும் கடவுளுக்காகக் கட்டப்பட்ட ஒரு கிரேக்கக் கோயில்.

### ஹலிகர்னாசஸ்ஸின் மௌசோல்லொஸின் மௌசோலியம்

இது கி.மு 350- கி.மு 353 இடையில் பாரசீக சத்ரப்பினால் இன்றைய துருக்கியிலுள்ள போட்றம் என்ற இடத்தில் கட்டப்பட்டதாம். இது பெர்சிய அரசின் ஆளுனருக்கும் அவரது மனைவி மற்றும் சகோதரிக்கு கட்டப்பட்ட சமாதி.

### ரோடொஸின் கொலோசஸ்

இது கி.மு. 280 இல் தற்கால கீரீசில் எழுப்பப்பட்ட பிரம்மாண்டமான சிலை. இது கிரேக்கத் தீவான ரோடொசில் ஈலியோஸ் கடவுளுக்காகக் கட்டப்பட்டது.

### அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கம்

இது கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இன்றைய எகிப்தில் சொஸ்த்திராட்டஸ் என்பவரால் கட்டப் பட்டது.

இந்த பழைய ஏழு அதிசயங்களில் இப்போது மிஞ்சியிருப்பது கிசாவின் பெரிய பிரமிட் மட்டுமே. ஏனையவை யாவும் சிதைவடைந்தும் உடைந்தும் போய் விட்டதாம்.

இதனையடுத்து கடந்த 2007 ஆம் ஆண்டு உலகின் புதிய ஏழு அதிசயங்கள் அறிவிக்கப்பட்டது. இதற்காக நியூ 7 ஒன்டர்ஸ் அரக்கட்டளை என்னும் தனியார் நிறுவனம் உலகின் புதிய ஏழு அதிசயங்களுக்கான வாக்கெடுப்பை நடத்தியது.

இதில் பல பிரபலமான கட்டடச்சின்னங்களைக் கொண்ட பெரும் பட்டியலை வெளியிட்டு அதன் மூலம் வாக்கெடுப்பு நடைப்பெற்றது. பல விமர்சனங்கள், எதிர்ப்புக்களைத் தாண்டி வெற்றி பெற்றது உலகின் புதிய ஏழு அதிசயங்கள். அத்துடன் 2007ம் ஆண்டிலேயே 7 ஆம் மாதம் 7ஆம் திகதி இந்தப் புதிய ஏழு உலக அதிசயங்களையும் அறிவித்திருக்கிறார்கள்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கான மாதாந்த இதழ்

அர்ச்சுனா

சிறுவர்களுக்கான மாத இதழ்

IELTS™




The British Council provides you with support to help you improve your IELTS score

- FREE 30 hour online preparation course
- FREE practice book
- FREE reference library membership
- FREE Top Tips seminar

Register for your exam online and stand a chance to take your IELTS for FREE!*

https://ielts.britishcouncil.org/srilanka

*This offer is only valid until 31 May 2012

Terms and conditions apply

BRITISH COUNCIL

49 Alfred House Gardens, Colombo 00300
T +94 (0) 117521521 E info.lk@britishcouncil.org
www.britishcouncil.org/srilanka









விலங்குகளை வடிவமாகக் கொண்ட சில தலைமுடிகள்

மிகச்சிறந்த வங்கியிலிருந்து மிகச்சிறந்த வட்டி

11%

12 மாதம்

03 மாதம்**

நிலையான வைப்புக்கள்

அண்மையிலுள்ள வங்கிக்கிளையை நாடுங்கள் அல்லது தகவல் நிலையத்தை தொடர்புகொள்ளுங்கள்: 011-2353353

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது / **வருடாந்த விளைவு வீதம் 11.46%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசித்துவிட்டீர்களா..?

## பெரும்புள்ளிகள் பூச்சாண்டி காட்டுகின்றனரா?



தமிழ் மக்கள் மீது தாராள அன்பு கொண்டவரும், அவர்களுக்காகவே உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகம் செய்யவும் போராடவும் தயாராக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அவர் என்ன கூறுகின்றார்? வடக்கில் நிலை கொண்டிருக்கும் படையினரை இப்பிரதேசத்தில் இருந்து வெளியேற்ற ஒரு மாதகாலம் போதும் என வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் சூளுரைத்தார்.

இவர் எப்போதும் ஜனாதிபதியுடனும், அரசுடனும் ஒட்டி உறவாடுபவர். ஒரு வேளை உள்வீட்டில் கதைத்ததை ஒட்டுக் கேட்டுவிட்டுத்தான் இப்படிக் கூறினாரோ....

## மகிந்தவின் அம்புகள்

... தமிழ் மக்களின் தலைமை என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாகவே இருக்க முடியும். மன்மதனின் அம்பு விஸ்வாமித்திரனை வீழ்த்தியது. ஆனால் சிவபெருமானை எதுவும் செய்ய முடியவில்லை. அது மட்டுமல்ல மன்மதன் எரிந்து போகும் நிலையும் ஏற்பட்டது. இப்போ மன்மத அம்பு எய்யப்பட்டு விட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு நெற்றிக் கண்ணைத் திறந்து காமனை எரித்த சிவபெருமானாக இருக்க வேண்டும் என்பது தான் தமிழ் மக்களின் திட்டவட்டமான முடிவு.

## இராஜதந்திரச் சமரில் திண்டாடுகின்றது இலங்கை

இராஜதந்திரிகளின் தலைநகரம் எனக் கருதப்படும் ஜெனிவாவில் இலங்கைக்கும்.மேற்குலக நாடுகளுக் குமிடையிலான இராஜதந்திரப்போர் உக்கிரமடைந்துள்ள தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் மேற்குலக இராஜதந்திரிகள் நேரடியாகவே களத்தில் குதித்துள்ளதால் ஜெனிவாச் சமரில் இலங்கை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என ஜெனிவா இராஜதந்திர களத்தின் தற்போதைய நிலை வரங்களிலிருந்து உறுதியாக அறியமுடிகின்றது.

## காங்கிரஸ் தோல்வி



....முடிவுகள் இவ்வாறு அமையும் என்பது பிரியங்கா, ராகுல் காந்தி இருவருக்கும் ஓரளவு தெரிந்தே இருந்தது. தேர்தல் பிரசாரத்தில் கவலைப்படாதீர்கள் நான் இங்கே வந்திருப்பது நீண்ட இன்னிங்ஸை விளையாடுவதற்கே; என ராகுல் காந்தி கூறியதும் நினைவிருக்கலாம். உண்மையில் களநிலவரப்படி அடிமட்டத்தொண்டர் பலமும் அடிமட்ட கட்சி ஒழுங்கமைப்பும் உத்தரப்பிரதேச காங்கிரசில் இல்லை என்பதால் ....

## தெருநாய்களைத் தத்துக்கொடுக்கும் நடிகை தீரிஷா

..... தெருவோரத்தில் கேட்பாரற்று கிடக்கும் நாய்களை எடுத்து வந்து அவற்றின் படங்களை இணையத்தில் வெளியிடுவேன். தத்து எடுக்க விரும்புவோர் அந்த நாய்களை என்னிடம் வந்து வாங்கிச் செல்லலாம். வாய் இல்லாத ஜீவன்களை ஒவ்வொருவரும்நேசிக்க வேண்டும்.....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கு வருபவர்களை எப்படிக் கவரலாம்...?

### வீட்டுக்குள் தோட்டம்

இல்லம் என்பது நம் அனைத்து உணர்வுகளையும் தாங்கி ஆறுதலைத் தரும் இடமாகும். நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் பலரும் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. வீட்டிற்கு வெளியேயும், கொல்லைப் புறத்திலும் தோட்டம் வைத்து செடி கொடிகளை வளர்க்க வசதியில்லாதவர்களுக்கு வரப்பிரசாதமாக வந்துள்ளது அழகு செடிகள்.

### புத்துணர்வு தரும் செடிகள்

வீட்டைச்சுற்றி அலங்கார செடிகள் மற்றும் இயற்கைப் பொருள்களான கற்கள், நீர்ச் செடிகள் முதலியவற்றை உபயோகித்து அழகுபடுத்துவதன் மூலம் வீட்டின் அமைப்புக்கு ஒரு இயற்கையோடு இணைந்த சூழலை ஏற்படுத்த முடியும். இது போன்றே வீட்டில் உட்பகுதியிலும் பலதரப்பட்ட செடிகளை வளர்ப்பதன் மூலம் வீட்டின் உட்பகுதியை நன்கு அழகுறச் செய்யலாம். இவை இயற்கையோடு இணைந்த சுற்றுப்புற சூழலையும், மன அமைதி மற்றும் புத்துணர்வை நமக்கு தருகிறது.

### அழகு செடிகள்

வரவேற்பறை, குடும்ப அங்கத்தினர் மற்றும் நண்பர்கள், விருந்தினருடன் கலந்துரையாடும் பகுதி, கலைப் பொருள்கள் பாதுகாத்து வைக்கும் அலங்கார மேடை மற்றும் அடுக்குகள் சுற்றிலும் ஜன்னல் ஓரங்கள் போன்றவை வீட்டினுள் அலங்காரம் செய்வதற்கு மிக ஏற்ற இடங்கள்.

அலமாண்டா, ஆண்டிகோனான், அரிஸ்டோலோகியா, மனோரஞ்சிதம், ஆஸ்பராகஸ், பிக்னோனியா, காகிதப்பூ, பெரண்டை, கிளி மாட்டிஸ் சங்கு புஷ்பம், பைகஸ் ஐவி போன்ற செடிகள் வீட்டிற்குள் வளர்க்க ஏற்ற செடிகளாகும்.

### அலங்கார இலைகள்

நம் வீட்டில் வரவேற்பறை மற்றும் கலை மற்றும் பரிசுப் பொருள்கள் பாதுகாத்து பார்வைக்கு வைக்கும் கண்ணாடி சுவர் அலமாரிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் , டைனிங்டேபிள் போன்ற பகுதிகளில் நன்கு வளர்ந்த அலங்கார இலைகள் கொண்ட செடிகளை வைத்து அழகுபடுத்தலாம். இவ்வாறு வைக்கப்படும் செடிகளின் எண்ணிக்கை நாம் வைக்கும் நாம் வைக்கும் அறையில் நீள அகல மற்றும் செடிகளின் அமைப்பை பொருத்து மாறுபடும்.

இங்கு வைக்கும் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும் போது கசியும் நீர் தரையில் வழிந்து தரையை சேதம் செய்யா வண்ணம் இருக்க தனித்தனி தட்டுகள் வைக்க வேண்டும். இவை அறையினுள்ளே இருப்பதால் இவற்றில் இலைகளின் தூசி படிய வாய்ப்புள்ளமையால் சிறு தெளிப்பான் கொண்டு 15 நாள்களுக்கு ஒரு முறை சுத்தப்படுத்துவதன் மூலம் செடிகள் நன்கு இயற்கை எழிலுடன் காட்சியளிக்கும்.

### போர்டிகோ அழகு செடிகள்

போர்டிகோ வீட்டு மற்றும் வீட்டு நுழைவாயில் போன்ற இடங்களில் நல்ல சூரிய ஒளி படும்படி இருப்பதால் நாம் வெளித் தோட்டத்தில் வைக்கும் செடிகளையே தொட்டிகளில் வளர்த்து அவற்றை அவை தாம் கொண்டுள்ள அழகு இலைத் தன்மை, பூத்தன்மை மற்றும் பல நிற வேறுபாடு கொண்ட இலைகள் ஆகியவற்றுக்கு தக்கபடி தொட்டியை முன்னும் பின்னும் மாற்றி அமைப்பதன் மூலம் நன்கு அழகுபடுத்தலாம்.

போர்டிகோ பகுதியில் தொங்கும் தொட்டிகள் பொருத்திக் கொள்ள ஏதுவாக இரும்பு வளையங்கள் பல வரிசையாக கட்டிடம் கட்டும்போதே பொருத்தி இருக்கும் இவற்றில் தொங்கும் தொட்டிளில் பல அழகுச் செடிகளை வைத்து தொங்கிவிடுவதன் மூலம் அழகுறச் செய்யலாம். இவ்வாறு வீட்டின் முகப்பில் செடிகளைக் கொண்டு மிகவும் அழகுறச் செய்யலாம்.

ஜன்னல் பகுதியில் வெளியே சன்சேடு போன்ற பகுதிவரை வளர்ந்து அவற்றின் மேலிருந்து சன்னலை சார்ந்து தொங்கும் வண்ணம் கொடிகளை தரையில் நட்டு வளரச் செய்யலாம். சில தாவர வகைகள் சுவற்றில் ஒட்டி வளரும் தன்மை கொண்டது. சுவரொட்டி என்ற செடி தன்னுடைய தண்டுகளிலிருந்து வரும் சிறிய வேர்களைக் கொண்டு சுவற்றில் ஒட்டிக் கொள்ளும். இவற்றில் சிறுசிறு இலைகள் இருப்பதால் இது சுவற்றில் ஒட்டி படர்ந்து சுவரே வெளியில் தெரியா வண்ணம் அழகிய இலை கொண்டு மூடி எடுப்பான தோற்றத்தைத் தந்திடும்.

இது தவிர வீட்டின் முன் வாயில் போர்டிகோவின் முன்பகுதி , போர்டிகோ பகுதி போன்ற இடங்கள் தொட்டிகளில் வளர்க்கப்பட்டு பெரிய, சிறிய செடிகளை தனித் தொட்டிச் செடியாகவோ அல்லது கூட்டாகவோ வைத்து நல்ல எடுப்பான தோற்றத்தை ஏற்படுத்தலாம்.

### வரவேற்பறை அலங்காரம்

நம் இல்லத்திற்கு வரும் அனைவரும் அமர்ந்து உரையாடும் இடம் வரவேற்பறை தான். மிக முக்கியமான அந்த இடத்தினையும், அங்குள்ள பொருள்களையும், அசத்தும் விதமாக அலங்கரிக்க வேண்டும். முக்கியமாக வரவேற்பறையில் வைக்கப்பட்டிருக்கும் மேஜை அலங்காரம் முக்கியமானது. இது அனைவரின் கவனத்தையும் கவரும்



என்பதால் பிரத்யேக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே உள்அலங்கார நிபுணர்கள் கூறும் ஆலோசனைகள் உங்களுக்காக..

### மன அமைதி தரும்

மேஜையின் நடுவில் மெழுகு வர்த்தியால் அலங்கரிப்பது, எழிலோடு, ஸ்டைலாகவும் இருக்கும். மெழுகுவர்த்தி ஏற்றுவது மனதிற்கு அமைதியை தரும். அதுவும், வரவேற்பு அறையின் மேஜையில் அலங்கரிக்கப்பட்ட மெழுகுவர்த்தியை மாலை நேரத்தில் அதனை ஏற்றி வைப்பது அழகோடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org